# சங்க
# இலக்கியத்தில்
# மயில்



பாக்யவதி சங்கரலிங்கம்

# சங்க இலக்கியத்தில் மயில்

திருமதி. பாக்யவதி சங்கரலிங்கம் எம். ஏ.,
பேராசிரியர்,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி,
சென்னை.

உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்
33, திருமலை நகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை—600 096
தமிழூர், அடைக்கலப் பட்டிணம் அஞ்சல்—627808

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களின்
தந்தையார் திரு ச. சண்முகம் வேலாயுதம் பிள்ளை
அவர்களின் நினைவுச் சொற்பொழிவு வெளியீடு :
உலகத் தமிழ்க் கல்வி இயக்க அறக்கட்டளைச்
சொற்பொழிவு வெளியீடு : 13

வெளியீடும் உரிமையும்

உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்
33, திருமலை நகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை — 600 096.

முதற் பதிப்பு ஜூன் 1989

விலை ரூ. 25
Price Rs. 25

Caṅka Ilakkiyattil Mayil
(The Pea-fowl in Sangam Literature)
Tmt. Pakkiavathy Sankaralingam, M.A ,
Prof. of Tamil,
Chellammal Women's College,
Madras—600 032.
Publication : 20
First Edition : June 1989
21 × 14 Cms
10 Pt. Letters
Pages X + 236

Novel Art Printers, Madras—600 014. Phone 833231

''உள்ளம் உடைமை உடைமை''

சு. ஆவுடைநாயகம், எம்.எஸ்ஸி, (விவசாயம்)
தலைவர்
உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்
33, திருமலை நகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை—600 096.

# பதிப்புரை

'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்'. இன்னல் பல வரினும் 'உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்' தமிழ்ப்பணி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அயராது செயற்பட்டு வருகிறது. அவ்வகையில் புதிதாகத் தோன்றியுள்ளது 'டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களின் தந்தையார் சு. சண்முகம் வேலாயுதம் பிள்ளை அவர்களின் நினைவுச் சொற்பொழிவு'. இதில் முதலாவதாக, 'சங்க இலக்கியத்தில் மயில்' வெளிவருகிறது.

எங்களது வேண்டுகோட்கிணங்கிச் சிறப்புற நூலை ஆக்கித் தந்துள்ள, சென்னை, செல்லம்மாள் மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை திருமதி. பாக்யவதி சங்கரலிங்கம் எம்.ஏ. அவர்கட்கும், உரிய காலத்தில் நன்முறையில் அச்சிட்டுத் தந்த நாவல் ஆர்ட்ஸ் அச்சகர் கவிஞர். நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும் மிக்க நன்றியுடையோம்.

சென்னை—96
ஜூன் 89

அன்புள்ள
சு. ஆவுடைநாயகம்

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்
33, திருமலை நகர் இணைப்பு
பெருங்குடி, சென்னை 600 096

# அணிந்துரை

'சங்க இலக்கியத்தில் மயில்' என்ற நூலைக் கற்கும் வாய்ப்புக் கிடைத்துப் பெரிதும் மகிழ்ந்தேன். ஆய்வு நூலுக்குரிய எல்லாக் கூறுகளும் இந்நூலுள் அமைந்துள்ளன.

எளிமையான, நறுக்குத் தெறித்தாற் போன்ற, சிறு சிறு வாக்கியங்களில் அமைந்த நடை. செய்தித் தொகுப்பு, கருத்துச் செறிவுக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. மயிலைப் பல கோணங் களில் பார்த்துள்ளமை பாராட்டத்தக்க ஒன்று. பன்னூல்களைப் படித்து அவற்றோடு இணைத்துத் தந்துள்ள தன்மை நூலாசிரி யரின் பரந்த அறிவைப் புலப்படுத்துகிறது.

சான்றாகப் 'புதுக்கவிதையில் குறியீடு' என்ற அப்துல்ரகுமான் ஆய்வேட்டைக் குறிப்பிட்டுள்ளமையும் (பக். 93), மேல் நாட்டுத் திறனாய்வாளர் சார்லஸ் சாட்விக்கின் 'சிம்பாலிசம்' என்னும், நூலைச் சுட்டியுள்ளமையும் (பக் 102) ஆசிரியரின் நுணுகிய அறிவைக் காட்டுகிறது. பல நூல்கள் மட்டுமன்றி, ஆனந்தவிகடன் போன்ற இதழ்களில் (பக். 138) வந்த கட்டுரைகளையும் பார்த்துக் கருத்துத் தெரிவித்துள்ளமை, ஆசிரியர், மயில் பற்றிய ஆய்வு, எதில் வந்தாலும் அதைப் பார்க்க வேண்டும் என்று எண்ணிய எண்ணத்தை நமக்குக் காட்டுகின்றது.

மயிலும் சமயமும் பற்றிய இயலில் அதற்குரிய சான்றுகளைப் பன்முக நோக்கில் தந்து படைத்துள்ளமை எண்ணி இன்புறத்தக்க ஒன்று.

மயில் இந்திய நாட்டின் தேசியப் பறவை. தொன்மை மொழி யாகிய தமிழில் கி.மு-வில் வெளிவந்த பாடல்களிலும் மயில் குறி யீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை தமிழ்ப் புலவரின் திறனாய்வு நோக்கினை அன்றே புலப்படுத்துகின்றது.

திறனாய்வு நெறியில் தமிழர் கொண்டுள்ள ஈடுபாட்டினை இந்நூல் வழியாக நாம் தெரிந்து கொள்ள நிறைய வாய்ப்பிருக் கிறது.

இதுபோன்ற தகுதி வாய்ந்த பல நூல்களை ஆசிரியர் எழுத வேண்டும் என விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியரின் தமிழ் ஆர்வம் வளர்க வளமுடன்.

சென்னை—96
ஜுன் 1989

அன்புள்ள
ச.வே. சுப்பிரமணியன்

# நன்றியுரை

நானுண்டு என் கல்லூரி வேலை உண்டு என்று ஒரு வட்டத் துக்குள் சுழன்ற என்னை ஆய்வு உலகிற்கு அறிமுகப்படுத்தி, தமது தந்தை திருமிகு. சு. சண்முகம் வேலாயுதம் பிள்ளை அவர்களின் நினைவுச் சொற்பொழிவு சார்பாக வெளிவரும் முதல் நூலினை எழுதும் பெருமையினை எனக்குத் தந்து அருமையான அணிந் துரையும் வாழ்த்தும் வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநர், உலகத் தமிழ்க்கல்வி இயக்கத்தின் இயக்குநர், தடைபல வரினும் தளராது நின்று, 'தாயேயாகித் தகவுடன் தமிழ் வளர்க்கும் பெருந்தகை' டாக்டர். ச.வே. சுப்பிரமணியன் அவர் கட்கு உரிய நன்றியும் வணக்கமும் சொல்லில் அடங்கா. இவ் வாய்வு சிறக்க அறிவுரை வழங்கிய, 'நெறியாளர்' என்ற சொல் லுக்குப் பொருளாய், தக்க சான்றாய் இலங்கும் டாக்டர். அன்னி தாமசு, இந்நூலின் அச்சுப்படியினைத் திருத்தம் செய்து உதவிய டாக்டர் ச. சிவகாமி ஆகியோருடன், இவ்வாய்வினுக்கு அடிப் படையான அறிவு ஒளியினை ஏற்றி வைத்த என் பெற்றோர் திரு. வ.தி. சங்கரலிங்கம் அவர்கள்-திருமதி மீனாட்சி அம்மாள், அவ் வொளி மென்மேலும் சுடர்விடத் தூண்டு கோலாய் விளங்கும் துணைவர் திரு. ச.ந. சங்கரலிங்கம், ஆய்வுப்பணி நிகழுங்கால் என்னை அணுகாது அகன்று நின்று உதவிய அன்புச் செல்வங்கள் தீபா, குமரன் ஆகியோரும் நாளும் என் நன்றிக்கு உரியோர்.

இந்நூலினை நன்கு அச்சிட்டு அளித்த நாவல் ஆர்ட்ஸ் அச்சகர் கவிஞர். நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும் என் நன்றி.

சென்னை
ஜூன் 1989

இவண்
பாக்யவதி சங்கரலிங்கம்

# முன்னுரை

இலக்கியங்களில், இயற்கை-வருணனை-அணிகள்-ஐந்திணை-பொருள்-மாந்தர் போன்ற நோக்கில், அகலமான போக்கில் பொதுவாக ஆய்வுகள் அதிகமாக நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன; வருகின்றன. இந்நிலையில் ஆழமான நோக்கில் ஒரேவொரு பொருட்கூறினைப் பன்முகப் பார்வையில், இலக்கியத்தில் அதன் இடம்-பங்கு-பணி-இன்றியமையாமை போன்றவற்றினைக் காணல் முற்றிலும் புதுமையான ஒன்றில்லையெனினும் மாறுபட்ட ஒன்றாய் அமையும் என்ற எண்ணத்தில் எழுந்தது இவ்வாய்வு.

என்றும் அமுத ஊற்றாய் நின்றிலங்கி ஆய்வாளர்க்கு அள்ள அள்ளக் குறையாது கருத்துக்களை வாரிவழங்கும் சங்க இலக்கியம் முற்றிலும் பொருத்தமாய் அமையும் சிறப்பினது ஆகலின் கருவி நூலாக இவ்வாய்விற்கு ஏற்கப்பட்டது.

காண்பவர் யாராயினும் கருத்தைக் கவர்ந்து மனத்தை மயக்கும் இயல்பினதாகிய மயில் அனைத்துச் சங்க இலக்கியங்களிலும் பாடப் பெற்ற பெருமைக்குரியதாகலின் அதனைக் கருவாய்க் கொள்ளல் ஏற்புடையதாயிற்று; ஆய்வும் இயல்வதாயிற்று.

இம்மயில் பற்றிய பொது அறிமுகத்துடன் தொடங்கும் இந்நூல் அகப்பொருள், புறப்பொருள், அணிகள், சமயம், வாழ்வியல், பிற பறவைகளுடன் ஒப்பீடு என்ற பன்முக நோக்கில் காணப் பெற்றுள்ளது.

பன்முகப் பார்வை ஆகலின் சில பாடலடிகள் மீண்டும் மீண்டும் இடம் பெறல் தவிர்க்க இயலாததாயிற்று என்பதும், தெளிவு கருதிச் சில இடங்களில் அதிகமான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருப்பதும் இவண் குறிப்பிடப்பட வேண்டியவை.

அறிஞர் உலகம் என் கன்னி முயற்சியின் நிறைகுறைகளைச் சுட்டி, வழிப்படுத்தின் பெரிதும் நன்றியுடையேன்.

இவண்,

**பாக்யவதி சங்கரலிங்கம்**

# உள்ளே


| | |
|---|---|
| பதிப்புரை | iii |
| அணிந்துரை | iv |
| நன்றியுரை | v |
| முன்னுரை | vi |
| உள்ளே | vii |
| பொது அறிமுகம்—I<br>இலக்கியம் 2 புலவர் 3 திணை 4 | 1-7 |
| பொது அறிமுகம்—II (மயில் பற்றிய குறிப்புக்கள்)<br>அணிநிலை 10 உவமம் 10 உள்ளுறை உவமம் 11 குறிப்புப் பொருள் 11 குறியீடு 11 வருணனை 12 தற்குறிப்பேற்றம் 12 பல அணிகள் ஒரு குறிப்பில் இடம் பெறல் 12 அடை 13 சூழல் 15 பாடாண் தலைவன் 17 சொற்சுட்டு நிலை 18 | 8-18 |
| மயிலும் அகப் பொருளும்<br>மயிலும் அகமாந்தரும் 20 மயிலும் தலைவியும் 21 மயிலும் தலைவனும் 25 மயிலும் தலைவன் தலைவியும் 26 மயிலும் தோழியும் 27 மயிலும் ஆயமும் 27 மயிலும் பரத்தையும் 28 மயிலும் தலைவியின் சுற்றமும் 29 மயிலும் அன்பின் ஐந்திணையும் 29 குறிஞ்சித்திணை 30 பாலைத் திணை 37 முல்லைத்திணை 40 மருதத் திணை 43 நெய்தல் திணை 45 | 18-46 |
| மயிலும் புறப் பொருளும்<br>செங்கோன்மை 48 வாகைச் சிறப்பு 49 ஈகைத் திறன் 50 மயிலும் வரலாறும் 51 மயிலும் விறலியும் 51 மயிலும் செல்வமும் 52 மயிலும் ஒப்பனைப் பொருளும் 53 மயிலும் குறியீடும் 56 | 47-59 |
| மயிலும் அணிகளும்<br>மயிலும் உவமையும் 61 மயிலும் உள்ளுறை உவமமும் 78 மயிலும் குறிப்புப் பொருளும் 93 மயிலும் குறியீடும் 101 மயிலும் வருணனையும் 114 மயிலும் தற்குறிப் பேற்றமும் 131 | 60-134 |

மயிலும் சமயமும் 135-143

மயிலும் முருகனும் 136 மயிலூர்தி 136 மயிற் கொடி 140 மயிலுவமம் 141 மயில் காணிக்கை 142 மயில் தரும் காட்சி 142 மயில் அடையல் 142

மயிலும் வாழ்வியலும் 144-149

மயிலும் பிறபறவைகளும் 150-182

எண் 151 திணை 152 இலக்கியம் 152 பறவைகள் பற்றிய குறிப்புக்கள் 153 அகப்பொருள் 154 புறப்பொருள் 158 வரலாற்றுக் குறிப்புக்கள் 158 அணிகள் 159 உவமை 160 உள்ளுறை உவமை 161 வருணனை 168 தற்குறிப்பேற்றம் 170சமயம் 171 காலம் 173 வளர்ப்புப் பறவைகள் 174 உணவுப் பறவைகள் 174 மயில் இடம் பெறாச் சூழல்களில் சில பறவைகள் 175 கனவு 175 தூது 176 நிமித்தம் 177 முன்னிலை மொழி 178 பேணல் 179

நிறைவுரை 182

சங்க இலக்கியத்தில் மயில் பயிலும் இடங்கள் 183-197

பின்னிணைப்புக்கள் 198-231

சங்க இலக்கியத்தில் மயில் I 198 - 202 மயில் பயிலும் எண்ணிக்கை II 203 பிற பறவைகள் பயிலும் இடங்கள் III திணை-பாடலின் எண்ணும் வரியும் 204-221 பிறபறவைகள் பயிலும் இடங்களின் எண்ணிக்கை 222 திணைகளும் பறவைகளும் 223-226 கருவி நூல்கள் 227 துணை நூல்கள் 228 ஆய்வேடுகள் 230 இதழ்கள் 230 ஆங்கில நூல்கள் 231

பிழை திருத்தம் 232

சிறப்புச் சொல் அகராதி 234

# பொது அறிமுகம்-1

மயில், அழகு நிரம்பியது; ஆடல் வல்லது; காட்சிக்கு இனியது கருத்தைக் கவர்வது; மென்மை நிரம்பியது; நளினம் நிறைந்தது; வடிவிற் பெரியது; வனப்பில் சிறந்தது; பறவைகளில் பெருமை பெற்றது. குறிஞ்சி முல்லை நிலங்களில் உறைவது; மருதத்திலும் பாலையிலும் கூடக் காணப்படுவது; பாரதத்தின், பர்மாவின் தேசியப் பறவை என்னும் பெருமையும் உடையது.

இப்பறவை இறையொடும் தொடர்புடையது; இறையிலிச் சமயங்களோடும் தொடர்புடையது. சேயோனைச் சுமக்கும் சிறப்புப் பெற்றதோடு அவனது கொடியும் ஆவது. தன் பீலியால் கண்ணனின் தலையை அலங்கரிப்பது; சமணர்களுக்குச் சிவிறி ஆவது; இசுலாமியர் மணப்புகைப் பரப்பப் பயன்படுவது; கலைமகள் தனது வீணையின் முதல் தந்தியின் சுருதி சேர்ப்பதற்கு உதவுவது; அவளது வீணையிசையுடன் இணைந்து பாடுவது; ஆடுவது.[1] கிறித்துவ தத்துவத்திலும் ஏற்ற இடம் பெற்றிருப்பது.[2]

---

1. "It is said to have helped Saraswathi in arranging the first cord of her lute (Vina). As she plays the lute, the Peacock sings harmoniously with its melo dius Voice on the highest pitch of the seven notations, and dances rhythmically, fanning out of tail. Ajit kumar Mukherjee; Peacock our National Bird; Publications Division; New Delhi; July 1979; P. 21.

2. Peacock: Christian:- a) attribute of christ; b) grace of a Sacrament feeding on grapes: the Eucharist; c) heavenly glory; d) with folded tail; remorse; e) with Olive leaf: The Church bringing peace.
Ad de.Uries;Dictionary of Symbols and Imagery; North Holland Publishing Company, London, 1974;P - 360.

மயிலினைப் புலவரில் பெரும்பாலோர் பாடியிருக்கின்றனர். தானும் பாடலால் சிறப்புற்றுப் பாடலையும் சிறப்பிப்பது; இலக்கியங்களில் உவமமாய் நிற்றலும் உண்டு; பொருளாய்ப் பொருந்துவதும் உண்டு. உருவகமும் ஆவது; உள்ளுறை பொருளும் உணர்த்துவது. குறிப்பாய்ப் பொருள் புலப்படுத்துவதோடு குறியீடாயும் நிற்பது. இத்தனை வகையில் இடம் பெறுவதானால் ஆய்வுக்குரிய பொருளாய் ஆவது.

## இலக்கியம்

சங்க காலத்தவை என்று கருதப்படும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்கள் எல்லாவற்றிலும் மயில் தொடர் பான குறிப்புக்கள் காணப்படுகின்றன. எட்டுத் தொகை அகத்திணை இலக்கியங்களில்

| | | | |
|---|---|---|---|
| நற்றிணை | 14 | கலித்தொகை | 14 |
| குறுந்தொகை | 16 | அகநானூறு | 35 |
| ஐங்குறுநூறு | 20 | பரிபாடல் | 3 |

என்று இவ்வாறாக 102 இடங்களில் இது குறிக்கப்படுகின்றது. பத்துப்பாட்டு அகத்திணைப் பாக்களில் 6 இடங்களில் பாடப் படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| முல்லைப்பாட்டு | 1 | குறிஞ்சிப்பாட்டு | 3 |
| நெடுநல்வாடை | 1 | பட்டினப்பாலை | 1 |

அகத்திணைப் பாடல்களில் மட்டுமின்றிப் புறத்திணைப் பாடல் களிலும் மயிலை 63 இடங்களில் காண முடிகின்றது.

| | | | |
|---|---|---|---|
| பதிற்றுப்பத்து | 2 | சிறுபாணாற்றுப்படை | 4 |
| பரிபாடல் | 17 | பெரும்பாணாற்றுப்படை | 2 |
| புறநானூறு | 20 | மதுரைக்காஞ்சி | 5 |
| திருமுருகாற்றுப்படை | 6 | மலைபடு கடாம் | 4 |
| பொருநராற்றுப்படை | 3 | | |

ஆக, அகத்திணை, புறத்திணைப் பாக்கள் இரண்டிலுமாக 171 இடங்களில் மயில் மகிழ்விக்கின்றது. 2381 சங்கப்பாக்களில் 142 பாக்கள் மயிலால் அழகு பெறுகின்றன. இயற்கை வருணனைக்குச்சிறப்பிடம் அளிக்கும் அகநானூற்றில் இது அதிகம் இடம் பெறுவது, பாடலின் நெடுமை மிகுதிக்குக் காரணம்

எனலாம். வரலாற்றுச் சிறப்பிடம் தந்து அணிகளுக்கு மிகக் குறைவாக இடம் தரும் பதிற்றுப்பத்தில் இம்மயில் இரண்டு இடங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

அகநானூற்றினை அடுத்துப் பரிபாடலும் ஐங்குறுநூறும், புறநானூறும் சரிசமமாக மயிலுக்கு வாய்ப்பளித்திருக்கின்றன. செவ்வேள் மயில்வாகனன் ஆகலின் பரிபாடலில் மயில் பெருமையுடன் வலம் வருகிறது. மேலும் வையையின் வளமும் திருமாலின் குன்றமும் மயிலுக்குப் பரிபாடலில் சிறப்பினைத் தந்துள்ளன. முரசு, படைக்கலங்கள், இசைக் கருவிகள், நடுகல் யாவினுக்கும் ஒப்பனைப் பொருளாய் மயிலின் பீலி விளங்கினமையின் புறநானூற்றின் சில பாடல்களில் பீலி இடம் பெறுகின்றது; இன்னும் சிலவற்றில் நாட்டுவளம் காட்டும் வருணனையில் மயில் குறிப்பிடப்படுகின்றது; தவிர மயிலுக்குப் படாம் ஈந்த பேகன் பற்றிய பாடல்களும் இந்நூலில் மயில் மிகுதியாக இடம்பெற வழி செய்கின்றன.

ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணையைப் பலபடப்பாடியுள்ள கபிலர் அகத்திணைக் கருப்பொருளான மயிலினை வைத்து மஞ்ஞைப் பத்து என்று ஒரு பத்தே பாடியிருக்கின்றார். நெய்தல் பாடிய அம்மூவனார் தவிர பிறதிணை பாடிய புலவரும் மயிலினை எடுத்தாண்டிருப்பதால் இதனுள் மயில் இருபது இடங்களில் இடம் பெறுகின்றது.

பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படையில்தான் மயில் மிகுதியாகக் காணப்படுகின்றது. முருகனின் ஊர்தியாகவும் கொடியாகவும் இது விளங்குகின்றமையின் காரணம் தேடல் தேவையற்றதாகின்றது.

இம்மயில் இடம் பெறாத சங்க இலக்கியம் எதுவுமே இல்லை, என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியங்களில் மயில் மஞ்ஞை (ஐங். 296); தோகை (ஐங். 294); பிணிமுகம் (திருமுருகு. 247) என்ற பெயர்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**புலவர்**

சங்கப் பாடல்களைப் பாடியுள்ள 473 புலவரில் 73 புலவர் மயில் பற்றிப் பாடியுள்ளனர். இவரில் 69 புலவர் பெயர் அறியப்பட எஞ்சிய நால்வர் இன்னார் எனத் தெரியவில்லை.

இப்புலவர் பெருமக்களில் மயிலின் அழகில், ஆடலில் மயங்கிப் பல பாடல்களில் அதற்குச் சிறப்பிடம் அளித்திருப்பவர் கபிலர். செறுத்த செய்யுள் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலர் என்று புலவர் பலராலும் பாராட்டப்பட்டுள்ள இவர், பாரியின் பறம்பு மலையாம் குறிஞ்சி நிலத்தினில் வாழ்ந்து அதனுடன் இரண்டற இணைந்து இன்பத்தில் திளைத்து இயல்பாக அதன் இயற்கையைப் பாடியுள்ளமையின் அந்நிலப் பறவையாகிய மயில் இருபத்தெட்டு இடங்களில் இவர் பாக்களில் இடம் பெற்றிருப்பது ஏற்புடையது.

கபிலரை அடுத்து மயிலுக்குப் பெருமை தருபவர் நக்கீரர். சேயோனிடம் புலவரை ஆற்றுப்படுத்தும் இவர் அவனின் ஊர்தியாகிய மயிலையும் அவனோடு சிறப்பித்திருக்கின்றார். ஆற்றுப்படையில் மயிலைப் பாடிய இவர் பிற இலக்கியங்களிலும் அதனை விட்டுவிடவில்லை.

இவ்விரு புலவரும் மயிலைப் பலவாறாகப் பாடியதற்குக் காரணமிருக்கின்றது. ஆனால் இவர்களுக்கு அடுத்து மிகுதியாக நல்லந்துவனார் பாடியிருப்பதுதான் சிந்தனைக்குரியது. இவர் பாடிய பாடல்கள் நெய்தற்றிணையும், மருதத்திணையும் (பரிபாடல் —வையை) பற்றியவை. பொதுவாக இவ்விருதிணைப் பாடல்களிலும் மயில் இடம் பெறுவது மிகவும் குறைவு. இருப்பனும் இவர் பாடல்களிலும் மயில் பெரிதும் இடம் பெற்றிருப்பதற்கு அம்மயிலின்பால் இவர் கொண்ட மையலே காரணமாகலாம்.

இவரை அடுத்து பரணர் ஆறு இடங்களிலும் மாங்குடி மருதனார் ஐந்து இடங்களிலும் மயிலைப் பாடியுள்ளனர். ஆறு புலவர் நான்கு இடங்களில் குறிப்பிட, எட்டுப் புலவர் மயிலை மூன்று இடங்களில் பாடியுள்ளனர். ஒன்பதின்மர் இரு இடங்களிலும் நாற்பத்தொருவர் ஒவ்வொரு இடத்திலும் மயிலைக் குறிப்பிட்டுள்ளனர். இவரது பாடல்களில் ஓரிரு இடங்களில் மட்டுமே மயில் குறிக்கப்பெறுவது மயிலின் குறையன்று; இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கையின் குறை எனலாம்.

**திணை**

| | | | |
|---|---|---|---|
| குறிஞ்சி | 45 | மருதம் | 12 |
| பாலை | 34 | நெய்தல் | 5 |
| முல்லை | 17 | | |

பிற பறவைகள் ஒரு திணைக்கே உரிய கருப்பொருளாய்க் குறிக்கப்பட மயில் மட்டும் குறிஞ்சி, முல்லை ஆகிய இரு திணைகட்கும் உரியதாய் விளங்குகின்றது. தவிர இவ்விரு திணைக்குரிய பாக்களில் மட்டுமின்றி ஏனைய பாலை, நெய்தல், மருதம் ஆகிய திணைப்பாக்களிலும் மயில் மகிழ்ந்தாடுவது குறிப்பிடற்குரியது.

ஐந்து திணைகளுக்கு முரிய பாக்களை ஒப்பிட்டு நோக்கும் போது மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சித்திணைப் பாக்களில் மயில் மிகுதியும் இடம் பெற்றிருப்பதன் காரணம் சொல்லாமலே விளங்கும். அதிலும் மயில்பற்றி மிகுதியாகப் பாடியுள்ள கபிலர் குறிஞ்சித்திணைப் பாடல்களையே பெரும் பாலும் பாடியுள்ளமையாலும் இத்திணைப் பாக்களில் மயில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

மயில் முல்லைத் திணைக்கும் உரிய பறவையாயினும் அடுத்த இடத்தினைப் பெறுவது பாலைத்திணை. அகத்திணைப் பாக்களில் பாலைத்திணைப் பாக்கள் மிகுதி என்பது இதற்கொரு காரணம். தவிர, பாலை நிலம் பற்றிய வருணனை விரிவாகப் பாடப்பட்டிருப்பதும், பிரிந்திருக்கும் தலைவி தலைவன் பற்றிய பலதுறைப்பாக்களிலும் மயில் வருணனைக்காக, உவமத்திற்காக உள்ளுறைக்காக எடுத்தாளப்பட்டிருப்பதும் பிற காரணங்கள். முல்லைத் திணையில் கார்ப்பருவ வரவினை அறிவுறுத்தற் பொருட்டே பெரும்பாலும் மயிலின் அகவலும் ஆடலும் இடம் பெறுகின்றன. முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து உருவாவது பாலை[3], ஆகலின் இதில் முரண்பாடு ஏதுமில்லை என்பது நினைவு கூரத்தக்கது.

பாலைத் திணையினை அடுத்து, மயில் மகிழ்ந்தாடும் கார்ப் பருவத்திற்குரிய முல்லைத் திணையில் அதிகமாக இடம் பெறுகின்றது. அடுத்த இடத்தினை மருதத்திணை பெறுகின்றது. குறிஞ்சி, முல்லை ஆகிய திணைகளைப் போன்று அந்நிலத்திற்கே உரிய பறவையில்லையெனினும் மயில் மருதத்திணையிலும்

---

3. முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்பாலை என்பதோர் படிவங் கொள்ளும் (சிலம்பு 11 : 64 — 66)

வாழ்ந்திருக்கின்றது என எண்ண இடமிருக்கின்றது. கூட்டொடு அதன் பீலியையும் மழவர் தொகுத்ததாகக் குறிப்புக்கள் காணப் படுகின்றன. (புறம் 13 : 10 - 11). வயல்வாழ் மயிலைப் பழன மஞ்ஞை என்றே புலவர் குறிப்பிடுகின்றனர்.

'கழனியுழவர் தண்ணும்மை யிசைப்பின்
பழன மஞ்ஞை மழை செத்தாலும்' (பதிற்றுப் 9 : 10 : 41 - 42)

மயில் உரிய பொருளுடன் தொடர்பு கொண்டு மருதப்பாக்களில் இடம் பெறவில்லை எனினும் வையை பற்றிய பரிபாடல் பாக்கள் மருதத்திணைப் பாக்கள் ஆனமையின் வருணனையில் மயில் இத்திணையிலும் இடம் பெறுகின்றது. ஐங்குறுநூறு, பரிபாடல் இரண்டு நூல்களில் உள்ள மருதத்திணைப் பாக்களில் மட்டும் மயில் இடம் பெறுவது குறிப்பிடற்குரியது. தவிர அகநானூற்றுப் பாடல் ஒன்றில் மட்டும், அதுவும் திருச்சீரலைவாய் முருகன் கோவிலில் அது அழகுடன் அமர்ந்திருப்பதாகப் பாடப்பட்டுள்ளது.

நெய்தல் திணைப் பாடல்களில் மிகக் குறைவாக மயில் இடம் பெறுகின்றது. அவற்றிலும் மூன்று பாடல்களில் பீலி மட்டுமே குறிக்கப் பெற எஞ்சிய இரு பாடல்களில் மயில் முழுநிலையில் தலைவியை உணர்த்துகின்றது. அந்தந்த திணைக்குரிய கருப் பொருள்களே அவ்வத்திணைப் பாக்களில் இடம்பெறல் மரபாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளமையின் நெய்தல் நிலத்தொடு எவ் விதத்திலும் தொடர்பில்லாத பறவையாய் இருத்தலின் இத் திணையில் மயில் குறைவாய் இடம் பெறல் 'இயற்கையோடு இயைந்தவை' சங்க இலக்கியங்கள் என்ற கூற்றிற்குச் சிறந்த சான்றாகின்றது. நெய்தல் நிலஉரிப்பொருளும் மயில் தொடர்பான உள்ளுறை, இறைச்சி போன்றவற்றிற்கு இடம் அளிக்காதிருப்பதும் மற்றொரு காரணம்.

சங்க இலக்கியப் பாக்களின் எண்ணிக்கையை (2381) நோக்க மயில் 171 இடங்களில் மட்டும் காணப்படுவது மிகக் குறைவாகத் தோன்றலாம். இருப்பினும் அழகு குறித்துவரும் உவமையாக மட்டும் இல்லாமல் பெண்ணுக்குக் குறியீடாகப் பல இடங்களில் வருவதும், வெறும் இயற்கை வருணனையாக அமையாமல், புலவன் தன் கருத்தை, சூழலை, மனநிலையை விளக்க இலக்கிய உத்தியாகப் பயன்படுத்துவதும் இதன் தனிச்சிறப்பு. பொதுவாக உயர்வு நவிற்சியும், வெற்று வருணனைகளும் மிக அருகியன்றிக்

காணப்படா சங்கப் பாக்களில் இத்தனை இடங்களில் இடம் பெற்றிருப்பதும் மங்கை அங்கம் அங்கமாக உவமிக்கப்படல்போல மங்கைக்கு உவமமாகும் இம்மயிலும் அங்கம் அங்கமாக உவமம் ஆதலும் உவமிக்கப்படலும் இதன் மற்றொரு குறிப்பிடத்தகுந்த சிறப்பு. பிற பறவைகள் அனைத்தினும் மயில் மிகுதியாகப் பயின்று வருவதும் இவண் குறிப்பிடல் பொருந்தும்.

# பொது அறிமுகம்-II

(மயில் பற்றிய குறிப்புக்கள்)

நிலப்பறவையாகிய இந்நீலப் பறவையாம் மயில்பற்றிச் சங்க இலக்கியங்களில் 171 இடங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன என்பது முன்னரே குறிப்பிடப் பட்டது. இவற்றில் மயில் முழு நிலையில் இடம் பெறலும் உண்டு; உறுப்பு நிலையில் இடம் பெறலும் உண்டு. தவிர உறுப்பு அடையாய் அமைய முழுநிலையில் இடம் பெறலும் உண்டு.

முழுநிலை: 'விசும்பாடு ஆய் மயில் கடுப்ப' (நற். 222:4)

உறுப்புநிலை : 'மயிலடி இலைய மாக்குரல்நொச்சி'

(குறுந். 138:3)

உறுப்புடன் கூடிய

முழுநிலை: 'அணிகிளர் கலாவம் ஐதுவிரித்தியலும்
மணிபுரை எருத்தின் மஞ்ஞை'

(நற். 264 : 3-4)

முழுநிலை, உறுப்புநிலை இவை இரண்டிலும் மயிலை எடுத்தாண்ட புலவர் பெயர், எடுத்தாண்ட நூற்பெயர், பாடல் எண் ஆகியவை அட்டவணையிடப் பட்டுள்ளன. மயில் முழுநிலையில் இடம் பெறுங்கால் உறுப்புக்கள் அடையாய்வரின் அவையும் குறிக்கப்பட்டுள்ளன.

பாடல்களில் இடம்பெறும் மயிலின் உறுப்புக்கள் தலை, உச்சிச்சூடு, கண், கழுத்து, புறம், தோகை, பீலி, பீலிக்கண், முருந்து, அடி, முட்டை, ஆகியன. இவற்றோடு மயிலின் நிறமும், குரலும் பாடல்களில் இடம் பெறுகின்றமையின் அட்டவணையிலும் இடம் பெற்றுள்ளன.

மயில் முழுமையாக 132 இடங்களிலும் உறுப்புக்கள் 121 இடங்களிலும் பாடல்களில் காணப்படுகின்றன. தனியாக உறுப்புக்கள் இடம் பெறுவது 39இடங்களில் மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது. தோகை மயிலின் சிறப்புறுப்பு ஆகலின் பாடல்களில் பெரும்பான்மையாக இடம் பெற்றிருப்பது அத்தோகையும் (25) அதன் பீலியுமே (26). அடுத்து அதன் பீலிக்கண்ணும்(14) குரலும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. மயிலின் தலையும், முட்டையும் ஒவ்வொரு பாடலில் மட்டும் இடம் பெற மயிலின் உச்சிச்சூடு(7) ஓரளவு பாடல்களில் எடுத்தாளப் பட்டிருக்கின்றது.

தோகை பல இடங்களில் பீலி என்றே புலவரால் குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறு வருமிடங்கள் அட்டவணையில் தோகையின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன.

> ஒலிநெடும் பீலி ஒல்க மெல்லியல்
> கலிமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை
>
> (நெடுநல். 98-99)

இவ்வரிகளில் பீலி என்ற சொல் தோகையைக் குறித்து நிற்பது காணலாம். இது தோடு, கலவம், கலாவம் என்ற பெயர்களாலும் அன்று வழங்கி வந்திருக்கின்றது.

'பைந்தோட்டு மஞ்ஞை' (புறம். 344 : 1)

'குடுமி நெற்றி நெடுமாத் தோகை
காமர் கலவம் பரப்பி' (அகம் 194 :11-12)

'அணிகிளர் கலாவம் ஐது விரித்து இயலும்' (நற். 264 :3)

இதே போன்று பீலிக்குத் தூவி, மயிர் என்ற பெயர்களும் வழக்கில் இருந்திருக்கின்றன.

'தோகைத் தூவித் தொடைத்தார் மழவர்' (அகம். 249 : 12)

'மடஞ்சால், மஞ்ஞை அணிமயிர்சூட்டி' (புறம் 260 : 26)

பீலிக்கண் புலவரால் 'பொறி' என்று பல இடங்களில் சுட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடற்குரியது.

'ஒலிநெடும் பீலி 'ஒண் பொறி மணித்தார்' (புறம் 50 : 3)

'விடுபொறி மஞ்ஞை' (பரி. 21 : 32)

'விரவுப் பொறி மஞ்ஞை' (அகம் 108 : 12)

சிகை, குடுமி இரண்டும் மயிலின் உச்சிச் சூட்டிற்கு மறு பெயர்கள் எனத் தெரிகின்றது.

'சிகை மயிலாய்த் தோகை விரித்து ஆடுநரும்' (பரி. 9 : 64)

'குறும் பொறை அயலது நெடுந்தாள் வேங்கை
மடமயிற் குடுமியிற்றோன்றும் நாடன்' (அகம். 368: 6.7)

பொதுவாகப் புலவர்கள் பறவையின் நெற்றியைப் பாடாது ஒழிய இடைக்காடனார் உச்சிச் சூட்டினைப் பாடுங்கால் குடுமி நெற்றி எனக் குடுமியை உடைய நெற்றியையும் பாடுவது தனித்து நிற்கின்றது.

'குடுமி நெற்றி நெடுமாத் தோகை' (அகம். 194 : 11)

இவற்றை நோக்கப் பிறபறவைகளிலும் (கிளி, நாகணவாய்ப் புள், நாரை, சேவல், காகம், குருவி போன்றவை) மயிலின் உறுப்புக்கள் பல பாடப் பெறும் சிறப்பின என கருத இடமுண்டு.

இவ்வாறாக முழுநிலை, உறுப்புநிலை என இருநிலைகளிலும் பாடப்படும் மயில் அணிகளில் மிகுதியும் இடம் பெறுகின்றது. தவிரப் பாடாண் தலைவனுடன் தொடர்பு கொண்டும் பாடப் பட்டுள்ளது. ஒரோவழி 'சொற்சுட்டு' நிலையிலும் அமைகின்றது.

**அணிநிலை**

உவமை, உள்ளுறை, குறிப்புப் பொருள், குறியீடு, வருணனை, தற்குறிப்பேற்றம் போன்ற பல அணிகளை மயில் பற்றிய குறிப்புக் களில் காணமுடிகின்றது. ஒரு குறிப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட அணிகளும் அமைந்துள்ளன. 'அணிமயிலும் அணிகளும்' என்ற தலைப்பில் இது விரிவாக ஆய்வு செய்யப் படுகின்றமையின் இங்கு ஒவவொரு அணிக்கும் சான்று மட்டும் வழங்கப்படுகின்றது.

**உவமம்**

மயில் மகளிர்க்கும், மயிலின் உறுப்புக்கள் மலர்களுக்கும் உவமையாதல் அணிநிலையில் பெரும்பான்மை. அதே போன்று மயிலுக்கும், மயிலின் உறுப்புக்களுக்கும் உவமை கூறப் பெற்றிருத்தல் இவண் குறிப்பிட வேண்டிய ஒன்று.

மயில்உவமை:

'மயிலஞ்சாயல் மாஅயோள்' (புறம். 318 : 2)

மயிலுறுப்பு உவமை :

'புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தில் தோன்றும்' (குறுந். 183 : 5-6)

மயிலுக்கு உவமை :

'எரிமருள் வேங்கை இருந்த தோகை
இழையணி மடந்தையின் தோன்றும் நாடன்'
(ஐங். 294 :1-2)

மயிலுறுப்புக்கு உவமை :

'கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அஞ்சிறை விரிக்கும்' (ஐங். 300 :1-2)

**உள்ளுறை உவமம்**

உவமை அணியிற் போன்று மயில் பல உள்ளுறை உவமைகளிலும் இடம் பெற்றிருக்கின்றது.

'வேங்கை வீயுகும் ஓங்குமலைக் கட்சி
மயிலறிபு அறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக்கிளியே' (நற். 13 : 7-9)

தான் ஒரு தலைவனுடன் களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டுள்ளதைத் தலைவி தன்னிடம் கூறாது மறைப்பினும், தான் அறிந்து கொண்டதை, கிளி தினைக்கதிர்களைக் கவருவதை மயில் அறியும் என்பது கிளிக்குத் தெரியாது, என்று கூறுவதன் மூலம் இவ்வரிகளில் புலப்படுத்துகிறாள் தோழி.

**குறிப்புப்பொருள்**

உவமையுடன் கூடிய உள்ளுறை பொருளன்றித் தனியாக அமைந்த குறிப்புப் பொருள்களும் மயில் பற்றிய குறிப்புக்களில் காணக்கிடக்கின்றன.

'பெயலுழந்து உலறிய மணி பொறிக் குடுமிப்
பீலிமஞ்ஞை ஆலும் சோலை'(நற். 357 : 6-7)

தலைவி, மழையில் நனைந்து இன்பங் கண்ட மயில் சோலையில் ஆடுவதைத் தன் தோழியிடம், தலைவன் பிரிவினை எங்ஙனம் ஆற்றியிருப்பாளோ தலைவி என வருந்துபவளிடம் காட்டுகிறாள். தலைவனுடன் முன்பு இணைந்து இன்புற்றிருந்தனை எண்ணி அவ்வெண்ணத்தில் இன்பம் கண்டு மனதைத் தேற்றியிருப்பேன் என்பதனை இக்காட்சியினால் குறிப்பாகத் தோழிக்குப் புலப்படுத்தி நிற்கிறாள் அவள்.

**குறியீடு**

பல பண்புகளைக் குறியீடாக மயில் விளக்குகின்றமையின் மயில் பற்றிய குறிப்புக்களில் குறியீடும் இடம் பெறுகின்றது.

'மாரி வண்மகிழ் ஓரிக் கொல்லிக்
கலிமயிற் கலாவத் தன்ன இவள்
ஒலிமென் கூந்தல் (நற். 265: 7-9)

இவ்வடிகளில் தன்மனதில் நிறைந்த தலைவியின் கூந்தலை வருணிக்கின்ற தலைவன் மயிலின் தோகைக்கு அதனை ஒப்பிடுகின்றான். இவ்வுவமையில் அவன் அத்தோகையுடைய மயிலுக்குக் கொடுக்கின்ற அடை தலைவியின் மேன்மைக்கு, உயர்விற்குக் குறியீடாகின்றமை காணலாம்.

### வருணனை

விரிவான வருணனைகளாக மயில் தொடர்பானவை அமைய வில்லை எனினும் குறுகிய பல வருணனைகளில் மயிலைக் காண முடிகிறது.

'இன்சீர்க் கின்னர முரலும் அணங்குடைச் சாரல்
மஞ்ஞை யாலும் மரம் பயில் இறும்பில்'
(பெரும்பாண். 494-495)

நேரடியாகக் கூறின் சுவைபட அமையாத கருத்துக்கள் வருணனை வழிப் புலப்படுத்தப்படும்போது சுவை பயப்பன. இவ்வருணனை மக்களின் மகிழ்ச்சி நிரம்பிய வளம்நிறை வாழ்க்கையைச் சுட்டி நிற்கின்றது.

### தற்குறிப் பேற்றம்

மயில் பற்றிய ஒருசில குறிப்புக்கள் தற்குறிப்பேற்றத்தையும் தாங்கி நிற்கின்றன.

'நொந்து நகுவன போல் நந்தின கொம்பு; நைந்து உள்ளி
உகுவது போலும் என் நெஞ்சு; எள்ளித்
தொகுபுடன் ஆடுவ போலும் மயில்(கலி. 33 : 16-18)

தலைவனைப் பிரிந்து வருந்தி இருக்கும் நிலையில், தலைவிக்கு மயிலின் ஆடல் தன்னை எள்ளி நகையாடற் பொருட்டு என்று தோன்றுகின்றது.

### பல அணிகள் ஒரு குறிப்பில் இடம் பெறல்

முடவு முதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்

பாடிமிழ் அருவிப்பாறை மருங்கின்
ஆடுமயில் முன்னதாகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்றுணைப் பயிரும் குன்றநாடன் (அகம். 352:1-7)

இவ்வரிகள் சிறந்த வருணனையாய் அமைதலோடு உவமையும் பொருந்தி நிற்க, தலைவியின் இல்லறம் இனிமையாய் நடைபெறுவதனையும் குறிப்பாய் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

இவ்வாறாக மயில் பற்றிய குறிப்புக்கள் அணிகள் தரும் அழகுடன் காணக் கிடக்கின்றன.

**அடை**

ஒரு பொருளின் இயல்பினை, சிறப்பினைப் புலப்படுத்த அடை பயன்படுகின்றது. மயில் பெரும்பான்மை அடையுடன் பாடப் பெறுகின்றது. இவ்வடைகள் பண்பு, வினை, உறுப்பு, இடம் என்று பன்முக நோக்கில் அமைகின்றன.

**பண்படை**

மயிலின் மென்மை, அழகு, மடமை, ஒண்மை, பெருமை, நிறம், நன்மை ஆகியவை குறித்துப் பண்படைகள் அமைகின்றன

| | | | |
|---|---|---|---|
| மென்மயில் | (புறம். 120:6) | கலிமயில் | (நற். 265:8) |
| அணிமயில் | (புறம். 264:3) | நன்மாமயில் | (மதுரைக். 608) |
| மடமயில் | (பரி. 19:21) | மணிமயில் | (புறம். 56:8) |
| ஒண்மயில் | (பரி. 9:41) | பசுமயில் | (பதிற்றுப். 3:7:8) |
| மாமயில் | (பரி. 11:41) | | |

இங்ஙனம் பல பண்புகள் கொண்டதாய் இம்மயில் விளங்குகின்றமையின் பல பண்புகளுக்குக் குறியீடாய் அமைய ஏதுவாகின்றது.

**வினை அடை**

வினை குறித்து வரும் அடைகளும் மயிலுக்கு வழங்கப்படுகின்றன. ஆடலும், நடையும், மகிழ்வும் இதற்கு நிலைக் களனாகின்றன.

ஆடுசீர் மஞ்ஞை (பரி. 17:19)
மடநடை மஞ்ஞை (திருமுருகு : 310)
களிமயில் (அகம். 145:14)

மகளிர்க்கு உவமிக்குங்கால் இவ்வடைகள் பொருத்தத்தை மிகுவிக்கப் பயன்படுகின்றன.

**உறுப்படை**

மயிலின் உச்சிச்சூடும், கண்ணும், தோகையும், பீலிக்கண்ணும் பாடல்களில் அடையாகின்றன.

சிகைமயில் (பரி. 9 : 64)

மடக்கண்ண மயில் (பொருந. 190)

கலவ மஞ்ஞை (புறம் 133 : 5)

பீலி மஞ்ஞை (நற். 357 : 6)

அவிர் பொறி மஞ்ஞை (அகம். 242)

மயிலுக்கு அழகுதரும் தோகையும், அதன் கண் அமைந்த பீலிக் கண்ணும் உறுப்படையில் மிகுதியாக இடம்பெறுகின்றன.

**இடஅடை**

மயில் வாழ்கின்ற இடம் குறித்து அடைகள் அமைகின்றன. மலை, காடு, பழனம் ஆகிய இடங்களுடன் இல்லத்தில் வளர்க்கவும் பெறுவது ஆகலின் இல்லமும் அடையாய் இடம் பெறுகின்றது.

மலைய மயில் (பரி. 6 : 4)

கான மஞ்ஞை (புறம். 127 : 4)

பழன மஞ்ஞை (பதிற்றுப் 9 : 10 ; 42)

இல்வழங்கு மடமயில் (புறம். 252 ; 4)

**பலஅடை**

பண்பு, வினை, உறுப்பு, இடம் என்ற இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் கூடிய அடைகளும் பாடல்களில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

அலகையன்ன வெள்வேர்ப்பீலிக் கலவ மஞ்ஞை
(மலைபடு. 234-35)

தண்டா மாப்பொறி மடக்கண்மயில் (புறம். 373. 9-10)

ஒள்ளொளி மணிப்பொறி ஆல் மஞ்ஞை (பரி. 18 : 7)

பொதுவாகச் சாயல் குறித்துவரும் உவமைகளில் தவிரப் பிற இடங்களில் மயில் அடையுடன் வருவது குறிப்பிடத்தக்கது.

**சூழல்**

மயில் வாழும், ஆடும் சூழலைப் பல குறிப்புக்கள் தருகின்றன. குறிஞ்சி, முல்லை என்ற இருதிணைகளுக்கும் உரியதாகலின் மலை, பக்கமலை, மலைச்சாரல், மலைப்பொழில், கானம், குன்றும் கானமும் இணைந்த பகுதி போன்ற சூழல்கள் பெரும்பான்மை இடம்பெறுகின்றன. கொல்லிமலை, ஏழில் மலை என்று சில மலைகள் பெயருடனும் குறிப்பிடப்படுகின்றன.

மலை : 'மாரி வண்மகிழ் ஓரிகொல்லிக் கலி மயில்'
(நற். 265 : 89)

'நன்னன் ஏழில் நெடுவரை பாழிச் சிலம்பில் களிமயில்'
(அகம். 152 : 12-14)

**பக்கமலை**

'கொடிச்சி காக்கும் பெருங்குரல் ஏனல்
அடுக்கல் மஞ்ஞை கவரும் நாட' (ஐங். 296 : 1-2)

**மலைச்சாரல்**

'தேறல் நீர் செத்தயின்ற தோகை.........
......கயிறூர் பாணியில் தேளரும் சாரல்' (குறிஞ்சிப். 190-194)

**மலைப்பொழில்**

'கலைதாய உயர் சிமையத்து
மயிலகவும் மலி பொங்கர் (மதுரைக். 332-333)

**கானம்**

'பையென மயிலினம் பயிலும் மரம் பயில் கானம்'
(அகம். 344 : 5-6)

**குன்றும் கானமும்**

'இனமயில் அகவும் மரம் பயில் கானத்து
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்
குன்றம்' (குறுந். 249 : 1-4)

'கான் ஆற்றங்கரை, பழனம், பொழில் போன்ற இடங்கள் மயில்களால் மேலும் பொலிவு பெற்றமையையும் குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

**ஆற்றங்கரை**

'கான மஞ்ஞை கமஞ்சூல் மாப்பெடை
அயிரியாற்று அடைகரை வயிரின் நரலும்' (அகம் 177 : 10-11)

**பழனம்**

'கழனி உழவர் தண்ணுமை இசைப்பின்
பழன மஞ்ஞை மழை செத்து ஆலும் (பதிற்றுப் 9 : 10 : 41-42

**பொழில்**

'பயில் பூஞ்சோலை மயில் எழுந்து ஆடவும்' (புறம் 116 : 10)

மேற்கூறிய பகுதிகளில் மயில் விரும்பி உறைகின்ற மரம் வேங்கை எனத் தெரிகின்றது. தவிர, மூங்கில், காஞ்சி, மருதம் மா, வெண்கடம்பு ஆகிய மரங்களிலும் மயில் வீற்றிருப்பது உண்டு

**வேங்கை**

'அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை' (குறுந். 26 : 1-2)

**மூங்கில்**

'காமர் பீலி ஆய்மயில் தோகை......
இருங்கண் ஆடமைத் தயங்க இருக்கும்' (அகம் 378 : 5, 10)

**காஞ்சியும் மருதமும்**

'முடக்காஞ்சிச் செம்மருதின்
மடக்கண்ண மயிலால' (பொருந : 189-190)

**மா**

'அலங்குசினை மாஅத்தணி மயிலிருக்கும்' (ஐங் : 8-4)

**வெண்கடம்பு**

'கொடுமிடல் நாஞ்சிலான் தார்போல் மராத்து
நெடுமிசைச் சூழும் மயிலாலும் சீர' (கலி 36 : 1-2)

குறிஞ்சி முதலான பிற நிலங்களில் மட்டுமன்றி நெய்தல் நில, எக்கரிலும் மயில் ஆடி மகிழ்வதை ஒரு குறிப்புக் காட்டுகின்றது.

'கலவம் விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பல பெயர (பொருந. 213-14)

இயற்கையாய் அமைந்த இச்சூழல்களில் மட்டுமன்றி இல்லம், களிற்றின் கட்டுத்தறி, பரண் ஆகிய செயற்கைச் சூழல்களிலும் மயில் இடம் கொள்கிறது.

'இல் வழங்கு மடமயில்' (புறம் 252 : 4)

'களிறு இலவாகிய புல்லரை நெடுவெளில்
கானமஞ்ஞை கணனொடு சேப்ப' (புறம் 127 : 34)

'சேணோன் இழைத்த நெடுங்கால் கழுதின்
கானமஞ்ஞை கட்சி சேக்கும்' (நற். 276 : 5-6)

இவை அனைத்தும் நாட்டின் பெயர் குறிக்காதிருக்க ஒரே ஒரு குறிப்பு மட்டும் மயில்கள் நிரம்பியது துளுநாடு என்றுரைக்கின்றது.

'மெய்ம்மலி பெரும்பூண் செம்மல் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாகலார் கைப்பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாடன்ன' (அகம் 15 : 1-4)

இவை மயில் வாழும், ஆடும், அகவும் சூழலாய் அமைய விசும்பில் பறக்கும் சூழலும் விசும்பினின்று இறங்கும் சூழலும் ஒரிரு பாடல்களில் குறிக்கப்படுகின்றன.

'விசும்பாடு ஆய்மயில்' (நற். 222 : 4)

'விசும்பிழி தோகை' (ஐங். 74 : 1)

இவையே மயில் இடம் பெறும் குறிப்புக்களால் அறியப்படும் சூழல்களாய் அமைகின்றன.

**பாடாண் தலைவன்**

அகப்பாடல்களில் இடம்பெறும் மயில் பற்றிய குறிப்புக்கள் தலைவன் தலைவியரின் களவு, கற்பு வாழ்க்கையுடன் தொடர்புற்று அமைய, புறப்பாடல்களில் இடம்பெறுபவை பாடப்பெறும் மன்னரின் புறவாழ்வுடன் தொடர்பு கொண்டுள்ளன. மழையில் நனைந்து ஆடும் மயிலுக்கு, அது குளிரில் நடுங்குவதாக எண்ணிப் பேகன் தன்படாம் ஒன்றினை ஈந்ததாகக் கூறப்படுகின்றது. நாடிவந்த இரவலர் அனைவருக்கும் களிறுகளைப் பரிசிலாக ஈந்தமையின் ஆய், கட்டுத்தறியில் களிறுகள் இல்லையாக மயில்கள் குடியிருந்தன என்பர் முடமோசியார்.

'மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப்
படாஅம் ஈத்த கொடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக' (புறம் 145 : 1-3)

'களிறு இலவாகிய புல்லரை நெடுவெளில்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப' (புறம் 127 : 3-4)

## சொற்சுட்டு நிலை

உவமை, உள்ளுறை, குறிப்பு, வருணனை என்று ஏதேனு மொரு அணியில் இடம்பெறுதலின்றிச் சொற்சுட்டு நிலையில் மயில் ஓரிரு இடங்களில் மட்டுமே இடம்பெறுகின்றது. அவையும் முருகனின் கொடியாக, காணிக்கைப் பொருளாகக் குறிக்கப்படும் இடங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ' (திருமுருகு : 122)

'மணியும் கயிறும் மயிலும் குடாரியும்
பிணிமுகம் உளப்பட பிறவும் ஏந்தி
அருவரைச் சேராத் தொடுநர்' (பரி 8 : 100-102)

இவ்வாறு இறைத் தொடர்பாக வருங்கால் மயில் சொற்சுட்டு நிலையில் இடம் பெறுகின்றது.

மயில் பற்றிய குறிப்புக்கள் இவ்வாறாக முழுநிலை, உறுப்பு நிலை என இருநிலைகளிலும் அடையுடன் கூடி அமைந்து, சூழலாலும், அணிகளாலும் கருத்தினைத் தெளிவுபடுத்திச் சுவை யினையும் மிகுவித்து நிற்கின்றன. சங்க இலக்கியங்களில் தனக்கெனக் குறிப்பிட்ட இடத்தையும் பெற்று, தான் வரும் இடங்களில் எல்லாம் அகத்திணை மாந்தரின் எண்ணங்களை, மன நிலையை, உணர்வினைக் குறிப்பாகக் கூறி வெளிப்படுத்த மிகச் சிறந்த கருப்பொருளாய், கருவியாய் விளங்குகின்றது மயில்.

# மயிலும் அகப்பொருளும்

அகப்பொருள், புறப்பொருள் என்று மயில் தொடர்பான குறிப்புக்களைப் பகுத்துப் பார்க்கின் அகப்பொருள் தொடர் பானவை பெரும்பான்மையாகயும், புறப்பொருள் தொடர் பானவை சிறுபான்மையாகவும் விளங்குவது புலப்படும்.

தலைவன் தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு உள்ளம் ஒன்றுபடுவதில் தொடங்கி (குறிஞ்சிப்பாட்டு), தலைவன் தலைவி யின் நலம் பாராட்டல் (கலி 55), இருவரும் இயற்கைப் புணர்ச்சி யில் ஈடுபடல் (ஐங். 299), தலைவன் தன்னெஞ்சிற் குரைத்தல் (நற். 265), அறத்தொடு நிற்றல் (கலி. 82, ஐங். 250), இற்செறிப்பு (நற். 222), வரைவு கடாதல் (குறுந். 244), வரவு இடைவைத்துப் பொருள்வயின் பிரிதல் (குறுந். 225), தலைவி ஆற்றியிருத்தல் (குறுந். 249), தலைவன் மீளல் (ஐங். 291), திருமணம் உற்றார் சூழ நடைபெறல் (ஐங். 294), ஒருவரும் அறியாவண்ணம் உடன் போக்கு மேற்கொள்ளல் (நற்.2 64), இல்லறத்தில் இனிது ஈடுபடல் (அகம் 352), தலைவன் பரத்தையிற்பிரிதல் (கலி. 30), பரத்தையை விடுத்து மீண்டும் தலைவியை நாடிவரல் (ஐங். 8) என்று ஒவ்வொரு அகப்பொருள் துறையிலும் மயில் இடையீடின்றி இடம் பெற்றிருக்கின்றது.

இவ்வாறு இடம்பெற்றுள்ளமையின் அகமாந்தரொடு மயில் மிக நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்குகின்றது. குறிப்பாகத் தலைவியுடன் ஒவ்வொரு நிலையிலும் மயில் இணைந்து நிற்கின்றது. இவ்வாறு இப்பறவைகள் மனிதரோடு—சிறப்பாகக் காதலரோடு நெருங்கிய உறவு கொள்கின்றன என்ற

மு. வரதராசனாரின் கருத்தும் இவண் நினைக்கத்தக்கது[1] ஆகலின் 'மயிலும் அகமாந்தரும்' என்று இணைத்து நோக்கல் ஏற்புடை ஒன்றாகிறது; இயல்வதும் ஆகின்றது.

அகப்பொருள் திணைகள் ஐந்திலும் மயில் இடம் கொண்டுள்ளமையின் மயிலும் ஐந்திணையும் என்று அணுகுவதும் பொருந்தித் தோன்றுகின்றது. ஆகலின் மயிலும் அகமாந்தரும் என்ற தலைப்பிலும், 'மயிலும் அன்பின் ஐந்திணையும்' என்ற தலைப்பிலும் 'மயில் பற்றிய குறிப்புக்கள் இவண் நோக்கப் படுகின்றன.

**மயிலும் அகமாந்தரும்**

சங்க இலக்கியங்களில் அகமாந்தர் மன உணர்வுகள் இயற்கையோடு இயற்கையாக, நுண்ணிதின் உணர்ந்து இ புறு மாறு குறிப்பாக உரைக்கப்படல் இயல்பு. அதாவது, 'முதல் கருப்பொருள்களும் வெறும் இயற்கைப் புனைந்துரைகளாக இலக்கியத்தில் இடம்பெறாமல் அகமாந்தரின் மன உணர்வுகளைத் துலக்கி நிற்கும் பின்புலங்களாக இடம்பெறக் காண்கின்றோம்.'[2] விளங்கக்கூறின் 'அகமாந்தர் மன உணர்வுகளை விளக்கத் தேவை யான பின்புலங்களே இலக்கியப் பரப்பிற்குள் கவிஞர்களால் கொண்டு வரப்படுகின்றன.'[3] அவ்வாறு இலக்கியப்பரப்பிற்குள் பயின்று வந்து அகமாந்தரின் மனஉணர்வுகளையும், சூழலையும் தெள்ளிதின் விளக்கி நிற்கும் கருப்பொருள்களுள் முதன்மையிடம் பெறுவது மயில். அது அகமாந்தருக்குப் பொருந்திய உவமமாய் அமைந்து, உள்ளுறையில் அவர்களைச் சுட்டி நின்று, அடை யினால் அவர்களின் சூழலை விளக்கி, குறிப்புப் பொருளை மிக அழகாக அருமையாகப் புலப்படுத்தவும் செய்வது.

இம்மயில் தலைவியாக, தலைவனாக, தோழியாக, சுற்றமாக உள்ளுறையில் சுட்டப்படுகின்றது. தலைவன் தலைவி இருவரை யும் சேர்த்துச் சுட்டி நிற்றலும் உண்டு. தலைவி, ஆயம், பரத்தை ஆகியோருக்கு உவமமாகிப் பொருளை விளக்கலும் உண்டு.

---

1. மு. வரதராசன்; பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை; பாரிநிலையம்; சென்னை; 1979; ப. 457
2. ஆ. இராமகிருட்டிணன்; அகத்திணை மாந்தர்...ஓர் ஆய்வு; சர்வோதய இலக்கியப் பண்ணை; மதுரை; 1982, ப. 3
3. மேற்படி ப, 223

தலைவி அகமாந்தரில் முதன்மையிடம் பெறுபவள். மயிலும் அவளுக்கு உவமையாகலும், உள்ளுறையில் இடம்பெறலுமே பெரும்பான்மை. 45 பாடல்களில் மயில் தலைவிக்கு உவம மாகவோ, உள்ளுறையாகவோ இடம்பெறுகின்றது. தலைவி யுடன் முதன்மையிடம் பெறும் தலைவன் 4 இடங்களிலும் தலைவனும் தலைவியும் சேர்ந்து 4 இடங்களிலும் தோழி, ஆயம், பரத்தை, சுற்றம், ஆகியோர் ஒவ்வொரு இடத்திலும் மயிலாகக் குறிக்கப்படுகின்றனர். அல்லது மயிலை உவமையாகப் பெறு கின்றனர்.

**மயிலும் தலைவியும்**

இருக்கும் இடத்திற்கு எழிலூட்டும் மயிலும் மங்கையும் புலவர் கண்களுக்கு ஒன்றாகவே தோன்றத் தலைவியைப் பாடுங் கால், அவளை மயிலாகப் பலபாடல்களில் பாடியுள்ளனர். களவு, கற்பு என்ற வாழ்க்கையின் இருவேறு நிலைக்களங்களிலும் இணைவுச் சூழலில் இன்பம் காணும் தலைவி, பிரிவுச் சூழலில் துன்பம் காணும் தலைவி என யாராயினும் மயிலுடன் இணைத்து நோக்கப்பட்டிருக்கின்றனர்- தலைவி மயிலாகப் பாடப்பட்டதும் உண்டு. மயில் தலைவியாகப் பாடப்பட்டதும் உண்டு.

**களவுத் தலைவி :** களவில் பகற்குறி, இரவுக் குறிகளில் தலைவனுடன் இணைந்து இன்புறும் தலைவி, தலைவனைப் பிரிந்து, தலைவனிடம் இருந்து தாயால் பிரிக்கப்பட்டுத் துன்புறும் தலைவி இருவரது மன உணர்வினையும் மயில் மிகத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

**இணைவுச் சூழல் :** முதன்முதலாகத் தலைவியைக் கண்ணுறும் தலைவன் அவளை, 'அணிமயிற் பெடை' என்கிறான். இளமை காரணமாக மடமை நிரம்பியவள் ஆதலின் பெடைமையினை உடைய அழகிய மயில் என்று கூறித் தன் அழகு காண் போரை மயக்கிப் பேதமைக்குள்ளாக்கும் என்பதை இவள் அறிவாளோ? அறியாளோ? என்கிறான். அறிய மாட்டாள் என்பது அவன் எண்ணம்.

'ஆய்தூவி அனமென அணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்த நின்னெழில்நலம்
மாதர் கொள் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉம் என்பதை அறிதியோ அறியாயோ'

(கலி. 56:14-17)

காண்போர் கண்களைக் கவர்ந்திழுக்கும் மயிலின் கவின் இங்குத் தன் அழகினைத் தானே உணராத இளமையும் பொலிவும் உடைய தலைவிக்கு உரைக்கப்படுகின்றது. அம்மயிலுக்குக் கொடுக்கப்படும் அடை அவளது அறியாமைக்கும் அழகுக்கும் கொடுக்கப்படும் அடையாய்ப் பொருந்தி நிற்கின்றது.

தனிமையில் தலைவியின் எழிலை எண்ணி எண்ணி மகிழு கின்ற தலைவன் அவளைக் கொல்லிமலைக் கலிமயில் (நற். 265) என்று தனக்குத்தானே கூறிக் கொள்கின்றான். பெருமித உணர்வும் இன்ப உணர்வும் ஒருசேரக் கொண்டவள் இத்தலைவி ஆகலின் கொல்லி மலையில் மயில் தன்தோகை விரிய நிற்கும் நிலை தலைவனுக்குத் தோன்றுகிறது. அவளைத் தனக்குரியவள் என்று எண்ணும்போது தானும் அப்பெருமித உணர்வினை அடை கின்றான்.

இருவரும் இணைந்திருக்கையில் தலைவன் தலைவியின் நலம் பாராட்ட அதனைத் தன் தோழியிடம் தலைவி உரைத்து மகிழும் இன்பச் சூழலிலும் மயில் இடம் பெறுகின்றது.

> 'மெல்ல இயலும் மயிலுமன்று
> சொல்லத் தளரும் கிளியுமன்று' (கலி. 55:13-14)

என்று தன் மென்மையை, சாயலைத் தலைவன் புகழ்ந்ததாகக் கூறி மகிழுகின்றாள் தலைவி.

வேறுவழி காணாது தலைவி தலைவனுடன் உடன்போக்கு மேற்கொள்ளுங்காலை, பெற்ற தாய் தந்தையரையும் உற்றார் உறவினரையும் பிரிந்த துயரம் அவளை வருத்தக்கூடாது என்ற எண்ணத்தில் தலைவியை நின் கூந்தல் காற்றிலே அசைய நீலமணி போன்ற கழுத்தினை உடைய மயில்போல் நடந்துவா (நற். 264) என்று நலம்பாராட்டி மனத்தை மகிழ்விக்கவும் மயில் துணை நிற்கின்றது.

இச்சூழலுக்கு மாறாக உற்றார் உறவினர் சூழ்ந்திருக்கப் பெற்றோர் கரம்பற்றிக் கொடுக்கத் தலைவன் தலைவி திருமணம் நடைபெற, பொன்போற் பூத்துப் பொலிந்துள்ள வேங்கை மரத்தை அடைந்து அணிகளால் பொலிவு பெற்றிருக்கும் பெண் போல் விளங்கும் என்று தோழியால் குறிக்கப்படும் மயில் (ஐங். 294) தலைவனை அடைந்து பொலிவு பெற்றிருக்கும் தலைவியை உள்ளுறையில் குறித்துச் சுவை பயக்கின்றது.

இவை தவிரச் 'சூருறு மஞ்ஞை' (குறிஞ்சிப். 169) என்று தெய்வம் கூட்டுவிக்கத் தலைவனுடன் மனம் ஒன்றுபட்ட தலைவி தோழியால் குறிக்கப்படுவதும், 'விசும்பிழி தோகை' (ஐங். 74) என்று களவு காலத்துத் தலைவனோடு புனலாடி இன்புறும் தலைவி தலைவனால் குறிக்கப் படுவதும், 'வேங்கைக் கமழ்தாது ஆடிய கவின்பெறு தோகை' (நற். 396) என்று தலைவனுடன் களவின்பம் துய்த்த தலைவி தோழியால் குறிக்கப்படுவதும் அடை காரணமாகத் தலைவியின் நிலையினையும் பொலிவினையும் மகிழ் வினையும் உணர்த்தி நிற்பவை.

**கற்புத் தலைவி**

மணம் முடித்துத் தலைவனுடன் இணைந்து இல்லறம் நடத்தும் கற்புத் தலைவியின் இணைவுச் சூழலும் பிரிவுச் சூழலும் மயில் தொடர்பால் உணர்த்தப்பட்டுள்ளன.

மயிலின் ஆடலால் தலைவன் தலைவி இல்லறம் இனிமையாக நடைபெறுவதை ஒரு புலவர் உணர்த்துகின்றார். இவர், கடுவன் முழவு போன்று தோற்றமளிக்கும் பலாவின் பழ மொன்றைக் கையில் ஏந்தித் தன் துணையை அழைக்க, அதன்முன் நின்று விறலி போன்று மயில் ஆடுகின்றது (அகம். 352) என்கிறார். உள்ளுறையால் தலைவியைத் தலைவன் போற்றிப் பேணுவதை யும் தலைவி இன்பமாக வாழுகின்றாள் என்பதையும் உணர்த்து வது இது.

இவ்வாறாகக் களவுத் தலைவியும் கற்புத் தலைவியும் தலைவ னுடன் இணைந்து இன்புற்று இருப்பது மயில் உவமையால், அதற்குக் கொடுக்கப்படும் அடையால், அதன் நடையால், ஆடலால் புலப்படுகிறது. இன்பநிலை உணர்த்தும் பாடலினும் துன்பநிலை உணர்த்தும் பாடல்கள் மிகுதி ஆகலின் இணைவுச் சூழலில் மயில் இடம் பெறுவதினும் பிரிவுச் சூழலில் மயில் இடம் பெறுவது மிகுதி என்பதும் அதிலும் கற்பில் இணைவுச் சூழல் பாடல்கள் மிக அருகிக் காணப்படுவது என்பதும் இவண் குறிப் பிடத்தக்கது.

**களவுத் தலைவி : பிரிவுச் சூழல்**

இணைவு இன்பந்தரலும், பிரிவு துன்பந்தரலும் இயல்பு எனின், எதன் பொருட்டுப் பிரிவு நேரினும் அதுதரும் துன்பத்தை ஆற்றியிருத்தலும் தலைவிக்கு அரிதாகின்றது. மயில் தெளிவாக இப்பிரிவினால் தலைவி வாடுவதைத் தெரிவிக்கின்றது.

இற்செறிப்பு தலைவி தலைவன் இணைய முடியாது பிரிந்திருப்பதற்கு ஒரு காரணம் ஆவது. வேடன் வலையில் அகப்படும் மயில் தாயால் இற்செறிக்கப்படும் தலைவியின் மன உணர்வினைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. வலைப்படலால் மயில் வருந்துவதும், எழில் குன்றுவதும் இற்செறிப்பால் வருந்தும் தலைவியைக் கண்முன் நிறுத்துகின்றன.

'நீரெறிமலரின் சாஅயிதழ் சோரா
ஈரிய கலுழும் இவள் பெருமதர் மழைக்கண்
ஆகத் தரிப்பனி உறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையின் நலஞ்செலச்சாஅய்'

(குறிஞ்சிப் : 247-250)

இதில் வலைப்பட்ட மயிலாய்த் தலைவி தன் நலன் இழப்பது கூற,

'வலையுறு மயிலின் வருந்தினை பெரிது' (கலி 128) என்ற தொடர் பிரிவு தரும் வருத்தத்தைத் தலைவன் வாயிலாய் உணர்த்தி நிற்க,

'ஓரி முருங்கப் பீலிசாய
நன்மயில் வலைப்பட்டாங்கு யாம்
உயங்குதொறும் முயங்கும் அறனில் யாயே'

என்பது நலம் கெடலையும் வருத்தத்தையும் ஒருங்கே கூறி இற்செறிப்புடன் காவல் மிகுதியையும் காட்டுகின்றது.

பீலி உதிர்ந்திருக்கத் தன் பொலிவை இழந்திருக்கும் மயில் (கலி. 137 : 5-7) மற்றொரு தலைவியின் நிலையை உணர்த்துகின்றது. தலைவன் வரைவு நீட்டிக்கின்றமையால் வாட்டமுறும் தலைவி இவள். நாள் செல்லச் செல்ல எழில் குன்றுகின்றது. இதிலும் மயிலுக்குக் கொடுக்கப்படும் அடை மயில், தலைவி இருவருக்கும் பொருத்தமாய் அமைந்திருப்பது காணலாம்.

**கற்புத்தலைவி : பிரிவுச் சூழல்**

கடமை பொருட்டுப் பிரிதல், கள்ள இன்பம் குறித்துப் பிரிதல் என்று இருவகைப் பிரிவினைக் கற்பில் காணமுடிகின்றது. முன்னது பொருள் பொருட்டு அல்லது போர் பொருட்டுப் பிரிவது; பின்னது பரத்தையரை நாடிப் பிரிவது. இரண்டும் தலைவிக்குப் பெருந்துன்பந் தருவன. இவையும் மயிலின் துணையொடு விளக்கப் பெறுகின்றன.

அம்பினால் தைக்கப்பட்டு நடுங்கும் மயில் போர்வயின் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் நிலையினை விளக்கி

நிற்கின்றது. வாழ்வா, சாவா என்பதே ஐயமாகும் நிலையில் பிற பிரிவுத் துன்பத்தினும் கொடுமையானது இது. ஆகலின் அந்நிலையினை உணர்த்த இவ்வம்பு லைதக்கப் பெற்ற மயிலினும் பொருந்தி நிற்கும் உவமம் வேறில்லை.

'ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து' (முல்லைப் :84) பிற்காலப் பாடல்களில் பிரிந்திருப்போரை மன்மதன் தன்னம்பினால் வருத்துகின்றான் எனப் புலவர் (சிலம்பு 8 :50-63; கம்பன். கிட்கிந்தா : 480) பாடுவது இதனை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுதான் போலும்.

இவை போன்று அனைத்துச் சூழலுக்கும் பொருந்துமாறு புலவர் மயிலைத் தலைவியுடன் தொடர்புபடுத்திப் பாடியுள்ளனர். இவை எல்லாம் அணிகளாக அமைந்து சிறக்கின்றன. இவற்றை 'அணி மயிலும் அணிகளும்' என்ற தலைப்பில் விளக்கமாகக் காணலாம்.

சுருங்கக் கூறின் தலைவன் தலைவி இருவரையும் இணைந்திருக்கும் சூழலிலும் பிரிந்திருக்கும் சூழலிலும் காணும் புலவர் அவர்தம் உணர்வினை மயிலின் துணைகொண்டு சுவைபடப் புலப்படுத்தியிருக்கின்றனர். அம்மயில் பிறமாந்தரினும் தலைவிக்கு மிகப் பொருத்தமாய் விளங்குகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

### மயிலும் தலைவனும்

சாயலாலும் நடையாலும் மயில் தலைவிக்கு உவமமாகும் சிறப்பினைப் பெற்றிருக்கின்றமையின் உவமை, உள்ளுறை இரண்டிலும் மயில் தலைவியுடன் தொடர்புபடுத்திப் பாடப்பட, தலைவனுடன் உள்ளுறையில் மட்டும் மயில் தொடர்பு கொண்டுள்ளது.

தலைவனைத் தோழி வரைவு கடாவும் போதும் தலைவன் வரைவினை நீட்டுவிக்கின்றமையின் சாடும் போதும் தலைவன் மயிலாகக் குறிக்கப் பெறுகின்றான்.

கொடிச்சியர் காக்கும் தினையினை மயில் கவருகின்ற நாடன் என்று ஒரு தலைவனைக் குறிப்பிடுகின்றாள் தோழி. மயில் கவர்வதைப் போன்று நீயும் களவின்பமே குறியாக இருக்கின்றாய். வரைந்து தலைவியை இல்லத்திற்கு அழைத்தேகும் எண்ணம் உனக்கு இல்லை என்று மயிலைப் பழிப்பது போல் தலைவனைப் பழிக்கின்றாள் தோழி. இங்குத் தினைக்கதிர் தலைவியாகவும் தலைவன் மயிலாகவும் சுட்டப்படுகின்றனர்.

'கொடிச்சி காக்கும் பெருங்குரல் ஏனல்
அடுக்கல் மஞ்ஞை கவரும் நாட
நடுநாட் கங்குலும் வருதி
கடுமா தாக்கின் அறியேன் யானே' (ஐங். 296)

கொடிய காட்டு வழியின்கண் வருகின்றாய்; வனவிலங்குகளால் உனக்கு ஏதேனு ஏதம் நேரின் என் செய்வது? அதனால் வரும் துன்பத்தைத் தலைவி தாங்க மாட்டாள் என்பது கூறும் முகமாக மயில் போல் மறைந்து நுகரும் களவின்பம் விடுத்துத் தலைவியை மணம் முடித்து இல்லறம் மேற்கொள்ள வேண்டும் என்பது தோழியின் விழைவாக இங்கு விளங்கக் காணலாம்.

தினைக்காவலர் கட்டிய பரணில் மயில் தங்குவதைக் கூறித் தலைவியின் இல்லத்தில் தலைவன் தங்கவேண்டும் என்ற விருப்பத்தினை வெளியிடுகின்றாள் பிறிதொரு தோழி. தலைவியைத் தலைவன் மணந்து கொண்டால்தான் தலைவியின் இல்லில் தங்க இயலும். ஆகலின் இதுவும் மறைமுகமாகத் தலைவியை மணம் முடிக்குமாறு வேண்டலேயாம்.

'சேணோன் இழைத்த நெடுங்கால் கழுதின்
கான மஞ்ஞை கட்சி சேக்கும்' (நற். 276 : 5-6)

இவ்வாறு மயில் தலைவனைச் சுட்டும் பாடல்கள் தோழியின் கூற்றாக அமைந்து தலைவியை மணம் முடிக்கும்படி வேண்டுவ தாக அமைகின்றன.

### மயிலும் தலைவன் தலைவியும்

மயில், தலைவி, தலைவன் இருவரையும் தனித்தனியாகக் குறிப்பது மட்டுமன்றி இணைத்துக் குறிப்பதும் காணப்படுகின்றது.

தோழி வரைவு கடாவுவதாக அமைந்த இரு பாடல்களிலும் வரைதற் பொருட்டுப் பொருளீட்டி வரும் தலைவன் கூற்றாய் அமைந்த பாடல் ஒன்றிலும் வினைமுற்றி மீளும் தலைவன் கூற்றாக அமையும் பாடல் ஒன்றிலும் தலைவன் தலைவி இருவருமே மயில்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். இவற்றிலும் இறுதி ஒன்றினைத் தவிர ஏனைய மூன்றும் உள்ளுறையாய் அமைவன.

மயில்கள் கார்காலத்து மகிழ்ந்தாடியவை இளவெயில் உண்ணற் பொருட்டுத் தம் பெடையோடும் மலையின் பக்கஞ் சென்று ஆடும் என்கிறாள் தோழி.

'அருவியார்க்கும் அணங்குடை நெடுங்கோட்டு
ஞாங்கர் இளவெயில் உணீஇய ஓங்கு சினைப்
பீலிமஞ்ஞை பெடை யோடாடும்
குன்றநாடன்' (நற். 288 : 1-4)

தலைவியுடன் நீ துய்த்த களவின்பம் விடுத்து, திருமணம் முடித்து இல்லறக் கடமைகளில் ஈடுபடவேண்டும் என்பதைக் குறிப்பாக இங்ஙனம் உணர்த்துகிறாள் தோழி.

தலைவியை மணத்தற் பொருட்டுப் பொருளீட்டி விரைந்து வருகின்றான் தலைவன். அவ்வமயம் தன் பாங்கனிடம் தலைவியின் ஊர் பற்றி உரைக்கும்போது,

'மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்' (ஐங். 291)

ஊர் எனக்கூறுகின்றான். மயில்களைப் போல் தலைவனும் தலைவியும் சந்தித்து இன்பங்கண்டு மகிழ்ந்ததையும் அதற்குத் தோழி துணை நின்றதையும் இக்குறிப்பினால் உணரலாம்.

## மயிலும் தோழியும்

பொதுவாகச் சங்க இலக்கியங்களில் தோழி கூற்றுக்கள் மிகுதியே தவிர அவளைப் பற்றிய குறிப்புக்கள் அருகிக் காணப்படுகின்றன. ஒரேஒரு பாடலில் தோழி தன்னைத் தானே தலைவியிடம் மயில் என்று குறிப்பிடுகின்றாள். இப்பாடலும் உள்ளுறை பொருந்தியது.

மயில் கிளிகள் திணை கவர்வதை அறியும். ஆனால் கிளிக்கு மயில் அறியும் என்பது தெரியாது என்கிறாள் தோழி.

'மயிலறிபு அறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக்கிளியே'' (நற். 13 : 8-9)

தலைவியின் களவொழுக்கத்தினைத் தான் அறிந்திருப்பதையே அவ்வாறு கூறுகின்றாள் தோழி. இங்கு அறிவுக் கூர்மை நிரம்பியவளாகப் படைக்கப்படும் தோழி மயிலாகின்றாள்.

## மயிலும் ஆயமும்

தலைவியின் ஆயம் மயிலாக ஒரு பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. தம் மென்மையும் சாயலும் காரணமாக இவர்கள் செவிலித்தாயால் மயிலாகக் கூறப்படுகின்றனர்.

'மயிலியல் சேயிழை மகளிர் ஆயமும் அயரா' (அகம். 369 : 4-5)

தலைவி உடன்போக்கு மேற்கொள்ள அவள் பிரிவால் வாடி வருந்தும் ஆயம் விளையாட்டினைத் துறக்கின்றது. அதைக் கண்டு வருந்தும் செவிலி, தலைவிபால் தாம் கொண்ட அன்பு இங்ஙனம் வருந்தி நிற்க காரணம் ஆக அவர்களை மயிலியலார் என்கிறாள்.

ஆயம் இதில் தனியாக மயிலாகச் சுட்டப்பட பிறிதொரு பாடலில் தலைவியுடன் இணைத்து மயிலாகச் சுட்டப்படுகின்றது.

நீலத்தன்ன நிறங்கிளர் எருத்தில்
காமர்பீலி ஆய் மயிற்றோகை
இன்றீங்குரல துவன்றி மென்சீர்
ஆடுதகை எழில்நலம் கடுப்பக் கூடிக்
கண்ணேர் இதழ தண்ணுறுங் குவளைக்
குறுந்தொடர் அடைச்சிய நறும்பல் கூழை
நீடுநீர் நெடுஞ்சுனை ஆயமொடு ஆடாய்' (அகம். 358 : 1-7)

தலைவன் சிறைப்புறமாக நிற்கத் தோழி தலைவியிடம் கூறுகின்றாள். வரையாது தலைவன் காலம் கடத்துகின்றமையின் தலைவி மனம் வருந்தித் தன் ஆயமுடன் விளையாடுவதையும் விட்டுவிட்டதை அவனுக்கு உணர்த்த விரும்பி, நீலமணி போன்ற கழுத்தும் அழகு நிரம்பிய பீலியும், ஆய்ந்து நோக்குவது போன்ற தோகையும் இனிய குரலும் உடைய மயில் போன்று கூடிநின்று சுனையில் ஆயமொடு நீராடாய் என்று மயிலை மிக விரிவாக வருணனை செய்கின்றாள். இவ்வருணனையால் மயிலுடன் முரண் பட்டுத் தலைவி தன் நிறம் மாறிப் பசலையுற்று, பொலிவு இழந்து எதனையும் காணும் விருப்பின்றி எதுவும் பேசாது சோர்வுற்றுத் தளர்ந்திருக்கும் நிலையினைத் தலைவனுக்கு உணர்த்துகின்றாள். தலைவி பொலிவு குன்றியிருக்க, மயிலைப் பலபட வருணிக்கும் இது பிற பாடல்களினின்றும் மாறுபட்டு நிற்பது குறிப்பிடத்தக்கது.

**மயிலும் பரத்தையும்**

மயில் ஒரு பாடலில் பரத்தைக்கு உவமமாய் வந்துள்ளது. தலைவன் பரத்தை வழிப் பிரிந்தமை எண்ணி வருந்திப் புலம்பும் தலைவி தன்னிரக்கத்தோடு பரத்தையரை மயிலாகக் கூறு கின்றாள்.

'மயிலியலார் மருவுண்டு மறந்தமைகுவான் மன்னோ'
(கலி. 30 : 6)

**மயிலும் தலைவியின் சுற்றமும்**

தலைவியுடன் தொடர்புடைய தலைவன், தோழி, ஆயம் அனைவரும் மயிலாகக் குறிக்கப்படல் போன்று அவளது சுற்றமும் மயிலாகக் குறிக்கப்படுகின்றது. தலைவி தலைவனுடன் பிறர் அறியாவண்ணம் சென்று விடுகின்றாள். தாய் அதனை அறிந்து தவிக்கும்பொழுது, மயில்கள் களிப்புடன் யானையம் குருகுடன் சேர்ந்து இடையறாது ஒலிக்கும் முழவொலியினை முகில் முழக்கம் எனக்கருதி ஆரவாரம் செய்யும் படியான ஐம்புல இன்பங்களை இடையறாது வழங்கும் தந்தை இல்லத்தினை எங்ஙனம் என் மகள் துறந்து சென்றாள் என்று கூறி வருந்துகின்றாள். (அகம், 145 : 14-16) இதில் தலைவியின் சுற்றத்தினர் மயிலாகக் குறிப்பிடப் படுகின்றனர்.

'கவிஞர்கள் தம் இயற்கை அனுபவத்தைத் தாம் படைக்கும் மாந்தரின் உணர்வுகளையும் செயல்களையும் விளக்கப் பயன் படுத்திக் கொள்கிறார்கள்'[4] எனும் கூற்றுக்கேற்ப மயிலை மலைச் சாரலிலும் மரங்களின் மேலும் குன்றுகளிலும் காணும் புலவர் அதன் நடையை, ஆடும் அழகை. வலைப்படின் வருந்துதலை கூடி மகிழ்ந்தபின் தோகை பீலி உதிர்ந்து பொலிவு குன்றியிருக் கின்றமையை, அம்பு தைத்து அலமருகின்றமையை மிகப் பொருத்தமாக, அகமாந்தரின மனஉணர்வுகளையும் செயலையும் விளக்கப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

**மயிலும் அன்பின் ஐந்திணையும்**

இடம் காரணமாகக் குறிஞ்சிக்கும் காலம் காரணமாக முல்லைக்கும் உரியதாகக் கூறப்படுவது எனினும் அக்குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து உருவான பாலையிலும், அதற்கு நேர் மாறாக நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே பெற்று விளங்கும் மருதத்திலும், கடல்சார்ந்த நெய்தலிலுங் கூடப் பாடல்களில்

---

4. மு. வரதராசன்: பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை பாரிநிலையம்; சென்னை; 1979.

5. de Uries Dictionary of Symbols and Imagery; North Holland Publishing company; Amsterdam; London; 1974: P. 360.

மயில் நீக்கமறக் காணப்படுகின்றது. இதனை நோக்க மயில் முழுமைக்குக் (Totality) குறியீடாக வழங்கப் பெறல்[5] மிகப் பொருத்தமான ஒன்று என்பது தெரியவருகிறது.

ஐந்திணைகளில் குறிஞ்சித்திணைப் பாடல்களில் மிகுதியாகவும், அதனை அடுத்துப் பாலைத்திணைப் பாடல்களிலும், மூன்றாவதாக முல்லைத் திணைப் பாடல்களிலும், நான்காவதாக மருதத்திணைப் பாடல்களிலும் குறைவாக நெய்தற்திணைப் பாடல்களிலும் மயில் இடம்பெறுவது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அகப்பொருள் திணை ஐந்தின் துறைகளோடு தொடர்பு படுத்தி மயில் எங்ஙனம் பாடப்படுகின்றது என்பது இத்தலைப்பில் கருதப்பெறுகின்றது. உறுப்பு நிலையில் தனியாக உவமமாக மட்டும் மயில் இடம்பெறுபவை இங்கு விலக்கப்பெற்றுள்ளன.

## குறிஞ்சித்திணை

48 இடங்களில் தலைவியோடும் பிற அகமாந்தரோடும் தொடர்பு படுத்தி மயில்பாடப்பெற்றுள்ளது. உள்ளுறைப்பொருள் தருபவை இவற்றில் பல என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

காமஞ்சாலா இளமையோள் வயின் காதல் கொண்டு ஏமஞ்சாலா இடும்பை எய்தித் தலைமகன் உரைப்பதில் தொடங்கி (கலி. 56, 57) தோழி தலைமகனுக்குக் குறைநேரத் தலைவி நாணத்தினால் மறைந்தொழுகியதனைக் கேள்வியுற்றுத் தலைமகன் தலைவிக்கும் தன்பால் அன்பு உண்டு என்பதை அறிவதிலிருந்து (ஐங். 298) தன்தமரை அனுப்பித் தலைமகன் மகட்கொடை வேண்டத் தலைவியின் சுற்றம் கொடை நேர்ந்து (ஐங். 300) இருவருக்கும் திருமணம் நடைபெறத் தலைவியின் கூந்தலில் மலரணிந்து அவளைத் தனக்குரியவள் ஆக்கிக் கொள்வது (ஐங். 294) வரை அமைந்துள்ள அனைத்துத் துறைப் பாடல்களிலும் மயில் தொடர்பு கொண்டுள்ளது.

## இயற்கைப் புணர்ச்சி

தலைவியிடத்துத்தான் கொண்ட அன்பினை வெளிப்படுத்தி அவளும் தன்பால் அன்பு கொண்டமையைத் தோழி மூலம் அறிய முனைகின்றான் தலைவன். நாணம் காரணமாகத் தலைவியின் அன்பை வெளிப்படக் கூறாது,

'மழைவரவு அறியா மஞ்ஞை ஆலும்' (ஐங். 294)

எனக் குறிப்பாகக் கூறுகிறாள் தோழி. மழை வரவுகண்டு மயில் ஆடல்போல் நின் வருகை கேட்டுத் தலைவியும் பெருமகிழ்வு அடைந்தாள் என்பது குறிப்பு.

தலைவியின் மெய்தொட்டுத் தலைவன் பயிறும் காலையும் நாணும் மடனும் நீங்கிற்றில்லேன் என்று தோழியிடம் தலைவி பெருமையுடன் கூறுங்கால் தலைவன் தன்னை நலம் பாராட்டும் முகமாக 'மெல்ல இயலும் 'மயிலுமன்று' (கலி. 55) என்று கூறியதாக வருவது சுவைபயப்பது. மயிலின் மென்மையும் சாய லும் இவண் தலைவியைப் பெருமைப்படுத்துகின்றன. இவள் தன், போல் சாயல் மஞ்ஞைக்கு மரிதே' (ஐங். 299) என்று இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தன்னெஞ்சினிடத்துத் தலைவன் உரைப்பதும் அச்சிறப்பினது.

## பகற்குறியும் இரவுக் குறியும்

பகற்குறியில் தலைவியைக் காணக் காத்திருக்கின்றான் தலைவன். பின்வந்து அவன் கண் புதைக்கின்றாள் தலைவி. தலைவன்,

> சிலம்பு கமழ் காந்தள் நறுங்குலையன்ன
> நலம் பெறும் கையின் என்கண் புதைத்தோயோ
> பாயல் இன்றுணையாகிய பணைத்தோள்
> தோகை மாட்சிய மடந்தை
> நீயலது உளரோ என் னெஞ்சமர்ந் தோரே (ஐங். 293)

என்று, தோகை போன்ற நீண்ட கூந்தலையும் மனதிற்கு உகந்தவளாக அவள் நடந்து கொள்ளும் மாட்சியையும் நினைவு கொண்டு தோகை மாட்சிய மடந்தை' என்று அவளைப் பாராட்டு கின்றான்.

பிறிதொரு தலைவன் இரவுக்குறி வந்து நீங்குங் காலைத் தலைவியைக் 'களிமயில்' என்று பெருமையுடன் புகல்கின்றான். இடர்ப்பாடுகள் இருந்தும் தன்னைக் காண வருவதை எண்ணி நெஞ்சம் நெகிழும் அவன், அவள் அன்பின் ஆழம் குறிக்க மயிலை உயர்ந்த மலையுடன் கூறுகின்றான்.

'ஆர நன்னன் ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில் களிமயில்'
(அகம். 152 ; 12-14)

## அறத்தொடு நிற்றல்

தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலிலும், தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றலிலும் மயில் துணை நிற்கின்றது. தலை : யின் தோற்றத்திலும் செயலிலும் தோழி மாறுபாடு கண்டு வினவத் தலைவி குறிப்பாகத் தலைவனின் குன்றம் உரைத்து அவன்பால் தான் கொண்ட கேண்மையை வெளிப்படுத்த முனையுங்கால் விழவுக்களத்து விறலி போல் மயில் ஆடும் குன்ற நாடன் (அகம். 82) என்கிறாள். மயில் ஆடல் விறலி போன்று ஆடல் தலைவனுடன் நட்புக் கொண்டதன் காரணமாக அடைந்த தலைவியின் மனமகிழ்வினையும் நிறைவினையும் புலப்படுத்து கின்றது.

கட்டுவிச்சியை அழைத்துக் குறிகேட்கும் போதும் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்தும் போதும் நிலைமை எல்லை மீறுவதை உணர்ந்து தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள். வேங்கைப் பெருஞ்சினை அமர்ந்த தோகை பூக்கொய்யும் மகளிர் போல் தோன்றும் என்று கூறி, அதுபோன்று நோய்க்குக் காரணம் ஆகாத தெய்வம் கட்டுவிச்சிக்கு நோய்க் காரணமாகத் தோன்று கிறது, என உணர்த்துகின்றாள் (குறுந். 26) ஒரு தோழி. பிறி தொரு தோழி வேலன் நோய்க்குக் காரணமானவன் அல்லன்; மணிதரும் மலை அமைந்த, மயில்கள் ஆடும் காட்டினுக்கு உரிமையுடையவனாகிய பெருந்தகையே காரணமாவான் (ஐங்.250) என்று கூறுகின்றாள். இருபாடல்களிலும் மயிலின் தோற்றமும் ஆடலும் தலைவியின் களவினைச் செவிலிக்கு உணர்த்த உறுதுணை புரிகின்றன.

## வரைவு கடாதல்

மயில் இத்துறைப் பாடல்களில் இடம்பெறுவது தான் பெரும் பான்மை, வெறியாட்டு அறிவுறுத்தி வரைவு கடாதல் (நற்.288), இரவுக்குறி மறுத்து வரைவுகடாதல் (நற். 396 ஐங்.296), களவு வெளிப்பட்டமை கூறி வரைவு கடாதல் (அகம் 158), இற்செறிப்பு உரைத்து வரைவு கடாதல் (குறுந்.244), தமர் வரைவு வேண்டி வருவது கூறி வரைவு கடாதல் (ஐங்,258), அலர் மிகுதி குறித்து வரைவு கடாதல் (அகம்.368) தலைவன் வரைவு நீட்டிக்க அன்னை யினால் களவு அறியப்பட்டமை உணர்த்தி வரைவு கடாதல்(அகம். 242,272) என்று வரைவினை விரைவு படுத்த வேண்டியதற் காகக் கூறும் காரணங்கள் அனைத்திலும் மயில் இடம் பெறுகின்றது.

மயிலின் அகவல், ஆடல், இளவெயில் உண்ணல், வரையி னின்று இறங்கல், வலைப்படல் ஆகிய செயல்கள் வரைவு கடாதற்குத் தோழிக்குத்துணை புரிகின்றன. உள்ளுறை உவமை யில் இவை விரிவாக விளக்கப்படுகின்றமையின் இவண் ஒன்று மட்டும் விளக்கப்படுகின்றது.

இரவுக்குறியின் கண் வந்து சிறைப்புறமாக நிற்கின்றான் தலைவன். அவன் வரவு உணராதாள் போன்று தோழி, 'நேற்றுத் தலைவன் கையில் வேலுடன் வர அன்னை முருகக்கடவுள் நம் மனைக்கு எழுந்தருளுகிறான் என்று எண்ணி நீரோடு செந்தினை தூவிக் கைகுவித்துத் தொழுது வணங்கத் தொடங்கி விட்டாள். பொன் போன்று மலர்ந்திருக்கும் வேங்கை மரக்கிளைகள் மேலும் பொலிவு பெறும்படி மயில்கள் ஏறிநின்று அகவுகின்ற அழகிய மலை நாட்டை உடைய தலைவனோடு கொண்டுள்ள காதல் தொடர்பு அறியின் தலைவி நிலை என்னாகுமோ அறிந்திலேன்' என்று கூறுகின்றாள்.

'என்னாவது கொல் தானே பொன்னென
மலர்ந்த வேங்கை அலங்குசினைப் பொலிய
மணிநிற மஞ்ஞை அகவும்
அணிமலை நாடனொடு அமைந்த நம் தொடர்பே'
(அகம். 272 : 16-19)

முருகனாக எண்ணித்தாய் வழிபட்டதாகத் தோழிகூறும் பொய், தலைவன் தொடர்பினைத் தாய் அறிந்தும் அறியாதாள் போன்று நடந்து காப்பினை மிகுதிப் படுத்தி விட்டதை உணர்த்தும். மலர்ந்து பொலிவுடன் விளங்கும் வேங்கை மரம் மேலும், மயில் அமர்வதால் பொலிவு பெறல் செல்வச் செழிப்புடன் விளங்கும் தலைவன் இல்லம் தலைவி வரவால் மேலும் சிறப்புப் பெறும் என்பதையும், மரத்திலிருக்கும் மயில் அகவல் அங்ஙனம் தலைவனின் இல்லத்தை அடைந்தால் தலைவி யும் பெரு மகிழ்ச்சியடைவாள் என்பதையும் புலப்படுத்தும்.

## வரைவு இடைவைத்துப் பொருள் வயின் பிரிதல்

தோழி, தலைவி பொருட்டு வரைவு வேண்ட இருவரும் இணைந்து இல்லறம் நடத்தற்குத் தேவையான பொருளை ஈட்டற் பொருட்டுத் தலைவன் பிரிகின்றான். இத்துறைக் கண்ணும் மயில் பயின்று வருகின்றது.

தலைவன் வரைவு இடைவைத்துத் தான் பொருள் வயின் பிரியப் போவதைத் தோழியிடம் கூறுகின்றான். நின்பிரிவு நெடும் பிரிவாயின் தலைவி தாங்க மாட்டாள் என்பதனை உணர்த்த விரும்பும் தோழி 'அரசுரிமைக்கு இடையூறு வந்த பொழுது வலிய வந்து உதவியவனைத் தான் அரசு கட்டில் ஏறியவுடன் மறந்து விட்ட மன்னனைப் போலன்றி நீ நன்றி மறவாது திரும்பினையா யின் மனவெழுச்சியும் மகிழ்ச்சியும் உடைய மயிலின் தோகை போன்று தழைத்த மென்மை மிக்க கூந்தல் உனக்கே உரியது என்கிறாள்.

'கெட்டிடத்து வந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்து அமையாய் ஆயின் மென்சீர்க்
கலிமயில் கலாவத்தன்ன இவள்
ஒலிமென் கூந்தல் உரியவா நினக்கே' (குறுந் 225 : 3-7)

தலைவி உரியள் என்பது கூந்தல் உரியது என்பதனால் உணர்த்தப் படுகின்றது. நின் நட்பினால் மகிழ்வும் பெருமையும் பொலிவும் அடைந்திருக்கின்றாள் தலைவி என்பதனை விளக்கக் 'கலிமயில் கலாவம்' உவமையாய் இவண் இடம்பெறுகின்றது. இக்கலாவம் போன்ற கூந்தல் உடையவள் நின்னால் பெற்ற பொலிவை நீ நீங்கின் நீங்க, திரும்பும் காலம் நீட்டிப்பின் அவளை அடைதலே அரிது; இறந்துபடுவள் என்ற குறிப்பினை இது தந்து நிற்கின்றது.

தலைவன் பிரியத்தன் நெஞ்சும் தனக்குத் துணை நில்லாது அவன் உடன் சென்றதை எண்ணித்தலைவி சினத்தலும் (ஐங்.295), நீண்டநாள் மீண்டும் வாராமையால் ஆற்றாமை மிக்குத்தன் வருத்தம் புலப்படத் தோழிக்குக் கூறலும் (குறுந்.38, 105), தோழி ஆற்றியிருக்கவில்லையோ என வினவ ஏதுக் காட்டலும் (குறுந். 249) தன் ஆற்றாமை கண்டு தோழி வருந்த நீ கவலற்க நான் ஆற்றுவேன் என்றலும் (குறுந். 264, நற். 357) மயில் தொடர்பான உள்ளுறை உவமைகளால் சுவை பயக்கின்றன.

நாட் செல்லச் செல்லத் தோழி தலைவியின் மேனி பசப் பூர்ந்து ஒளி மழுங்குவதைக் கண்டு வருந்துகின்றாள். தலைவியோ, 'என்னுடல் தானே ஒளிகுன்றுகிறது. தலைவனின் நட்பினை எண்ணுங்கால் உள்ளம் திண்ணியதாகவே இருக்கின்றது. நீ கவலற்க' என்கிறாள்.

கலிமழை கெழீஇய கான் யாற்று இருகரை
ஒலிநெடும் பீலி துயல்வர இயலி
ஆடுமயில் அகவும் நாடன் நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக் காலும் பயப் பொல்லாதே (குறுந். 264)

நான் கேண்மை கொண்டவன், ஆரவாரம் நிரம்பிய மழை பெய்யும் கான்யாற்றினது தாழ்ந்த கரையிடத்து தழைத்த நெடிய தோகை கொண்டு கூத்தாடுகின்ற மயில்கள் களிப்புடன் அகவும் நாட்டை உடையவன் என்கிறாள். முகில் ஆரவாரிக்க மழை பெய்தல் உறுதி என எண்ணிக் களிக்கும் மயில் ஆடலும் அகவலும் போன்று அவனது நட்பை நினைக்குந் தொறும் என்னுள்ளம் களிக்கின்றது. ஆகவே காண இயலாமையின் உடலில் பொலி விழப்பினும் என்னுள்ளம் அவன் பிரிவினைத் தாங்கும் எனக் கூறுகின்றாள். மயில் முகிலின் ஆரவாரம் கேட்டு ஆடலும் அகவலும் தலைவியின் உள்ளக்களிப்பினைச் சுட்ட இவண் பயன் பட்டுள்ளன.

**பொருளீட்டி மீளல்**

பொருளீட்டிய பின் மீளும் தலைவனின் உணர்வும் மயிலால் உணர்த்தப்படுகின்றது. தலைவியின் ஊரை நோக்கிப் பாங்கனுடன் வருகின்றான் தலைவன். அவளது ஊர் கண்ணிற்பட்டதும் மயில்கள் ஆடக் குடிஞை இரட்டும் இவ்வூரே தலைவியின் ஊர் என்கிறான் (ஐங்.291). தானும் தலைவியும் தோழியின் துணையுடன் களவின்பம் நுகர்ந்தது நினைவுவர மயில்கள் ஆடலையும் குடிஞை அதற்கேற்ப ஒலித்தலையும் உள்ளுறுத்துக் கூறுகின்றான்.

**தலைவன் வரைவு வேண்டல்**

தலைவன் வரைதற் பொருட்டுப் பொருள் ஈட்டிய பின் முறைப்படித் தன்தமரை அனுப்பித் தலைவியின் தாய் தந்தையரிடம் மகட் கொடை வேண்டுமாறு அனுப்பிவைக்கின்றான். தலைவியின் தமர் மகட் கொடைக்கு இசையப் பெருமகிழ்ச்சியுறும் தோழி தலைவியிடம் தலைவனைக்,

'கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அஞ்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்' எனக்

குறித்து,

'வந்தனன் எதிர்ந்தனர் கொடையே
அந்தீம் கிளவி பொலிக நின் சிறப்பே' (ஐங். 300)

என்று கூறுகின்றாள். தலைவன் மனம் போல் மகட்கொடைக்கு ஒப்புக் கொண்டனர் என்பதனைக் கொடிச்சியின் கூந்தல் போலத் தன் தோகையினை அழகுபட விரிக்கும் மயில்கள் நிரம்பிய பெருங்கல் வெற்பன் என்பதனால் உணர்த்துகின்றாள். மகளிர் கூந்தல் தோகை போன்று விரிந்து பரந்திருந்தது என்று கூறும் மரபினை மாற்றிக் கூந்தல் போல மயில் தோகை விரித்தது என்று இவள் கூறுவது நயம் பயக்கின்றது. பொருட்சிறப்பு உடையதாய் விளங்குகின்றது. ஆகலின் இத்துறையிலும் மயில் இடம் பெற்று இயைந்து நிற்பது புலப்படும்.

## மணவினை இடம் பெறல்

களவின் இடையில் எதிர்ப்படும் ஏதங்கள் அனைத்தும் கடந்து இறுதியில் தலைவன் தலைவியை இல்லறத்தில் ஈடுபடுத்தும் திருமணம் நடைபெறுகின்றது. இந்நிகழ்ச்சி பெரு மகிழ்வு பயப்பது. மயில் இதிலும் பங்கேற்றுப் பாடலைப் பொலிவுபெறச் செய்கின்றது.

'எரிமருள் வேங்கை இருந்த தோகை
இழையணி மடந்தையின் தோன்றும் நாட
இனிது செய்தனையால் நுந்தை வாழியர்
நன்மனை வதுவை அயர இவள்
பின்னிருங் கூந்தல் மலரணிந் தோயே' (ஐங். 294)

தலைவி மணக்கோலத்தில் இழையணிகளால் பொலிவு பெறத் தோழி மலர் நிரம்பிய வேங்கை மரத்தை அடைந்த மயில் இழையணி மடந்தையைப் போலத் தோன்றுகின்ற நாட எனத் தலைவனை விளிக்கின்றாள். அவ்விளியினால் தலைவி தலைவனை அடைந்து தானும் அம்மயில் போல் பொலிவுற்றதனை விளக்கி விடுகின்றாள்.

## இணைந்து நடத்தும் இனிய இல்லறம்

தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர் காண்பதில் தொடங்கி இல்லறத்தில் இணைவதுடன் நின்று விடாமல் அதன் பின் அவர்கள் கடமை உணர்வுடன் ஆற்றும் இல்லறத்தின் இனிமையையும் மயிலின் ஆடல் காட்டுகின்றது. தலைவி நடத்தும் இல்லறம் காண வருகின்றாள் தோழி. அவளிடத்துத் தான் நடத்தும் இனிமையான இல்லறத்தை, 'பலவின் பழத்தைத் தன் கையிலே கொண்டு அதனை மந்திக்கு ஊட்ட முயலும் கடுவன்

மத்தளம் முழக்குபவன் போல் தோன்ற அக்கடுவன் முன்பு ஆடும் மயில் விழவுக்களத்து ஆடும் விறலிபோல் தோன்றும் காட்சியால் குறிப்பாகக் கூறிவிடுகின்றாள் தலைவி. மனம் ஒன்றுபட்டுத் தலைவன் தலைவியைப் பேணத் தலைவி மயில் போல் களிப்புடன் வாழ்வதைப் புரிந்து கொள்ளுகின்றாள் அவ் அறிவுடைத் தோழி.

மேற்கண்டவற்றை நோக்க சங்கிலிப் பின்னல் போல் இடைவிடாது தொடுத்த மாலை போல் தலைவன் தலைவியரின் உள்ளம் ஒன்றுபட்டுக் களவில் ஈடுபடலில் தொடங்கி, கற்பு நெறியில் வழுவாது இருவரும் மணம் முடித்து இல்லறம் நடத்துவது வரையில் அமைந்துள்ள அத்தனைத் துறைகளிலும் அவர்களின் பிணைப்பை, பிரிவை, இன்ப, துன்ப உணர்வைத் தெளிவுபடுத்த மயில் பயன்பட்டுள்ளமையும் பாடலின் சுவையினை அது பன்மடங்கு மிகுத்துள்ளமையும் அறிய வரும்.

### பாலைத் திணை

அனுபவித்தற்குத் துன்பம் தரும் அவலம், அறிவதற்கு, படிப்பதற்கு மிகுந்த இன்பத்தினை நல்க வல்லது; இதயத்தினை ஈர்க்கவும் வல்லது. ஆகலின் பாலைத்திணைப் பாடல்கள் மற்றவற்றினும் மிகப்பல. இப்பாலைத்திணைப் பாக்களிலும் மயில் தனக்கென்று தனியிடம் கொண்டுள்ளது.

14 பாடல்களில் மயில் தொடர்பான இனிய காட்சிகள் காணக் கிடைக்கின்றன. ஒரே பாடலில் (அகம். 385) இருஇடங்களில் மயில் இடம்பெறலும் இத்திணையில் உண்டு.

### தலைவன் வாராமை—தலைவி ஆற்றாமை

மயிலின் தொடர்பால் இத்திணையில் தலைவன் இன்ன காலத்தில் வருவேன் எனக் குறிப்பிட்டுப் பிரிந்திருக்கத் தலைவி ஆற்றாமை மீதூரப் புலம்பலும், தோழி விரைவில் மீள்வன் எனக் கூறி ஆற்றுவித்தலும் காட்டப்படுகின்றன. மயில் அகவல் இப் பாடல்களில் (அகம் 85, 177) துணை தேடுவதாக அமைந்து தலைவி தலைவனை எதிர்நோக்குவதை உணர்த்தி நிற்கின்றன.

மயிலின் தோகை போன்று தழைத்த நினது மணம் கமழும் கூந்தலின் கண் நின்னொடு துயிலும் இனிய துயிலை மறந்து வேற்று நாட்டின் கண் காலந்தாழ்த்தான்; தலைவன் வருமளவும் ஆற்றியிருந்திடு என்று தோழி ஆறுதல் கூறுவது தலைவியைப் பெரிதும் ஆற்றியிருக்கச் செய்கின்றது. செல்லும் வழியில் மயிலைக்

காணல் இயலும். அங்ஙனம் காணின் அதன் தோகை தலைவியின் கூந்தலை நினைவு படுத்த, கூந்தல் அவளிடம் அடைந்த இன்பத்தை நினைக்கச் செய்ய வினையை விரைவில் முடித்துத் தலைவன் திரும்புவான் என எண்ணி இவ்வாறு உரைத்தாள் போலும் தோழி.

'நீடலர் வாழி தோழி தோடு கொள்
உருகெழு மஞ்ஞை ஒலிசீர் ஏய்ப்பத்
தகரம் மண்ணிய தண்ணறு முச்சிப்
புகரில் குவளைப் போதொடு தெரியிதழ்
வேனில் அதிரல் வேய்ந்தநின்
ஏமுறு புணர்ச்சி இன்துயில் மறந்தே' (அகம். 393 : 21-26)

இளவேனிலின் கண் மீள்வன் எனக்கூறிச் சென்ற தலைவன் திரும்பாதிருக்க, அவ்விளவேனிற் காலத்துப் பெய்த மழையினால் இன்புற்று மயில்கள் ஆட அம்மயில்கள் தன்னை எள்ளியே ஆடுகின்றன எனக்கூறிப் பெரிதும் வருந்துகின்றாள் தலைவி (கலி. 27,33). அக்காலை தலைவன் வரவுணர்ந்து அவளை ஆற்று விக்கின்றாள் தோழி. தலைவியின் மன வருத்தத்தை மிகுவித்துக் காட்டி அவலச் சுவையினையும் மிகுவிக்க இப்பாடல்களில் மயிலின் ஆடல் பயன்படுகின்றது.

தலைவன் பரத்தை வழிப்பிரிய தலைவி வருந்தும் வருத்தம் கண்டு பாணன் தலைவனிடம் தூதாகச் சென்று, தலைவி படும் துயரம் உரைப்பதிலும் மயில் இடம் பெற்றுள்ளது. பிறபாடல் களில் மயில் தலைவியுடன் தொடர்புபடுத்திப் பாடப்பட இப் பாடலில் (கலி. 30) பரத்தையுடன் தொடர்பு கொண்டுள்ளது. தன்னிலை கருதி இரங்கும் தலைவியே பரத்தையரை 'மயிலியலார்' என்கிறாள்.

குறிஞ்சித் திணைப்பாடல்களில் தலைவன் பொருள்வயின் பிரிந்திருக்கத் தலைவி ஆற்றியிருக்கும் பாடல்களில் (மயில் தொடர்பானவை) கூற்று பெரும்பாலும் தலைவி கூற்றாக அமைந்திருக்கப் பாலைத்திணைப் பாடல்களில் தோழி கூற்று பெரும்பான்மையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. குறிஞ்சித்திணைத் தலைவி ஆற்றியிருப்பேன் என்றுரைக்கப் பாலைத்திணைத் தலைவியைத் தோழி ஆற்றியிரு என வேண்டு கிறாள்.

**உடன் போக்கு**

பாலைத்திணைப் பாடல்களில் மயில் பெரிதும் இடம் பெறுவது உடன்போக்குப் பற்றியவை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. பதினான்கு பாடல்களில் ஏழுபாடல்கள் உடன்போக்குப் பற்றிப் பாடுபவை. இவற்றில் ஆறு பாடல்கள் தலைவி உடன்போக்கு மேற்கொண்டதை அறிந்து தாய் இரங்கிக் கூறுபவை (மகட்போக்கிய தாய் சொல்லியது) ஆகும்.

இருதாயர் தம்மகள் சென்றவழி இனியவழியாக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றனர். வம்பமாரி பெய்து மயில்கள் ஆடும், இனிய வழியாகச் சுரவழி அமைக (ஐங். 371) என ஒரு தாய் வாழ்த்த மற்றொரு தாய் துளு நாட்டினைப் போன்று மயில்கள் நிரம்பிய பொழில்கள் உடையதாக அமைக (அகம் 15) என வேண்டுகின்றாள். வழியருமை உடையதாக அன்றி இனிமை உடையதாக அமைய வேண்டும் என்று எண்ணுங்காலை இவர்தம் உள்ளத்து மயில் தோன்ற, தன் மகளின் மென்மை குறித்து வருந்துங்காலைப் பிறிதொரு தாயின் உள்ளத்து மயில் தோன்று கின்றது. தோள் துணையாகத் துயிற்றவும் துஞ்சாத என்மகள் பாலைவழியில் தண்ணுமை ஒலி கேட்பின் எங்ஙனம் அஞ்சாது உறங்குவாளோ என எண்ணிக் கவலும் இத்தாய் தன் மகளை,

'மடமயிலன்ன என் நடை மெலி பேதை' (அகம்.63)

எனக் குறிப்பிடுகின்றாள். தலைவியின் மென்மை குறித்து இத்தாய் அவளை மயிலாகக் கூற, தலைவியின் பிரிவினால் வருந்தும் ஆயத்தின் மென்மை நினைந்து இரங்கும் ஒருதாய் அவர்களை மயிலாகக் காண்கின்றாள் (அகம். 369).

இவர்களினும் மாறுபட்ட மற்றொரு தாய் 'மயிலியல்' என் மகள் அறனறிந்து மூத்த சான்றோர் வதுவை நிகழ்த்தப் பலரும் அறியத் தன் காதலனை மணந்து அவனோடு செல்லாளாய் ஆலம் விழுதால் அமைத்த ஊசலில் ஏற்றி வைத்து, கூந்தல் ஆடுகின்ற மயிலின் தோகை போன்று மேலெழா நிற்ப அவ்வூசலைத் தலைவன் ஆட்ட ஆடி, நம்மனோரைச் சிறிதும் நினையாமல் அயலானோடு அறியா நாட்டிற்குச் சென்றவள் செய்த செயல் கொடிது என வருந்துகின்றாள் (அகம். 385). தன்னைப் பிரிவதால் தாய் படும் துயரம் எண்ணாது தலைவனைச் சேர்வதால் தான் அடையும் இன்பம் கருதிச் சென்றது இத்தாயை மிக வருத்து கின்றது. தன்னைப் பிரிந்த துயரினைத் தலைவனுடன் தான்

சேர்ந்தால் பெற்ற இன்பம் துடைத்து விடும் என்பதை உணர்த்தவே கூந்தல் தோகை போல் பொங்க ஊசலாடுவதைக் குறிப்பிடுகின்றாள். விரிந்த கூந்தல் தலைவனோடு கூடுதற்கும் மகிழ்ச்சிக்கும் குறியீடாவது என்பது இவண் நினைக்கத்தக்கது.

பொதுவாக உடன்போக்கின் கண் அமைந்த பிற அனைத்தும் தலைவி அல்லது தாயரின் துன்ப உணர்வினை மயிலால் உணர்த்த ஒரு பாடல் மட்டும் அதனினின்றும் மாறி நின்று இன்ப உணர்வினைப் புலப்படுத்தி நிற்கின்றது. தன்னுடன் வரும் தலைவியைப் பார்த்துத் தலைவன் கூந்தல் காற்றில் பறக்க அழகு பொருந்திய தோகையை விரித்த மயில் போல் நீ நடந்து வா என்பது அது. தன்னூர் நெருங்க, இதுகாறும் யாரும் பின் தொடர்ந்து வந்து நம்மைப் பிரிப்பரோ என்று கொண்டிருந்த அச்சம் நீங்க, மகிழ்ச்சியுடன் மயில் போல் தலைவியை நடந்து வரும்படி அழைக்கின்றான். உடன்போக்கு பிறருக்குத் துன்பம் தருவது; தலைவன் தலைவியருக்கு இன்பம் தருவது. இது தலைவன் கூற்றாதலின் இன்பத்தைப் புலப்படுத்தி நிற்பது. அது அழகு பொருந்திய நீலமணியின் நிறம் பொருந்திய தோகை விரிந்த மயிலால் புலப்பட்டு நிற்கின்றது.

பாலைத்திணையின் கண் இவ்வாறாக மயில் தலைவியை ஆற்றுவிக்கவும், தலைவி ஆயத்தாரின் மென்மையைப் புலப் படுத்தவும், சுரவழியினை இனிமையாக்கவும், தாயரின் துயரையும் தலைவனின் மகிழ்ச்சியையும் புலப்படுத்தவும் பெருந்துணை புரிகின்றது.

**முல்லைத்திணை**

முல்லைத்திணைக்குரிய கார்ப்பருவம் மயிலுக்கு மிகுந்த மகிழ்ச்சி தரும் பருவம்; மழை பெய்யும் பருவம். அதேபோன்று வினை முடித்துத் தலைவன் மீள்வதாக உறுதி கூறிய பருவமும் கார் ஆகலின் தலைவிக்கும் மிகுந்த மகிழ்ச்சி தருவது. இவ்வொற்றுமையின் அடிப்படையில் முல்லைத்திணையில் 13 பாடல்களில் மயில் தொடர்பு கொண்டுள்ளது.

**கார்ப்பருவ வரவும் தலைவன் வாராமையும்**

கார்ப்பருவம் தொடங்குகின்றது; மழை பொழிகின்றது; மயில் ஆடுகின்றது. தலைவன் வாராமையின் அதனைக் கார்ப் பருவம் என ஏற்றுக் கொள்ள விரும்பாத தோழி தலைவியை ஆற்றுவித்தற் பொருட்டு இது 'கார்ப்பருவ மழையன்று; வம்ப

மழை என்கிறாள். மயில்கள் களித்து ஆடுகின்றனவே எனத் தலைவி எண்ணுவாளோ என எண்ணும் தோழி மயில்கள் அறியாமையினால் ஆடுகின்றன என்று கூறுகின்றாள்.

'மடவ வாழி மஞ்ஞை மாயினம்
காலமாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின' (குறுந். 251 1-3)

தலைவியை ஆற்றுவித்தற் பொருட்டு இப்பாடலில்மயில் மடமைப் பட்டம் பெறுகின்றது. இவ்வாறு மயில்கள் மடமை உடையன என்று தலைவியிடம் ஒரு தோழி உரைக்கப் பிறிதொரு தோழி மழையிடம், 'நீ வம்பமாரி என அறியாது மயில்கள் ஆடுகின்றன. ஆனால் நான் அங்ஙனம் மருளேன்' என்கிறாள்.

'இன்மயில் மடக்கணம் போல
நினை மருள் வேனோ வாழியர் மழையே' (நற். 248 : 8-9)

இரண்டிலும் கார்காலம் வந்து மயில்கள் களிபபுடன் ஆட, தலைவன் வாராமையின் தலைவி வருந்தி நிற்பது பாடப் பெறுகின்றது. மயிலின் ஆடலால் தலைவியின் துயர் இப்பாடல்களில் மிகுந்து தோன்றுவது ஆழ்ந்து நோக்கின் புலப்படும்.

இவ்விரு பாடல்களில் மயிலின் ஆடல் முரண் பின்புலமாய்த் தலைவியின் பிரிவுத்துயரை மிகுவிக்க, வேறு இரு பாடல்களில் மயிலின் அகவல் மிகுவிக்கின்றது. தலைவன் வாராமையினால் வருந்தும் தலைவியைத் தோழி ஆற்றுவிக்க முயல, தன்னை அவ்வாறு ஆற்றியிருக்க விடாது மயில்கள் அகவுகின்றனஎன்கிறாள் தலைவி.

'பிரிந்தோர்
கையற வந்த பையுள் மாலை
பூஞ்சினை இருந்த போழ்கண் மஞ்ஞை
தாநீர் நனந்தலை புலம்பக்
கூஉந் தோழி பெரும் பேதையவே' (குறுந். 391 : 5-9)

மயிலின் ஆடல் தலைவனை நினைவுபடுத்தி வருத்த, மாலைப் பொழுதில் அவ்வாடல் காண இயலாது ஆகலின் சற்றே மறக்கலாம் எனின் இம்மயில்கள் அறியாமை உடையனவாய்த் தனிமைத்துன்பம் தோன்றும்படிக் கூவி நிற்கின்றன; எங்ஙனம் ஆற்றியிருப்பது என்கிறாள்.

பிறிதொரு தலைவி, 'உச்சிச் சூட்டினை உடைய நெற்றியையும் நீண்ட தோகையையும் உடைய மயில்கள் அழகிய தம் தோகையை விரித்துக் குருந்த மரத்தின் கிளை மீது அமர்ந்து

தினைப்புனத்தில் கிளி விரட்டும் மகளிரைப் போன்று அகவு கின்றன. இது கார்காலம் அன்றோ? என்கிறாள். கார்காலம் தொடங்கியும் தலைவன் வரவில்லையே இனியும் நான் எங்ஙனம் ஆற்றியிருப்பது எனத் தோழியைக் கேளாமல் கேட்கின்றாள்.

'குடுமி நெற்றி நெடுமாத் தோகை
காமர் கலவம் பரப்பி ஏமுறக்
கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழிந்த
வல் இலைக் குருந்தின் வாங்கு சினை இருந்து
கிளிகடி மகளிரின் விளிபடப் பயிரும்
கார்மன் இதுவால்' (அகம். 194 : 11-16)

மயில்கள் மரக்கிளை மீதமர்ந்து தம் தோகை விரித்து நோக்கித் துணையை அழைக்கின்றன. ஆனால் தான் அவ்வாறு குரல் எழுப்புவதும் இயலாதே என்று ஏக்கத்துடன் உரைப்பது போல் இவ்வடிகள் அமைந்திருப்பது காணலாம்.

தலைவன் போர் வயின் பிரிந்து சென்று இன்னும் மீளாமை குறித்து வருந்தும் தலைவிக்கு இம்முல்லைத் திணையில் அம்பினால் தைக்கப்பட்ட மயிலும் உவமையாய் நின்று தலைவி யின் துன்பத்தை உணர்த்தி நிற்கின்றது (முல்லைப். 84).

தலைவன் வாராமை குறித்துத் தலைவி வருந்தியிருத்தல் போலக் குறித்த காலத்தில் வினை முடிந்து தன்னால் மீளல் இயல வில்லையே என வருந்துங்காலைத் தலைவனும் மயில்கள் ஆடுவதைக் குறிப்பிடுகின்றான். பிடவ மலர்கள் மலர்ந்துள்ளன; புள்ளிகளை உடைய மயில்கள் ஆடுகின்றன, மணற்பரப்பின் மேல் உதிர்ந்து கிடக்கும் காயா மலர்கள் இந்திர கோபப் புழுக்களுடன் சேர்ந்து மணியும் பவளமும் போன்று விரவியிருப்பதால் நிலம் அழகுடன் விளங்குகின்றது; இக்காலம் தலைவியிடம் தான் திரும்புவதாக உரைத்த கார்காலம்; வினை முடியவில்லை ஆகலின் என் செய்வது என வருந்தி நிற்கின்றான் தலைவன். மயில்கள் மகிழ்ந்து ஆடுகின்றன என்ற குறிப்பினால் தான் திரும்பாமையின் தலைவி மனம் வருந்தியிருப்பாள் என்பதனையும் நிலம் அழகு பெற்று விளங்குகின்றது என்ற குறிப்பினால் தலைவி ஒப்பனை யின்றிப் பொலிவிழந்து இருப்பாள் என்பதனையும் உணர்த்து கின்றான் தலைவன்.

**கார்கால வரவும் தலைவன் விரைவும்**

மயிலின் அகவலும் ஆடலும் தலைவன் திரும்பாதிருக்கும் போது முரண் பின்புலமாய் அமைந்து அவலச்சுவையினை மிகுவிக்க

தலைவன் திரும்பும் காலை இணைப்பின்புலமாய் அமைந்து உவகைச் சுவையினையும் மிகுவிக்கின்றன. தலைவியை நாடி விரைந்து வரும் தலைவன் தேர்ப்பாகனிடம் கார்ப்பருவத்தை எதிர்கொண்ட மயில்கள் கூட்டமாக ஆரவாரம் செய்யும் இவ் ஈரமான நிலத்தைப் பிளந்து கொண்டு தேரை விரைந்து செலுத்து என்கிறான் (அகம். 334). மற்றொரு தலைவனும் இதே போன்று 'தோளி' என்னும் கூத்தைத் திறம்பட ஆடும் விறலியர் போன்று மயில்கள் ஆடும் மரங்கள் மிகுந்த காட்டின் வழியே, தலைவியின் மகிழ்ச்சி பொருந்திய முகத்தைக் காணும் பொருட்டு விரைவில் செலுத்து என்கிறான்.

'வையேர் வாலெயிற் றொண்ணுதல் மகளிர்
கைமாண் தோளி கடுப்பப் பையென
மயிலினம் பயிலும் மரம்பயில் கானம்' (அகம் 344 : 4-6)

## இணைந்த தலைவனும் தலைவியும்

வினை முற்றி மீண்ட பின் தலைவனும் தலைவியும் இணைந் திருக்கும் காலையும் அவ்வின்பத்திற்கும் மயிலின் ஆடலே கூறப் பட்டுள்ளது. ஆனால் ஒரு வேறுபாடு இங்குண்டு. தலைவன் பிரிந் திருக்கும்வரை மயிலின் ஆடல் மட்டும் குறிக்கப்பட, இணைந்த பின் மயில் தலைவி போல மகிழ்ந்து ஆடுவதாக உவமையாகப் பாடப்படுகின்றது.

'நின்னே போல மஞ்ஞையால' (ஐங். 413)
'நின்னே போலும் மஞ்ஞையால' (ஐங். 492)

கார்காலத்துப் பிரிந்த தலைவன் தலைவியுடன் இணைதல் போல மயிலும் தன் துணையை அகவி இணைந்து இன்பம் காணல் இயல்பாதலின் இவ்வுவமை மிகப் பொருத்தமாய் அமைகின்றது.

இவ்வாறாக முல்லைத் திணைப் பாடல்கள் மயிலின் அகவலும் ஆடலும் கூறித் தலைவி பிரிந்திருப்பின் துன்ப உணர்வினையும் இணைந்திருப்பின் இன்ப உணர்வினையும் புலப்படுத்தி நிற்பது காணலாம்.

## மருதத்திணை

பரத்தை காரணமாக உருவாகும் ஊடலும் ஊடல் நிமித்தமும் உரிப்பொருளாக விளங்கும் இம்மருதத்திணையில் ஆறுபாடல் களில் மயில் இடம் பெறுகின்றது.

பரத்தையின்றி மயிலே ஒரு பாடலில் ஊடலுக்குக் காரணமாக அமைகின்றது. ஒளி பொருந்திய பொறிகளை உடைய மயிலினைத் தலைவன் நோக்க, தலைவி, 'நீ இகழுதற்காகவே என்னை நோக்காது மயிலை நோக்கினாய்' என்று ஊடுகின்றாள். தலைவன் உடன் "உன்னுடைய சாயலைக் களவு கொள்ள வந்து இயலாது மயில் வருந்தி நிற்கின்றது. அதனைக் கண்டு உனது சாயலின் அருமையை நான் நினைக்க, இகழ்ந்ததாகக் கருதி நீ ஊடுகின்றாய்' எனக்கூறி அவள் ஊடலைத் தீர்க்கின்றான். மயில் தரும் இனிய கற்பனையாய் இக்காட்சி கண்முன் விரிகின்றது.

'ஒள்ளொளி மணிப்பொறியான் மஞ்ஞை நோக்கித்தன்
உள்ளத்து நினைப்பானைக் கண்டனள் திருநுதலும்
உள்ளியது உணர்ந்தேன் அஃதுரையின் நீ எம்மை
எள்ளுதல் மறைத்தலோம்பு என்பானைப் பெயர்த்தவன்
காதலாய் நின்னியல் களவெண்ணிக் களிமகிழ்
பேதுற்ற இதனைக் கண்டு யான் நோக்க நீஎம்மை
ஏதிலா நோக்குதி என்றாங்கு உணர்ப்பித்தல் (பரி.18 : 7-13)

செவ்வேள் பற்றிய பாடலில் இது அமைந்திருப்பினும் மருதத்திற் குரிய இனிய ஊடற் காட்சியாய் அமைந்திருத்தலின் இவண் சுட்டப்படுகின்றது.

மயில் பிறிதொரு பரிபாடற் பாடலில் (20 : 69) பரத்தையிடம் தலைவியின் மேன்மையை உணர்த்த உதவியுள்ளது. தலைவியைப் பரத்தை பழிக்க, முது பெண்டிர் தலைவி 'மடமயில் சாயலாள்' எனக் குறிப்பிட்டு நீ அவளை வணங்க வேண்டும் என்கின்றனர்.

பரத்தை வழிப் பிரிந்து தலைவன் மீண்டு வந்த பின் பாடியதாகப் பிறபாடல்கள் அமைந்துள்ளன. தலைவி, நீ வழி தவறி இங்கு வந்துவிட்டாய்; பரத்தையர் சேரிக்கே நின் தேரினைச் செலுத்து என்று கூறும் பொழுது புன்தலைப் பெண் மயில் நிழலில் நின்று அகவும் இவ்வூர் எனக் குறிப்பிடுகின்றாள் (ஐங். 62). பெண் மயில் ஆண் மயிலை அகவி நிற்றலைப் போலத் தலைவன் பரத்தை வழிப் பிரியத் தான் அவனை எதிர்நோக்கியிருந்ததைக் குறிப்பாக உணர்த்துகின்றாள். மற்றொரு பாடலில் தோழி தலைவனிடம், 'நீ தலைவியைப் பிரிந்து சென்றுவிட்டாய். விரைவில் தலைவியை நீ வந்தடைய வேண்டும். உன்னில்லம் தலைவியால் பொலிவு பெற வேண்டும் என வேண்டியிருந்தோம்' (ஐங். 8) என்று கூறும் போது உள்ளுறையாக மாமரத்தில் வீற்றிருக்கும் அழகிய மயிலைக்

குறிப்பிடுகின்றாள். தலைவி, தோழி கூற்று இவ்வாறு அமைய சாமர்த்தியமாகத் தலைவி களவுக் காலத்துத் தன்னோடு புனலாடியதை நினைவு படுத்திப் புலவி தீர்க்க விரும்பும் தலைவன் அவளை, விசும்பினின்று இறங்கும் மயில் போல மருத மரத்தி லிருந்து நீரில் குதித்ததாகக் குறிப்பிடுகின்றான் (ஐங். 74) மயிலின் இரு தோற்றமும், அகவலும் இங்கு இடம் பெறுகின்றன.

ஊடலுக்குக் காரணமாகவும் அமைந்து ஊடல் தீர்ப்பதற்கு உதவியாகவும் மயில் நின்றமை மருதப்பாக்களில் புலப்படும்.

**நெய்தல் திணை**

பிற திணைகளில் இடம் பெறல் போல் மயில் இத்திணையில் பெரிதும் இடம்பெறவில்லை எனினும் இடம்பெறும் இரு பாக்களிலும் கருத்தினை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியிருக் கின்றது.

**வரைவு நீடலும் தலைவி வருந்தலும்**

இரு பாக்களும் தலைவன் வரைவு நீட்டிக்கத் தலைவியின் ஆற்றாமை குறித்து அமைவன.

வரைவிடை ஆற்றாளாய் வருந்தியிருந்த தலைவி திடீரெனக் கவின்பெற வியந்த தோழி காரணம் வினவுகின்றாள். தலைவி தலைவனைத் தான் கனவிலே கண்டதால் நனவிலே அவன் வருவான் எனத்தான் நம்புவதால் கவின் பெற்றதாகக் கூறும் பொழுது,

'வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்' (கலி. 128 : 16-17)

என்று கூறுகின்றாள். கனவிலே வந்தவன், 'நான் பிரிந்திருந்த பொழுது வலையின்கண் அகப்பட்ட மயில்போல் பெரிதும் வருந்தினாய் என்று கூறி என் அடியில் தன் தலைபட வணங்குவான் போலக் கண்டேன்' என்கிறாள். இங்குத் தலைவி தலைவன் பிரிவால் அடைந்த துயரை வலைப்பட்ட மயில் உணர்த்தி நிற்கின்றது. அவ்வாறு வருந்திய வருத்தம் வருந்தினாய் என்று ஆறுதலாக அவன் கூறிய ஒரு சொல்லில் முழுவதுமாக மறைந்து போகக் கவின் பெறுகின்றாள் தலைவி.

மேற்பாடலில் தலைவி வலைப்பட்ட மயிலாய் வருந்த, மற்றப் பாடலில் எழிலெஞ்சு மயிலாய்த் துன்புறுகின்றாள். இப்பாடலும்

தலைவியின் கூற்றாகவே அமைகின்றது. தலைவி படும் துயரைத் தலைவன் அவள் வாயிலாக அறிய வேண்டும் என எண்ணும் தோழி தலைவன் கேட்க அவளுடன் உரையாடுகின்றாள். அக் காலைத் தலைவன் தன்னைக் கூடியதனால் தான் பெற்ற பயன் பீலி உதிர்ந்த மயில் போலப் பொலிவிழந்து, நாணத்தால் நடுங்கப் படுக்கை நெருப்பாக எரிப்பதுதான் என்கிறாள்.

எழிலெஞ்சு மயிலின் நடுங்கிச் சேக்கையின்
அழலாகின்றவர் நக்கதன் பயனே (கலி. 137 : 6-7)

இவ்வடிகளில் மயில் ஏற்ற உவமமாய் அமைந்து தலைவியின் நிலையைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது. குறிஞ்சித் திணையில் போன்று இத்திணையிலும் மயில் தொடர்பான பிரிவாற்றாமைக் கூற்று தலைவி கூற்றாகவே அமைந்துள்ளது.

இவற்றை நோக்க மயில் அன்பின் ஐந்திணைகளிலும் அவற்றின் துறைகளிலும் இடையறாது இணைந்து நின்று தலைவி, தலைவன் பிற அகமாந்தர் அனைவரது இன்பத்திலும் துன்பத் திலும் பங்கு கொள்வது போன்ற உணர்வினைக் கற்போர் உள்ளத்தில் தோற்றுவிக்கக் காணலாம்.

# மயிலும் புறப்பொருளும்

சங்க இலக்கியங்கள் எல்லாவற்றிலும் மயில் பற்றிய—மயில் தொடர்பான குறிப்புக்கள் காணப்படுகின்றன என்பது முன்பே குறிப்பிடப்பட்ட ஒன்று. அகத்திணைப் பாடல்கள் புறத்திணைப் பாடல்கள் என்ற வேறுபாடின்றி இரண்டிலும் மயில் இடம் பெறுகின்றது. தவிர அக இலக்கியங்களில்,

நல்லமர்க் கடந்த நாண் உடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர் தொறும்
பீலி சூட்டின பிறங்கு நிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்1 (அகம். 67 : 8-1)

என்று புறப்பொருள் (நடுகல்) தொடர்பான கருத்தினையும் புற இலக்கியங்களில்,

'செந்நெல் உண்ட பைந்தோட்டு மஞ்ஞை
செறிவளை மகளிர் ஓப்பலின் பறந்தெழுந்து
துறை நணி மருதத் திறுக்கும் ஊரொடு
நிறைசால் விழுப்பொருள் தருதல் ஒன்றோ' (புறம். 344 : 1-4)

என்று அகப்பொருள் தொடர்பான கருத்தினையும் (மனை உறை மகளிர் உணக்கும் நெல்லைக் கவர்ந்துண்ண வரும் மயிலை ஓப்ப அது பறந்து சென்று நீர்த்துறையிடத்து நிற்கும் மருத மரத்தில் தங்கும் ஊர் என்று குறிப்பதன் முகமாக இவ்வூர் இளமகளிரை விரும்பும் இளையர் களவுத்துறையில் ஈடுபட்டு மணந்து செல்ல இயலாவண்ணம் காவல் மிகுதி உடையது என்ற குறிப்பினைப் புலப்படுத்துகின்றது.) மயில் இடம்பெறும் குறிப்புக்கள் உணர்த்தி நிற்கின்றன. ஆகலின் மயில் பற்றிய குறிப்புக்கள் இடம்பெறும் பாடலின் திணை (அகம், புறம்) நோக்கிக் கருதப்படாது, கருத்து

புறப்பொருளா, அகம்பொருளா என்பதனை நோக்கி அணுகப் படுகின்றது என்பது குறிப்பிடற்குரியது.

அகப்பொருள் என்று கூறுமிடத்து அகப்பொருள் மாந்த ரொடும், ஐந்திணையொடும் தொடர்பு படுத்தியும் புறப்பொருள் என்று கூறுமிடத்து வரலாற்றோடும், மன்னனின் ஈகைத்திறன், வாகைச் சிறப்பு, செங்கோன்மை போன்ற பண்புகளோடு தொடர்புபடுத்தியும் நோக்கப்படுகின்றன. மேலும் மயிற்பீலி ஒப்பனைப் பொருளாகப் பயன்படுவதும் புறப்பொருளில் சிந்திக்கப் படுகின்றது. அகப்பொருட் குறிப்புக்களோடு ஒப்பு நோக்கப் புறப் பொருட்குறிப்புக்கள் மிகக்குறைவு என்பது இவண் குறிப்பிடப் படல் பொருந்தும்.

அணிகிளர் கலாவம் ஐது விரித்து இயலும் மணி மயில் அகப்பொருட் பாடல்களில் தலைவிக்குத் தகுந்த உவமையாகித் தலைவன், தலைவி, தோழி, ஆயத்தார், பரத்தை அனைவரையும் உள்ளுறையில் உணர்த்தி, மென்மை, மேன்மை, இன்பம், துன்பம், கார்காலம் போன்று பலவற்றிற்கும் குறியீடாய் விளங்குவது போல் புறப்பொருட் பாடல்களிலும் குறைவின்றிக் கருத்துக்களைப் புலப்படுத்தி நிற்கின்றது.

புறப்பொருள் குறிக்கும் பாடல்களில் மன்னனின் செங்கோன்மை, ஈகை, வாகை ஆகியன பெரிதும் போற்றப் படுவன. இவை மயிலிடம் பெறும் குறிபபுக்களால் உணர்த்தப் படுவதும் உண்டு.

**செங்கோன்மை**

மக்கள் வாழ்வு இன்பமாக அமையவேண்டுமாயின் மன்னன் செங்கோலனாக இருத்தல் மிக இன்றியமையாதது. அச்செங்கோற் சிறப்பு,

'மால்வரைச் சிலம்பில் மகிழ்சிறந்தாலும்
பீலி மஞ்ஞையின் இயலிக் கால்
தமனியப் பொற்சிலம்பு ஒலிப்ப' (பெரும்பாண். 330-332)

என்ற வருணனையில் அமைந்துள்ள உவமையில் வெளிப்படுதல் காணலாம். நீர்ப்பாயற்றுறைப் பட்டின மகளிர் பற்றிக் கூறும் புலவர் அவர்கள் மயில் போல் உலாவுவதாகக் கூறுகின்றார். இங்கு மயில் உவமை அழகிற்காக மட்டும் கொடுக்கப்பட்டது அன்று; அம்மகளிரின் மகிழ்ச்சியையும் மனவெழுச்சியையும் ஒருங்கே

காட்டுவதற்காக என்பது மால்வரைச் சிலம்பில் மகிழ்வோடு ஆரவாரிக்கும் தோகை மயில் என்று மயிலுக்குக் கூறும் நெடிய அடை உணர்த்தி நிற்கின்றது. மக்களின் மகிழ்ச்சி மன்னனின் முறையான ஆட்சியால் அமைவது. மன்னன் கொடுங்கோல னாயின் மகளிர் இல்லிலிருந்து வெளிவருதல் இயலாத ஒன்று. இவண் மகளிர் இன்பமாக ஆரவாரத்துடன் தோகை மயில் போற்களித்து உலாவுகின்றனர். எனவே மகளிர் உரிமையும் மகிழ்வும் இணைந்த வாழ்க்கையர் என்பதும் அதற்குக் காரண மாய் அமைவது தொண்டைமான் இளந்திரையனின் செங்கோன்மை என்பதும் மயிலால் புலப்படுவது காணலாம்.

கபிலரும் பாரியின் செங்கோன்மையை மயிலின் ஆடலுடன் கூடிய வருணனையால் புலப்படுத்துகின்றார்.

'பயில்பூஞ்சோலை மயில் எழுந்து ஆலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலை பாய்ந்து உகளவும்
கலையும் கொள்ளாவாகப் பலவும்
காலமன்றியும் மரம் பயம் பகரும்
யாணர் அறாஅவியன் மலை' (புறம் 116 : 10-14)

மன்னவன் கோல்கோடின் கோள்நிலை திரியும்; கோள்நிலை திரியின் மாரி வறங்கூரும் என மக்கள் திண்ணமாக நம்பியிருந்த காலம் ஆகலின் செங்கோன்மையினை உணர்த்த அதற்கு நேர் மாறான நிலையினை, பருவம் இன்றியும் வளம் பயக்கும், குன்றா வருவாய் உடைய வியன்மலை என்று பாடுகின்றார். எனவே கார் காலத்து மேகம் கண்டு ஆடும் மயில் அக்காலம் இன்றெனினும் பூஞ்சோலையில் ஆடிக்களிப்பது போன்று மக்கள் எக்காலத்தும் இடையறா இன்பம் துய்த்தனர் என்பதும் புலப்படுகின்றது.

**வாகைச் சிறப்பு**

வாகை வீரத்தால் விளைவது. வீரம் இன்றேல் வெற்றியும் இன்று. செங்கோன்மையுடன் வீரமும் இணைந்தால்தான் மன்னவன் நாட்டைக் காத்தல் இயலும். மன்னன் வீரம் உடைய வனாயின் மக்களும் வீரம் பெறுவர். இருவர் வீரமும் இணையின் வெற்றி கிட்டும்; இன்பம் நிலைத்திருக்கும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் கருவூர் எறிந்த காலை அவனைப் போற்றிப் பாடும் புலவர் கோவூர்கிழார் மகளிர் இல்லின்கண் மயிற்பெடை மாறுகொண்டு முன்னும்

பின்னும் நடப்பது போன்று நடந்து இல்லம் விட்டுத் தம் கணவர் போரிற்பட்ட புண்களைக் காணவிரும்பிப் போர்க்களம் சென்றதாகக் கூறுகின்றார்.

'தண்டா மாப்பொறி
மடக்கண் மயிலியன்று மறலியாங்கு
நெடுஞ்சுவர் நல்லில் புலம்பக் கடைகழிந்து
மென்றோள் மகளிர் மன்றம் பேணார்
புண் உவந்து' (புறம் 373 : 9-13)

இங்ஙனம் போர் நடைபெறுங்கால் இல்லின்கண்ணிருந்து செய்வது அறியாது அலமரலுற்று முன்னும் பின்னும் நடைபோடும் மகளிர் போரில் வெற்றி பெற்றவுடன் கணவர் பெற்ற விழுப்புண் காண விழைந்து போர்க்களம் விரைகின்றனராம். இவ்வடிகள் மகளிர் தம் வீரம் உணர்த்தி நிற்கின்றன. 'மென்றோள்' மகளிர் என்ற அடை உடலின் மென்மையுடன் முரண்பட்ட உள்ளத்தின் வன்மையையும் உணர்த்துகின்றது. மகளிர் இத்துணை வீரம் உடையவர் எனின் ஆடவர் வீரமும் அவர்களை ஆளும் மன்னனின் வீரமும் அவ்வீரத்தால் பெறும் வெற்றியும் குறிப்பிடாதே விளங்கும். இதில் மகளிர்க்குக் கொடுக்கப்படும் மயில் உவமை முரண்பாட்டு அழகுடன் அமைந்து வெற்றிக்கு வித்தாகும் வீரத்தை விளக்கத் துணை நிற்கின்றது.

**ஈகைத் திறன்**

மன்னனுக்கு வீரம் ஒரு கண்ணாய் விளங்கின் மறுகண்ணாய் விளங்கி அவனை மாண்புறச் செய்வது ஈரத்தால் விளையும் ஈகை. ஆய் அண்டிரன் பெருவீரன்; கடையெழு வள்ளல்களில் ஒருவனாய்ப் பெருமை பெற்றவன். இவன் தன்னை நாடிவரும் பாணருக்கெல்லாம், 'நின்னாட்டு இளம்பிடி ஒரு சூல் பத்து ஈனுமோ' (புறம். 120) என வியந்து வினவும் வண்ணம் களிறுகளைப் பரிசிலாக வழங்கியவன். இவனது இத்தகு ஈகைச்சிறப்பைக் கான மயில்களின் கூட்டத்தால் விளக்குகின்றார் புலவர்.

'களிறு இலவாகிய புல்லரை நெடு வெளில்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப' (புறம். 127 : 3-4)

கான மயில்கள் காட்டினை விட்டு ஆயினுடைய களிறுகளுக்கான கட்டுத்தறியில் தங்கின என்று கூறி, களிறுகள் அனைத்தும் வாரி வழங்கப்பட்டு விட்டமையினை, அவனது ஈகையின் சிறப்பை விளக்குகின்றார்.

இவ்வாறாக மன்னர்க்கு இன்றியமையாப் பண்புகளான செங்கோன்மையும் வீரமும் ஈரமும் மயில் தொடர்புடன் புலவரால் போற்றிப் புகழப்பட்டமை மேற்கண்ட காட்டுக்களால் தெரிய வருகின்றது.

## மயிலும் வரலாறும்

மயில் மன்னன் ஒருவன் வரலாற்றுடனும் தொடர்பு கொண்டுள்ளது. கடையெழு வள்ளல்களில் ஒருவன் பேகன். இவன் இச் சிறப்பினைப் பெறுதற்கு மயில் ஒன்று காரணமாகின்றது. மழையில் நனைந்த மயில் மகிழ்வுடன் ஆட, அது குளிரில் நடுங்குவதாகக் கருதியவன் அதற்குத் தன் போர்வையினை ஈந்து மகிழ்கின்றான்.

'மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக' (புறம். 145 : 1-3)

'உடாஅ போரா வாகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்' (புறம் 141 : 10-12)

மானிட உயிர்க்கன்றிப் பிற உயிர்க்கும் இரங்கி நின்றமையின் பிறரிடத்தும் பெருமதிப்புப் பெற்றுப் பேகன் வரலாற்றில் இடம் பெற, அவனுடன் வரலாற்றில் இடம்பெறும் சிறப்பை மயிலும் பெறுகின்றது.

## மயிலும் விறலியும்

அக இலக்கியங்களில் மயில் விறலியாக உவமிக்கப்பட (அகம் 82) புற இலக்கியங்களில் விறலி மயிலாகக் கூறப்படுகின்றாள். அழகும் ஆடற்கலை வல்லமையும் நிரம்பிய விறலிக்கு மயில் மிகப் பொருத்தமான உவமையாய் அமைகின்றது. மன்னர் மழையாக, மழை மேகமாக உவமிக்கப்பட அம்மழையினை எதிர் நோக்கி நிற்கும் மயிலாக, மழையில் மகிழ்ந்து ஆடுகின்ற மயிலாக, மன்னர் வழங்கும் பரிசிலை எதிர்நோக்கி நிற்கும் விறலியைப் புலவர் உரைக்கின்றனர்.

விரைவளர் கூந்தல் வரைவளி யுளரக்
கலவ மஞ்ஞையின் காண்வர இயலி
மாரியன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே (புறம் 153 : 4-7)

நின் மணம் நிறை கூந்தலை மலைக்காற்று அசைப்பத் தோகை யுடைய மயில்போல் தோன்ற நடந்து மழை போன்ற வள்ளன்மை உடைய வேள் ஆயைக் காணச் செல் என்று விறலியை வேள் ஆயிடம் ஆற்றுப்படுத்துகின்றார் ஏணிச்சேரி முடமோசியார்.

மலைபடுகடாத்திலும் புலவர் இரணியமுட்டத்துப் பெருங் குன்றூர் பெருங்கௌசிகனார்,

'கணங்கொள் தோகையின் கதுப்பு இருத்து அசைஇ
விலங்கு மலைத்து அமர்ந்த சேயரி நாட்டத்து
இலங்குவளை விறலியர்' (44-46)

என்று விறலியர் கூட்டத்திற்கு மயில் கூட்டத்தை உவமை கூறு கின்றார்.

### மயிலும் செல்வமும்

மலைதரும் ஐவளங்களில் ஒன்று மயில்பீலி எனக் கூறப்படு கின்றது.[1] ஆகலின் மயில் செல்வமாகக் கருதப்பட்டிருக்கின்றது. மன்னருக்கு அளிக்கப்படும் திறைப் பொருள்களில் மயிலும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. நன்னனின் தலைவாயிலின் கண் மன்னர் கொண்டு வந்த திறைப் பொருள் நிரம்பியிருந்தது எனக் கூறவந்த புலவர் முதலில் மயிலைக் கூறுகின்றார்.

'வரைப் பொலிந்தியலும் மடக்கண் மஞ்ஞை
கானக்கோழி கவர்குரல் சேவல்
கானப் பலவின் முழவு மருள் பெரும் பழம்'
(மலைபடு 509-511)

வேத ஆகமத்திலும் இங்ஙனம் மன்னருக்குப் பொன்னும் வெள்ளி யும், தந்தமும் வழங்கும்போது அவற்றுடன் மயில்களும் வழங்கப் பட்ட குறிப்புக் காணப்படுகின்றது.[2] விலைமதிப்பற்ற பொன் போன்றவற்றுடன் மயிலும் வழங்கப்பட்டதிலிருந்து இது எவ்வளவு மதிப்புள்ள செல்வமாகக் கருதப்பட்டது என்பது தெரியவரும். மிருகங்களின் குறியீட்டுப் பொருள் பற்றிக் கூறும்பொழுது மயில் செல்வத்தைக் குறிப்பது[3] என்று கூறியிருப்பதும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

---

1. பரிபாடல்; கழகம்; சென்னை; 1969; ப. 287
2. பரிசுத்த வேதாகமம்; இந்திய வேதாகமச் சங்கம்; பெங்களூர்; 1974; ப. 553.
3. முத்தாரம்; 17.3.85; ப. 13

சங்க இலக்கியங்களில் அகப்பொருள் தொடர்புடன், தலைவியின் தந்தையின் வளம், தலைவனின் செல்வச் செழிப்பு, தலைவன் சென்ற வழியினது வளம் குறிக்க மயில் காட்டப் பட்டிருப்பது போன்று, புறப்பொருள் தொடர்புடன் வருங்காலை மன்னனது நாட்டின் வளம் புலவரால் புலப்படுத்த மயில் தொடர்புபடுத்தப்படுகின்றது என்பதும்[4] இங்குக் குறிப்பிடத் தக்கது.

## மயிலும் ஒப்பனைப் பொருளும்

மேற்கண்டவற்றை விடுத்து, புறப்பொருள் தொடர்புடன் மயிலைக் காணும் பொழுது முன்னிற்பது மயிலின் பீலி. இப்பீலி மிகச் சிறந்த ஒப்பனைப் பொருளாக அரசருக்கும் கலைஞருக்கும் உரிய மிக இன்றியமையாப் பொருட்களில் சிறப்புடையதாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

மறவரும் மழவரும் தம்மைப் பீலிக் கண்ணியால் அழகுபடுத்தியிருக்கின்றனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக வீரம் வெளிப்படுத்திப் போரில் விழுப்புண் ஏற்று வீரமரணம் அடைந்து வழிபாட்டிற்குரியோராக மாறிய வீரரின் நினைவுச் சின்னமாக நடப்பட்ட நடுகல்லும் பீலியால் பொலிவு படுத்தப்பட்டுள்ளது.

இவற்றிற்கெல்லாம் ஒப்பனைப் பொருளாகப் பயன்படுத்தப் பட்ட பீலி எங்ஙனம் பெறப்பட்டது என்றும் எண்ணத் தோன்று கின்றது. 'மயிலே மயிலே என்றால் இறகு போடுமா' என்ற பழமொழி மயில் தானாகப் பீலியினைத் தருவதில்லை என்று பொருள்படினும், மரங்கள் இலைகளை உதிர்ப்பதைப் போலக் குறிப்பிட்ட காலத்தில் மயிலும் தன்னுடைய பீலியை உதிர்க்கும் என்பது தெரிய வருகின்றது.

'பழனமஞ்ஞை உகுத்த பீலி' (புறம் 13 : 10)

'மடமயில் ஒழித்த பீலி' (அகம் 69 : 14)

இவ்வாறு உகுக்கப்பட்ட பீலி மக்களால் தொகுக்கப் பெற்றது என்பதற்கும்,

'பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்' (புறம் 13 : 10-11)

என்ற அடிகள் சான்று பகர்கின்றன.

---

4. மயிலும் வருணனையும் என்ற பகுதியில் காண்க.

இப்பீலியால் அணி செய்யப்பட்டவற்றுள் முதற்கண் நினைக்கத்தக்கது அரசனுடன் தொடர்புடைய போர்முரசம். அரசச் சின்னங்களில் ஒன்றாக இது அமைவது.

'மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலி நெடும்பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதிவேட்கை உருகெழு முரசம்' (புறம். 50 : 1-5)

அடுத்து அரசனது வெற்றிக்குக் காரணமாக விளங்கும் போர்க் கருவிகள் பீலியால் அணி செய்யப்பட்டிருக்கின்றன.

'மடமயில் ஒழித்த பீலி வார்ந்து தம்
சிலைமாண் வல்வில் சுற்றி' (அகம் 69 : 14-15)

'நெய்தல் உருவின் ஐது இலங்கு அகலிலைத்
தொடையமைப் பீலிப் பொலிந்த கடிகை
மடையமை திண்கரை மாக்காழ் வேல்' (அகம். 119 : 11-13)

என்ற இவை அன்று பெரிதும் பயன்படுத்தப்பட்ட வில்லும் வேலும் பீலி பெற்றதைக் குறிப்பிட, பின்வரும் சான்று பகைவரது வில்லும் வேலும் தங்களைத் தாக்காது காக்கும் பலகையும் பீலி பெற்றதைக் காட்டுகின்றது.

'பலகையும் பீலி சூட்டிமணி அணிபவ்வே' (நற்.177: 5-6)

பொதுவாகப் போரில்லாக் காலத்துப் படைக்கலங்கள் நெய் பூசப் பெற்றுப் பீலி அணிவிக்கப் பெற்றிருக்கும் என்பதும் தெரிய வருகின்றது.

'இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன் காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனகர்' (புறம். 95 : 1-3)

மேற்கண்டவை வீரத்துடன், வெற்றியுடன் தொடர்பு கொண்டவை. இதே வீரத்தொடர்புடன் அகவாழ்விலும் ஒப்பனைப் பொருளாகப் பீலி பயன்பட்டுள்ளது. இயைபு குறித்து இங்கு இது எடுத்தாளப்படுகின்றது. தான் விரும்பிய தலைவியை அடைய இயலாத தலைவனும் எப்படியும் அவளை அடைந்தே தீர வேண்டும் என்ற வேகத்துடன் போராடும் மனப்பான்மையுடன் மடலேறுங்கால் அம்மடற் குதிரையைப் பீலியால் அழகு படுத்தி யிருக்கின்றான்.

'மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை ஆவிரை எருக்கொடு பிணித்து யாத்து
மல்லலூர் மறுகின்கண் இவட்பாடும் (கலி. 138 : 8-10)

தாம் போர் புரிதற்குப் பயன்படும் கருவிகளுக்குப் பீலி அணிவித்தலோடு வெற்றி விளைக்கும் வீரர்கள் தாமும் பீலி அணிந்திருக்கின்றனர்.

'தோகைத் தூவி தொடைத்தார் மழவர்' (அகம். 249:12)

'பீலிக்கண்ணிப் பெருந்தகை மறவன்' (புறம் 274 ; 2)

மடலேறித் தன்மனம் திறந்து காட்டித் தலைவியைத் தனக்கு உரியவளாக ஆக்கிக் கொள்ளப் போராடும் தலைவனும் பீலி அணிந்திருக்கின்றான்.

'பூவல்ல பூளை யுழிஞை யோடு யாத்த
புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம் மணிகட்டி
அடர்பொன் அவிரேய்க்கும் ஆவிரங் கண்ணி'
(கலி. 140 : 4-7)

சங்க காலத்தில் வீரர் எங்ஙனம் மன்னரால் போற்றப் பட்டனரோ அதே போன்று கலைஞரும் போற்றப்பட்டமை யாரும் அறிவர். வீரர்க்கு வில்லும் வேலும் எத்துணைச் சிறப் புடையனவோ அதே போன்று கலைஞருக்கு அவர்தம் இசைக் கருவிகள் உயிர் போன்றவை. அக்கருவிகளுக்கு அவர்களும் பீலி சூட்டிப் பெருமைபடுத்தியிருக்கின்றனர்.

'மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு'
(மலைபடு : 5-6)

இவையெல்லாம் ஒன்றிரண்டு பாடல்களில் மட்டும் இடம் பெற, நடுகல் பல பாடல்களில் பீலியால் அணி செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

'நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ'
(புறம். 232 : 3-4)

'உயரிசை வெறுப்பத் தோன்றிய பெயரே
மடஞ்சால் மஞ்ஞை யணிமயிர் சூட்டி
இடம் பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசையதுவே (புறம். 260 : 25-28)

பிற, பீலியுடன் வேறு சில ஒப்பனைப் பொருட்களையும் பெற,.நடுகல் பீலியை மட்டுமே பெற்றிருப்பது இங்கு நோக்கத் தக்கது. உழிஞை, பூளை, ஆவிரம், எருக்கம் போன்ற மலர்களும், மணிகளும் இவ்வாறு பீலியுடன் இடம்பெறுபவை. இவற்றில் வில், வேல் போன்ற படைக்கலங்களும், இசைக்கருவிகளும் உடையோரால் போற்றிப் பாதுகாக்கப்படுபவை. முரசம் மன்னனால் பலத்த காவலுடன் பாதுகாக்கப்படுவது. ஆகலின் இவற்றிற்குப் பீலியுடன் பிற மலர்களைச் சூடுவது எளிது; மணி களால் அலங்கரித்துக் காப்பதும் எளிது. ஆயின் நடுகல் அவ்வாறன்று. புறநகர்ப் பகுதிகளில் அதாவது காடுகளில் அமைக்கப்பட்டவை ஆகலின் அவற்றிற்கு நாள்மலர் அணிவித்தலோ, அன்றி மணியினால் அழகுபடுத்திக் காத்தலோ எளிதன்று. இதுவே நடுகல் பீலி மட்டும் பெறுவதற்குக் காரண மாகலாம்.

**மயிலும் குறியீடும்**

அரசச் சின்னமாகிய முரசம், படைக்கலம், இசைக்கருவி, நடுகல் என்ற இவை பீலியினால் ஒப்பனை செய்யப்பட்டிருப்பது எதனால் என்ற எண்ணம் எழுகின்றது. தமிழர் பழக்க வழக்கங் களும் நம்பிக்கைகளும் என்ற நூலில் க. காந்தி குறிப்பிட்டிருப்பது போலப் "பீலி சூட்டுவதன் காரணம் அழகுபடுத்தும் நிலையில் அமைந்த ஒன்றா அல்லது ஏதாவது குறியீட்டின் அடிப்படையில் அமைந்த ஒன்றா" என்பது சிந்தித்தற்குரியது (ப. 254). ஒரு பொருளுக்கு ஒன்றை அணிவிப்பது அணி செய்யும் பொருட்டு என்பதை 'அணி'விப்பது என்ற சொல்லமைப்பே புலப்படுத்தும். பீலியும் அணியும் பொருளுக்கு அழகு தருகின்றது. ஆனால் இதனை ஒப்பனைப் பொருளாகப் பெறும் பொருட்களையும், மாந்தரையும் நோக்க, அழகு மட்டும் பீலி அணிவதன் நோக்க மல்ல; வேறு உயர்ந்த நோக்கமும் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றது.

மலர், மணி இவற்றோடு பீலி அணிவிக்கப்படுவதும், தனித்து அணிவிக்கப்படுவதும் இதன் உயர்வினைக் குறிக்கும். மலர் தூய்மையையும் மணி செல்வத்தையும் குறிப்பவை. இதனைப் போன்று பீலி எதனைக் குறிக்கின்றது என்பது கருதத்தக்கது.

**வீரம், வெற்றி, தலைமை**

போரை அறிவிப்பதற்கும், போரில் பெற்ற வெற்றியை அறிவிப்பதற்கும் முழங்கப்படுவது முரசம்; போரில் வெற்றிபெறப்

பயன்படுவன படைக்கலங்கள்; படைக்கலங்களால் பெற்ற வெற்றியைப்பாராட்ட, விழாவாகக் கொண்டாடப் பயன்படுபவை இசைக்கருவிகள்; போரில் விழுப்புண் பெற்று வீரமரணம் அடைந்து, வீடுபேறடைந்து வழிபாட்டிற்குரியோராக விளங்கிய வீரர்க்கு நடப்படுவது நடுகல். இவை அனைத்தும் போரோடும் வீரத்தோடும், வெற்றியோடும், புகழோடும் தொடர்புடையன ஆகலின் பீலி வீரத்திற்கு, வெற்றிக்கு, அவ்வெற்றியால் பெறும் புகழுக்குக் குறியீடாகின்றது எனலாம்.

நடுகல் என்று குறிப்பிடும்போது தொல்காப்பியர் அதனைக் கரந்தைத் திணையின் புறனாய் அமைவது என்பதும் (வேலன் முதலாக வெட்சித்திணைக்குரிய துறை கூறினார்; இனி அதற்கு மாறாகிய கரத்தைத் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. அதுவும் ஆநிரை மீட்டல் காரணமாக அந்நிலத்தின்கண் நிகழ்வ தாகலின் வெட்சிப்பாற்பட்டுக் குறிஞ்சிக்குப் புறனாயிற்று — இளம் பூரணர் உரை. பொருள் : 63) இக்குறிஞ்சித் திணைக்குரிய பறவை மயில் ஆகலின் இதன் பீலி நடுகல்லை அணிசெய்தல் மிகப் பொருத்தம் என்பதும் இவண் நினைக்கத்தக்கது. போரில் வீர மரணம் அடைந்தோர்க்கு மட்டுமன்றி ஆநிரை மீட்டு வந்த வீரனுக்கும் நடுகல் நடப்படுவதுண்டு என்பதும் குறிப்பிடற்குரியது.

> 'வீளையம்பின் விழுத்தொடை மறவர்
> நாளாவுய்த்த நாம வெஞ்சுரத்து
> நடை மெலிந் தொழிந்த சேட்படர் கன்றின்
> கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்
> பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
> பீலிசூட்டிய பிறங்கு நிலை நடுகல்' (அகம். 131 : 6-11)

வெற்றி பெற்ற மறவன் பீலிக்கண்ணியைத் தலையில் அணிந்தமை நோக்க, அது அவனது வெற்றிக்குக் குறியீடாகத் தலையில் மகுடம் போன்று அமைந்திருப்பதாகக் கொள்ளலாம். தலைமையைக் குறிப்பதாய்க் கொள்ளினும் பொருந்தும்.

> 'நீலக்கச்சைப் பூவாராடைப்
> பீலிக்கண்ணிப் பெருந்தகை மறவன்' (புறம். 274 : 1-2)

இன்றும் ஆதிவாசிகளின் தலைவர் பறவைகளின் சிறகுகளால் ஆனமுடி அணிந்திருப்பதும் இவண் இணைத்து நோக்கத்தக்கது.

### நிலைபேறு

வீரர் போரில் மடியினும் வீடுபேறு அடைவரேயன்றி இறந்தவராகக் கருதப்படுவதில்லை. பூதவுடல் அழியினும்,

புகழுடல் அழியாதிருக்கின்றமையின் நிலையான வாழ்வு உடையவராகக் கருதப்படுவர். ஆகலின் இவர்க்கிட்ட நடு கல்லினைப் பீலியைக் கொண்டு அழகுபடுத்தல் நிலைபேற்றிற்குக் குறியீடாக இதனைக் கருதியதாற் போலும். பீலியும் இயல்பும் இதற்குப் பொருந்த அமைகின்றது. ஒப்பனைக்குப் பயன்படும் பிற பொருட்கள் விரைவில் அழியக் கூடியவை. ஒப்பனைப் பொருளாய் அமைந்து வழிபாட்டிற் பயன்படும் பொருளாயும் விளங்கும் பீலி தன் பொலிவை என்றும் இழப்பதில்லை. ஆகலின் நிலை பேற்றிற்குப் பொருத்தமான குறியீடாய் இஃது அமைகின்றது. மயில் நிலைபேற்றிற்குக் குறியீடாகப் பிறமொழி இலக்கியங்களில் இடம்பெறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[5] பசுமை நிலை பேற்றிற்குக் குறியீடாக வழங்கப்பெறுவதும்,[6] மயில் 'பசுமயில்' என்று பச்சை நிறமுடையதாகக் குறிக்கப் பெறுவதும் இவண் இணைவு காணத்தக்கன.

**தெய்வீகம்**

இவ்வனைத்திற்கும் மயிற்பீலி—மயில் குறியீடாகின்றதைப் போன்று இவற்றிற்கெல்லாம் மேலாக, இவற்றால் அடையப் பெறும் தெய்வத்தன்மை அல்லது தெய்வீகத்திற்கும் குறியீடாக விளங்குதல் காணலாம்.

புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பெரும்பாணாற்றுப் படையில் மயில்கள், தெய்வங்கள் உறையும் சாரலிடத்து மரங்கள் நிரம்பிய இளமரக்காவில் ஆடுகின்றன என்று வேங்கட மலையை வருணிக்குங்கால் பாடுகின்றார்.

> 'இன்சீர்க்கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்
> மஞ்ஞையாலும் மரம்பயில் இறும்பில்' (494 - 495)

குறிஞ்சிக்கடவுள் குமரன் கொடியாக, ஊர்தியாக மயில் குறிக்கப் படுகின்றமையின் புலவர் மயிலின் தெய்வத்தன்மையை அணங் குடைச்சாரல் என்று சாரலுக்குக் கொடுத்த அடையினால் தெளிவு

---

5. Ad de Vries; Dictionary of Symbols and Imagery, North Holland Publishing Company, Amsterdam, London, 1974; P. 360.
6. இலக்கியத்தில் நிறம்; (பதி) ச.வே. சுப்பிரமணியன்; ந. கடிகாசலம்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை; 1983; ப. 24.

படுத்துகின்றார் எனக் கருதலாம். மயிலின் நிறமும் (கருநீல நிறம்) இத்தெய்வத் தன்மைக்குக் குறியீடாய் விளங்கும் நிறம்[7] என்பதும் நினைவு கூரத்தக்கது.

புறப்பொருள் தொடர்பாக மயில் இடம் பெற்றுள்ள குறிப்புக்களை நோக்க, மயில் இடம் பெறுவதினும் மயிற்பீலி இடம் பெறுவது மிகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

மயில் மன்னரின் போற்றத்தக்க, இன்றியமையாப் பண்பு களாகிய செங்கோன்மை, ஈகை, வீரம், வெற்றி போன்றவற்றை விளக்கி நிற்பதோடு அவரது வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளமை அறியப்படும்.

நாட்டின் செல்வமாக மயில் விளங்கியதும் தெரிய வருகின்றது. இதனால்தான் செல்வத்திற்குக் குறியீடாகவும் வழங்கப்பட்டிருக் கின்றது.

அகப்பொருட் பாடல்களில் மயிலுக்கு விறலி உவமமாகப் புறப்பொருட் பாடல்களில் மயில் விறலிக்கு உவமமாக வந்துள்ளது.

அருமை பொருந்திய ஒப்பனைப் பொருளாக மயிற்பீலி விளங்கி வந்தமை அறிய வருகின்றது.

தவிர, அகப்பொருள் தொடர்போடு நோக்க, மயில் மென்மை, மேன்மை, அழகு, பொலிவு, கார்காலம், இன்ப துன்ப உணர்வு போன்றவற்றிற்குக் குறியீடாக விளங்க, புறப்பொருட் தொடர்போடு நோக்கின் மென்மைக்கு மறுதலையாக விளங்கும் வன்மை (வீரம்), வெற்றி, தலைமை, நிலைபேறு, தெய்வீகம் போன்றவற்றிற்குக் குறியீடாய் நிற்கின்றது. இருபொருட் தொடர்பிலும் வளத்திற்கு-செல்வச் செழிப்பிற்குக் குறியீடாகக் குறிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

---

7. Ad de Vries; op. cit. P. 107

# மயிலும் அணிகளும்

பறவைகள் இலக்கியத்தில் கருத்துக்காக, பொருள் தெளிவுக்காக, நடை நயத்திற்காக, இலக்கியச் சுவைக்காக என்று பல பயன்பாட்டில் ஆங்காங்கே எடுத்தாளப்படல் இயல்பு. அவ்வாறு இடம்பெறும் பறவைகளில் மயில் முதன்மையிடம் பெறுகின்றது. அன்றில் அல்லது மகன்றில் (இணைபிரியாமை), காகம் (ஒற்றுமை), கிளி (மழலை), குயில் (குரலினிமை), புறா (அன்பு), சிட்டுக்குருவி (விடுதலை), வான்கோழி (மடமை), குடிஞை (தீ நிமித்தம்), கருடன் (நன்னிமித்தம்), வல்லூறு (வன்மை), கோழி (விடியல்), கொக்கு (கூர்த்த நோக்கு) போன்ற பிற பறவைகள் ஏதேனுமொரு பண்பினை, உணர்வினை உணர்த்தப் பயின்று வர, மயில் பல பண்புகளை மன உணர்வுகளைக் குறித்துப் பல சூழல்களில் வேறுபட்ட பல அடைகளோடு பயின்று வருகின்றது. இதனால் இம்மயில் உவமம், உள்ளுறை, குறிப்புப் பொருள், குறியீடு, வருணனை, தற்குறிப்பேற்றம் என்று பல அணிகளில் பயின்றுவரும் சிறப்பினைப் பெறுகின்றது.

கருத்துக்களைச் சுவைபட வெளிப்படுத்தற்கு அணி இன்றியமையாதது. அணி என்ற சொல்லே அணி செய்யும் அதன் பண்பினை உணர்த்தும். கருத்துக்களைச் சுருங்கக் கூறி விளங்க வைக்க, தெளிவு படுத்த, மறை பொருளாகக் குறிப்பாகக் கூறிப் புலப்படுத்தவும் அணி பயன்படுகிறது. அழகு மயில் பயின்று வரும் பாடல்களும் இக்கருத்தினுக்குச் சான்றாய் விளங்குகின்றன.

மயில் தொடர்பான அணிகளில் மிக அதிகம் பயின்று வருவது உவமம். உள்ளுறை உவமமும் குறிப்புப் பொருளும் உவமத்திற்கு அடுத்த இடத்தினைப் பெறுகின்றன. உவமம், உருவகம்,

இவற்றின் வளர்ச்சி நிலையில் உருவான குறியீட்டிலும் பல பண்புகளின் விளக்கமாய் இம்மயில் அமைந்து சிறப்பிடம் பெறுகின்றது. வருணனையிலும் இது இடம் பெறுகின்றது. தற்குறிப்பேற்றம் சங்க இலக்கியத்தில் அருகிக் காணப் படுவதால் இதிலும் அருகியே உள்ளது. அணிகளோ, சிறப்புப் பொருளோ, ஏதுமின்றி சொற்சுட்டு நிலையாக மயில் இடம் பெறுவது ஓரிரு இடங்களில் மட்டும் என்பது இங்கு மீண்டும் நினைவுகூரத்தக்கது.

**மயிலும் உவமையும்**

மொழிவளரத் தொடங்கிய அன்றே உவமமும் உடன்தோன்றி வளரத் தொடங்கியிருக்க வேண்டும். பிற அணிகள் பெரும்பாலும் இலக்கியத்தில் மட்டும் இடம் பெறுபவை. உவமை அவ்வாறன்று. பேசக்கற்கும் குழந்தையும் பிறரிடம் தன் கருத்தைக் கூற முயலும்போது உவமையினைப் பயன்படுத்துகின்றது. இதன் காரணம் பிற அணிகளைப் போன்று அணி செய்வதற்கு மட்டு மன்றிப் பொருளின் வடிவினை, பண்பினை, செயலினை, பயனை விளக்கவும் இவ்வுவமை பயன்படுவது. விளக்கம்தான் இவ் வுவமையின் முதற்பயன். வளர்ச்சி நிலையில் வகைகளையும் உருவாக்கி எண்ணற்ற உவம உருபுகளையும் பெற்றுப் பரந்துபட்டு இது நிற்கின்றது.

தொல்காப்பியர் உவம இயலில் உயர்ந்ததன் மேலனவாய், சிறப்பு, நலன், காதல், வலிமை என்ற நான்கினையும் நிலைக் களனாகக் கொண்டு அமைவது உவமம்[1] என் கூறுவது மயில் தொடர்பான உவமைகளுக்கும் நன்கு பொருந்தும். தன் அழகால் அகவலால், ஆடலால், இயலால், நடையால் சங்க இலக்கிய உவமைகளில் மயில் பலபடப் பயின்று வருகின்றது.

மயில் முதல் நிலை, உறுப்பு நிலை இரண்டிலும் உவமமாகும் சிறப்பினை உடையது. முதல் நிலையில் இதன் வடிவம் உவமை யாகின்றது. இவ்வடிவால் விறலி, பாடினி, தலைவி, ஆயம், பரத்தை என்று பலருக்கு, சுருங்கக் கூறின் மங்கையர்க்கு உவமை யாகின்றது. தன் கழுத்து நிறத்தாலும் மயில் மகளிர்க்கு உவமமாவதுண்டு.

---

1. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை (தொல். பொருள். உவம: 3)

சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற்பண்பும் நிலைக்கள மென்ப(தொல்.பொருள்.உவம:4)

உறுப்பு நிலையில் மயிலின் உச்சிச் சூடு, கழுத்து, பீலிக்கண், பீலி, தோகை, முருந்து, குரல் ஆகியவை உவமமாகின்றன.

சங்க இலக்கியத்தில் அகப்பாடல்களில் மயில் தலைவன் (நற். 264), தலைவி (கலி. 30), தோழி (நற். 248), செவிலி (அகம். 63) ஆகியோரால் உவமையாக ஆளப்படுகின்றது.

**முதல் நிலை**

மயிலை மகளிரின் நடை, சாயல் இரண்டிற்கும் உவமை கூறுகின்றனர்.

**மயிலும் நடையும்**

குன்றுதோறாடலில் முருகனை வழிபடற் பொருட்டுச் செல்லும் மகளிரை நக்கீரர்,

'மயில் கண்டன்ன மடநடை மகளிர்' (205)

என்று குறிப்பிடுகின்றார். கபிலரும் குறவர் மகளை வருணிக்குங்கால்,

'அணிமயிலன்ன அசைநடைக் கொடிச்சி' (ஐங். 258 : 2) என்று மயிலின் நடையை உவமை கூறுகின்றார். மெதுவாக அசைவதுபோல் நடந்து செல்வது காரணமாக மகளிர் நடைக்கு மயிலின் நடை உவமை கூறப்படுகின்றது. தலைவனுடன் உடன் போக்கு மேற்கொண்ட காலைத் தன் மகள் மென்மையானவள்; கான்வழி எங்ஙனம் நடப்பளோ என்று தாய் வருந்திப் புலம்பும் போது அவளின் மென்னடைக்கு மயிலின் நடையை உவமை ஆக்குகின்றாள்.

'மடமயிலன்ன என்நடை மெலிபேதை' (அகம் 63: 15)

மறுத்துரைப்பது போல் எதிர்மறையாய்க் கூறிப் பெண்ணிற்கு மயிலினை உவமித்தலும் உண்டு. கபிலர் குறிஞ்சிக்கலியில் தலைவன் எப்படிப் பலபடத் தன்னைப் பாராட்டினான் என்று தலைவி வாயிலாகக் கூறுமிடத்து,

ஐதேய்ந்தன்று பிறையுமன்று
மைதீர்ந்தன்று மதியுமன்று
வேயமன்றன்று மலையுமன்று
பூவமன்றன்று சுனையுமன்று
மெல்ல இயலும் மயிலுமன்று
சொல்லத் தளரும் கிளியுமன்று (கலி. 55 : 9 - 14)

என்று நுதல், முகம், தோள், கண் இவை கூறி இயலால் மயில்போல் தோன்றினும் மயிலன்று என்கிறான். இங்கும் தலைவி நடையால் மயில் என்று குறிக்கப்படுகின்றாள்.

**மயிலும் சாயலும்**

நுதல், கண், முகம், தோள், தொடை, விரல்கள் என்று உறுப்புக்களைத் தனித்தனியாக வருணிக்குங்கால் மகளிர்க்குப் பல உவமைகள் கூறப்படுகின்றன. முழுமையாக உவமிக்கும்பொழுது சாயலுக்கு மயில் உவமையாகின்றது.

> 'மான் வென்ற மடநோக்கின் மயிலியல்' (கலி.57 : 2)
> 'கிள்ளையும் தீம்பால் உண்ணா மயிலியல்
> சேயிழை மகளிர் ஆயமும் அயரா' (அகம். 369:4-6)
> 'மயிலஞ்சாயல் மாஅயோள்' (புறம். 318:2)

(இயல் என்ற சொல்லால் நடை, சாயல் இரண்டுமே குறிக்கப்படு கின்றது என்பது இவண் குறிப்பிடத்தக்கது.) வெளிப்படையாகச் சாயலால் மயில் என்று கூறாது, குறிப்பாக மயில் போன்ற மகளிர் எனக் கூறுதலும் உண்டு.

> 'புலமாண் வழுதி மடமயிலோரும் மனையவரோடும்'
> (பரி. 19:20 - 21)

தலைவியைக் குறிக்கும் போதும், ஆயத்தாரைக் குறிக்கும் போதும், விறலி, பரத்தை ஆகியோரைக் குறிக்கும்போதும் மயில் உவமையாகக் கூறப்படுகின்றது. முதல் நிலையில் மகளிர்க்குப் பெரும்பான்மை உவமையாவது மயில் என்பது குறிப்பிடற்குரியது.

மகளிர்க்கு மயிலை உவமிக்குங்கால், ஆண் மயிலை உவமை கூறுகின்றனர் புலவர். மயிலெனின் தோகையுடைய ஆண் மயில் பொதுவாக மனக்கண்முன் தோன்றுவது இயல்பு. சிந்திக்குங்கால் பெண்ணிற்கு ஆண் மயில் உவமையா என முரண்பாடுடையதாகத் தெரிகின்றது. ஆயினும் உவமையளவில் இது பொருந்தி நிற்பது காணலாம். தொல்காப்பியர் மரபியலில் பறவைகளின் ஆண்பாற் பெயர் கூறும்பொழுது மயில் தவிரப் பிற சேவல் என்று குறிப் பிடப்படும் என்கிறார்.

> 'சேவற் பெயர்க் கொடை சிறகொடு சிவணும்
> மாயிருந்தூவி மயிலலங் கடையே' (தொல. மரபு. 49)

இங்குத் தொல்காப்பியர் வெறும் மயில் என்று சுட்டாது மாயிருந்தூவி' என்று அடைகொடுத்துக் கூறுகின்றார். பிற

பறவைகள் சிறகுகள் மட்டும் பெற்றிருக்க மயில் அச்சிறகுடன் தோகையும் உடையது. பறவைகள் என்று குறிப்பிடாது 'சிறகொடு' என்று ஆகு பெயரால் குறிப்பிட்டிருப்பதும் மயிலுக்கு 'மாயிருந்தூவி' என்று தோகையினை அடையாகக் கூறியிருப்பதும் அத்தோகைக்கு 'மா', 'இரும்' என்று பெருமை சேர்க்கும் இரு அடைகள் வழங்கியிருப்பதும் சிந்திக்கத் தக்கன. தோகை மயிலுக்கு அழகினைத் தருவதோடு பெண்மை சான்ற மென்மையினையும் தருகின்றது. இதனை உணர்ந்தே பேராசிரியரும் இந்நூற்பாவிற்கு உரை கூறுங்கால், ''மாயிருந்தூவி மயில், என்றதனான் அவை தோகை உடையவாகிப் பெண்பால் போலும் சாயலவாகலான் ஆண்பால் தன்மையில என்பது கொள்க'' என்று விளக்கம் தருகின்றார்.

இயல் - சாயல் என்பதற்கு, 'அஃதாவது மாதர் உருவிற் கிடப்பதொரு மென்மை'[2] என்று விளக்கம் கொடுக்கின்றார் பெருமழைப் புலவர் சோமசுந்தரனார். மயில் சாயலால் பெண்ணுக்கு உவமை கூறப்படுவது. இச்சாயல், மென்மை ஆண் மயிலிடம் காணப்படுகின்றது. 'சேவல்' ஆண்மையை, அதன் வலிமையைச் சுட்டி நிற்கும் பெயர்ச்சொல். அந்த ஆண்மை புலப்படலாகாது என்பதனால் போலும் தொல்காப்பியர் சேவல் என்ற பெயர் ஆண் மயிலுக்கு உரியதல்ல என்கின்றார். பெண்ணுக்கு உவமையாகின்றமையினும் இது ஏற்புடையதாகின்றது. அதே போன்று மென்மையும் நளினமும் அழகும் ஆடல் வல்லமையும் பொருந்திய மயில் பெண்ணுக்கு உவமையாவதும் பொருத்தமுடையதாகின்றது. ஆகலின் பெண்ணுக்கு ஆண் மயில் உவமையாவது முரண்படுவதுபோல் தோன்றினும் முற்றிலும் பொருத்தமானது என்பதில் கருத்து வேறுபாடு இருத்தலரிது.

### மயிலும் மகளிரும்

மயில் சங்கப்பாடல்களில் பாடினி, தலைவி, ஆயம், பரத்தை ஆகியோருக்கு உவமையாகச் சாயலால் மட்டுமின்றி அதன் ஆடல், அழகு காரணமாக அதனை எதிர்ப்படும் ஏதங்கள் காரணமாகவும் உவமிக்கப்படுகின்றது.

### மயிலும் விறலியும்

கலைத் தேர்ச்சி பெற்றவள் விறலி. கலையின் விறல் சுட்டும் முகமாக விறலி என்று காரணப் பெயரால் அழைக்கப் பெறுபவள். மயிலும் ஆடல் வல்லது. ஆகலின் மயில் பிறமகளிரினும் விறலிக்கு மிகப் பொருந்தித் தோன்றும் உவமை.

---

2. பரிபாடல்; கழகம்; சென்னை; 1969; ப. 287.

சுரவழிச் சுற்றம் சூழ நடந்து வரும் விறலியைக் குறிக்கும் போது பெண் மயில்கள் சூழக்கட்சியில் இருக்கும் ஆண்மயிலினைக் கூறுகின்றார் மருத்துவன் தாமோதரனார்.

'கட்சி மஞ்ஞையிற் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலி' (புறம் 60; 4-5)

ஆய்அண்டிரனிடம் விறலியை ஆற்றுப்படுத்தும் ஏணிச்சேரி முடமோசியாரும் அவளைக் கலவமஞ்ஞை போலமணம் கமழ் கூந்தல் காற்றில் ஆடநடந்து அவன்பால் செல் என்கிறார்.

'விரைவளர் கூந்தல் வீசுவளி யுளரக்
கலவ மஞ்ஞையிற் காண்வர இயலி
மாரியன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே (புறம், 133:4-7)

**மயிலும் பாடினியும்** : பிறமகளிர்க்கு ஆண்மயிலை உவமை கூற, முடத்தாமக் கண்ணியார் இம்மரபிலிருந்து மாறுபட்டு

'பெடைமயில் உருவிற் பெருந்தகுபாடினி' (பொருந : 47)

என்று பாடினியைப் பெண்மயிலாகப் பாடுகின்றார். பாடுபவள் ஆகலின் பாடினிக்குப் பெண்மயிலை உவமை கூறுகின்றார் என்று கூற இயலாது. ஏனெனில் வடிவ வனப்புடைய மயிலின் குரல் அவ்வளவாக மென்மை உடையதன்று, அதனால் சாயல்தான் இங்கும் உவமையாகின்றது. ஆடல்வல்ல விறலி பொதுவாக ஆண்மயில் என்று பாடப்படுகின்றமையின் அழகுடன் ஆடலும் பாடலும் வல்ல அவ்விறலியிடமிருந்து வேறுபடுத்திக் காட்டற் பொருட்டுப் போலும் பாடினியைப் பெண்மயில் என்கிறார். பெண் மயிலும் அழகுடையது ஆகலின் இவ்வுவமை பொருத்தமுடையது எனினும் மரபுடன் மாறுபட்டது. ஆனால் இம்மரபு மாற்றத்தை ஏற்கவிரும்பாத உரையாசிரியர் பொ.வே. சோமசுந்தரனார் பெடை மயிலின் அருகு நின்ற மயில் போலும் சாயலினை உடைய கல்விப் பெருமை தக்கிருக்கின்ற பாடினி[3] என்று பொருள் கூறுகிறார்.

**மயிலும் மனைவியும்** : புறப்பாடல்களில் விறலி, பாடினி, ஆகியோருக்கு மட்டுமன்றி மனைவிக்கும் மயில் உவமையாகின்றது.

'மயிலம் சாயல் மாஅயோள்' (புறம் 318 : 2)

---

3. பத்துப்பாட்டு, கழகம்; திருநெல்வேலி; 1976; ப.17.

போர்க்கண் சென்ற மறவன் பொருது வாகை சூடித்திரும்பு கின்றான். அவனது வெற்றியைப் பாடும் புலவர் அவனது மனைவியை மயில் போன்ற சாயலை உடைய மாயோள் என்று கூறுகின்றார். பரிபாடலில் பாண்டியன் முருகனை வழிபடத் தன் மனைவியருடன் சென்றகாலை அம் மனைவியரும் மயில் போன்றார் என உவமிக்கப் படுகின்றனர்,

'புலமாண் வழுதி மடமயிலோரும் மனையவரோடும்'
(பரி. 19 : 20-21)

இவ்வாறாகப் புறப்பாடல்களில் விறலி, பாடினி, மனைவி ஆகியோருக்கு உவமையாக வரும் மயில் அகப்பாடல்களில் தலைவி, தலைவியின் ஆயத்தார், பரத்தை ஆகியோருக்கு உவமையாகின்றது.

**மயிலும் தலைவியும் :** அகமாந்தரில் தலைவி தலைமையிடம் பெறுகின்றமையின் மயில் அவளுக்கு உவமையாதல் மிகுதி. அவ்வாறு தலைவிக்கு உவமையாகுங்கால் மயிலுக்குக் கொடுக்கப் படும் அடை தலைவியின் நிலையினையும் மன உணர்வினையும் புலப்படுத்தி நிற்கின்றது. களவு, கற்பு என்ற இரு ஒழுக்கங்களிலும் இவ்வாறு அடையுடன் வரும் மயில் மிகப் பொருத்தமாக அமைகின்றது.

**சூருறு மஞ்ஞை :** தெய்வம் ஏறியமயில் சூருறுமஞ்ஞை என்று குறிக்கப்படுகின்றது. இம்மயில் முதன்முதலாகத் தன் வாழ்க்கைத் துணையாகப் போகும் தலைவனைச் சந்திக்கும் தலைவிக்கு உவமையாகக் கூறப்படுகின்றது.

'திருந்துகோல் எல்வளை தெழிப்ப நாணு மறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவன் பொருந்திச்
சூருறு மஞ்ஞையின் நடுங்க' (குறிஞ்சிப். 167-169)

சீற்றத்துடன் ஓடிவரும் களிறினின்றும் தன்னைக் காத்துக் கொள்ளத் தலைவன் அருகு சென்று நடுங்கி நிற்கின்றாள் தலைவி. களிற்றின் பிடியினின்று தப்பினால் போதும் என்ற நிலையில் நாணம் துறந்து புதியவன் ஒருவனை அடைந்து நடுங்கி நின்றதைத் தோழி 'தெய்வம் ஏறிய மயில் போல நடுங்கி' என்று கூறுகின்றாள். இங்கு இச்சந்திப்பு தெய்வம் கடைக்கூட்ட நிகழ்ந்தது; தலைவி தவறிலள் என்பதனைச் செவிலிக்குக் குறிப்பாக உணர்த்தவிரும்பும் அவள் மயிலின் மீது தெய்வத்தினை ஏற்றிச் 'சூருறு மஞ்ஞை' என்கிறாள். சாயல் காரணமாக மட்டும் தலைவிக்கு அமைந்த உவமை அன்று இது; கருத்தைப் புலப்படுத்தவும் வந்த உவமை.

**கொல்லிக்கலிமயில்** : ஓரியினுடைய கொல்லிமலை மயில் நிரம்பியது. கொல்லி மலையின் மழைவளம் காரணமாகச் செருக்குடன் தோகை விரித்து மகிழ்ந்தாடுவன அம்மயில்கள், தன் மனதில் இடம் பெற்ற பெண்ணின் மனதை வென்று வெற்றி கொண்ட தலைவனுக்கு இம்மயில்கள் நினைவிற்கு வருகின்றன. தலைவியும் நீண்ட கூந்தல் உடையவள். அதனையும் குறிக்கும் முகமாகத் தன்னெஞ்சிடம்

'ஆர் ஏறு அன்ன
மாரி வண்மகிழ் ஓரி கொல்லிக்
கலிமயில் கலாவத்து அன்ன இவள்
ஒலி மென் கூந்தல் நம்வயினானே' (நற். 265:7-9)

தலைவியின் கூந்தல் மயிலின் தோகை போல மனத்தை ஈர்த்தலின் கூந்தல் என்ற ஆகு பெயரால் அவளையே குறிக்கின்றான். ஓரிக் கொல்லிக்கலிமயிற் கலாவம் என்று மயிலின் வாழிடம் இங்குக் குறிப்பிடப் படுவது தலைவியின் உயர்குடிப் பிறப்பினையும் உணர்த்தி நிற்கின்றது.

**வரையிழிமயில்** : மலையினின்றும் கீழிறங்கும் மயில் மற்றொரு தலைவிக்கு உவமை கூறப்படுகின்றது. இத்தலை இரவுக்குறிக்கண் தலைவனைக் காணச் செல்லும் தலைவிவி இவளின் களவு வாழ்க்கை செவிலியால் குறிப்பாக உணரப் படுகிறது. தெளிவாகத் தெரியின் தலைவி துன்புறுவது உறுதி. என்பதைத் தலைவனுக்கு உணர்த்த முற்படுகின்றாள் தோழி. அதனால் செவிலிக்குக் கூறுவது போல்,

உரும் உரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான்று அவிந்த தூங்கிருள் நடுநாள்
மின்னு நிமிர்ந்தன்ன கனங்குழை இமைப்பப்
பின்னுவிடு நெறியின் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலின் ஓங்குவனள் ஒதுங்கி
மிடையூர்பு இழியக் கண்டனென் இவள் என
அலையல்' (அகம். 158 : 1-7)

என்று உரைக்கின்றாள். இங்கு மயில், வரையிழிமயில் என மலையினின்று கீழிறங்குவதாகக் கூறப்படுவது தலைவி தன் குடிப் பெருமை நோக்காது இவ்வாறு களவொழுக்கிலே ஈடுபட்டிருப்பது பிறரால் அறியப்படின் இழுக்கைத் தேடித்தரும் என்பதை உணர்த்துகின்றது. உன்பொருட்டுத் தன்னிலையினின்றும்

தலைவி கீழிறங்கி வருகின்றாள். அவளை விரைவில் மணம்புரிந்து அவளது குடிப்பெருமையைக் காத்தல் நினது கடன் என்ற குறிப்பும் புலப்படுகின்றது.

**முகில் சூழ் மயில் :** முகிலால் சூழப்பட்ட மயில் ஒன்றும் தலைவிக்கு உவமை கூறப்படுகின்றது. களவில் ஈடுபட்டுத் தலைவனைப் பிறர் அறியாவண்ணம் சந்திக்கும் தலைவி தன்னை யாரும் அடையாளம் கண்டுவிடக் கூடாது என்று கூந்தலாலும் ஆடையாலும் தன்னை மறைத்துக் கொண்டு குறியிடத்திற்கு வருகின்றாள். இவ்வாறு வந்து தன்னைக் கண்டு பின் மீளும் தலைவியைப் பின்னிருந்து நோக்குகின்றான் தலைவன். அவளது கூந்தல் மயிலின் தோகையினையும், ஆடை மேகத்தினையும் நினைவு படுத்த முதிராத முகிலால் மறைக்கப் பெற்ற மயிலாக அவளை எண்ணி மகிழ்கின்றான்.

'கார்விரை கமழும் கூந்தல் தூவினை
நுண்நூல் ஆகம் பொருந்தினள் வெற்பின்
இளமழை சூழ்ந்த மடமயில் போல' (அகம். 198: 5-7)

முழுமையாகப் பொருந்தித் தோன்றும் மற்றொரு உவமைஇது.

**மாமயில் :** மயில் அழகு காரணமாகப் பெருமையும் சிறப்பும் அடைவது. இப்பெருமைக்குரிய மயிலைக் களவொழுக்கத்தில் ஈடுபட்டுக் களித்திருக்கும் தலைவிக்கு உவமை கூறுகின்றார் நல்லந்துவனார். களவொழுக்கம் பெருமைக்குரியது, சிறந்தது என்று கூறும் இவர் அக்களவில் ஈடுபட்ட மகளிரும் பெருமைக் குரியோர் என்ற கருத்தில் அவர்களுக்கு மயிலை உவமை கூறுங்கால் 'மா' என்ற பெருமைக்கு உரிய அடையையும் அதனுடன் சேர்த்துக் கூறுகின்றார்.

'மாமயிலன்னார் மறையிற் புணர் மைந்தர்
காமம் களவிட்டுக் கைகொள் கற்புற்றென
மல்லற் புனல் வையை மாமலை விட்டிருத்தல்
இல்லத்து நீதனிச் சேரல் இளிவரல்' (பரி. 11:41-44)

களவின் கண்புணர்தலை உடைய காதலரை உடைய சிறந்த மயில் போன்ற மகளிர் காம இன்பச் சிறப்புமிக்க அக்கள வொழுக்கத்தை விட்டு இழிந்த தன்மையைக் கொண்ட கற்பொழுக்கத்தினை மேற்கொண்டு அக்கணவனுடைய இல்லிற் சென்று அடங்கிக் கிடந்தாற்போல வளமுடைய நீராகிய செல்வப் பெருக்கினை உடைய வையை மகளே நீ நினது பிறந்த இடமாகிய பெரிய

மலையைக் கைவிட்டு நினது கடலாகிய தலைவனது இல்லத்திற்குத் தனியே செல்லுதல் இளிவரல் என்று இவ்வாறு கூறுகிறார். களவின் பெருமை 'மாமயில்' என்று மயிலுக்குக் கொடுக்கப்பட்ட அடையால் பெறப்படுகின்றது.

**வலைப்பட்டமயில் :** அழகுக்குரிய பொருளை இன்னல் சூழ்வதும் இயல்பு. வலை விரிக்கின்றான் வேடன், அவ்வலைக் கண் மயில் அகப்படுகின்றது; தப்ப வழியறியாது தவிக்கின்றது. வலைப்பட்டு வருந்தும் இம்மயிலும் தலைவிக்குப் பொருத்தமான உவமை ஆகின்றது. செவிலி அறியாதவரை தலைவி, தோழி துணை செய்ய பகலிலும் இரவிலும் குறியிடம் சென்று தலைவனுடன் அளவளாவி வருகின்றாள். நாட் செல்லச் செல்ல, தலைவியின் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றம் உணரும் அன்னை உண்மை உணர்ந்து அவளை இற்செறித்து விடுகின்றாள். இந்நிலையில் தலைவி தலைவனைச் சந்திக்கும் வகையறியாது வலைப்பட்ட மயில்போல் இல்லத்திற்குள் அடைபட்டு வருந்துவதாகப் பாடுகின்றார் புலவர்.

'வலையுறு மயிலின் வருந்தினை பெரிதென' (கலி 128:16)

இங்குஇற்செறிப்பு வலையாகின்றது. இற்செறிக்கப்பட்ட பின்பும் பகலில்தான் தலைவனைக் காண இயலவில்லை. இரவில் அன்னை உறங்கிய பின் மெல்ல எழுந்து சென்று தலைவனைக் காணலாம் என எண்ணிக் காத்திருக்கின்றாள் தலைவி. இவளை நன்குணர்ந்த அன்னை இரவில் இவள் அருகே படுத்துக் கொண்டு, சிறிதே அசைந்தாலும் ஆரத்தழுவிக் கொள்ளுகின்றாள். தலைவனை எதிர்நோக்கியிருக்கும் தலைவிக்குத் தாயின் இத்தழுவல் பெருந் துன்பமாகின்றது; சினமும் எழுகின்றது. இந்நிலையில் உச்சிச் சூடு சிதைய, பீலிசாய வலைப்பட்ட மயில் தலைவிக்கு மிகப் பொருத்தமான உவமையாகின்றது.

'ஓரிமுருங்கப் பீலிசாய
நன்மயில் வலைப் பட்டாங்கு யாம்
உயங்கு தொறும் முயங்கும் அறனில்யாயே'

(குறுந். 244:4-6)

**கலாவம் விரித்த மஞ்ஞை:** பொதுவாக மயில் தலைவிக்கு உவமையாகக் கூறப்படும் பொழுது அதற்குக் கொடுக்கப்படும் அடை அல்லது வருணனை தலைவியின் நிலையினை மிகத் தெளிவாகக் காட்டிவிடும். இக்கருத்திற்குச் சிறந்த சான்றாவது பின் வரும் உவமை.

'அணிகிளர் கலாவம் ஐது விரித்து இயலும்
மணிபுரை எருத்தின் மஞ்ஞை போலநின்
வீபெய் கூந்தல் வீசுவளி உளர
ஏகுதி மடந்தை' (நற். 264:3-6)

அழகு மிளிரும் தோகையினை விரித்து ஆடும் நீலமணி போலும் கழுத்தினை உடைய மயிலினைப் போன்று நின் மலரணிந்த கூந்தலைக் காற்று வீசி விரித்து விட நீ நடந்து வா என்று தன்னிடம் தன்னை ஒப்படைத்து, தன்னுடன் நடந்து வரும் தலைவியைப் பார்த்துக் கூறுகின்றான் தலைவன். மனதின் ஒரு பகுதியை இணைவோமோ மாட்டோமோ என்னும் அச்சம் உறுத்திக் கொண்டே இருக்கக் களவில் ஈடுபட்டுத் தற்பொழுது ஊரும் உறவும் அறியா வண்ணம் உடன் போக்கு மேற்கொண்ட வர்கள் இவர்கள். இனித் தங்களை யாரும் பிரித்துவிட முடியாது என்ற எண்ணம் மிகுந்த மகிழ்ச்சியையும், இவ்வாறு இணைந்து விட்டது பெருமையையும் தர தலைவன் இல்லம் நோக்கி மிகுந்த இன்பத்தோடும் எதிர்பார்ப்போடும் செல்பவர்கள். களவுவாழ்வின் முடிவாகக் கற்பு வாழ்வின் தொடக்கமாக அமைவது இது. தலைவன் எவ்வித அச்சமும் ஐயமும் இன்றித் தலைவியைத் தனக்கே உரியவளாக உணருகின்ற அவ்வுணர்வினால் பெருமையும் கொள்கின்ற காலம் ஆகலின் இங்கே மயிலை உவமை கூறும் போது அணிகிளர் கலாவம் ஐது விரித்து இயலும் மணிபுரை எருத்தின் மஞ்ஞை என்று குறிப்பிடுகின்றான். தலைவன் தலைவி உணர்வினை மிக அழகாகக் குறிக்கும் உவமை இது.

**நன்மாமயில்:** நல்ல, சிறப்புமிக்க மயில் போன்றவள் என்று குறிக்கப் பெறுபவள் சூலுற்ற தலைவி. இனிய இல்லறத்தின் சிறப்புக்கு முழுமைக்குச் சான்றாய் அன்றும் இன்றும் கருதப் படுவது நன்மக்கட் பேறு. ஆகலின் சூலுறும் சிறப்புப் பெற்ற தலைவிக்கு உவமை கூறும் போது புலவர் நன்மாமயிலினைக் கூறுகின்றார்.

'ஒண்சுடர் விளக்கம் முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல இயலி
கடுஞ்சூல் மகளிர் பேணிக் கை தொழுது'

(மதுரைக்.607-609)

களவில் ஈடுபட்ட தலைவி மாமயில். அக்களவு கற்பாகமாறி இருவரும் இணைந்து இல்லறத்தில் ஈடுபட்டுக் குழந்தைப் பேற்றிற்குத் தயாராகும் நிலையில் தலைவி நன்மாமயில் ஆகின்றாள்.

எழிலெஞ்சுமயில்: எழிலுடை மயில் எழிலெஞ்சு மயிலாய் நிற்கும் காலமும் உண்டு. ஆண்மயில் பெண்மயில் இரண்டும் இணைந்து மகிழ்ந்ததன்பின் ஆண் மயிலின் தோகையில் உள்ள பீலி உதிர்கின்றது.[4] எழில் தரும் பீலி உதிர மயிலின் அழகு குன்றுகின்றது.

இம்மயிலும் வரைவிடை வைத்துப் பொருள்வயின் தலைவன் பிரிய வருந்தி நிற்கும் தலைவிக்குப் பொருந்திய உவமையாகின்றது. தலைவன் எப்பொழுது வருவான் என்று குறிப்பிட்டுக் கூற முடியாத நிலையில் இரங்கும் தலைவி இவள்; காமம் தெரிதர நாணத்தைத் தன்னிடத்தே நிறுத்த இயலாது வருந்துபவள்; தலைவன் விரைந்து வராவிடின் தன் உயிரே நீங்கி விடுமோ என்றஞ்சுபவள்.

'அரிதே தோழி நாணது நிறுப்பாம் என்றுணர்தல்
பெரிதே காமம் என்னுயிர் தவச்சிறிதே
பலவே யாமம் பையுளு முடைய
சிலவே நம்மோடு உசாவும் அன்றில்
அழலவிர் வயங்கிழை ஒலிப்ப உலமந்து
எழில் எஞ்சு மயிலின் நடுங்கிச் சேக்கையின்
அழலாகின்றது அவர் நக்கதன் பயனே' (கலி. 137 :1-7)

இவ்வுவமை தலைவன் தலைவி கூடல் களவு வாழ்க்கையில் உண்டா என்ற கேள்விக்கு விடை போல் அமைகின்றது. இயற்கையோடு இயைய உவமைகளை அமைத்தல் சங்ககாலப் புலவரின் தனிச்சிறப்பு. இதுவரை காட்டப்பட்ட மயில் தொடர்பான உவமைகளும் இக்கருத்தினை அரண் செய்கின்றன. (இற்செறிக்கப்பட்ட தலைவி—வலைப்பட்ட மயில்; களவு வாழ்க்கை மேற்கொண்ட தலைவி—மாமயில்; சூலுற்ற தலைவி—நன்மாமயில்.) இங்கு வரைவிடை வைத்துப் பொருள்வயின் தலைவன் பிரிய வருந்தி நிற்கும் தலைவிக்குப் பீலி உதிர்ந்த, 'எழிலெஞ்சு மயிலை' உவமை கூறியிருப்பதனால் தலைவன் தலைவி கூடல் களவு வாழ்க்கையில் உண்டு எனத் தெளியலாம். புலவர் இவ்வாறு பெடை மயிலைச் சுட்டுகிறாரோ என்ற ஐயம் எழலாம்; ஆனால் பெடை மயிலை உவமை கூறுகின்றபோது (பொதுவாக ஆண்மயிலை உவமை கூறுகின்றமையின்) தெளிவாகப் பெடை மயில் என்றே சுட்டுகின்றனர் (பொருந: 4; ஐங். 62: 2, கலி. 56;14) ஆகலின்

4. வி. எஸ். வி.இராகவன்; பிளினி(கி.பி. 23-79); மணிவாசகர் நூலகம்; சிதம்பரம்; நவ. 1977; ப. 320.

பெடை மயிலன்று இங்குக் குறிப்பிடப் படுவது. மேலும் பெடை மயிலினும் பீலி உதிர்ந்த ஆண் மயிலே இங்குப் பொருத்தமாக அமைகின்றது. உரையாசிரியரும் பீலி உதிர்ந்த மயில் என்றே குறிப்பிடுகின்றார்.[5]

**ஏவுறு மஞ்ஞை:** வலைப்படல் போல் அம்பினால் அலைக்கப் படும் அவலமும் மயிலுக்கு ஏற்படலுண்டு. இவ்வவலம் தலைவிக்கு ஏற்படாதெனினும் தலைவனுக்கு ஏற்படல் உண்டு. தலைவியும் தலைவனும் ஓருயிர் ஈருடலாய் வாழ்பவர் ஆதலின் போர்வயின் தலைவன் செல்லப் பிரிந்திருக்கும் தலைவிக்கு இவ்வுவமை கூறப்படுகின்றது.

'ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து' (முல்லைப்:84) தலைவன் உடலில் அம்பு தைத்துவிடுமோ என்ற எண்ணமே தன்னுடலில் அம்பு தைத்தாற் போன்ற துன்பத்தைத்தர அவள் அம்புபட்ட மயில் போல் நடுங்குவதாகக் கூறுகின்றார்.

**பெடைமயில்:** அழகு கொஞ்சும் ஆண்மயில் தலைவியின் பல நிலைகளுக்கும் உவமையாக, அதனினும் சற்றே அழகு குறைந்து விளங்கும் பெடை மயிலும் தலைவிக்கு உவமை கூறப்பட்டுள்ளது. பரத்தையை நாடித் தலைவன் பிரிய வருந்தி நிற்கின்றாள் தலைவி. உள்ளத்தின் வருத்தம் உடலை வாட்ட அழகு குன்றுகிறது. அழகுடன் விளங்கும் தலைவிக்கு ஆண்மயிலை உவமை கூறல் பொருத்தமே; அழகு குன்றிய நிலையில் ஏன் ஆண் மயிலை உவமை கூறவேண்டும் என்று எண்ணினார் போலும் புலவர். பரத்தையிடம் தலைவனை இழந்து தவிக்கும் தலைவிக்குப் பெடை மயிலைக் கூறுகின்றார்.

'இந்திர விழவிற் பூவினன்ன
புன்றலைப் பேடை வரிநிழலகவும்' (ஐங். 62: 1-2)

(இப்பாடலில் நேரடியாகத் தலைவிக்கு மயில் உவமமாகக் கூறப் படவில்லை எனினும் பெடைமயிலாகத் தலைவியே குறிக்கப் பெறுகின்றாள்.) பரத்தை தலைவனின் கண்களுக்கு ஆண் மயில் போலத் தலைவியினும் அழகாகத் தோன்றியதனாற் போலும் தலைவிக்குப் பெடை மயிலை உவமை கூறுகின்றார். இவ்வுவமையும் பொருத்தமானதாக அமைகின்றது.

---

5. கலித்தொகை; நச்சினார்க்கினியர் உரையும் பொ. வே. சோமசுந்தரனார் விளக்கமும்; கழகம்; திருநெல்வேலி; 1970

களவு, கற்பு என்ற வாழ்க்கையின் இருநிலைகளின் ஒவ்வொரு படியிலும் இவ்வாறாக மயில் தலைவிக்கு மிகப்பொருந்திய உவமமாய் அமைந்து அவளின் சூழலையும் மனநிலையையும் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றது.

**மயிலும் ஆயமும்**: மயில் தலைவிக்கு மட்டுமன்றித் தலைவியைச் சூழ்ந்து நிற்கும் ஆயத்திற்கும் சாயல் காரணமாக உவமையாகின்றது. தவிர தலைவனுடன் தலைவி உடன் சென்றுவிடப் பிரிவினால் வருந்தும் இம்மெல்லியலார்க்குத் தன் மென்மையினாலும் சிறந்த உவமையாய் மயில் பொருந்தி நிற்கின்றது.

'ஒண்டொடி செறித்த முன்கை ஊழ் கொள்பு
மங்கையர் பல பாராட்டச் செந்தார்க்
கிள்ளையும் தீம்பால் உண்ணா மயிலியல்
சேயிழை மகளிர் ஆயமும் அயரா' (அகம். 369: 2-5)

**மயிலும் பரத்தையும்** : மயில் அக இலக்கியங்களில் பரத்தைக்கும் உவமையாக வருகின்றது. தலைவி வாயிலாகவே பரத்தையரை மயிலியலார் என்கிறார் ஒரு புலவர்.

'துயிலின்றி யாம் நீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகுவான் மன்னோ'
(கலி. 30:5-8)

தன்னைத் தனியாகத் தவித்திருக்க விட்டுத் தலைவன் பரத்தையருடன் இன்பமாய் இரவைக் கழிப்பது தலைவிக்கு வருத்தத்தையும் வெறுப்பையும் தருகிறது. பரத்தையரை மயிலியலார் என்று நாகரிகமாகக் குறிப்பினும் எள்ளலும் தன்னிரக்கமும் இத்துடன் இணைந்து தோன்றுகின்றன.

இவ்வாறாக மயில் முதல் நிலையில் சாயலால், நடையால், மென்மையால், சூழலால், மனநிலையால் விறலி, பாடினி தலைவி, ஆயம், பரத்தை ஆகிய அனைவருக்கும் பொருந்திய உவமையாய் அமைகின்றது.

**மயிலின் நிறம்**: பசுமையும் கருமையும் கலந்த நீல நிறத்தில் காணப்படும் மயிலின் கழுத்து நிறம் மகளிர்க்கும், நீலமணிக்கும் காயாம் பூவிற்கும் உவமையாக இடம் பெற்றுள்ளது.

நீல நிறமுடைய திருமால் மாயோன் என்று கூறப்பட்டது போன்று மாமை அல்லது நீலநிற முடைய பெண் மாயோள் என்றழைக்கப் பட்டிருக்கின்றாள். இவளுக்கு மயிலின் கழுத்து நிறத்தை உவமை கூறுகின்றனர் புலவர்.

'மயில் எருத்து வண்ணத்து மாயோய் (கலி. 108; 38)

முல்லை நிலத்தலைவி இவள். நீல நிறம் பெண்ணுக்குக் கண் கவர் நிறமாய் அக்காலத்து கருதப்பட்டமை இவ்வுவமையால் அறியப்படும்.

நீலநிற மணிக்கும் மயிலின் கழுத்து நிறம் உவமை கூறப் பட்டுள்ளது. நிறத்தில் மட்டுமன்றி ஒளியினாலும் இது பொருத்த மான உவமை எனலாம்.

'மயிலெருத்துறழ் அணி மணி நிலத்துப் பிறழ (கலி. 103: 59)

முல்லை நிலத்தில் அந்நிலத்திற்குரிய கார் காலத்து மலரும் காயாம் பூவிற்கும்,

'புல்லென் காயா பூக்கெழு பெருஞ்சினை
மென் மயில் எருத்தில் தோன்றும்' (குறுந். 183: 5—6)

'கருநனைக் காயாக்கணமயில் அவிழவும்' (சிறுபாண். 165)

என முல்லை நிலப்பறவையாகிய மயிலின் கழுத்து நிறம் உவமை கூறப்படுகின்றது. மிகுதியாக மலர்ந்திருப்பது கணமயில் என்று குறிக்கப்படுகின்றது.

**உறுப்புநிலை**

மயிலின் உச்சிச்சூடு, தோகை, பீலி, பீலிக்கண், முருந்து, அடி, ஆகியவை உறுப்பு நிலையில் உவமைகளாகின்றன என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது.

**உச்சிச்சூடு :**

ஆண்மயில், பெண்மயில் இரண்டும் உச்சிச்சூடு உடையன. இது குடுமி என்றும் அழைக்கப் பெறுவதுண்டு. இக்குடுமி வாகைப் பூவிற்கு உவமையாகின்றது.

'மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகை குடுமியின் தோன்றும்
கானம்' '(குறுந். 347 : 1—4)

தலைவன் வறண்டு கிடக்கும் பாலை நில வழிப் பொருள் பொருட்டுச் செல்ல விழைகின்றான். அவ்வழி பற்றிக் கூறும் பொழுது அங்கு இளவாகை மரத்தினது மணம் நிறைந்த பூக்கள் மடப்பம் உடைய மயிலினது உச்சிச் சூட்டினைப் போன்று தோன்றும். தலைவி வரின் அவ்வழியே செல்லலாம் என்கிறான்.

கான் வழியின் வறட்சியினைப் புலப்படுத்த வாகை மலர்கள் மலர்ந்துள்ளமையைக் கூறுகின்றான். வாகைப்பூ மயிலின் உச்சிச் சூட்டினை நினைவு படுத்தும். அது மயிலையும் மயில் தலைவியை யும் நினைவு படுத்தும். ஆகலின் தலைவி வந்தாலன்றி அவ்வழிச் செல்ல இயலாது என்று செலவழுங்குகின்றான். இங்கு இவ் வுவமை தலைவியைக் குறிப்பாக உணர்த்துகின்றது. இவ் வெம்மையில் வாகை மலரலாம். ஆனால் தலைவி தாங்க மாட்டாள் என்ற குறிப்பும் உண்டு.

**தோகை :**

மயில் அதிலும் ஆண்மயில் பெண்ணுக்கு உவமையாதற்கு முதற் காரணமாய் விளங்குவது அதன் தோகை. பெண்ணுக்கு மயில் உவமையாக, அவள் கூந்தலுக்குத் தோகை உவமை யாகின்றது. விரிந்த நிலை, குவிந்த நிலை என இருநிலைகளிலும் பெண்ணின் கூந்தலுக்குத் தோகை உவமையாக உரைக்கப் படுகின்றது. இந்நிலைகள் தலைவியின் மன நிலையினைப் புலப் படுத்தப் புலவர்க்குப் பயன்படுகின்றன.

**விரிந்தநிலை :**

'வணர்சுரி ஐம்பால்..............
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில்
களிமயில் கலாவத் தன்ன' (அகம். 152: 3, 12—14)

இங்குக் குறிக்கப்படும் கூந்தலுக்குரிய தலைவி இரவுக் குறிக்கண் தலைவனுடன் இணைந்து இன்பம் காணும் தலைவி. எனவே அவள் கூந்தலுக்கு உவமையாவது களிக்கும் மயிலின் விரிந்த கலாவம். அம்மயிலும் முத்தாரம் பூண்ட நன்னன் என்னும் வள்ளற் பெருமானுக்குரிய ஏழில் என்னும் மலையின் பக்க மலை யாகிய பாழி மலையில் வாழ்வது. மயிலுக்குக் கொடுக்கப்படும் இந்நீண்ட அடை தலைவியின் உயர்வினைப் புலப்படுத்தக் காணலாம்.

**குவிந்த நிலை :**

'கலி மயிற் கலாவங் கால் குவித்தன்ன
ஒலி மென் கூந்தல்' (புறம். 146: 8—9)

இவ்வடிகளில் குறிக்கப்படும் கூந்தலுக்குரிய தலைவி, தலைவன் பரத்தை வழிப்பிரியக் கலங்கி நிற்பவள். நீண்ட கூந்தலள் எனினும் தலைவன் பிரிவு காரணமாகப் பேணப் படாத

கூந்தலள். இந்நிலையில் கால் குவித்த கலாவம் இவளது துயருற்றுக் கூம்பிய மனத்தினைத் தெளிவாகக் காட்டுகிறது.

**பீலி :**

மயிலின் பீலியும் நீல நிறமுடையது. இடையே கண் போன்ற அமைப்புக் கொண்டது. இது கண் போன்று மலர்ந்துள்ள கரிய கருவிளை மலருக்கு உவமை கூறப்படுகின்றது. குளிர்ந்த புனத்தில் மலர்ந்துள்ள இம்மலர் வாடைக் காற்று வீச ஆடுவது மயிலின் பீலி ஆடுவது போன்றுள்ளது என்கிறார் புலவர்.

'தண்புனக் கருவிளைக் கண் போல் மா மலர்
ஆடு மயில் பீலியின் வாடையொடு துயல் வர'
(நற். 262: 1—2)

**பீலிக்கண் :**

மயிற் பீலியில் அமைந்துள்ள கண்ணும் உவமையாகின்றது. பரதவர் மடமகளின் மயிர் முடிக்கு இதனை உவமை கூறுகின்றார் ஆரிய அரசன் யாழ்ப்பிரம தத்தன்.

'மயிற்கண் அன்ன மாண் முடிப்பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்' (குறுந். 184: 5—6)

**முருந்து :**

மயிற் பீலியின் அடி முருந்தும் கூட உவமையாகும் சிறப்புப் பெறுகின்றது. சங்கப் புலவரின் நுண்ணிய நோக்கிற்கு இது ஒரு சான்று. பல்லிற்கு இம்முருந்து உவமையாகின்றது.

'சுரஞ்செல விரும்பினராயின் இன்னகை
முருந்தெனத் திரண்ட முள்ளெயிற்றுத் துவர்வாய்க்
குவளை நாண்மலர் புரையும் உண்கண் இம்
மதியேர் வாணுதல் புலம்பப்
பதி பெயர்ந் துறைதல் ஒல்லுமோ நுமக்கே
(அகம். 177: 10—14)

தலைவன் பொருள்வயின் பிரிய எண்ணுவதை அறிந்த தோழி, தலைவியினுடைய, மயிலின் முருந்து போலத் திரண்ட முள் போலும் கூர்த்த பற்களை உடைய சிவந்த பவளம் போன்ற வாயினை நினைவூட்டுகின்றாள். நீ அவளைப் பிரிந்தால் இப் புன்னகை குடி கொண்டுள்ள வாயில் புலம்பல் குடி கொள்ளும் என அறிவுறுத்துகின்றாள். புன்னகை புரியும் வாயின் எயிற்றுக்கு ஏற்ற உவமையாய் முருந்து அமைகின்றது. முருந்து போன்று முறுவல் பூக்கும் தலைவியைத் துறந்து பொருள் வயின் செல்லல் அரிது என வேறு ஒரு தலைவனும் உரைக்கின்றான்.

'சுரம் நமக்கெளிய மன்னே நன்மனைப்
பன் மாண் தங்கிய சாயல் இன்மொழி
முருந்தேர் முறுவல் இளையோள்
பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே
(அகம். 193: 11—14)

அடி :

மயிலின் அடியின் கண் அமைந்த விரல்களும் உள்ளங்காலும் போன்று அமைந்திருப்பது நொச்சியின் இலை. ஆகலின் கருநிற முடைய இந்நொச்சியின் இலைக்கு மயிலினது அடியினைப் புலவர் உவமை கூறியிருக்கின்றனர்.

'மயிலடி இலைய மாக்குரல் நொச்சி' (நற். 115: 5)

'மயிலடியன்ன மாக்குரல் நொச்சியும் '(நற். 305: 2)

இவ்வாறாக மயிலின் உச்சிச்சூடு முதலாக அடிவரை பல உறுப்புகள் உவமையாகின்றன. மேற்கண்டவற்றை நோக்கப் பின்வருவனவற்றை அறியலாம்.

அணிகளில் உவமை அணியில் மயில் மிகுதியாகப் பயின்று வருகின்றது.

முதல், உறுப்பு என்ற இருநிலைகளிலும் மயில் உவம மாகின்றது.

முதல் நிலையில் சாயல், நடை இரண்டாலும் மயில் மகளிர்க்கு உவமையாகக் கூறப்படுகின்றது. விறலி; பாடினி, மனைவி, தலைவி, ஆயத்தார், பரத்தை ஆகியோர் மயிலாகக் கூறப்படுகின்றனர். இலக்கியங்களில் இடம் பெறும் குறிப்பிட்ட மாந்தர்க்கு மட்டுமின்றிப் பொதுவாகவும் மகளிர்க்கு மயில் உவமையாகின்றது.

இவர்களில் தலைவிக்கு மயில் உவமையாக வருவதுதான் பெரும்பான்மை. இதற்கு அதன் நடையும் சாயலும் மட்டும் காரணமன்று. களவு, கற்பு என்ற இரு நிலைகளிலும் தலைவனுடன் இணைந்திருக்கும், தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு உவமையாகக் கூறப்படும் மயில் அவளின் நிலையினை, பண்பினை, மன உணர்வினைச் சுருக்கமாகச் சுவைபட வெளிப் படுத்த உதவியுள்ளது. வலையால் பிடிக்கப்படுவது, அம்பினால் எய்யப்படுவது, கார் காலத்துத் தன் துணையினைத் தேடி அகவுவது போன்ற செயல்களால் மயில் இங்குத் தலைவியின் அவல நிலையினை உணர்த்த மிகப் பொருத்தமான உவமை

யாகின்றது. இவ்வகையில் மயில் பிற பறவைகள் பெறாத தனிச் சிறப்பினைப் பெறுகின்றது. ஏனெனில் சங்க இலக்கியங்களில் பெரும்பாலானவை அக இலக்கியங்கள். அவ்வக இலக்கியங்களில் முதலிடம் பெறும் பாத்திரம் தலைவி; அத்தலைவிக்கு உவமையாகி அவளின் இன்பதுன்ப உணர்வுகளை வெளியிட இம்மயில் மிகச் சிறந்த கருவியாகின்றது. உவமை, 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' (தொல். பொருள்: 274) என்ற தொல்காப்பியர் கருத்திற்கும் இது பொருந்தி அமைகின்றது.

உறுப்பு நிலையில் கேசாதிபாதம் என்று சொல்வதற்கேற்ப மயிலின் உச்சிச் சூட்டிலிருந்து அடிவரை உவமையாகின்றன. மயில் இத்துணையளவு சிறப்புப் பெறுவதற்குக் காரணமான தோகை, உறுப்புக்களில் மிகுதியாக உவமமாவது. இனி மகளிரின் கூந்தலுக்கு உவமையாகக் கூறப்படுவது. விரிந்த தோகை தலைவனுடன் இணைந்து இன்புற்றிருக்கும் தலைவியின் கூந்தலுக்கும், குவிந்த தோகை அவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் கூந்தலுக்கும் உவமையாகி இத்தோகையும் தலைவியின் நிலையை, உணர்வினை உணர்த்தப் புலவருக்குப் பயன் பட்டிருக்கின்றது. தோகை முழுமையாகவும், அதன் பீலி, பீலிக் கண், முருந்து என்று பகுதி பகுதியாகவும் கூட உவமையாகியுள்ளது.

சுருங்கக் கூறின் மயிலானது மகளிரின் வடிவை, வனப்பை, பண்பை, சூழலை, மன நிலையை விளக்கப் புலவர்க்குக் கிடைத்த மிகச் சிறந்த கருப்பொருள்.

## மயிலும் உள்ளுறை உவமமும்

சங்க இலக்கியங்கள் உள்ளுந்தொறும் உவகை பயப்பதற்கு முதற்காரணமாய் அமைவது உள்ளுறைஉவமம். கருத்தினை வெளிப்படச் சொல்ல விரும்பாமல் அல்லது இயலாமல் கேட்போர் மட்டும் அல்லது கேட்போரில் ஒரு சாரார் மட்டும் குறிப்பாகப் பொருள் உணர்ந்து கொள்ளும்படிக் கூற விரும்புவோர்க்குக் கை கொடுப்பது இது இவ்வுள்ளுறை உவமம் கருப்பொருள்களுள் தெய்வம் தவிர ஏனையவற்றை நிலைக்களமாகக் கொண்டு அமைவது,[6] தெளிவாகப் பொருள் உவமை என வேறுபடுத்திக் காணும் வகையில் அமைவது.

---

6. 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக் கொள்ளும் என்ப குறி அறிந்தோரே' (தொல் : பொருள் 50)

நீண்ட வருணனைகள் இவ்வுள்ளுறை உவமத்தின் உறைவிடம் எனினும் குறுகிய வருணனைகளிலும் காணப்படுவது உண்டு. உருவகத்தோடும் இது தொடர்புடையது; தற்குறிப்பேற்றமாகவும் அமைவது.

ஒரு செய்தியை மற்றவர்க்கு எடுத்துரைத்தல் என்ற நிலையில் உள்ளுறையால் உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அதாவது மெய்ப்பாடுகள், புறத்தோற்ற மாறுபாடுகள் இவற்றைச் சுட்டுதல் வழி மனநிலையில் ஏற்பட்ட மாற்றம் உணர்த்தப்படுகின்றது. இங்குக் கருப்பொருட்கள் உவமப் பொருட்கள் என்ற நிலையில் செயல்படுகின்றன.[7]

இவ்வுள்ளுறை உவமம் தோழி, தலைவி, தலைவன் கூற்றில் பெரும்பான்மை பயன்படுத்தப்படும். பிறர் கூற்றிலும் இது அமையலாம்.

தம் உள்ளக்குறிப்பைச் சுட்ட விரும்பும் மன உந்தல் உள்ளுறையைப் பயன்படுத்தும் அக மாந்தர்க்கு இருத்தலின் கேட்போர் இருக்கும்போதே உள்ளுறை பயன்படுத்தப்படுகின்றது.[8]

உலக வழக்கில் பயன்படுத்தப்படும் குறிப்பு மொழியின் வளர்ச்சி அகப்பாடல்களில் கையாளப்படும் உள்ளுறை எனலாம்.

களவைப் பிறரிடம் வெளிப்படுத்தும் போதும், தலைவனிடம் வரைவு வேண்டும் போதும் வரைந்தபின் தலைவன் பரத்தை வழிப் பிரியும்போதும் தலைவி தோழியரால் உள்ளுறை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. ஏனெனில் இவையிரண்டும் தான் கருத்தை வெளிப்படுத்தற்குச் சிக்கலாய் அமையும் அகப்பொருட் பகுதிகள். இவை முறையே குறிஞ்சி, மருதம் இரண்டிற்கும் உரிய உரிப்பொருள் பகுதிகள் ஆகலின் இவ்விரு திணைகளில் உள்ளுறை உவமம் மிகுதியாகக் காணப்படுகின்றது.

குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளாக மயில் அமைகின்றமையின் மயில் தொடர்பான உள்ளுறை உவமங்கள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. பரத்தையிற் பிரிவு நிலைக்

---

7. இரா. தமிழரசி; சங்க இலக்கிய உத்திகள்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை; 1981 (முனைவர் பட்டத்திற்கான வெளியிடப்படாத ஆய்வேடு)
8. ஆ. இராமகிருட்டிணன்; அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு; சர்வோதய இலக்கியப் பண்ணை; மதுரை 1982; ப. 227

களனாக அமையும் உள்ளுறை உவமங்களிலும் சில மயில் தொடர்பானவையாய் அமைந்துள்ளன.

அறத்தொடு நிற்றல், வரைவு கடாதல், பிரிந்த தலைவி ஆற்றாமையினால் அரற்றல், தலைவன் பரத்தை வழிப் பிரிதல் ஆகிய இடங்களில் தோழி, தலைவி, ஆகியோரால் இவ்வுள்ளுறை உவமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வுள்ளுறைகளில் தலைவன், தலைவி, தோழி, தமர் ஆகியோர் மயிலாய்க் குறிக்கப் பெறுகின்றனர்.

வேங்கை மரத்தின் மீதமர்ந்த மயிலும், வேங்கைத் தாதாடி மயிலும் மிகுதியாக உள்ளுறை உரைக்கும் சிறப்புப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**வேங்கை மீதமர்ந்த மயில்**

வேங்கை மரம் மயில் விரும்பி உறையும் மரமாகல் வேண்டும். பல பாடல்களில் புலவர் மயிலை வேங்கை மரத்தின் மீதமர்ந்திருப்பதாகவே பாடியிருக்கின்றனர்.

'நன்னாள் பூத்த நாகிளம் வேங்கை
நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை' (அகம். 85 : 10-11)

அவற்றில் சில உள்ளுறைப் பொருளும் உரைக்கின்றன.

தலைவனும் தலைவியும் நட்புக் கொள்கின்றனர். தோழியின் துணையுடன் பகற்குறியிலும் இரவுக் குறியிலும் இணைகின்றனர். தலைவியின் போக்கில் வேறுபாடு உணரும் செவிலி உண்மைக் காரணம் உணராதவளாய்க் கட்டுவிச்சியை அழைக்கின்றாள். நிலைமை எல்லைமீறிப் போவதை உணரும் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்க,

'அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்' (குறுந். 26 : 13)

என்று தலைவனது நாட்டைக் குறிப்பிடுகின்றாள். மலர்ந்த வேங்கையின் கிளை மீதமர்ந்த மயில் பூக்கொய்யும் மகளிரைப் போலத் தோன்றுகின்ற நாட்டினன் என்பதனால், நோய்க்குக் காரணமான ஒரு தலைவன் இருக்க, வேலன் கட்டுவிச்சிக்கு நோய்க் காரணனாகத் தோன்றுகின்றான்; அத்தலைவனை மணந்தால் நோய் உடன் தீரும் என்று உணர்த்துகின்றாள். தோற்றம் வேறு, உண்மை வேறு என்பதை, வேலன் காரணம்

அன்று; தலைவனே காரணம் என்பதை மயில் மகளிரைப் போல் தோன்றும் என்ற உவமையால் விளக்குகின்றாள். இப்பாடலில் வேங்கை மரத்தின் மீதமர்ந்துள்ள மயில் தலைவனாகவும், வேலன் பூக்கொய் மகளிராகவும் காட்டப்படுகின்றனர்.

மேற்கண்ட உள்ளுறையில் தலைவன் மயிலாகக் குறிக்கப்படப் பின்வருவதில் தலைவி மயிலாகக் குறிக்கப்படுகின்றாள்.

தலைவன் தலைவி இருவரும் மணம் முடித்து இல்லறத்தில் ஈடுபட்டு இன்பம் அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தோழி, தலைவனிடம் இனியும் பகற்குறியிலும் இரவுக் குறியிலும் தலைவியைச் சந்திப்பது இன்னலில் முடியும். ஆகவின் விரைவிற் சென்று பொருளீட்டி வந்து தலைவியை மணம் முடித்துக் கொள்ளும்படிக் கூறுகின்றாள். தலைவனும் உடன்பட்டுப் பொருளீட்டித் தலைவியை மணத்தற் பொருட்டு வருகின்றான். மணவினைகள் நடைபெறுகின்றன. தலைவியின் கூந்தலில் தலைவன் மலரணிகின்றான். தலைவன் வரைவானோ? வரையானோ? தலைவியின் தமர் உடன்படுவரோ? மறுப்பரோ? மறுப்பின் தலைவியின் நிலை யாதாம்? என்று பலவாறு எண்ணி இடர்ப்பட்டிருந்த தோழி இடர் நீங்கி இன்பம் பொங்கத் தலைவனை வாழ்த்துகின்றாள்.

எரிமருள் வேங்கை யிருந்த தோகை
இழையணி மடந்தையின் தோன்று நாட
இனிது செய்தனையால் நுந்தை வாழியர்
நன்மனை வதுவை அயர இவள்
பின்னிருங் கூந்தல் மலரணிந்தோயே (ஐங். 294)

எரிமருள் வேங்கை செல்வச் சிறப்புடன் கூடிய தலைவன்; அழகு மயில் தலைவி; அம்மயில் வேங்கை மலரால் அணிகள் அணிந்த பெண் போல் பொலிவு பெற்றிருப்பது அழகு நிறைந்த தலைவி தனக்குரிய தலைவனை அடைந்த அம்மகிழ்ச்சியால் பொலி பெற்றிருத்தற்கு உள்ளுறையாகும்.

**வேங்கைத் தாதாடிய மயில்**

களவின்பம் கள்போல் களிப்புறச் செய்ய வரைதலில் கருத்தின்றி இருக்கிறான் தலைவன். தாயோ தலைவிபால் தோன்றியுள்ள வேறுபாடுகளை நுண்ணிதின் ஆய்ந்தறிந்து வெறியாட்டு நடத்த விழைகின்றாள். இந்நிலையில் ஒருநாள்

தலைவன் குறியிடத்து வந்து நிற்றலை அறிந்தும் அறியாதவள் போல அவன் கேட்கும்படித் தலைவியிடம் சொல்லாடுகின்றாள் தோழி. அக்காலை,

அரும்பு முதிர் வேங்கை அலங்கல் மென்சினைச்
சுரும்பு வாய் திறந்த பொன்புரை நுண்தாது
மணிமருள் கலவத் துறைப்ப அணிமிக்கு
அவிர்பொறி மஞ்ஞை யாடுஞ் சோலை (அகம். 242 : 1-4)

எனக் குறிப்பிடுகின்றாள், வேங்கை அரும்புகள் மலர்ந்து வண்டு கள் கிண்ட, உதிர்ந்த நுண் தாதுக்களினால் நீலமணி போலும் தோகை நிறம் மாறுகின்றது. அதுபோன்று நின்னைக் கூடிய தலைவியின் மேனி பொலிவுற்றுமாறுபாடு எய்தியது. அம்மாறுபாடு தாயால் உணரப்பட்டமையின் வெறியாட்டு எடுக்க முனை கின்றாள். ஆகலின் விரைந்து நீ அவளை வரைந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகின்றாள் தோழி. வரைவு கடாதற்கு வேங்கை நுண் தாது ஆடிய மயில் இங்குப் பயன் பட்டுள்ளமை புலனாகின்றது.

இதே சூழலைத் துணையாகக் கொண்டு மற்றொரு பாடலிலும் தோழி தலைவனிடத்து வரைவு வேண்டுகின்றாள். சிறைப்புறமாக வந்து நிற்கின்றான் தலைவன். தலைவிக்குக் கூறுவது போல் அவனுக்கு உணர்த்துகின்றாள் தோழி.

'வங்கூழ் ஆட்டிய அங்குழை வேங்கை
நன்பொன் அன்ன நறுந்தாது உதிரக்
காமர்பீலி ஆய்மயில் தோகை
வேறுவேறு இனத்த வரைவாழ் வருடைக்
கோடு முற்றிளந்தகர்ப் பாடு விறந்தயல
ஆடுகள வயிரின் இனிய ஆலி
பசும்புற மென்சீர் ஒசிய விசும்புகந்து
இருங்கண் ஆடமைத் தயங்க இருக்கும்
பெருங்கல் நாடன் (அகம் 378 : 3-11)

காற்றசைக்க வேங்கை நறுந்தாது உதிர, நோக்குவது போல் தோன்றும் பீலியை உடைய மயில் அழகு பெறுகிறது. அம்மயில் மலையாட்டின் முழக்கம் கேட்டு அஞ்சி ஊது கொம்பு போன்று இனிமையாக ஒலித்துப் பறந்து சென்று மூங்கிலில் தங்குகின்றது. அம்மலையின் தலைவன் என்று தலைவனைக் குறிப்பிடுகின்றாள் தோழி. இப்பாடலிலும் மயில் தலைவியைக் குறிக்கின்றது. மயில் பல்வேறு இனமான மலையாட்டிற்கு அஞ்சுவது தலைவி, தாய்,

தந்தை, தமர், ஊரார் என்று பலருக்கு அஞ்சி நிற்பதைச் சுட்டும். வேங்கைத் தாதாடிய மயில் பறந்து சென்று மூங்கிலை அடைந்தது போன்று களவு வாழ்க்கையால் பொலிவு பெற்ற தலைவி பிறரால் அக்களவிற்கு ஏதம் நேரும் முன் தலைவனை மணந்து கற்பு வாழ்க்கையில் ஈடுபட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. இங்கு வேங்கை மரம் களவுக்கும் மூங்கில் கற்பிற்கும் குறியீடாக நிற்பதையும் உணரலாம். வேங்கை மலர் உதிர்தலால் மலை மணம் பெற்றது எனக் கூறும் முகத்தான் இப்பாடலில் புலவர் தலைவியின் திருமணத்தால் இல்லமும் பெருமை அடைய வேண்டும் என்பதனையும் உணர்த்துகின்றார்.

மேற்கூறிய இவ்வுள்ளுறையினை உரையாசிரியர் (கழகம்) இறைச்சி எனச் சுட்டுகிறார். தோழி கூற்றாய் நீண்ட வருணனையொடு தலைவனது குன்றத்தினை விளக்கித் தெளிவாகப் பொருள் உவமை என வேறுபடுத்திக் காணும் வகையில் அமைந்திருக்கின்றமையின் இதை உள்ளுறை என்றுரைத்தல் பொருந்தும்.

வேங்கைத் தாதாடிய தோகை மயில் தன்பெடைகளுடன் இளம் வெயில் உண்ணலை உரைத்து வரைவு கடாவும் உள்ளுறையும் நற்றிணையில் காணப்படுகின்றது. தலைவியின் பொருட்டுத் தலைவனை விரைந்து மணங்கொள்ளும்படி வேண்டுபவள் தோழியாகலின் இதுவும் தோழிகூற்றாக அமைந்துள்ளது.

'வேங்கை தந்த வெற்பு அணி நன்னாள்
பொன்னின் அன்ன பூஞ்சினை துழைஇக்
கமழ்தாது ஆடிய கவின்பெறு தோகை
பாசறை மீமிசைக் கணங்கொள்பு ஞாயிற்று,
உறுகதிர் இளவெயில் உண்ணும் நாடன் (நற். 396:3-7)

இங்கு வேங்கை மலர்ந்து மணம் பரப்பி மலையும் அழகு பெற்றிருப்பதோடு வேங்கைத் தாது ஆடிப் பொலிவு பெற்ற தோகையுடைய மயில் தன் இனத்தோடு கூட்டமாகப் பாறையின் மீதமர்ந்து இளவெயில் உண்ணும் என்று கூறியிருப்பதன் மூலமாகத் தலைவியிடம் இதுவரை களவின்பம் துய்த்த நீ இனி உற்றார் ஊரார் முன்னிலையில் அவளை மணம் கொண்டு இல்லறத்தில் ஈடுபட வேண்டும் என்பதனை உணர்த்துகின்றாள் தோழி. தாதாடல் களவின்பம் நுகர்தலையும் இளவெயில் உண்ணல் இல்லறக் கடமைகளை மேற்கொள்ளுதலையும் குறிக்கின்றன. வேங்கை மலர்ந்து வெற்பு அழகு பெறுவதுபோல்

நீ மணம் முடிப்பதால் நின் குடியும் பெருமையும் பூரிப்பும் அடைய வேண்டும் என்பதும் இங்கு உணர்த்தப்படுகின்றது. இப்பாடலில் தலைவன், தலைவி, தமர் ஆகிய அனைவரும் மயிலாகக் குறிக்கப் படுகின்றனர்.

மேற்கண்ட பாடல்களை நோக்க மயில் வேங்கைத் தாதாடல் தலைவன் களவின்பம் துய்த்தலுக்குக் குறியீடாக நிற்றல் புலப்படும்.

**வேங்கைப் பூங்கொத்து**

வேங்கை மரத்தோடு, மலரோடு, மயில் தொடர்புடைய பிற உள்ளுறை உவமங்களும் சங்கஇலக்கியங்களில் காணப்படுகின்றன.

தலைவன் தலைவியின் களவொழுக்கம் ஊராரால் அறியப் படுகின்றது. இதனைத் தலைவனுக்கு அறிவித்து வரைவுகடாவ முயலுகின்றாள் தோழி. தலைவியைக் காண வருங்காலை அவன் வரவை அறிந்தும் அறியாள் போலத் தலைவியிடம்,

'கோடிணர் கஞலிய
குறும்பொறை அயலது நெடுந்தாள் வேங்கை
மடமயிற் குடுமியின் தோன்றும் நாடன்' (அகம். 368:5-7)

குன்று அருகே இல்லாது அயலே இருப்பினும் தொலைவிலிருந்து பார்ப்போருக்கு வேங்கை மரத்தின் பூங்கொத்து நிரம்பிய கிளை மயிலினது குடுமி போல் தோன்றும் நாட்டின் தலைவன் என்று கூறும் முகமாகப் பிறரிடமிருந்து மறைக்கப்பட்டதாக எண்ணிய களவு வாழ்வு ஊராரால் அறியப்பட்டதைப் புலப்படுத்துகின்றாள் தோழி. எனவே இனியும் களவினை நீட்டிக்காது விரைவில் வரைவதே நன்று என்று தலைவனுக்கு உணர்த்துகின்றாள். மயில் குன்றுக்கும் அதன் உச்சிச்சூடு வேங்கைப் பூங்கொத்துக்கும் உவமையாய் நின்று தலைவன் தலைவி இருவரையும் சுட்டி இரண் டிற்கும் உள்ள தொடர்பு இருவரும் கொண்ட கேண்மையை உணர்த்தி நிற்கின்றன.

**வேங்கை வீயுகும் ஓங்கு மலை**

தலைவன் தலைவியரிடைக் காதல் அரும்புகின்றது. இயற்கைப் புணர்ச்சியும் இடம் பெற, இதுவரை மனத்தில் கள்ள மில்லாமல் தோழியுடன் கலந்துறவாடிய தலைவி மெல்ல மெல்ல மாறுகின்றாள். அவளது பேச்சிலும் போக்கிலும் மாறுபாடு காணும் தோழி அவளறியா வண்ணம் அவளது காதல் தொடர்பினை அறிந்து கொள்ளுகின்றாள். தலைவியிடம்

அவளது மாறுபாட்டிற்கான காரணத்தை வினவ, நாணத்தால் மெய் மறைத்துப் பொய் உரைக்கின்றாள் தலைவி. உடன் தோழி, 'தினைப் புனம் காக்க நாம் வந்தோமா? அக்காலைக் கிளிகள் கதிர்களைக் கவர்ந்து சென்றன. அங்ஙனம் அவை செல்லுதலை வேங்கை மலர்கள் உதிரும் உயர்ந்த மலையின் மீதிருந்து மயில் கண்டது. ஆனால் கிளிக்கு அம்மயில் தன் திருட்டைக் கண்டது தெரியாது' என்கிறாள். கிளி தினை கவர்தல் தலைவி தலைவனுடன் மேற்கொண்டுள்ள களவு வாழ்க்கையினைக் குறிக்கும். மயில் அதனை மலையின் மீதிருந்து காணல் தலைவியின் களவினை அவள் அறியாதவாறு தோழி அறிந்தமையைக் குறிக்கும். தன்னிடத்துப் பொய்யுரைக்கும் தலைவியிடம் நீ உரைப்பது பொய்யென்று வெளிப்படக் கூறாமல் இவ்வாறு மதி நுட்பத்தோடு தலைவியைக் கிளியாகவும் தன்னை மயிலாகவும் குறிப்பிட்டுச் சுவைபட வெளிப்படுதததுகின்றாள்.

> வேங்கை வீயுகும் ஓங்குமலைக் கட்சி
> மயிலறிபு அறியா மன்னோ
> பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே'
>
> (நற். 13:7-9)

இதில் மயில் வேங்கை மரத்தின் மீதமர்ந்திருக்கவில்லை எனினும் வேங்கை மலர் உதிர்ந்து கிடக்கும் மலையில் தன் கட்சியின் கண் இருந்ததாகப் பாடுகின்றார் புலவர்.

**வேங்கை மரமும் மயிலும்**

மேற்கண்ட உள்ளுறை உவமங்களை நோக்க, களவு வாழ்க்கையுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டதாக வேங்கை மரமும், மலரும், மகரந்தமும் குறிக்கப்படுவது அறியப்படும். வேங்கை மலரும் பருவம் மணத்திற்குரிய பருவம் என்று எண்ணவும் இஃது இடம் தருகின்றது. வேங்கை மரம் தலைவன் அல்லது தலைவன் இல்லத்திற்கும், வேங்கை மீதமர்ந்த மயில் தலைவன் தலைவி இருவருக்கும் இடையே உள்ள நட்பிற்கும், வேங்கைத் தாதாடல் தலைவன் தலைவியின் கூட்டத்திற்கும், தாதாடிய மயில் இளவெயில் உண்ணல் களவின்பம் முடித்துத் தலைவியை மணம் முடித்து இல்லறத்தில் ஈடுபடுவதற்கும் குறியீடுகளாகின்றன என்று கொள்வதும் பொருந்தும்.

**கானமஞ்ஞை கட்சி சேரல்**

தலைவன் மணந்து கொண்டு இல்லறத்தில் ஈடுபட வேண்டும் என்ற குறிப்பு மயில் தன் கட்சியைச் சென்றடைதல் மூலமாகவும் சுட்டப் படுகின்றது.

தலைவியை விரைந்து மண முடித்துத் தன் இல்லம் அழைத்தேக வேண்டும் என்ற எண்ணமின்றிக் களவினை நீட்டித்துக் கொண்டே செல்கின்றான் தலைவன். இவ்வாறு களவு நீளல் தவறாக முடியலாம் எனக் கருதும் தோழி தலைவனிடம்,

'சேணோன் இழைத்த நெடுங்கால் கழுதின்
கானமஞ்ஞை கட்சி சேக்கும்
கல்லகத்தது எம் ஊரே செல்லாது
சேந்தனை சென்மதி நீயே பெருமலை
வாங்கமைப் பழுனிய நறவுண்டு
வேங்கை முன்றில் குரவையும் கண்டே' (நற். 276.5-10)

பகற்பொழுது தலைவனைச் சந்திப்பது அரிதாகின்றது. வருந்துகின்றாள் தலைவி. இரவுப் பொழுது சந்திக்கலாம் என எண்ணுகின்றான் தலைவன். அவனுக்கு இரவில் சந்திப்பதும் இயலாது என்பதனை உணர்த்த முற்படும் தோழி, 'காட்டு மயில் தினைக் காவலின் பொருட்டு இழைத்த பரணைத் தன் பஞ்சரமாகக் கொண்டு தங்கும் எம் ஊர் இம்மலையின் அகத்தது. நீ நின்னூருக்குச் செல்லாது எம்மூரை யடைந்து பெரிய மலையின் கண்ணே வளர்ந்த மூங்கிலால் ஆக்கிய குழாயில் நிரப்பிய கள்ளைப் பருகி வேங்கை முன்றிலில் யாம் அயரும் குரவையையும் கண்டு மகிழ்ந்து பின் நின் ஊருக்குச் செல் என்கிறாள்.

மயில் பரணை இருப்பிடமாகக் கொண்டு தங்குவதுபோல் நீயும் எம்மில்லில் தங்கு என்கிறாள். தலைவன் தலைவி இல்லில் தங்குவது அவளை மணந்து கொணடாலன்றி இயலாது ஆகலின் விரைவில் அவளை மணம் முடித்தல் வேண்டும் என்பதனை மறை முகமாக உணர்த்துகின்றாள். தலைவன், தலைவியின் தமர் தனக்குத் தலைவியை மணம் முடிப்பரோ என்று ஐயமுறுவானோ எனக் கருதி, கள்ளுண்டு களித்து, வேங்கை முன்றிலில் குரவையும் காணலாம் என்று கூறுவதனால் அவனைத் தலைவியின் தமர் ஏற்றுக் கொள்வர் என்பதனையும் அவன்பால் அன்பு கொண்டு நன்கு ஓம்புவர் என்பதனையும் புலப்படுத்துகின்றாள்.

### தேறல் அயின்ற தோகை

களவில் வரைவு கடாவுதலைப் போன்று அறத்தொடு நிற்றலும் மிகவும் சிக்கலான பகுதி ஆகலின் இதிலும் உள்ளுறை உவமம் இடம் பெறுகின்றது. ஒண்ணுதல் ஒலிமென் கூந்தலும்

இயலணிப்பொலிந்த ஈகை வான்கழல் அணிந்த குன்று கெழு நாடனும் களிறு கடைக் கூட்ட இதயம் மாறிப்புக்கு இன்பம் எய்துகின்றனர். களவு தொடர்கின்றது. இடையில் இடர்ப் பாடுகள் எழுகின்றன. காவலர் கடுகினும் கதநாய் குரைப்பினும் அன்னை துயில் எழினும் சந்தித்தல் அரிதாகத் தலைவி இறை நெகிழ இளைக்கின்றாள். அதனைக் கண்டு காரணம் அறியாது கலங்குகின்றாள் செவிலி. இருவர் நிலையும் அறிந்து வருந்தும் தோழி அறத்தொடு நிற்றல் சிறந்ததென முடிவு செய்து செவிலியிடம் பேசத் தொடங்குகிறாள். நேரடியாகச் சொல்லத் தயங்கிச் சுற்றி வளைத்துத் தலைவனைத் தலைவி சந்திக்க நேர்ந்த சூழலை விளக்குகின்றாள்.

'பழு மிளகு உக்கபாறை நெடுஞ்சுனை
முழுமுதல் கொக்கின் தீங்கனி உதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொடு ஈண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர் செத்து அயின்ற தோகை வியலூர்ச்
சாறு கொள் ஆங்கண் விழவுக் களம் நந்தி
அரிக் கூட்டின் னியங் கறங்க ஆடுமகள்
கயிறு ஊர்ப் பாணியில் தளரும் சாரல்'

(குறிஞ்சிப். 187-194)

இக்கேண்மை நாங்கள் விரும்பி நடந்த செயலன்று, இறைவன் வகுத்த வழி நடந்த செயல்; தலைவனும் உயர் பண்பினன்; அவனைத் தலைவி கணவனாக அடைதல் அனைவருக்கும் பெருமையே என்றெல்லாம் உணர்த்த விரும்பும் தோழி, பழுத்த மிளகுகள் உதிர்ந்து கிடக்கின்ற கற்பாறையில் அமைந்த நீண்ட சுனையில் மாவின் இனிய பழங்கள் உதிர்ந்திருக்க, அப்பழத்தாலும் வண்டுகள் சிதறிய தேனாலும், பலாமரத்தின் தேன் துளிக்கும் பழத்தாலும் விளைந்த தேறலை, நீரென்று கருதிப் பருகிய மயில், அகன்ற ஊர்களிடத்தில் விழாக்காலங்களில் இனிய இசைக் கருவிகள் ஒலிக்க அதற்கேற்ப விறலி கயிற்றில் ஏறி ஆடுகின்ற காலை தாளத்தில் ஆற்றாது தளர்வதுபோல் தளரும் சாரல் பொருந்திய குன்றிற்குத் தலைவன் என்று மிக நெடிய வருணனை தருகின்றாள். தலைவன் நிலத்து மக்கள் உறையும் ஊர் - மிளகு சிதறிக் கிடக்கும் பாறை; அதன்கண் அமைந்த நெடுஞ்சுனை - தலைவனது குடி; மா, பலா இவற்றால் விளைந்த தேறல் - தலைவனின் தாய் தந்தையர்; பிரசம் - தலைவன் தலைவியைக் கூட்டுவித்த பால்வரை தெய்வம்; அதனை எளிய நீராக எண்ணி

உண்ட மயில் - தலைவனின் அருமை அறியாது நட்புக் கொண்ட தலைவி; மயில் ஆடல் - களவொழுக்கம் தந்த களிப்பு; ஆட மாட்டாது தளரல் - தலைவன் வாராவழியும் வந்தவழியும் எதிர்ப்படும் இடர்ப்பாடு குறித்து தலைவி வருந்தி நிற்றல் ஆகியவை இவ்வுள்ளுறையால் பெறப்படுகின்றன,

பறவைகளில் ஆடல் வல்ல மயில் அக்கலை நலம் காரணமாக உயர்வாகக் கருதப்படுவது. அம்மயிலாகத் தலைவியைக் குறிப்பதனால் தலைவியின் சிறப்பையும் பெருமையையும் புலப்படுத்தி, தலைவனது ஊர், குடி, தாய், தந்தை, உயர்வு குறிப்பதனாலேயே தலைவனின் பெருமையையும் தகைமையையும் உணர்த்தி, மயிலுக்குத் தேறல் தானாகக் கிடைத்ததைக் கூறுமுகமாக இவ்விருவரும் இதயம் கலந்தது இறையருளால் என்பதையும் புலப்படுத்தி விடுகின்றாள் தோழி.

பத்துப்பாட்டில் அமைந்த இவ்வுள்ளுறை பிறவற்றினும் மிக நீண்டதாக விளங்குகின்றது.

தலைவன் பிரிந்திருக்க அவன் பிரிவாற்றாது தலைவி புலம்பும் சூழலிலும் உள்ளுறை உவமம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### மயில் முட்டை

தோழியால் விரைந்து வரைதல் வேண்டும் என்று தூண்டப் பட்ட தலைவன், பொருளீட்டி வந்து வரைவதாக உறுதி கூறிப் பிரிகின்றான். வரைவு இடைவைத்துப் பிரிந்த பிரிவாயினும் தலைவி தளர்கின்றாள். ஊர் தூற்றும் அலரால் அப்பிரிவுத் தீ மேலும் சுடுகின்றது. ஆற்றாது தோழியிடம் அரற்றுகின்றாள்.

> 'கானமஞ்ஞை அறையீன் முட்டை
> வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்
> குன்ற நாடன் கேண்மை என்றும்
> நன்றுமன் வாழி தோழி' (குறுந். 38:1-4)

பாறையின் மீது முட்டையை யிட்டுவிட்டு மயில் சென்று விடுகின்றது. அங்கு வந்த குரங்கின் குட்டி அதனை உருட்டு கின்றது. முட்டையினுள் இருக்கும் குஞ்சு படும் துயரம் குரங்கு அறிவதில்லை. அதுபோல் தலைவன் தலைவியுடன் கேண்மை கொண்டு பிரிந்து சென்றிருக்கிறான். இதனை அறியும் ஊரார் அலர் தூற்றுகின்றனர். இவ்வலரால் தான் படும் துன்பம் இவர்கள் அறிவதில்லை என்கிறாள் தலைவி. இங்கு மயிலின்

முட்டையாகத் தலைவியும், குரங்காக ஊராரும், குரங்கு முட்டையை உருட்டி விளையாடல் அவர் தூற்றும் அலராகவும் குறிக்கப்படுகின்றன. பிற பறவைகள் மரத்தில் பாதுகாப்பாகக் கூடுகட்டி முட்டையிடும் இயல்பின. மயில் அங்ஙனம் கூடு கட்டாது தரையில் முட்டையிடும் இயல்புடையது. ஆகலின் இங்கு மயிலின் முட்டை என்று தலைவி குறிக்கப்படுகிறாள். முட்டையிடும் மயில் அதனைப் பாதுகாக்கவும் வேண்டும். அவ்வாறின்றிக் குரங்கு அதனை உருட்டும்படி மயில் விட்டுச் சென்றது போலத் தலைவனும், ஊரார் அலர் தூற்றும்படிப் பொருள் பொருட்டுப் பிரிந்து சென்று விட்டான் என்று கூறி வருந்துகிறாள் தலைவி. விரைந்து திரும்பித் தன்னை மணந்து அழைத்தேக வில்லையே என்ற அவளது ஏக்கமும் இவ்வுள்ளுறையால் புலனாகின்றது.

**செழுங்குரல் அறியாதுண்ட மஞ்ஞை**

தலைவன் பிரிவினால் வருந்தும் தலைவி தான் அவனுடன் தகுதியறியாது நட்புக் கொண்டது தவறு எனக் கூறி அரற்றுகிறாள்.

> 'புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்
> கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
> அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்
> வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
> சூர்மலை நாடன் கேண்மை' (குறுந். 105:1-5)

குறவன் தன் தோட்டத்துப் புதிதாக விளைந்த கதிரில் தேர்ந்த பொன் போன்ற தினைக் கதிரினைத் தெய்வத்திற்குப் படைக்க, அதனை அறியாத மயில் அச்செழிய கதிரை உண்டு ஆடுமகள் வெறியுற்றோர் அவிநயம் காட்டுங்காலை நடுங்குதலைப் போல் தான் துன்புற்று நடுங்கும், தெய்வங்கள் உறையும் மலைக்கு உரியவன் என் தலைவன் என்கிறாள். இங்குத் தெய்வத்திற்கிட்ட செழுங்குரல் அறியாது உண்ட மயில் தலைவன் தகுதி அறியாது அவனுடன் கேண்மை கொண்ட தலைவியையும், மயில் வெய்துற்று நடுங்கல் தலைவி தலைவனின் பிரிவு காரணமாக வருந்தி நடுங்கலையும் குறிக்கின்றன. தலைவன் சூர்மலை நாடன் ஆதலின் வருத்தும் சூர் போன்று தன்னை வருத்தும் இயல்பினனாய் உள்ளான்; கதிர் உண்டது மயிலுக்கு மகிழ்ச்சியைத் தராது நடுக்கத்தைத் தந்தாற் போன்று தலைவன் கேண்மையும் கூடி மகிழ்வதற்கு ஏதுவாகாது தனித்திருந்து அவனை நினைத்து வருந்துவதற்கு ஏதுவாயிற்று என்றரற்றுகிறாள் தலைவி.

**புகல்வரு மஞ்ஞை**

தலைவன் தான் தன்னைவிட்டுப் பிரிந்து வருத்துகின்றான் எனின் தன்னெஞ்சமும் அவன்பின் சென்று தன்னிடம் திரும்பாது வருத்துகின்றது என்று கவல்கின்றாள் பிறிதொரு தலைவி.

'வருவது கொல்லோ தானே வாராது
அவணுறை மேவலின் அமைவது கொல்லோ
புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை
இருவியிருந்த குருவி வருந்துறப்
பந்தாடு மகளிரிற் படர்தருங்
குன்றுகெழு நாடனொடு சென்ற என்னெஞ்சே' (ஐங்:295)

தினை விளைத்தற்குக் காட்டினை வெட்டிக் குறவர் தீ வைக்கின்றனர். அக்கொள்ளிக்கு அஞ்சி அங்கிருந்த மயில் தன் புகலிடம் சென்று சேர்கின்றது. அவ்வாறு சேருங்காலை அது செய்த ஆரவாரத்தினால் அரிதாளிடை இருந்த குருவிகள் அஞ்சிப் பறக்கின்றன. இதன் கண் குறவோர்—அலர் மொழிவோர்; கொள்ளி—அலர் மொழி; மயில்—தலைவன்; கொள்ளிக்கஞ்சி மயில் புகலிடம் சேர்தல்—அலரஞ்சித் தன்னூர் அடையும் தலைவன்; குருவி—தலைவியும் பிற ஆய மகளிரும் என்பது புலப்படும். தலைவனின் பிரிவு தலைவியையும் ஆயத்தையும் வருத்துகின்றது. ஆனால் குருவி அஞ்சிப் பறப்பது காணாது மயில் தன் புகலிடம் சேர்வது போன்று இவர்கள் வருத்தம் நோக்காது தலைவன் பிரிந்து சென்று விட்டான் என்று நோகின்றாள்.

மேற்பாடல்களில் சுட்டப்பட்ட பிரிவு களவில் வரைவிடை வைத்துப் பிரியும் பிரிவு. இதனைப் போன்று கற்பில் பரத்தை வழிப் பிரிவு உள்ளுறை உவமத்துடன் பாடப் படுகின்றது.

**மாமரத்தமர்ந்த அணிமயில்**

தலைவியுடன் இணைந்து இனிது இல்லறம் நடத்தி வந்த தலைவன் பரத்தையால் ஈர்க்கப் பட்டு அவளுடன் உறைகின்றான். மயக்கம் தெளிந்து மீண்டு தலைவியை நாடி மனையை அடையும் அவன் தோழியிடம் யான் பிரிந்த காலைத் தலைவி எங்ஙனம் ஆற்றியிருந்தாள் என வினவுகின்றான். அரசு முறை செய்க! நாடு களவு இல்லாகுக! என்று பொது நலமே நாடியிருந்தமையின் தலைவி நின்பிரிவை ஆற்றியிருந்தாள்; நாங்கள் அவள் நிலை கண்டு மிக வருந்தி,

'அலங்குசினை மாஅத்து அணிமயில் இருக்கும்
பூக்கஞல் ஊரன் சூள் இவண்
வாய்ப்பதாக என வேட்டேமே' (ஐங் 8 : 4-6)

என்கிறாள். மாமரத்தின் கண் அணிமயில் மகிழ்வுடன் வீற்றிருப்பது போலத் தலைவியும் நின் இல்லத்துப் பெருமையுடன் வீற்றிருக்க நீயும் எஞ்ஞான்றும் உடன் உறைதல் வேண்டும் என்பது இங்கு உள்ளுறை பொருளாக உணர்த்தப் படுவது. நீ அருகே இல்லையெனின் எங்கள் முன் தன் துன்பம் காட்டாது பொதுநலம் விரும்பி தலைவி இருப்பினும் அவள் இன்பமாகவோ பொலிவாகவோ இல்லை என்பதை உணர்த்த நீ அருகிருப்பின் அணிகளுடன் மகிழ்வும் சேர அழகு பொலிய 'அணி மயில்' போன்று இருப்பாள் என்கிறாள். இங்கு மாமரமாகத் தலைவன் இல்லமும் மயிலாகத் தலைவியும் சுட்டப்படுகின்றனர்.

**வேங்கை மரமும் மாமரமும்**

களவில் தலைவிக்கு மயில் உள்ளுறை உவமமாகக் கூறப்படுங் காலைவேங்கை மரத்தமர்ந்த மயில் என்று குறிப்பிடப்படுகின்றது. ஆயின் கற்பில் கூறுங்காலை மாமரம்மயில் அமர்மரமாகச் சுட்டப் படுகின்றது. இது சிந்திக்கத் தூண்டுகின்ற ஒன்று. வேங்கை மரம் குறிஞ்சித்திணைக்குரிய கருப் பொருள். களவும் குறிஞ்சித்திணைக் குரியது. ஆகவின் களவுத் தலைவிக்கு வேங்கைமர மயில் சுட்டப் படுவது பொருத்தம். தவிர வேங்கைமரம் பூத்துப் பொலிவுடன் விளங்குவதும் அப்பொலிவினை மயிலும் பெறுவதும் (பொன்னின் அன்ன பூஞ்சினை துழைஇக் கமழ்தாது ஆடிய கவின் பெறு தோகை. நற். 396 : 4-5)அம்மயில் களவில் ஈடுபட்ட தலைவிக்கும், வேங்கைமரம் தலைவன் இல்லத்திற்கும் உள்ளுறையாகச் சுட்டப் படுவதும் பொருத்தமாக அமைகின்றது. வேங்கை மலர்வது மட்டும் குறிப்பிடப் படுகின்றதே அன்றி அதுகாய்த்து கனிந்து பிறருக்குப் பயன்படுவதாகக் குறிப்பிடப்படுவதுமில்லை; அவ்வாறு அது பயன்படுவதும் இல்லை. ஆனால் மாமரம் அவ்வாறின்றிக் காய்த்துக் கனிந்து அனைவருக்கும் பயனளிப்பது. இதனை நோக்க களவுத்தலைவிக்கும் கற்புத் தலைவிக்கும் இம்மரங்களில் அமரும் மயில்கள் மிகப் பொருத்தமான உள்ளுறை உவமங்களாக அமைவது புலப்படும்.

களவுத்தலைவி உரிமையோ பிறரைப் பேணும் கடமையோ உடையவள் அல்லள்: இளமைப் பொலிவும் அழகும் மட்டுமே உடையவள்; தலைவனுடன் களவின் பம் மட்டும் நுகர்பவள். ஆகலின் பூத்து அப்பொன்னிறப் பூக்களால் பொலிவு பெற்றிருக் கும் வேங்கை மரமயில் இத்தலைவிக்குப் பொருந்தி நிற்கின்றது. கற்புத்தலைவி இல்லறத்தில் ஈடுபட்டு அவ்வில்லத்தின் தலைவி

என்ற உரிமை பெற்றுத் தலைவனை, தன் புதல்வரை, சுற்றத்தை வரும் விருந்தினரை என்று பலரையும் பேணிக்காக்கும் கடமையும் உடையவள். ஆகலின் பூத்துக் காய்த்துக் கனிந்து பிறருக்கு உதவும் மாமரத்தமர்ந்த மயில் மனத்திண்மையும் பொறுமையும் பெருமையும் உடையளாய் விளங்கும் இத்தலைவிக்குப் பொருத்த மானதாய் அமைகின்றது. இதனைக் கொண்டு வேங்கை மரம் களவிற்குக் குறியீடு என்றும் மாமரம் கற்பிற்குக் குறியீடு என்றும் கூடக் கொள்ளலாம்.

**மயில் இளவெயில் உண்ணல்**

சிறைப்புறமாக நிற்கும் தலைவன் கேட்கும் படியாக வரைவு கடாவும் தோழி, மயில் இளவெயில் உண்ணற் பொருட்டுத் தன் பெடையுடன் குன்றின் கண் ஆடும் என்கிறாள்.

> 'அருவியார்க்கும் அணங்குடை நெடுங் கோட்டு
> ஞாங்கர் இளவெயில் உணீஇய ஓங்குசினைப்
> பீலிமஞ்ஞை பெடையோடு ஆலும்
> குன்ற நாடன்' (நற். 288 : 1-4)

தலைவன் களவின்பம் முடித்துத் தலைவியை மணம் முடித்து இல்லறத்தில் ஈடுபட வேண்டும் என்பது இதன் உட்பொருள். முன் குறிப்பிட்ட பிறிதொரு பாடலில் வரைவு கடாவும் தோழி வேங்கைத் தாதாடிய மயில் இளவெயில் உண்ணும் எனக் குறிப் பிடுதல் சுட்டப்பட்டது. இப்பாடலில் உயர்ந்த மரக்கிளையில் உள்ள மயில் என்று மட்டும் குறிப்பிடுகின்றாளே அன்றித் தோழி எம்மரம் என்று குறிப்பிடவில்லை. இருப்பினும் மேற்கண்ட பல உள்ளுறைகளை நோக்கக் களவுடன் தொடர்பு கொண்டு வரும் உள்ளுறைகளில் வேங்கை மரமே குறிப்பிடப்படுதலின் இம்மரமும் வேங்கை மரம் என்று கொள்ளலாம். இப்பாடலில் தலைவன் தலைவி இருவரும் மயிலாகக் குறிக்கப்படுகின்றனர். இவை மயில் தொடர்பான உள்ளுறை உவமங்கள்.

உள்ளுறை உவமம் குறிஞ்சித் திணையிலும் மருதத்திணை யிலும் மிகுதியாகப் பயின்று வரும் என்ற கருத்தினுக்கு மயில் தொடர்பான உள்ளுறை உவமங்களும் சான்றாகின்றன. ஏனெனில் இவ்விருதிணைகளில் தான் மயில் தொடர்பான உள்ளுறைகளும் காணப்படுகின்றன. மயில் குறிஞ்சிக் கருப்பொருளாதலின் குறிஞ்சித்திணைப் பாக்களில் மிகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

தோழி, தலைவன், தலைவி கூற்றாய் அமைந்துள்ள இவ்வுள்ளுறை உமவங்களில் வரைவு கடாதல் துறையில் அமைந்தவை பெரும் பான்மை. தலைவி பிரிந்த தலைவனை எண்ணி வருந்துவது அடுத்த இடத்தினைப் பெற அதனை அறத்தொடு நிற்றல் தொடர்கின்றது. பரத்தை வழிப் பிரிவு பற்றி அமைந்த உள்ளுறை உவமம் மட்டும் மருதத்திணையில் இடம் பெற்றுள்ளது.

## மயிலும் குறிப்புப் பொருளும்

இலக்கியத்தில் கருத்துக்களைச் சுவைபட வெளிப்படுத்தப் பயன்யடும் உத்திகளுள் குறிப்புப் பொருள் சிறப்பிடம் பெறுவது. அதிலும் அகப்பொருட் பாடல்களில் தலைவன் தலைவியரின் எண்ணமும், செயலும், மனநிலையும் வெளிப்படையாக அன்றிக் குறிப்பாக உணர்த்தப்படல் மிகுந்த சுவைபயப்பது. இதனைச் சங்கப் புலவர் நன்கு உணர்ந்திருக்கின்றனர். தமிழ்மொழியும் அதற்கேற்ற ஆழமும் அகலமும் கொண்டு விளங்குகின்றமையின் குறிப்பைப் பயன்படுத்தலும் இயல்வதாயிற்று. குறிப்பாகப் பொருள் உணர்த்தும் முறையைப் பயன்படுத்துவதிலும் இதனை மேலும் வளர்த்துச் செல்வதிலும் தமிழுக்குள்ள தனி ஆற்றலை[9] ஹார்ட் என்பார் பாராட்டுவதும் இங்கு நினைக்கத்தக்கது.

> 'எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப்
> பொருட் புறத்ததுவே குறிப்பு மொழியே'
> (தொல். பொருள். செய். 172)

என்பதிலிருந்து தொல்காப்பியர் காலத்திற்கும் முன்பே குறிப்பாகப் பொருள் உணர்த்துவது வழக்கில் இருந்தமை புலப்படும். எழுத்தும் சொல்லும் தருகின்ற பொருளினும் மேம்பட்டுப் பிறிதொரு பொருளைக் குறிப்பாக உணர்த்தி நிற்பதென இதற்குப் பொருள் கொள்ளலாம்.

இதன் வளர்ச்சியாய் அமைந்த உள்ளுறை உவமம் காலப் போக்கில் கரைந்துவிட, பிறிது மொழிதல் (ஒட்டணி), விபாவனை,

---

9. சை. சையத் அப்துல் ரகுமான்; புதுக்கவிதையில் குறியீடு; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை; சன. 1984; ப. 30 வெளியிடப்படாத முனைவர் பட்ட ஆய்வேடு.

இலேசம், நுட்பம், அவநுதி என்று வேறு பல அணிகளைப்[10] பிறப்பித்து இன்றும் இக்குறிப்புப் பொருள் இலக்கியங்களில் இடம் பெறும் சிறப்புடையது.

மயிலின் தோற்றம், அகவல், ஆடல், வலைப்படல் ஆகியவை இடம் பெற்ற பாடல்கள் அறத்தொடு நிற்றல், வரைவு கடாதல், ஊடல் தீர்த்தல் ஆகியவற்றிற்குப் பயன்பட்டிருத்தலோடு தலைவன் அறனிலாளன், தலைவன் வரும்வரை ஆற்றியிருப்பேன், விரைவில் தலைவன் மீள்வான்; தலைவனுடன் நடத்தும் இல்லறம் இனியது போன்ற கருத்துக்களையும் குறிப்பாகப் புலப்படுத்தி நிற்கின்றன.

மயில் தொடர்பான பகுதிகளின் உரைவிளக்கத்தில் உரையாசிரியரால் குறிப்பு என்று கூறப்பட்டவற்றோடு குறிப்பு உணர்த்துவதாகத் தோன்றிய வேறுசில பகுதிகளும் இங்குக் கருதப்படுகின்றன.

**மயிலின் தோற்றம்**

ஊர் துஞ்சும் நள்யாமத்து இளமை சூழ்ந்த மடமயில் போல வந்து தலைவனைக் கண்டு செல்லும் தலைவி கூந்தலும் ஆடையும் உடல் மறைக்க, சிலம்பின் ஒலியடக்கித் தன்னை வந்து கண்டு செல்லும் தலைவியை, முகிலால் சூழப்பெற்ற மயில் என்கிறான் தலைவன்.

'அரைநாள் யாமத்து விழுமழை கரந்து
கார்விரை கமழும் கூந்தல் தூவினை
நுண்நூல் ஆகம் பொருந்தினள் வெற்பின்

---

10. கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுத்தற்கு
ஒத்த தொன்றுரைப்பின் அஃது ஒட்டென மொழிப—51
உலகறி காரணம் ஒழித்தது ஒன்றுரைப்புழி
வேறொரு காரணம் இயல்பு குறிப்பின்
வெளிப்பட உரைப்பது விபாவனை ஆகும்—53

குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்
மறைத்துரை யாடல் இலேசமாகும்—64
தெரிபு வேறு கிளவாது குறிப்பினும் தொழிலினும்
அரிதுணர் வினைத்திறம் நுட்பமாகும்—63
சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை
மறுத்துப் பிறிதுரைப்பது அவநுதியாகும்—74
தண்டியலங்காரம் மூலமும் பலழய வுரையும்;
கு. சுந்தரமூர்த்தி (பதி); கும்பகோணம்;
2 ஆம் பதிப்பு—1974.

இளமழை சூழ்ந்த மடமயில் போல.........
அஞ்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்'
(அகம் 198 : 4-7, 10-11)

இரவில் தலைவி இவ்வாறு தன்னை அஞ்சி அஞ்சிக் காண வருவதை அவள் திரும்பிச் செல்லும்போது பின்னின்று எண்ணிப் பார்க்கின்ற தலைவன் அழகு நிரம்பிய அவள் தன்னை மறைத்துக் கொண்டு வெளியே வரவேண்டியிருப்பதை உணர்ந்து வருந்தி அவளை மேகம் சூழ்ந்த மயில் என்று குறிப்பிடுகின்றான். அவள் பால் அன்பு பெருக, அவள் வரும் தோற்றத்தை விரிவாக உரைப்பது மென்மேலும் இவளை வருந்தவிடாது விரைவில் மணந்து ஊரறிய அவளுடன் வாழவேண்டும் என்ற விழைவு அவனுக்கு இருப்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றது.

மயிலின் தோற்றம் தலைவனின் அன்பு நெஞ்சை மேற் பாடலில் புலப்படுத்த, பிறிதொரு பாடலில் அவனது அறனின்மையைப் புலப்படுத்தி நிற்கின்றது.

'விரிந்த வேங்கைப் பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாட' (ஐங். 297)

வேங்கை மரக்கிளையில் அமர்ந்திருக்கும் மயில் பூக்கொய்யும் மகளிர் போன்று தோன்றும் நாட்டினன் தலைவன் என்கிறாள் தோழி. பிரியேன்; பிரியேன்; என்று கூறிக் கொண்டிருந்த தலைவன் பொருள் பொருட்டுப் பிரியக் கருதியிருப்பதாகக் கூறுங் காலை இவ்வாறு கூறுகின்றாள். பொருள் தேடப் போவதாக, நல்லது செய்பவன் போல் கூறினும், தலைவியைப் பிரியக் கருதி விட்டமையின் அவன் அறனிலாளன் என்பது தோழியின் குறிப்பு. வேங்கை மரத்தமர்ந்த மயில் பூக்கொய்யும் மகளிர்போல் தோற்றம் தருவதைப் போன்று எங்களுக்கு நீயும் நல்லன் போலத் தோன்றி விட்டாய் என்று மறைமுகமாகச் சாடுகின்றாள்.

விசும்பிலிருந்து இறங்கும் மயிலின் தோற்றம் தலைவி தன் பால் கொண்ட ஊடலைத் தீர்க்கவும் தலைவனுக்குப் பயன்பட்டுள்ளது. பரத்தை வழிப் பிரிந்த தலைவன் தலைவியிடம் திரும்பி வர அவள் ஊடல் கொள்ளுகின்றாள். ஊடல் தீர்ப்பதில் கை தேர்ந்த தலைவன் அவள் கேட்கும்படியாகத் தோழியிடம்,

'விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே
பசும்பொன் அவிரிழை பைய நிழற்றக்
கரைசேர் மருதமேறிப்
பண்ணை பாய்வோள் தண்ணறுங் கதுப்பே' (ஐங். 74)

என்று கூறுகின்றான். முன்பு என்னுடன் தலைவி புனலாடிய போது அணிகலன் ஒளிவிட மருதமரமேறி நீரில் விளையாட்டாகப் பாய்ந்த போது இவளது கூந்தல் வானின்றும் இறங்கும் மயிலின் தோகை போல் அழகாகக் காணப்பட்டது என்கிறான். விசும்பிழி தோகை என மிக உயர்வாக நலம் பாராட்டிப் பழமையினை நினைவுபடுத்தி அவளது சினத்தினைத் தணித்து மீண்டும் தன்னுடன் புனலாடும் விழைவை அவளிடத்து ஏற்படுத்த வேண்டும் என்ற அவனது நோக்கம் இங்குக் குறிப்பாகக் கூறப் பட்டிருப்பது காணலாம்.

**மயில் அகவல்**

ஆண் மயில், பெண் மயில் இரண்டின் அகவலும் குறிப்புப் பொருள் உணர்த்துகின்றன. தலைவன் தலைவி வரவு நோக்கிக் காத்திருப்பதைப் பெண்மயில் அகவலும், பிற குறிப்பை ஆண் மயில் அகவலும் குறிப்பதாகப் பாடல்கள் அமைந்துள்ளன.

தலைவி தலைவன்பால்கொண்ட நட்பு அன்னையால் அறியப் படும் சூழல் உருவாவதைக் குறிப்பிட்டு விரைவில் தலைவியை மணம் முடிக்க வேண்டும் என்று உணர்த்த விரும்பும் தோழி,

'என்னாவது கொல் தானே பொன்னென
மலர்ந்த வேங்கை அலங்குசினை பொலிய
மணிநிற மஞ்ஞை அகவும்
அணிமலை நாடனொடு அமைந்த நம் தொடர்பே'
(அகம். 272 : 16-19)

கார்காலம் தொடங்க வேங்கை மலர அதன் கிளையில் இருந்து கொண்டு மயில் அகவுகின்றது. தலைவியின் களவினை அறிந்த ஊரார் அலர் தூற்றுகின்றனர் ஆகலின் தலைவியின் களவினைத் தாய் அறியும் நாள் தொலைவில் இல்லை. இந்நிலையில் தலைவியை விரைவில் மணம் முடித்தலே நன்று. வேங்கை மரம் மயிலால் பொலிவு பெறவேண்டும் என்பதும் குறிப்பு.

கார்காலத்தில் தலைவன் திரும்புவதாகக் கூறிச் சென்றிருக் கின்றமையின் அக்கார்கால வரவினை எதிர்நோக்கிக் காத்திருக் கின்றாள். மயிலின் அகவல் கேட்கின்றது. அது கார்கால வரவினைப் புலப்படுத்துகின்றமையின் மகிழ்ச்சி அடைந்த தோழி, தலைவியை நோக்கி,

'கானமஞ்ஞை கமஞ்சூல் மாப்பெடை
அயிரி யாற்றடைகரை வயிரின் நரலும்
காடிறந்து அகன்றோர் நீடினராயினும்
வல்லே வருவர்' (அகம் 177 ; 10-13)

என்றுரைக்கின்றாள். வினையில் ஈடுபட்டு உன்னை அவன் மறந்திருப்பினும் மயில் அகவுவதால் அவ்வொலி கேட்டுக் கார்காலம் வந்துவிட்டதறிந்து விரைந்து மீள்வான் என்றுகூறி மகிழ்கின்றாள். மயில் அகவல் கார்கால வரவை, தலைவன் வரவை அறிவிப்பதால் அது அவளது செவிகளுக்கு இனிமையாக ஒலிக்கின்றமையின் 'வயிரின் நரலும்' என்கிறாள். இங்குக் கார்கால வரவு அகவலால் உணர்த்தப்படுகின்றது.

பரத்தை வழிப் பிரிந்திருக்கின்றான் தலைவன். இல்லத்தில் அவன் வரவு நோக்கிக் காத்திருக்கின்றாள் தலைவி. நாட்கள் பல கழித்துத் திரும்புகிறான். அவனுடன் ஊடல் கொள்பவள், 'நின்தேர் பரத்தையர் இல்லம் என்று தவறாகக் கருதி இங்கு வந்துவிட்டது போலும். நின் தேரினை மீண்டும் சேரிக்கே செலுத்து' என்று சினந்து கூறுகின்றாள். திரும்ப பரத்தையிடமே செல் என்று வாய் கூறினும் அவனைப் பிரிந்து தான் வருந்திய நிலையையும் தன்னை அறியாது கூறுகின்றாள்.

'இந்திர விழவின் பூவினன்ன
புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்
இவ்வூர் மங்கையர்த் தொகுத்து இனி
எவ்வூர் நின்றன்று மகிழ்ந நின்தேரே' (ஐங் : 62)

பெடைமயில் நிரம்பா நிழல் இருந்து துணை நாடி அகவுவதைக் கூறும் வாயிலாகத் தான் அவன் வரவை எதிர்நோக்கிப் புலம்பி நின்றதைக் குறிப்பாகக் கூறுகின்றாள். பூப்போன்ற புன்தலை அவளுடைய மென்மையையும் பொலிவின்மையையும் ஒருசேரக் குறித்து நிற்பதையும் இவண் காணலாம். இரக்கத்திற்குரிய தலைவி இவள்.

மேற்கண்ட இருபாடல்களிலும் தலைவன் வரவை எதிர் நோக்கித் தலைவி காத்திருக்கின்றமையின் பெடைமயில் அகவல் கூறப்பட்டிருப்பது காணலாம்.

**மயில் ஆடல்**

மயிலின் ஆடலால் குறிப்புப் பொருள் உணர்த்துதலும் சங்கப் பாடலில் பயின்று வந்துள்ளது.

களவினை வெளிப்படுத்தி அறத்தொடு நிற்கத் தோழிக்குத் துணை நிற்கிறது ஒரு பாடலில் மயிலின் ஆடல். செவிலி தலைவியின் மெலிவுக்கான காரணத்தை வேலனிடம் வினவ, அவன்

கழங்கு பார்த்து இது தெய்வத்தான் ஆகியது என்கிறான். களவினை வெளிப்படுத்த ஏற்றகாலம் எதிர்நோக்கியிருந்த தோழி, 'பொய்படுபு அறியாக் கழங்கே!' என விளித்து, அவ்விளி மூலமாக 'நீ உரைப்பது பொய்' என அறிவுறுத்துகின்றாள். மெய் கூற வேண்டுமாயின் இதற்குக் காரணமானவன்,

'மணிவரைக் கட்சி மடமயிலாலும் நம்
மலர்ந்த வள்ளியம் கானங் கிழவோன்
ஆண்டகை விறல் வேளல்லன் இவள்
பூண்தாங்கு இளமுலை அணங்கியோனே' (ஐங். 250 : 2-5)

மயில்கள் ஆடுகின்ற மலர்ந்த வள்ளிக்கொடி படர்ந்த காட்டிற்கு உரியோன் தலைவியின் மெலிவிற்குக் காரணமானவன் என்கிறாள். மலர்ந்த காதற்கொடியால் அவளைப் பிணித்தனன் ஆகலின் அவன் நினைவால் தலைவி மெலிகின்றாள் என்கிறாள். அவனது வளம் பொருந்திய கானில் மயில்கள் ஆடுகின்றன என உரைக்கும் முகமாகத் தலைவியும் அக்கானங் கிழவோனை மணப்பின் மகிழ்ந்தாடுவாள் என்று குறிப்பாகக் கூறுகின்றாள்.

இதேபோன்று பிறிதொரு பாடலிலும் மயிலின் ஆடல் அறத்தொடு நிற்கத் துணைபுரிந்துள்ளது.

'ஆடமைக்குயின்ற அவிர் துளை மருங்கில்.........
விழவுக்கள விறலியில் தோன்றும் நாடன்' (அகம் 82 : 1,10)

இது நெடிய வருணனையாய்ப் பிறவருணனையினின்றும் மாறுபட்டு அமைந்திருக்கின்றமையின் வருணனைப் பகுதியில் விரிவாக உரைக்கப்படுகின்றது. இவண் சுருங்கக் காணலாம். இப்பாடலில் மயில் குழலிசை, முழவொலி, யாழொலிக் கேற்ப ஆடுகின்றது. இவை தலைவனின் அன்புமனம், குடிப்பெருமை, தாய் தந்தையரின் பண்புநலன் இவற்றைக் குறித்து இத்தகு தலைவனைத் தலைவி மணப்பின் இன்பமுடன் வாழ்வாள் என்பதனை உணர்த்தும். மயிலின் ஆடலை மந்திகள் மருண்டு நோக்கல், உற்றாரும் ஊராரும் வியந்து நோக்கும் வண்ணம் இல்லறம் அமையும் என்பதனைக் குறிக்கும்.

விறலி போன்று ஆடும் மயில், இல்லறம் இனிமையாய் அமையும்; அத்தலைவனையே மணக்க வேண்டும் என்ற விருப்பினைப் புலப்படுத்த, மற்றொரு பாடலில் தலைவன், தலைவி இருவரும இணைந்து இன்பமுடன் இல்லறம் நடத்துவதைப் புலப்படுத்தி நிற்கின்றது.

தலைவனுடன் தலைவி இல்லறம் நடத்துவதைக் காண வருகின்றாள் தோழி. தலைவி, 'இன்பமாய் மயில்கள் ஆடும் குன்றநாடன் தலைவன்' என்கிறாள்.

'முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப்பாறை மருங்கின்
ஆடுமயில் முன்னதாகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலிபின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்துணை பயிரும் குன்ற நாடன்' (அகம் 352 : 1-7)

கல்லாக் கடுவன் முழவு போன்று முழங்குகின்ற அருவி இழியும் பாறையின் பக்கலில் பலாப்பழத்தைத் தாங்கி நின்று, அதனைத் தன் மந்திக்கு ஊட்ட அழைக்கும் காட்சி மத்தளம் வாசிப்பது போல் தோன்ற அதன் முன்னின்று விறலி போன்று மயில் ஆடும் காட்சியைக் காட்டுவதன் மூலம் தலைவி தன்னைத் தலைவன் அன்புடன் பேணுகின்றமையினையும் தானும் மயில் போல் மகிழ்ச்சியுடன் வாழ்வதையும் குறிப்பால் உணர்த்துகின்றாள்.

மழையில் நனைந்து இன்பம் கண்ட நீலமணி போன்ற புள்ளிகளையுடைய குடுமியும், பீலியும் கொண்ட மயில் சோலையில் ஆடுவதைக் காட்டி ஒரு தலைவி, தோழியிடம் தலைவனின் பிரிவைத்தான் எப்படியும் தாங்கி ஆற்றியிருப்பேன் என்கிறாள்.

'பெயலுழந்து உலறிய மணிப்பொறிக் குடுமிப்
பீலிமஞ்ஞை ஆலும் சோலை
அங்கண் அறைய அகல்வாய்ப் பைஞ்சுனை
உண்கண் ஒப்பின் நீலம் அடைச்சி
நீரலைக் கலைஇய கண்ணிச்
சாரல் நாடனொடு ஆடிய நாளே' (நற். 357:5-10)

மழையில் மகிழ்ந்த மயில் இப்பொழுது சோலையில் மகிழ்ந்தாடுகின்றது என்று கூறி, முன்பு தலைவனுடன் சேர்ந்து இன்புற்றிருந்ததனை எண்ணி அவ்வெண்ணத்தில் இன்பம் கண்டு மனதைத் தேற்றியிருப்பேன் என்று தோழிக்கு உணர்த்துகின்றாள். சோலையில் மயில் ஆடல் பழைய நினைவுகளால் அவள் பெறும் மனநிறைவினைக் குறித்து நிற்கின்றது.

### மயிலின் ஆடலும் அகவலும்

ஆடலும் அகவலும் இணைந்து நின்றும் குறிப்புணர்த்துகின்றன. ஆடலைக் கூறி ஆற்றியிருப்பேன் என ஒரு தலைவி

உரைக்கப் பிறிதொரு தலைவி ஆடல், அகவல் இரண்டினையும் கூறித் தலைவனின் பிரிவை ஆற்றியிருப்பேன் என்கிறாள்.

'கலிமழை கெழீஇய கான்யாற்று இகுகரை
ஒலி நெடும் பீலி துயல்வர இயலி
ஆடுமயில் அகவும் நாடன்' (குறுந். 264:1-3)

தலைவனின் பிரிவைத் தலைவி எங்ஙனம் ஆற்றுவாள் என்று தோழி கவலை கொள்ள அவளோ 'தலைவன்,முகிலின் ஆரவாரம் கேட்டு மழைவரும் என்பதை உணர்ந்து அம்மழை வரும் முன்பே தன்நெடிய பீலியை அசைத்து ஆடும் மயில் அகவும் குன்றநாடன்' எனக் குறிப்பிடுகின்றாள். மழை வரும் முன்பே மழை பொழிதல் உறுதி என எண்ணிக் களித்து மயில் ஆடலுடன் அகவுவது, தலைவன் வருமுன்பே அவன் விரைவில் வருவான் என்ற எண்ணமே, அவன்பால் கொண்ட நட்பின் நினைவே அவளை மகிழச் செய்யும்; ஆற்றியிருக்கச் செய்யும் என்பதை உணர்த்து கின்றது.

**மயில் வலைப்படல்**

மயிலின் அகவலும் ஆடலும் போன்று வலைப்படலும் குறிப்புப்பொருள் உணர்த்தி நிற்கின்றது.

தலைவி களவொழுக்கம் வெளிப்பட இற்செறிக்கப் படுகின்றாள். இவ்வீற்செறிப்பு கடுமையான காவல் உடையதாகஇருக்கத் தோழி தலைவியை மயில் போன்று வலைப்பட்டதாகக் கூறு கின்றாள். இனி, தாய் இரவிலும் உடன்படுத்துத் தலைவியிடம் சிறு அசைவு தோன்றினும் அணைத்துக்கொள்கின்றாள். அவ்வாறு அணைத்துக் கொள்ளும் அன்னையை அறனில் அன்னை என் கிறாள்.

'ஓரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப் பட்டாங்கு யாம்
உயங்கு தொறும் முயங்கும் அறனில் யாயே'
(குறுந். 244:4-6)

இவ்வாறு வேடன் மயிலை வலைப்படுத்துதல் போன்று வலைப் படுத்தும் தாயை 'அறனில் யாய்' என்று குறிக்கும் முகமாக இவ் விற்செறிப்பிலிருந்து தலைவியை விடுவிக்க, அவளை வரைந்து கொள்வதாகிய செயலைச் செய்யாத தலைவனையும் அறனிலாளன் எனக் குறிப்பால் உணர்த்துகின்றாள். தாய் கை வலைப் பட்டுத் தலைவி வருந்துதற்கு நின்மை வலைப்பட்டது காரணம்

அது தலைவியை மிகவும் வருத்துகின்றது என்பதைத் தெளிவு படுத்த உச்சிச் சூடு சிதைய பீலி மடங்க நன்மயில் வலைப்பட்டு வருந்துவதைக் கூறுகின்றாள்.

சுருங்கக் கூறின் மயிலின் தோற்றம் தலைவனுக்கு விரைவில் தலைவியை மணம் முடிக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதை உணர்த்தவும், தோழி தலைவனை அறனிலாளன் என்று மறை முகமாகச் சாடவும், தலைவி தலைவன் பால் கொண்ட ஊடல் தீர்க்கவும் பயன்பட்டுள்ளமை அறியலாம்.

மயிலின் அகவல் ஊரார் அலர் தூற்றுவதையும், தலைவி தலைவன் வரவு நோக்கிக் காத்திருப்பதையும் கார் காலம் தொடங்கிவிட்டது; தலைவன் விரைவில் மீள்வான் என்பதையும் குறித்து நிற்கின்றது,

மயிலின் ஆடல் தலைவி, தோழி ஆகியோர் அறத்தொடு நிற்கத் துணை நின்று, தலைவனின் பிரிவைத் தலைவி ஆற்றி யிருக்கவும் துணை செய்கின்றது. தவிர தோழிக்குத் தலைவி நடத்தும் இல்லறத்தின் இனிமையும் உணர்த்தி நிற்கின்றது.

இவையன்றி வலைப்பட்ட மயில் தலைவி இற்செறிக்கப் பட்டமை விளக்கி, விரைவில் அவளைத் தலைவன் மணம்முடிக்கத் தூண்டுகின்றது.

இவற்றை நோக்க மயிலின் தோற்றமும் ஆடலும் அகவலும் அகமாந்தரின் எண்ணத்தை, கருத்தைப் பிறருக்குப் புலப்படுத்தப் பயன்பட்டுள்ளமை அறியவரும்.

## மயிலும் குறியீடும்

பண்பு, பயன், வினை, வடிவம் என்ற இவற்றில் ஒற்றுமை கண்ட இடத்து உவமை தோன்றிற்று. இவ்வுவமை ஒருபுடையாய் நில்லாது மிகப் பொருந்திய நிலையில் உருவகம் உருவாயிற்று. இவ்வுவமையும் உருவகமும் உவமம், பொருள் இரண்டினையும் கூற, பொருள் சுட்டப் பெறாது உவமம் மட்டும் உரைக்கப்பட்டுப் படிப்போரால் தானாகப் பொருள் புரிந்துகொள்ளப் படும்படி விடப்பட்ட போது அது குறியீடு எனப்பட்டது. அதாவது இலக் கியத்தில் வெளிப்பட இடம் பெறும் பொருள் வேறு; அது உணர்த்தும் ஆழ்பொருள் வேறு. கருத்துக்களையும், மன உணர்வு களையும் பண்புகளையும் நேரடியாக அன்றி மறை பொருளாகக் கூறி இலக்கியத்தின் சுவையை இக்குறியீடு மிகுவிக்கின்றது.

'குறியீட்டாய்வு ஒரு கலை; அது மனத்தின் எண்ணங்களையும் உணர்வுகளையும் நேரடியாக விளக்கவோ அன்றி அவற்றுடன் ஒன்றுபட்ட மரபுவழிப் பயன் படுத்தப்பட்டு வரும் படிமங்கள் வாயிலாகத் தெளிவுபடுத்தவோ செய்யாது விளக்காது விடப்பட்ட குறியீடுகள் வாயிலாக, இன்ன எண்ணமாக, உணர்வாக இருக்கலாம் எனப் படிப்பவர் மனதில் தோன்றும்படிச் செய்வது'[11] என்கிறார் சார்லஸ் சாட்விக்.

உள்ளுறை உவமம், குறிப்புப் பொருள் போன்று, குறிப்பாகப் பொருள் உணர்த்துவது குறியீடு எனினும் அவற்றின் வளர்ச்சி நிலை இது எனக் கூறலாம். உள்ளுறை உவமத்தில் உட்பொருள் கருப்பொருட்கள் வாயிலாக உணர்த்தப்படுகின்றது. இக்கருப் பொருட்கள் உவமப் பொருட்கள் என்ற நிலையில் செயல்படு கின்றமையின் உவமேயம் ஒன்றும் அங்கு உட்பொதிந்து கிடக் கின்றது. அது ஊகித்து உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். இவ் வுள்ளுறை உவமம் நீண்ட வருணனையாகவும் அமையலாம். உவமையின்றிக் கருப்பொருள் கொண்டு வெளிப்பட ஒரு பொருளும் அதன் 'தொனி'யினால் வேறு ஒரு பொருளும் உணர்த்தப்படுகின்ற நிலையில் அது குறிப்புப் பொருளாகின்றது. ஒரு பொருள் இலக்கியங்களில் மீண்டும் மீண்டும் இடம் பெற்று பழக்கப்பட்ட பின்பு ஒரே பண்பை, கருத்தை, உணர்வை வெளிப் படுத்தப் பயன்படுகின்ற நிலையில் அது குறியீடாகின்றது. இன்று இக்குறியீடு மிகுதியாகப் பயின்று வருவது குறிப்பிடத் தக்கது.

சங்க இலக்கியங்களில் இடம் பெறும் குறியீடுகளில் மயில் சிறப் பிடம் பெறுகின்றது. அழகு, பொலிவு, வளமை, மென்மை, மேன்மை, பெருமை போன்ற பல பண்புகளின் குறியீடாக மயில் அமைகின்றது. இன்ப, துன்ப உணர்வுகள் மயிலால் உணர்த்தப்படு கின்றன. கார் காலத்தையும் மயில் குறிக்கின்றது. தவிர தலைவி, பரத்தை, விறலி ஆகிய மாந்தருக்கும் மயில் குறியீடாகின்றது. இங்ஙனம் பல பண்புகள், மன உணர்வுகள், காலம், மாந்தர் ஆகி யோருக்கு மயில் குறியீடாகிக் குறியீட்டுப் பொருள்களுள் முதன்மை பெறுகின்றது.

மயில் இவ்வாறு பலவற்றிற்குக் குறியீடாவதற்கு அஃது இலக் கியத்தில் இடம் பெறும் சூழல் காரணமாகின்றது. அக இலக்கியங்

---

11. Charles Chadwick; Symbolism; Methuen & Co Ltd I ed London 1971. page 2

களில் பெரிதும் பாடப்படுவது தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் சூழல். அவ்வாறு பிரிந்திருக்கும் தலைவி, தலைவன் வினை முற்றி மீள்வான் என்பதால் கார்கால வரவிற்காகக் காத்திருக்கின்றாள். கார்காலம் தொடங்க மயில் தன் துணை தேடி அகவுகின்றது. தலைவன் வரவைத் தலைவி குரல் கொடுக்காது எதிர் நோக்கி நிற்க, மயில் வெளிப்பட அழைத்து நிற்கின்றது. தலைவிக்குச் சாயலாலும் நடையாலும் மயில் உவமையாகவும் ஆவதால் இச்சூழலில் அவளது மனநிலையை எடுத்துரைக்க இம்மயில் மிகப் பொருத்தமானதாக அமைகின்றது. இச்சூழலில் மட்டுமன்றி களவு, கற்பு என்ற வாழ்க்கையின் இரு நிலைகளிலும், மரத்தில் அமர்ந்திருப்பது, தோகை விரித்தாடுவது, இனத்துடன் இணைந்து ஆரவாரிப்பது ஆகிய அதன் செயல்களால் தலைவியின் மன நிலையும் பண்பும் சுட்ட மயில் பொருத்தமானதாய் அமைகின்றது. தலைவிக்கு மட்டுமன்றிப் பரத்தை, விறலி போன்ற பிறருக்கும் இது ஏற்ற குறியீடாகின்றது.

காளை-வீரம்; சிங்கம்-பெருமிதம்; உடைந்த கண்ணாடி-நட்பின் சிதைவு; அம்பிகாபதி அமராவதி-காதல்; தரையில் இறங்கிய விமானம்-கனவு நிலையினின்று விடுபட்ட மனம் என்பவை போன்று ஒன்றுக்கு ஒன்றாக அமையும் குறியீடுகள் அல்ல மயிலால் குறிக்கப்படுபவை; சூழல் அடிப்படையில் உணரப்படும் குறியீடுகள் அவை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்த அடிப்படையில் மயிலால் அமையும் குறியீடுகள் அணுகப்படுகின்றன. 'சங்க இலக்கியக் காலத்தை இயற்கைக் குறியீட்டுக் காலம் எனலாம். இயற்கையை மனித வாழ்வோடு இணைத்துக் காணும் குறியீட்டியல் பார்வை சங்கப் புலவரிடம் இருந்தது. இயற்கைப் பொருட்கள் வெற்று வருணனையாக இடம் பெறாமல் அகத்திணை மாந்தரின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பால் உணர்த்தும் குறியீடுகளாகவே அகப்பாடல்களில் இடம் பெற்றன[12] என்ற கூற்று இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

மயில் பல பாடல்களில் மகளிர்க்கு உவமையாகின்றது. எல்லா இடங்களிலும் மயிலே உவமை எனினும் அம்மயிலுக்குக் கொடுக்கப்படும் அடை அல்லது வருணனை காரணமாக அழகு, பொலிவு, மென்மை, மேன்மை போன்று ஏதேனும் ஒரு பண்பு சுட்டப்படுகின்றது. எனவே வெளிப்படக் காண்பதற்கு மயில் உவமை போல்

12. சை. சையத் அப்துல் ரகுமான்; முன் சுட்டியது; ப. 30.

தோன்றினும் குறிப்பிட்ட பண்பிற்கு அப்பாடல்களில் அது குறியிடாதலை ஆழ்ந்து நோக்கின் உணரலாம்.

## அழகும் பெருமிதமும்

'அணிகிளர் கலாவம் ஐது விரித்தியலும்
மணிபுரை எருத்தின் மஞ்ஞைபோலநின்
வீபெய் கூந்தல் வீசுவளி உளர
ஏகுதி மடந்தை (நற். 264:3-6)

தலைவியை நோக்கித் தலைவன் கூறும் கூற்று இது. இப்பாடலில் அழகு பொருந்திய தன் தோகையினை விரித்து இயலும், நீலமணி போன்ற கழுத்தினை உடையது என்று மயில் மிக விரிவாக வருணிக்கப்படினும் இவ்வருணனை, உவமை கூறும் முகமாகத் தலைவியின் அழகினைப் புலப்படுத்தற்கு வந்த ஒன்று என்பது தெளிவு. ஆகலின் இங்கு மயில் அழகிற்குக் குறியீடாகின்றது. இனி, இவ்வாறு தலைவியை நோக்கித் தலைவன் கூறும் சூழலைநோக்கின் இம்மயில் பெருமையையும் உணர்த்தி நிற்பதைக் காணலாம். இவர்கள் தாமே ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டு, இதயம் இணைந்து களவு வாழ்வில் ஈடுபட்டுத் தற்பொழுது ஊரும் உறவும் அறியாமல் உடன்போக்கு மேற்கொண்டவர்கள், அந்நிலையில் தலைவியைத் தன்னில்லத்திற்கு உடன் அழைத்துச் செல்லும் தலைவன் இவளை இல்வாழ்க்கைத் துணையாக அடைந்து விட்டோம் என்ற உரிமை உணர்வோடு அவளைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றான். தலைவியின் அழகுடன் தலைவனின் பெருமித உணர்வையும் மயில் இங்குக் குறிக்கின்றது.

## பொலிவு

இயற்கையாக அமையும் அழகு, மன மகிழ்வு காரணமாகவும் ஒப்பனையினாலும் பெறுவது பொலிவு. தகுந்த தலைவன் ஒருவனைக் கண்டு அவனுடன களவின்பம் துய்க்கின்றாள் தலைவி. உள்ளத்தில் ஏற்படும் பூரிப்பு உடலைப் பொலிவு கொள்ளச் செய்கின்றது. இப்பொலிவு களவினைப் பிறருக்குக் காட்டிக் கொடுத்து இன்னலுக்கு ஏதுவாக்கலாம் என்பதைத் தோழி தலைவனுக்கு உணர்த்துகின்றாள். நேரடியாகக் கூற இயலாது ஆகலின் மயிலின் மீது தன் கருத்தை ஏற்றி உரைக்கின்றாள். வேங்கை மரத்தில் வேங்கை மலர்கள் உதிரப் பெற்றுப் பொலிவுடன் விளங்கும் மயில் இதற்குத் துணை செய்கின்றது.

'வேங்கை தந்த வெற்பணி நன்னாள்
பொன்னின் அன்ன பூஞ்சினை துழைஇக்
கமழ்தாது ஆடிய கவின்பெறு தோகை
பாசறை மீமிசைக் கணங்கொள்பு ஞாயிற்று
உறுகதிர் இளவெயில் உண்ணும்' (நற். 396:3-7)

இங்கு வேங்கைச் சூழலில் வீற்றிருக்கும் மயில் பொலிவிற்குக் குறியீடாகின்றது.

## மென்மை

மயில் சாயலால் பெண்ணுக்கு உவமை கூறப்படுகின்றது. இச்சாயலுக்குப் பொருள் கூறுங்கால் பரிமேலழகர், 'அஃதாவது மாதர் உருவிற் கிடப்பதொரு மென்மை' எனக் கூறுகிறார். இம்மென்மையால்தான் ஆண்மயிலாய் இருந்தும் பெண்ணுக்குப் பொருந்திய உவமமாவது. இம்மென்மை அதன் நடையிலும் ஏற்றிக் கூறப்படுகின்றது. (மெல்ல இயலும் மயிலுமன்று. கலி. 55. 13) நடை, சாயல் இரண்டிலும் மென்மை பெற்று விளங்கும் மயில் தலைவியின் மென்மைக்குக் குறியீடாகவும் வழங்கப் பெறுகின்றது.

தான் விரும்பிய தலைவனுடன் இல்லறம் நடத்த உடன் போக்கு மேற்கொண்டு விடுகிறாள் தலைவி. அதனை அறிய நேர்ந்து வருந்தி நிற்கும் அன்னை அவள் பிரிவிற்கு வருந்துவதை விட அவளது மென்மை குறித்து மிகுதியாக வருந்தி நிற்கின்றாள். கான்வழிச் செல்லும் உடல்வலி படைத்தவள் அல்லள் தன் மகள் என இரங்கி நிற்கிறாள். அக்காலை,

'மடமயிலன்ன என் நடை மெலிபேதை' (அகம் 63:15) எனத் தன் மகளைக் குறிப்பிடுகின்றாள். இங்கு மயில் தலைவிக்கு உவமையாகக் கூறப்படுவது அவளது அழகு குறித்தோ சாயல் குறித்தோ அல்ல; அவளது மென்மையைக் குறித்தே.

'மென்சீர் மயிலியலவர்' (பரி. 9:56)

என்ற தொடரிலும் மயில் மென்மையைச் சுட்டி நிற்பது காணலாம்.

## மேன்மை

பல பண்புகளைச் சுட்டி நிற்கின்றமை மயிலின் மேன்மையை உணர்த்தும். இச்சிறப்பினால் தலைவன் தலைவியரின் மேன்மையைக் குறிக்கவும் இஃது பயிலப்படுகின்றது.

தன் மனத்தில் இடம் பெற்ற தலைவியின் கூந்தலை வருணிக்கின்ற தலைவன், மயிலின் தோகைக்கு அதனை ஒப்பிடுகின்றான். அவ்வாறு ஒப்பிடுங்கால் அத்தோகை உடைய மயிலுக்கு அவன் கொடுக்கும் அடை தலைவியின் மேன்மைக்குக் குறியீடாய் நிற்கின்றது.

'மாரி வண்மகிழ் ஓரிகொல்லிக்
கலிமயில் கலாவத் தன்னஇவள்
ஒலிமென் கூந்தல்' (நற். 265:7-9)

கூந்தலின் அழகை அனுபவித்து அதனை உவமிக்கும் நோக்கம் மட்டும் இருந்திருப்பின் மயில் கலாவத்தன்ன கூந்தல் என்ற தொடர் போதுமானது. ஆனால் அக்கூந்தலுக்கு உரியவளின் உயர்வு சுட்டப்படுவது, இங்கு நோக்கம் ஆகலின் ஓரிக்கு உரிமையான கொல்லி மலையில் வாழும் மகிழ்ச்சி நிறை மயிலின் கலாவம் என்கிறான். இக்கொல்லி மலை வாழ் மயில் தலைவியின் மேன்மைக்கும், பெருமைக்கும் அவள் குடிப்பிறப்பின் உயர்வுக்கும் குறியீடாகின்றது.

'விசும்பாடு ஆய்மயில்' (நற். 222:4)

'விசும்பிழி தோகை' (ஐங். 74:1)

என்ற இப்பாடலடிகளில் மயிலுக்குக் கொடுக்கப்படும் அடைகளும் தலைவியின் மேன்மையைச் சுட்டுகின்றன. பிறமொழி இலக்கியங்களிலும் மயில் மேன்மைக்கு, பெருமைக்குக் குறியீடாய் வழங்கப்படல் மரபு.[13]

### வளமை

மயில் இடம்பெறும் வருணனைகள் வளத்தினைக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டவை என்பது வருணனைப் பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அழகு, பொலிவு, மென்மை, மேன்மை போன்ற பண்புகளின் குறியீடாக அமைவது தலைவியுடன் தொடர்பு கொண்டு அமைய, இவ்வளமை நாடு, மலை, காடு என்று இடத்துடன் தொடர்பு கொண்டதாக அமைதல் காணலாம்.

மயிலின் நிறம், இருப்பு, அதன் அகவல், ஆடல், ஆரவாரம் அமைந்த சூழல்கள் இடத்தின் வளத்திற்குக் குறியீடாக உள்ளன.

---

13. Ad de Vries; op. cit; P. 360.

தலைவன் வரைவு இடைவைத்துப் பொருள்வயின் பிரிந்து சென்றிருக்கின்றான். அவன் சென்ற வழியினது அருமை எண்ணி வருந்தும் தலைவியை ஆற்றுவிக்க முயலும் தோழி,

'நன்றே காதலர் சென்ற ஆறே
அணிநிற இரும்பொறை மீமிசை
மணிநிற உருவின தோகையும் உடைத்தே' (ஐங். 431)

என்று கூறுகின்றாள். அவன் சென்றவழி பாலை வழியன்று; மணி நிறம் உடைய மயில்கள் நிரம்பிய வழி; ஆகலின் இனிமை நிரம்பிய வழி என்கிறாள். இதில் மயிலின் நிறத்துக்கு நீலநிறமுடைய மணி உவமை கூறப்படுகின்றது. மணி செல்வம். எனவே இங்கு மணி நிறமயில் தலைவன் செல்லும் வழியின் வளமை, செழுமை ஆகியவற்றைக் குறித்து நிற்கின்றது.

மேற்பாடலில் மயிலின் நிறம் வளமையைக் காட்டப் பின்வரும் பாடலில் மயிலின் அகவல் அதனை உணர்த்துகின்றது.

'இனமயில் அகவும் மரம்பயில் கானத்து
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்
குன்றம் நோக்கினென் தோழி
பண்டையற்றோ கண்டிசின் நுதலே' (குறுந். 249)

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி, தலைவனின் குன்றம் நோக்குகிறாள். அக்குன்றம் மயில்கள் கூட்டமாகக் கூடி அகவும், ஆரவாரிக்கும் குன்றம். குரங்குகள் குட்டியுடன் குளிரால் நடுங்கு மாறு மழை பொழியும் குன்றம் என்கிறாள். இக்குன்றம் கண்ட வுடன் என் கவலை தீர்ந்தது; பசலையும் ஒழிந்தது; கவினும் மீண்டது என்கிறாள். இப்பாடலில் மயிலின் மிகுதியும், அகவலும் குன்றின் வளத்தினையும், அவ்வளத்துடன் அது தரும் இன்பத் தினையும் புலப்படுத்துகின்றன.

இனமயில் அகவல் போன்று, அது குஞ்சரக்குருகோடு ஆரவாரித்து ஆடலும், பிறிதொரு பாடலில் வளமையையும் இன்பத்தையும் உணர்த்தப் பயன்பட்டுள்ளது.

தலைவியின் தந்தை குடும்பச் சூழல் பற்றிய குறிப்பு பொதுவாக இலக்கியங்களில் மிக அருகிக் காணப்படுவது. அகநானூற்றில் ஒரு பாடல் இச்சூழலைக் குறிப்பிடுகின்றது. தான் தடுத்தும் கேளாது தலைவனுடன் தலைவி சென்றுவிட, அவள் சென்றவழி ஆள் அரவமற்ற, வறண்ட, கொடிய பாலைவழி எனக்

கேள்வியுறுகின்றாள் தாய். அக்காலை அந்த ஆள் வழக்கற்ற வழிக்கு நேர்மாறாக அமைந்த தலைவியினுடைய தந்தையின் இடனுடை இல்லம் பற்றிக் கூறிப் புலம்புகின்றாள்.

'களிமயில்
குஞ்சரக் குரல குருகோடாலுந்
துஞ்சா முழவின் துய்த்தியல் வாழ்க்கைக்
கூழுடைத் தந்தை இடனுடை வரைப்பு'

(அகம் 145 : 14-17)

'கூழுடைத் தந்தை' என்ற தொடர் தந்தையின் செல்வநிலையைக் காட்டுகின்றது. செல்வம் இருக்குமிடமெல்லாம் அதனை நன்கு துய்க்கும் இயல்பும், இன்பமும் இருக்கும் என்று கூறல் இயலாது. ஆனால் 'துய்த்தியல் வாழ்க்கை' என்ற தொடரால் இவ் வில்லத்தைப் பொறுத்தவரை வாழ்க்கை வாழ்வதற்கே என்ற நோக்கொடு மிக நன்றாக அதனை அனுபவித்து இன்புற்றமை தெரிகின்றது. மயில் யானையங் குருகுகளுடன் சேர்ந்து முகிழ் முழக்கம் என்று கருதி ஆரவாரித்து ஆடும்படியாக நாளும் முழவின் ஒலி கேட்கும் இல்லம் என்றும் கூறுகிறாள். மயிலுக்குக் 'களி' என்ற அடையும் கொடுக்கின்றாள். இந்த அடை மயிலுக்கு மட்டும் உரியதன்று. அம்மயில் களித்திருப்பது போல் அத்தந்தை இல்லத்து மக்களும் களித்திருப்பதைக் காட்டுவதால் அவர்களுக்கும் உரியது. மேலும் அனைவரும் கூடி வாழ்வதையும் இது உணர்த்தி இக்கூட்டத்திலிருந்து, உற்றார் உறவினரிடமிருந்து தன்னை எப்படி இவ்வாறு தனிமைப்படுத்திக் கொண்டு தலைவி பிரிந்தாள் என்ற வினா தாயின் உள்ளத்து எழுவதையும் உணர்த்துகின்றது.

இப்பாடலில் களிமயில் குஞ்சரக்குரலோடு ஆலும் சூழல், தந்தை இல்லத்து அனைவரும் இணைந்து இருப்பது, இன்பமாக இருப்பது, நன்கு செல்வத்தை அனுபவிப்பது இவற்றைச் சுட்டுவதோடு இத்தனைக்கும் காரணமாக அமைவது தந்தையின் செல்வ வளம் என்பதையும் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

வளத்திற்குக் குறியீடாகப் பிறமொழி இலக்கியங்களிலும் மயில் பயின்று வருவதுண்டு.[14]

**மனநிலை**

பல பண்புகளேயன்றி மன உணர்வுகளை உணர்த்துவதற்கும் மயில் குறியீடாகப் பயன்படுகின்றது. இன்பம், துன்பம் ஆகிய இரு உணர்வுகளும் மயிலால் குறிக்கப்படுகின்றன.

14. Ibid

மயிலின் தோகை ஆடும் காலத்து விரிந்தும் பிறபொழுது குவிந்தும் இருப்பது இயல்பு. இவ்வியல்பு மனம் மகிழ்வால் மலர்ந்து நிற்கும் நிலையினையும் துன்பத்தால் சோர்ந்து குவிந்து இருக்கும் நிலையினையும் உணர்த்த மிகப்பொருத்தமாய் அமைகின்றது. தலைவியின் இம்மன மலர்ச்சியும் துயரும் தலைவனுடன் கூடுவதாலும், பிரிவதாலும் ஏற்படுபவை. எனவே விரிந்த தோகை, தலைவனுடன் இணைந்து தலைவி இன்புற்றிருப்பதையும், குவிந்த தோகை தலைவனைப் பிரிந்து துயருற்று இருப்பதனையும் புலப்படுத்துகின்றன.

**இன்பம்**

'கூந்தல்
ஆடுமயில் பீலியின் பொங்க நன்றும்
தான் அமர் துணைவன் ஊக்க ஊங்கி'
(அகம் 385 : 13-15)

தலைவியை ஊஞ்சலில் அமர்த்தி ஊக்குகின்றான் தலைவன். அவனுடன் சேர்ந்திருப்பதால் உள்ளத்தில் இன்பம் பொங்குகின்றது. இங்ஙனம் பொங்கும் இன்பத்தை ஆடுகின்ற மயிலின் பீலிபோல் கூந்தல் பறப்பது சுட்டுகின்றது.

தலைவனின் கேண்மையை எண்ணி மகிழும் மற்றொரு தலைவி அவனைக் குறிப்பிடுங்கால்,

'கலிமழை கெழீஇய கான்யாற்று இகுகரை
ஒலிநெடும் பீலி துயல்வர இயலி
ஆடுமயில் அகவும் நாடன்' (குறுந். 264 : 1-3)

என்கிறாள். இங்கு ஒலிநெடும் பீலி விரித்து மயில் ஆடலும அகவலும் தலைவியின் உள்ளத்து மகிழ்ச்சியையும் பெருமித உணர்வையும் புலப்படுத்தி நிற்பது காணலாம்.

**துன்பம்**

தலைவன் பரத்தை வழிப்பிரிய வருந்தி நிற்கின்றாள் தலைவி. பிரிவு காரணமாக இவள் அடைந்த வருத்தத்தை,

'கலிமயிற் கலாவம் கால்குவித்தன்ன
ஒலிமென் கூந்தல்' (புறம் 146:8-9)

புலப்படுத்துகின்றது. பிரிவுத்துயர் ஒப்பனையை வெறுக்கச் செய்ய மண்ணாக் கூந்தலுடன் காட்சியளிக்கின்றாள். அக்கூந்தல் மயிலின் குவிந்த கலாவம் போன்று தோன்றுகிறது என்கிறார் புலவர். 'கலிமயில்' என்று மயிலுக்குக் கொடுக்கப்படும் அடை

இங்கு முரணாய் நின்று முன்பு தலைவனுடன் இருந்த காலத்து இன்பமும் செருக்குமுற்று அவள் இருந்த நிலையினை உணர்த்தி அவலத்தினை மிகுவிக்கின்றது.

இங்குக் கால் குவிந்த கலாவம் துன்பத்திற்குக் குறியீடாகின்றது. கால் குவிந்த காலவத்துடன் கூடிய மயில் துன்பத்திற்குக் குறியீடு என்று அட்டியூரிஸ் (Ad de vries) குறிப்பிட்டிருப்பதும்[15] இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

இவற்றைக்காண விரிந்த தோகை கூடல் குறியீடு என்றும் குவிந்த தோகை பிரிவின் குறியீடு என்றும் உணரலாம். ஏனெனில் இவற்றால் விளையும் இன்ப துன்ப உணர்வுகளுக்கு மட்டுமே மயில் குறியீடாகின்றது.

**கார் காலம்**

கார்காலமும் மயிலும் பன்முறை இணைத்துத் தரப்படுவதால் மயில் கார்காலக் குறியீடாகவும் அணுகத்தக்கது. கார்கால வரவினைக் கட்டியங்கூறி அறிவிப்பது மயில். கார்காலம் தொடங்கியவுடன் மழைகண்டு மகிழ்ந்தாடுகின்றது; துணையினை அழைக்கின்றது; அத்துணையுடன் இணைந்து இன்புறுகின்றது.

'மழை வரவறியா மஞ்ஞை ஆலும்' (ஐங். 298 : 1)

'நன்னாட்பூத்த நாகிள வேங்கை
நறுவீயாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப் பசுங் குருந்தின் நாறு சினையிருந்து
துணைப்பயிர்ந்து அகவும் துணைதரும் தண்கார்'
(அகம் 85 : 10-13)

போன்ற பகுதிகள் இக்கருத்தினுக்குச் சான்று பகரும்.

கார்காலம் முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுது.

தலைவன் பிரிந்து சென்றிருக்க, அவன் வரவு குறித்து இல்லத்தில் காத்திருக்கும் தலைவி எதிர்நோக்கும் பொழுது. ஏனெனில் பிரிந்தவன் மீண்டும் திரும்பி வரும் காலம் இது. எனவே இக்கார்காலம் மயிலைப் போன்று மங்கைக்கும் கூடலுக்கு உரிய காலம் ஆகின்றது. ஆகவே பிறரினும், மயிலுடன் தலைவியும் தலைவனும் விரும்பி வரவேற்கும் காலமும் ஆகின்றது.

---

15. Ibid

பெண்மயிலைத் தன்பால் ஈர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆண் மயில் ஆடுகின்றது. துணை தேடிப் பெண் மயிலும் அகவுகின்றது. இவ்வாடலும் அகவலும் தலைவன் தலைவியரையும் ஈர்க்கின்றன. மயில் ஆடுவது தலைவனின் கண்களுக்குத் தலைவி ஆடுவதுபோல் தோற்றமளிக்கின்றது. கார் தொடங்கிவிட்டது; காத்திருப்பாள் தலைவி என உணர்ந்து விரைவில் இல்லம் திரும்புகின்றான்.

'நின்னுதல் நாறும் நறுந்தண் புறவின்
நின்னே போல மஞ்ஞையாலக்
கார் தொடங்கின்றால் பொழுதே' (ஐங். 413 : 1-3)

'நின்னே போலும் மஞ்ஞை யால......
நின்னை யுள்ளி வந்தனென்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே'
(ஐங். 492:1, 4-5)

ஆடுவது மயில் எனினும் இங்குத் தலைவனுக்குத் தோற்றமளிப்பது தலைவி. ஆண்மயில் ஆடல் பெண்மயிலை அதன்பால் ஈர்ப்பது போன்று தலைவன் எண்ணமும் அவன்பால் ஈர்க்கப்படுகின்றது. (ஆலல் அகவல் எனவும் பொருள்படும்.)

தலைவியும் மயிலின் ஆடலைக் காண்கிறாள். அகவலைக் கேட்கின்றாள் தலைவன் மயிலின் ஆடலில் தலைவியைக் கண்டு இன்புற்று இல்லம் திரும்ப, தலைவியோ கார்ப்பருவம் வந்தும் தலைவன் இன்னும் திரும்பவில்லையே என்று வருந்துகின்றாள். கூடுதற் பொருட்டும், கூடலாலும் பிறந்த மயிலின் ஆடல், ஆலல் முரண்பின்புலமாயும் துணைப்பயிர்ந்து மயில் அகவுவது இணைப் பின்புலமாயும் அமைய அவளது ஏக்கம் மிகுகின்றது.

'எள்ளித் தொகுபுடன் ஆடுவ போலும் மயில்'
(கலி. 33:18)

'என்னெனப் படுங்கொல் தோழி மின்னுபு
வானேர்பு இரங்கும் ஒன்றோ அதனெதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்
ஏதில கலந்த இரண்டற்கு என்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே (குறுந். 194)

நிலத்தால் குறிஞ்சி நிலப்பறவை எனினும், இக்கார்காலத்தில் ஆடும் அகவும் இயல்பால் முல்லை நிலத்திற்கும் உரிய பறவையாய் நின்று கார்காலம் எனில் புலவர் மனக்கண்முன் மயில் தோன்று

கின்றது. கார்காலத்தையும் மயிலையும் பிரித்துக் காண புலவரால் இயலுவதில்லை என்று கூடக் கூறலாம், எனவே மயில் கார்காலத்திற்கும் குறியீடாய் விளங்குகின்றது எனலாம்.

### மகளிர்

அழகு, மென்மை, பொலிவு, சாயல் போன்ற பல பண்பு களால் மகளிருடன் ஒத்திலங்கும் மயில் அவர்களுக்குக் குறியீடாகவும் இலக்கியத்தில் இடம்பெறுவதுண்டு. தலைவி, பரத்தை ஆகிய பெயர் சுட்டா அகமாந்தருக்கும், புறஇலக்கியத்தில் மனைவிக்கும், சேயோன் இல்துணை வள்ளிக்கும் மயில் குறியீடா கின்றது.

### தலைவி

தன்மனத்தில் இடம்பெற்ற காமஞ்சாலா இளமையோளாகிய தலைவியை, பின்னின்று அவளது சிறப்புக்களைச் சொல்லி மனத்திற்குள் இன்புறுந்தலைவன்,

'வேயெனத் திரண்டதோள் வெறிகமழ் வணரைம்பால்
மான்வென்ற மடநோக்கின் மயிலியல்' (கலி 57 : 1-2)

என்று அவளைக் குறிப்பிடுகின்றான்.

தலைவனன்றிப் பிறரும் தலைவியை மயில் எனக் குறிப்பிடுவதுண்டு தலைவன் நாடிச் சென்ற பரத்தையைத் தலைவியின் தோழியர் காண்கின்றனர். தலைவியின் அணிகலன் களை அப்பரத்தை அணிந்திருப்பது கண்டு வெறுப்புற்ற தோழியர் அவளைப் பழித்துரைக்கின்றனர். கோபம் கொண்ட பரத்தை தலைவியைப் பழிக்க, அதனைக் கேட்டுச் சினமுறும் முதுமகளிர், 'நீ உரைத்த வெஞ்சொல் பொருத்தமற்றது. நின் பேதைமையே அதற்குக் காரணம். அப்பாவம் தீர நீ மயிலின் சாயல் கொண்ட தலைவியை வந்து வணங்க வேண்டும்' என்கின்றனர்.

'மைந்துற்றாய் வெஞ்சொல்; மடமயிற் சாயலை
வந்திக்க வா' (பரி 20 : 69-70)

இப்பாடலில் முதுமகளிரும் தலைவியை மயிலாகக் குறிப்பிடு கின்றனர்.

### பரத்தை

தம் சாயலால் தலைவனைக் கவர்ந்த பரத்தையருக்கும் மயில் குறியீடாய் வருகின்றது.

இரவில் தலைவன் இல்லம் வராதிருக்கத் துன்புறும் தலைவி, 'யான் அவன் நினைவால் துயிலின்றி யாமக் கடலை நீந்து கின்றேன்; அவனோ மயிலியலாரை மருவிப் புனலை உடைய மடுக்களிலாடி நம்மை மறந்து உறைந்திருப்பான்' என்று கூறி வருந்துகிறாள்.

'துயிலின்றியாம் நீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகுவான் மன்னோ'
(கலி 30 : 5-6)

இப்பாடலடிகளில் பரத்தையர் மயிலியலார் என்று குறிக்கப்படு கின்றனர்.

### மனைவி

அகப்பாடலில் மயில் தலைவிக்குக் குறியீடாவது போன்று புறப்பாடல்களில் மனைவிக்கும் குறியீடாய் வந்துள்ளது. மனைவிபால் மாறாக் காதலுடையவன்; தன்னுடைய இனிய சொல்லினால் அவள் மனத்தையும் பிணித்தவன் ஒருவனைப் புலவர்,

'இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன்' ((புறம் 252 : 4-5)

எனக்குறுப்பிடுகின்றார். இங்கு மடமயில் மனைவியைக் குறித்து நிற்கின்றது.

### வள்ளி

செவ்வேளின் சிறப்பினைப் பாடும் நப்பண்ணனார், அவன் வள்ளியை மணம் புரிந்தருளியது, வானவர் பால் தேவசேனையை மணந்தாற் போன்று இம்மண்ணவர் மகள் ஒருத்தியையும் மணந்து, இவருடன் உறவு கொள்ள வேண்டும் என்ற கருத்தாற் போலும் என்று பாடுகின்றார்.

'இருநிலத் தோரும் இயைகஎன ஈத்தநின்
தண்பரங்குன்றத்து இயலணி நின்மருங்கு
சாறுகொள் துறக்கத்து அவளொடு
மாறு கொள்வது போலும் மயில்கொடி வதுவை'
(பரி. 19 : 4-7)

இங்கு வள்ளியை மயில்கொடி என்றே குறிப்பிட்டுள்ளார். வள்ளிக் கொடியின் அருகே கண்டெடுக்கப்பட்டவளாதலின் கொடி என்கிறார். குறிஞ்சி நிலப் பெண்ணாதலின் வள்ளியை மயில் என்று குறிப்பது மிகப் பொருந்திய குறியீடாகின்றது.

மண்ணுலக மகளிர்க்குக் குறியீடாய் நிற்றலோடு விண்ணவனை மணந்து அவ்விண்ணுலகம் சேர்ந்த பெண்ணிற்கும் குறியீடாகும் சிறப்பினையும் இம்மயில் பெற்றிருக்கின்றது.

இலக்கியங்களில் பறவைகள், விலங்குகள் மட்டுமன்றி அசையாப் பொருள்களும் கூட, குறியீடாகப் பயின்று வருகின்றன. எனினும் மயில், மாந்தர், பண்புநலன், உணர்வு, காலம் என்று பலவற்றிற்குக் குறியீடாய் நிற்றலின் அவையாவற்றினும் மேம்பட்டு விளங்குகின்றது. தவிர, தமிழில் மட்டுமன்றிப் பிற மொழிகளிலும் இத்தகு குறியீடாதல் இதன் மற்றுமொரு சிறப்பு.

## மயிலும் வருணனையும்

ஒரு பொருளின் அல்லது காட்சியின் வடிவை, வண்ணத்தை, தன்மையை, செயலை விரித்து விளக்குவதாக அமைவது வருணனை[16] எனலாம். இவ்வருணனை இலக்கியத்தின் இன்றியமையாக் கூறு. சிறந்த ஒரு வருணனை தனியிலக்கியமாகவும் ஆகலாம். இது மிக இயல்பானதாக, உள்ளதை உள்ளவாறே உரைப்பதாக அமையலாம்; அன்றிப் புனைந்துரை கலந்து மிகைப் படுத்தி உரைப்பதாகவும் அமையலாம்.

வருணனை நேரடியாகப் பொருளை விளக்குவதும் உண்டு; அல்லது அடைமொழி உவமைவழி விளக்குவதும் உண்டு.

சங்க இலக்கியங்களில் வருணனைகள் பொதுவாகக் குறுகியவை ஆகலின் மயில் தொடர்பான வருணனைகளும் குறுகிய வடிவின. அவையும் ஏதேனுமொரு கருத்து விளக்கத் திற்காக இடம்பெறுவன. இவற்றை மயில் இடம்பெறும் வருணனை, மயில் பற்றிய வருணனை என இருவகைப் படுத்தலாம்.

### 1 மயில் இடம்பெறும் வருணனை

மயில் உணர்வுச் சூழல், இயற்கைச் சூழல் என்ற இரு சூழல் களில் வருணனையில் இடம் பெறுகின்றது. எட்டுத்தொகை அக இலக்கியங்களில் உணர்வுச் சூழலில் மயில் வருணனை மிகுதியும் இடம்பெறுகிறது. இவை தலைவனின் நாட்டை வருணிப்ப தாக அமைந்து தலைவியின் மனநிலையினை, தலைவன்

16. Joseph T.Slipley (ed). Dictionary of world Literary Terms; George Allen & Unwin Ltd; London; 1970; P. 77.

இயல்பினை உள்ளுறைப் பொருளாகவோ, குறிப்புப் பொருளாகவோ சுட்டப் பயன்படுகின்றமையின் அவை இங்குக் கருதப்படாது உள்ளுறை உவமம், குறிப்புப் பொருள் என்ற தலைப்புகளின் கீழ் விளக்கப்படுகின்றன. இவை தவிர, இயற்கைச் சூழலில் அமைந்த பிற வருணனைகள் இப்பகுதியில் அணுகப் படுகின்றன.

இங்குக் குறிப்பிடப்படும் வருணனைகள் நெடியனவாய் முழுமையான காட்சிகளாய் அமைவன என்று கூறல் இயலாது., அடைநிலையில் அமைபவையும் சுட்டு நிலையில் அமைபவையும் கூடச் சில சமயங்களில் ஒரு விரிவான வருணனை தரக்கூடிய விளக்கத்தைத் தந்து விடுகின்றமையின் அவையும் இங்கு வருணனை என்றே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

பழமுதிர் சோலை, மதுரை என்ற இரு இடங்களின் வருணனையிலும் மயில் இடம்பெறுகின்றது. குறிஞ்சி, நெய்தல், மருதம் ஆகிய மூன்று நிலங்களின் வருணனையிலும் தலைவனும் தலைவியும் உடன்போக்கு மேற்கொண்டு செல்லும் வழியின் வருணனையிலும் மயிலின் தொடர்பைக் காணமுடிகின்றது.

**மயிலும் பழமுதிர் சோலையும்**

பழமுதிர் சோலை நிரம்பிய மலை இது. இம்மலையில் அருவி அகிலும் ஆரமும் சுமந்து ஆசினிப்பலவின் சுளையும், புன்னையின் மலரும் இணையப் பொன்னும் மணியும் புரட்டிப் பேரோசையுடனும் பெருவேகத்துடனும் வருகின்றது. அவ்வாறு பாய்ந்து வரும் அருவியினை வருணிக்குங்கால்,

> 'மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
> கோழி வயப்பெடை இரிய' (திருமுருகு. 310-311)

என்கிறார் நக்கீரர். மலையில் அருவியின் அழகில் அதன் சூழலில் மயங்கி அதன் ஒலிக்கேற்ப மகிழ்ந்தாடும் இயல்பினது மயில். இங்கு மயில் கூட்டமாக இருந்தும் அருவி இழிதர அஞ்சி ஓடின என்கிறார். இடியொலி கேட்டும் அஞ்சாத மயில் அருவி, மலை தந்த வளத்தோடு பெருகிவர அஞ்சியது எனக் கூறுவதன் மூலமாகப் பழமுதிர் சோலையின் பெருவளத்தினையும், அதற்குக் காரணமாக விளங்கும் அருவியின் ஓசையும் விரைவும் சேர்ந்த நீர்ப்பெருக்கையும் இங்குப் புலப்படுத்துகின்றார். மகளிர் போன்று மெல்ல நடக்கும் இயல்பினது மயில். அதனை மடநடை மஞ்ஞை

என்று குறிப்பிடும் புலவர் இயல்பிற்கு மாறாக அஞ்சி ஓடினதைக் குறிப்பிடுகின்றார். இம்மலை வருணனையில் அடைநிலையில் மயில் கருத்துப் புலப்பாட்டிற்குப் பயன்பட்டுள்ளமை காணலாம்.

**மயிலும் மதுரையும்**

மதுரைக் காஞ்சியில் பாண்டிய நாட்டின் கண் அமைந்த ஐவகை நிலங்களின் செழிப்பும் சிறப்பும் பாடவந்த மாங்குடி மருதனார் அதனை அடுத்து வையைப் பேரியாறு பாயும் மதுரை பற்றிப் பாடுகின்றார். முழவு நாளும் முழங்கும் ஊர், விழவு அறா மூதூர்; துணங்கையும், குரவையும் ஆடப்படும் மணங்கமழ் சேரி; புதுவருவாய் உடைய ஊர்; புலவரால் பாடப்பெறும் சிறப்புடை நாட்டின் நடுவண் அமைந்த ஊர் என்று உரைக்குங் கால், முசுக்கலை தாவும் உயர்ந்த மலை உச்சியின் கண் மயில் அகவும் பொழிலிடத்தும் மந்திகள் ஊசலாடும்படிப் பெருங் காற்று மோதிய மரங்கள் செறிந்த காட்டிடத்தும் வீழ்ந்தியங்கு நீர் கொழித்துக் கொணர்ந்து ஒதுக்கிய வெண்மணல் திரளால் இயன்றனவும், காவும் பொழிலும் சூழ்ந்தனவுமாகிய நீரடையும் கரைகள் தோறும் நெடுங்காலமாய் அமைந்திருக்கும் பெரும்பாண் குடியிருப்புப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

ஆறோடும் மண்தான் அன்றும் இன்றும் கலை வளரும் வளம் நிறை நிலம், அடிப்படை வாழ்க்கைத் தேவைகள் எளிதாகக் கிட்டுவதால். அங்ஙனம் கலைவளர் நிலம் மதுரை என்பதனைக் குறிக்க, முதற்கண் பாணர் இருக்கை பற்றிக் குறிப்பிடுகின்றார். கலை மயிலை நினைவூட்ட, கலைதாவும் உயர்மலையிடத்து, மயில் அகவும், ஆடும் மணம் மலி பொங்கர் நினைவிற்கு வர அதனையும் இவண் கூறுகின்றார்.

'கலைதாய உயர் சிமையத்து
மயிலகவும் மலி பொங்கர்
மந்தியாட மாவிசும் புகந்து
முழங்குகால் பொருது மரம்பயில் காவின்
இயங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணல்
கான்பொழில் தழீஇய அடைகரைதோறும்' (332-337)

இவ்வருணனையில் வளத்துடன் கலைச் சிறப்பினையும் சேர்த்துச் சுட்ட, மயில் குரல் கொடுக்கின்றது.

**மயிலும் குறிஞ்சியும்**

கடியலூர் உருத்திரங் கண்ணனார் தொண்டைமான் இளந்திரையன்பால் பாணனை ஆற்றுப்படுத்துகின்றார். அக் காலை அவ்வரசனது குறிஞ்சிநிலவளம்—மலைவளம் கூறுமிடத்து,

'இன்சீர்க் கின்னரமுரலும் அணங்குடைச் சாரல்
மஞ்ஞை யாலும் மரம்பயில் இறும்பில்'
(பெரும்பாண் : 494-495)

என்றுரைக்கின்றார். ஆடலும் பாடலும் மனநிறைவையும் மகிழ்ச்சியையும் புலப்படுத்துபவை. மன்னன் நாட்டு உயிரினங்களின் அதாவது கின்னரப் பறவைகளின் பாடல், மயில் ஆடல் கூறுமுகமாக அந்நாட்டு மக்களின் மகிழ்ச்சி நிரம்பிய வாழ்க்கையினை உணர்த்துகின்றார். வளத்தால் வருவது மகிழ்ச்சி ஆகலின் மக்களின் மகிழ்ச்சி அவர்தம் வளத்தினைச் சுட்டும். இங்கும் சுட்டு நிலையில் மயில் வளத்தினையும், வளத்தால் வரும் இன்பத்தினையும் இணைத்துக் காட்டுகின்றது.

மலைவளம் உணர்த்த இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும் மயிலை நாடியிருக்கின்றார். நல்லியக் கோடன் குறிஞ்சிக் கோமகன். அக்குறிஞ்சி நிலம்,

'துகிலணி அல்குல் துளங்கியல் மகளிர்
அகிலுண விரித்த அம்மென் கூந்தலின்
மணிமயில் கலாபம் மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோடு'
(சிறுபாண் : 262-265)

பிறபுலவர் மயிலுடன் பிற உயிரினங்களையும் மலைவளம் பாடுங்கால் பாடியுள்ளனர். ஆயின் நத்தத்தனார் மயில் ஒன்று போதும் என எண்ணினார்போலும். மயிலாடும் மலை என்று மட்டும் குறிக்கின்றார். மயிலின் ஆடலை விவரிப்பதில் மலைவளம் எத்தகையது என்பது புலப்பட்டு விடுகின்றது. அகிற்புகையூட்டற்பொருட்டு விரிந்த அழகியமென் கூந்தல் போன்று அமைந்த மணிநிறக் கலாபம்; அக்கலாபத்தை மயில் மஞ்சிடைப் பரப்பி ஆடுகின்றது என்கிறார். இங்குக் கொடுக்கப்படும் உவமை மயிலின் சிறப்பையும் மிகுவிக்கின்றது. மலை எத்துணை உயர்ந்ததாய் இருப்பின் மயிலின் தோகை மஞ்சிடைத் தவழும்! மலை உயர உயர மழை அளவு உயரும்; வளமும் சிறக்கும் என்பது அறிவியல். மஞ்சு சூழ்ந்த மலை ஆகலின் அவனது மழைவளம் பெறப்படுகின்றது. மலை வளமும் புலப்படுகின்றது. மயில் தந்த மலை வருணனை இங்கும் வளம் உணர்த்தப் பயன்பட்டுள்ளது.

**மயிலும் மருதமும்**

குறிஞ்சிக்குரிய மலை வருணனையில் மட்டுமன்றி மருதநில வருணனையிலும் மயில் இடம் பெற்றிருக்கின்றது. கரிகாற்

பேருவளத்தானின் மருதநில மாண்பைப் பாடும் முடத்தாமக் கண்ணியார் பழனங்களில் மயிலை உலவ விட்டுள்ளார். வளைவை உடைய காஞ்சி மரத்திலும், செவ்விய மருத மரத்திலும் அமர்ந் திருக்கின்ற மயில்கள் பாகற்பழத்தையும், பலாச்சுளையினையும் உண்டு ஆரவாரிக்கின்றன.

'முடக்காஞ்சிச் செம்மருதில்
மடக்கண்ண மயில் ஆல
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி' (பொருந : 189 - 192)

உணவுப் பொருள் மிதமிஞ்சிக் கிடைக்கின்ற சோணாட்டின் வளம் இங்கு உணர்த்தப் படுகின்றது. தன்னாட்டு மக்களுக்கு மட்டு மன்றிப் பிறநாட்டு மக்களுக்கும் தேவையான உணவு எளிதிற் கிடைப்பதை மலைப்பறவை மயில் மருதநிலத்தில் கனி உண்பதன் மூலம் உணர்த்துகின்றார். அதிலும் மிகுதியைக் குறிப்பதற்கு 'மாந்தி' என்ற சொல்லினைப் பயன்படுத்தியுள்ளமையையும் நோக்க வேண்டும். உண்ட மயில்கள் ஆரவாரம் செய்கின்றன. இவண் மயிலால் நாட்டுவளம் நன்கு புலப்படுகின்றது.

**மயிலும் நெய்தலும்**

முடத்தாமக் கண்ணியார் குறிஞ்சிநில மயிலை நெய்தல் நிலத்திலும் காட்டுகின்றார். மருதநிலத்தில் மயில்கள் ஆடுவதில் வியப்பில்லை. ஏனெனில் கான மஞ்ஞைபோல் பழனத்தில் வாழும் பழனமஞ்ஞையும் ('கழனியுழவர் தண்ணுமை இசைப்பின் பழனமஞ்ஞை மழை செத்தாலும்' பதிற்றுப். 9 : 10 : 41 - 42) உண்டு. ஆனால் நெய்தலோடு தொடர்பில்லாதது மயில். ஆயினும் அங்கும் மயிலை ஆடவிடுகின்றார்.

'கோட்டெங்கின் குலைவாழைக்
கொழுங்காந்தள் மலர்நாகத்துத்
துடிக்குடிஞைக் குடிப்பாக்கத்து
யாழ்வண்டின் கொளைக் கேற்பக்
கலவம் விரித்த மடமஞ்ஞை
நிலவெக்கர்ப் பல பெயர்' (பொருந : 208 - 213)

யாழிசை போன்று வண்டுகள் ஒலிக்க அவ்விசைக் கேற்ப மயில்கள் எக்கர் மணலில் தோகை விரித்தாடுகின்றன என்கிறார். காவிரிப் பூம்பட்டினத்து மக்கள், பதியெழு வறியாப் பழங்குடி மக்கள். ஆனால் அப்பட்டினத்தில் பிறநாடுகளிலிருந்தும், பிறநிலங்களில்

இருந்தும் வந்த மக்கள் பலர் வாழ்ந்து வந்தனர். 'மொழிபல பெருகிய, பழிதீர் தேஎத்துப் புலம் பெயர் மாக்கள் கலந்து இனிதுறையும்' (பட்டினப், 216 - 217). அம்மக்கள் ஒற்றுமை உணர்வுடன் இணைந்து இன்பமுடன் வாழ்ந்ததை நெய்தல் நிலத்தில் குறிஞ்சிநில மயில் இசைக்கேற்ப ஆடியது எனப்பாடுவதன் மூலம் புலப்படுத்துகின்றார். இவ்வொற்றுமை உணர்விற்கு நாட்டின் வளம் முதற்காரணம். வேண்டும் பொருள் வேண்டுமளவு கிடைக்கும் இடத்தில் பகைமை உணர்வு தோன்றற்கு இடமில்லை. இங்கு மயிலின் ஆடல் இடம் பெறும் வருணனை வளத்தினைக் குறிப்பதோடு ஒருபடி மேலே சென்று நாட்டுமக்களின் நற்பண்பினையும் விளக்குகின்றது.

**மயிலும் வழிவருணனையும்**

மனத்திற்குகந்த தலைவனுடன் இல்லறம் நடத்த எண்ணும் தலைவி, அவனுடன் உடன்போக்கு மேற்கொள்ளுகின்றாள். அதனை அறியும் தாய் தலைவியின் நிலையினைப் புரிந்து கொண்டு அறநெறி உணர்ந்து தன்மகள் செயல்பட்டதனை எண்ணி மகிழ்ந்து அவர்களை வாழ்த்துகின்றாள். தன்மகளின் மென்மை உணர்ந்த அத்தாய் அவள் செல்லும் வழி பாலையாக இருப்பினும்,

> 'மள்ளர் கொட்டின் மஞ்ஞையாலும்
> உயர் நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
> சுரநனி இனிய வாகுக' (ஐங். 371 : 1-3)

என்கிறாள். மழைக்குரிய காலம் இது இல்லை எனினும் வம்பமாரி பெய்ய வேண்டும்; பூமி குளிர்ந்து வழியினிமை உடையதாக வேண்டும் என்பவள், மள்ளரின் போர் முரசு ஒலிக்கேற்ப மயில்கள் அம்மழைகண்டு ஆடவேண்டும் என்கிறாள். உடலுக்கு இதமளிக்கும் குளிர்ச்சியோடு கண்ணுக்கு இனிமை பயக்கும் காட்சியின்பமும் அமையட்டும் என வாழ்த்துகின்றாள். தலைவனுடன் செல்லினும் உடன்வாழ்ந்த பிறரை விட்டுப்பிரிந்து செல்லல் தலைவிக்கு மனவருத்தம் தரும் என்பதறிந்து செல்லும் வழியில் கண்ணுக்கு இனிமை பயக்கும் மயிலின் ஆடல் மனதை ஈர்ப்பின் அவ்வீடுபாட்டில் வருத்தம் மறையும் என்று எண்ணுகிறாள். வழியருமை வருத்தம் தரக்கூடாது என்பதனால் சுரம் நனி இனியவாகுக என்று வாழ்த்துகின்றாள். மள்ளரின் முரசொலிக்கேற்ப மயிலாடுவது போல்!தலைவன் மனதிற்கிசையத் தன்மகள் நடக்க வேண்டும் என்ற விருப்பமும் இதிலுண்டு. இப்பாடலில் மயிலின் ஆடல் வழியினிமைக்குக் காரணமாவது உணரலாம்,

மேற்காட்டிய வருணனைகள் அனைத்தும் இடம் தொடர் பானவை. அவ்விடங்களின் வளமும் இனிமையும் குறிக்க மயில் பயன்பட்டுள்ளமை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களில் இடவருணனை சிறப்பிடம் பெறுவது; அக இலக்கியங்களாயின் தலைவன் நாட்டு வருணனை, தலைவி நாட்டு வருணனையும், புறஇலக்கியங்களாயின் மன்னனது நாட்டு வருணனையும் வள்ளல்கள் வாழும் நாட்டின் வருணனையும் இடம் பெறுகின்றன. தன்னழகு காரணமாகத் தான் இருக்கும் இடத்தின் எழிலைப் புலப்படுத்தப் பயன்படுவது மட்டுமன்றி நாட்டின் வளம், அந்நாட்டில் வாழும் மக்களின் இன்பவாழ்வு இரண்டினையும் உணர்த்த மயில் ஒரு கருவியாகப் புலவருக்குப் பயன்பட்டுள்ளது. ஒருநாடு, நாடு என்று சிறப்பித்துக் கூறப்படற்கு இன்றியமையாதது வளம். 'நாடென்ப நாடா வளத்தன' (குறள், 739) என்பது வள்ளுவர் வாக்கு. வளம் இருப்பின் இன்பம் இணைந்து கொள்கின்றது. எனவே ஒரு சிறந்த நாட்டைக் கண்முன் கொணர மயில் வருணனை உறுதுணைபுரிகின்றது.

### II மயில் பற்றிய வருணனை

வருணனை தான் வருணிக்கின்ற ஒன்றினை அப்படியே கண்முன் நிறுத்திக் காட்டும் வல்லமை பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கொடு மயில் பற்றிய வருணனையை அணுகின் முழுப்பயன் பெறல் அரிது. ஏனெனில் மயில் முழுமையாக எப்பாடலிலும் வருணிக்கப் படவில்லை. இதனை மனத்திற் கொண்டு மயில் பற்றிய வருணனையை அணுக வேண்டும். சங்க இலக்கியங்களில் அடை வழியாகவும் உவமை வழியாகவும் உவமை வாயிலாகவும் மயிலை அறிவது பெரும்பான்மை. நீண்ட வருணனை வழி அறிவது மிகச் சிறுபான்மை.

குறிஞ்சி, முல்லை, மருதம் என்ற மூன்று நிலங்களில் வாழும் கண்ணுக்கினிய காட்சியின்பம் நல்கும் மயில், குறிஞ்சி முல்லையுடன் தொடர்புடைய பாலையிலும் ஆங்காங்குக் காணப்படுவது. எனவே இந்நிலங்களின் இயல்பு வருணனையில் இடம் பெறும் சிறப்பிற்குரிய இம்மயில் முழுநிலையிலும் சினைநிலையிலும் பல பாடல்களில் வருணிக்கப் படுகின்றது. இதன் வடிவம் மட்டுமன்றி ஆடலும் வருணிக்கப் படுகின்றது. அகவலும் பல உவமைகளால் குறிக்கப்படுகின்றது.

**வாழிடம்**

இம்மயில்களில் மலையில் வாழ்வது மலைய மயில் (பா : 6) என்றும் கானில் வாழ்வது கானமஞ்ஞை (நற் : 276) என்றும் மருத நிலவயலில் வாழ்வது பழனமஞ்ஞை (புறம் 130) என்றும் வழங்கப்படுகின்றன.

இம்மூன்று நிலங்களிலும் வாழ்வதாகக் கூறப்படும் மயில் தொல்காப்பியரால் இன்ன நிலத்துக்குரிய கருப்பொருள் எனக் குறிக்கப்படவில்லை. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் கருப்பொருள் பற்றிய நூற்பாவிற்கு (தொல். பொருள், 20) உரை எழுதுங்கால் மயிலைக் குறிஞ்சி நிலத்துக்குரிய பறவையாகக் குறிப்பிட்டுள்ளனர். பின்வந்த நம்பியகப் பொருளிலும் (அகத் : 20) இவ்வாறே கூறப்பட்டுள்ளது. ஐங்குறுநூற்றிற்கு முன்னோர் வகுத்த உரையினைப் பின்பற்றி உரையும் விளக்கமும் எழுதியுள்ள பெருமழைப் புலவர் சோமசுந்தரனார் ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருள் பற்றிக் கூறும் இடத்து, குறிஞ்சி நிலத்திற்கு மயிலைக் கூறியிருப்பதோடு முல்லை நிலத்திற்கும் கூறியுள்ளார். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் காட்டுக்கோழியுடன் மயிலையும் கூறியுள்ளனர். இது ஏற்புடை ஒன்று எனலாம். முல்லை நிலத்திற்குரிய பெரும் பொழுது கார்காலம். அக்காலத்துடன் மிகவும் தொடர்புடையது மயில். கார் காலத்தில் மயில் தன் துணையுடன் கூடும் இயல்பினது. மேலும் மழைபெய்யும் காலம் கார்காலம். இம்மழையில் மகிழ்ந்து ஆடும் இயல்பும் உடையது மயில். முல்லை நிலத்தலைவி தலைவன் வரவிற்காகக் காத்திருக்க அக்காலை ஆடும் மயிலும் துணைப்பயிர்ந்து அகவும் மயிலும் பல பாடல்களில் தொடர்புபடுத்திப் பாடப்பட்டுள்ளன. இவ்வாறு முல்லை நிலத்தோடும் கார்காலத்தோடும் மிக நெருங்கிய தொடர்பு உடையதாக இலக்கியங்களில் பாடப்படுவது மயில். தவிர செடி கொடிகளற்ற வறண்ட மலைப்பகுதியிலன்றிக் கான் போன்று அடர்ந்து செழித்திருக்கின்ற மலைப்பகுதியில் வாழும் மயில்தான் குறிஞ்சித் திணையிலும் பாடப்படுகின்றது.

> 'இனமயில் அகவும் மரம் பயில் கானத்து
> நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்பப்
> படுமழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்
> குன்றம் நோக்கினென்' (குறுந். 249 : 1 - 4)

ஆகலின் மயில் குறிஞ்சி, முல்லை ஆகிய இருநிலங்களுக்கு முரிய பறவையாக ஏற்றுக் கொள்வது பொருத்தமுடையது.

### வடிவம்

மயில் பெரிய உருவமுடையது ('மாமயில்' பரி : 11); அழகு நிரம்பியது ('அணிமயில்' பரி : 5); பிற பறவைகளுக்கில்லாத தோகையும், உச்சிச் சூடும் கொண்டது ('வாகை ஒண்பூப் புரையும் உச்சிய தோகையர்' பரி : 14), உச்சிச் சூடு ஆண்மயில் பெண்மயில் இரண்டிலும் காணப் பெறுவது, தோகை ஆண்மயிலிடம் மட்டும் காணப் பெறுவது. பரியதாயினும் பறக்கும் ஆற்றல் உடையது (விசும்பாடு ஆய்மயில், நற் : 222).

### மகளிரும் மயிலும்

மயில் தன் அழகினால் சாயலினால் மகளிர்க்கு உவமையானது போன்று, மகளிரைத் தானும் உவமையாகப் பெற்றிருக்கின்றது. கபிலர் ஐங்குறுநூற்றில் மஞ்ஞைப்பத்து என்று ஒருபகுதியைப் பாடி மயிலுக்குப் பெருமை சேர்த்திருக்கின்றார். இப்பத்தில் அவர் மயிலுக்கு மகளிரை உவமை கூறியிருக்கின்றார். இவை ஒவ்வொன்றும் உள்ளுறைப் பொருள் உடையன எனினும் மயிலுக்கு உவமையாக வந்துள்ளமையின் இங்குச் சுட்டப் படுகின்றது.

வேங்கைமரம் நெருப்புப் போன்று மலர்ந்துள்ள மலர்களால் பொலிவுடன் விளங்குகின்றது. இப்பொலிவுடைய மரத்தில் வீற்றிருக்கின்றது ஒருமயில். அம்மயிலும் வேங்கை மலர்களால் அழகுபடுத்தப் பட்டிருப்பதால் அணிகளால் தன்னை அழகு படுத்தியிருக்கும் பெண் போன்று விளங்குகின்றது என்கிறார்.

'எரிமருள் வேங்கை யிருந்த தோகை
யிழையணி மடந்தையிற் றோன்று நாட' (ஐங். 294 ; 1-2)

வேங்கை மரத்திலமர்ந்திருக்கும் மயிலுக்கு அம்மரத்தின் மீதேறி மலர் கொய்யும் மகளிரையும் உவமையாகக் கூறுகின்றார் கபிலர்.

'விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரில் தோன்றும் நாட' (ஐங். 297 : 1 - 2)

இவ்வுவமைகளால் மயில் விரும்பி வேங்கை மரத்தில் உறையும் என்பதும் புலப்படுகின்றது.

புனவர் கொள்ளிக்கு அஞ்சிப் புகலிடம் தேடிப் பறக்கின்றது மயில். இம்மயிலுக்குப் பந்தைப் பின் தொடர்ந்து செல்லும் மகளிரை உவமை கூறுகின்றார்.

'புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை
இருவியிருந்த குருவி வருந்துறப்
பந்தாடு மகளிரின் படர்தரும்' (ஐங். 295 : 3 - 5)

**துழாய் மாலையும் மயிலும்**

பொதுவாகப் புலவர்கள் மகளிரையும் மயிலையும் இணைத்து நோக்க இறைப்பற்று மிக்க புலவர் ஒருவருக்கு மயில் துழாய் மாலை போன்று காட்சி தந்துள்ளது. பெரியதொரு வெண்கடம்ப மரம்; மலர்கள் செறிந்து மலர்ந்துள்ள இம்மரத்தின் கிளைகளில் வரிசையாக மயில்கள் பல அமர்ந்திருக்கின்றன. இக்காட்சி புலவருக்கு நாஞ்சிற் படையுடை பலதேவனாகவும் அவன் மார்பில் அணிந்துள்ள துழாய்மாலையாகவும் தோன்றுகிறது.

'கொடுமிடல் நாஞ்சிலான் தார் போல் மராத்து
நெடுமிசைச் சூழு மயில் ஆலும் சீர' (கலி. 36:1-2)

நிறத்தாலும், வரிசையாய் அமர்ந்துள்ளமையாலும் துழாய் மாலை மயில் கூட்டத்திற்கு உவமையாகியுள்ளது. பாலை பாடிய பெருங்கடுங்கோவினால் மயிலுக்குக் கூறப்பட்ட இவ் உவமை பிறவற்றினின்றும் மாறுபட்டுத் தோன்றுவது.

**நிறம்**

பலநிறம் தன்னிடக்துக் கொண்டதாயினும் பொதுவில் தோன்றுவது கருநீல வண்ணம். அதனால் பசுங்கிளி, பாசினம் ('செவ்வாய்ப் பாசினம' நற். 134:4) என்று வழங்கப் பெற்றது போல் இதுவும் மாயினம்,

'மடவ வாழி மஞ்ஞை மாயினம்' (குறுந். 251:1) என்று குறிக்கப்படுவது. மணிமயில் என்றும் நிறம் காரணமாக வழங்கப் படுவது.

'மணிமயில் உயரிய மாறா வென்றி' (புறம் 56:8) கருநீலத் துடன் இடை இடையே பசுமையும் விரவியிருப்பதால் பசுமயிலும் ஆகும்.

'பழனக்காவில் பசுமயில் ஆலும்' (பதிற்றுப். 3:17:8)

**மயிலின் உறுப்புக்கள்**

மயிலின் உறுப்புக்களில் வருணனை பெறும் சிறப்பினைப் பெற்றவை அதன் தோகை, பீலி, பீலிக்கண், முருந்து, உச்சிச்சூடு கண், கழுத்து, அடி, தலை, புறம் ஆகியவை. இவை பாடல்களில் ஆங்காங்கு உவமையுடன் ஆளப்படுகின்றன.

**தோகை**

மயிலுக்கே உரிய சிறப்பு உறுப்பாய் அமைந்து அதன் எழிலை மிகுவிக்கின்றமையின் இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெறுவது; பீலி, தோடு, கலவம், கலாவம், கலாபம் என்று பல பெயர்களும் உடையது; இத்தோகை நீண்டு அமைந்திருப்பது.

'ஒலி நெடும் பீலி' (புறம். 50)

சிறிய, நடுவில் கண் போன்ற வடிவமுடைய பீலியினால் ஆகியது. பீலியால் ஆகியமையின் ஆகுபெயராகத் தோகை என்று வழங்கப் படுகின்றது.

'பூஞ்சினை துழைஇக் கமழ் தாதாடிய கவின் பெறு தோகை' (நற்:396)

இப்பீலி இறகு போன்று உதிர்வதுண்டு.

'பழன மஞ்ஞை உகுத்த பீலி' (புறம்:13)

இப்பீலியில் அமைந்துள்ள கண் போன்ற அமைப்பு பீலிக்கண் என்று வழங்கப்படுகின்றது. பறையின் நடுவில் அமைந்துள்ள கண் இதற்கு உவமையாகக் கூறப்படுகின்றது.

'பாகலார் கைப் பறைக் கண் பீலித் தோகை' (அகம்.15)

பீலியின் வேர் அல்லது அடி முருந்து என வழங்கப்படுகின்றது. இம் முருந்து பலகறை போன்றது என்று கூறப்படுகின்றது.

'அலகையன்ன வெள்வேர்ப் பீலி' (மலை:234)

பீலி, பீலிக்கண், முருந்து போன்றவை உவமை பெறுவது போன்று தோகைக்கும் உவமை கூறப்படுகின்றது. பெண்ணின் கூந்தலுக்கு மயில் தோகை உவமையாக, அம்மயிலின் தோகைக்கு உவமையாக மகளிர் கூந்தல் கூறப்படுகின்றது.

'கொடிச்சி கூந்தல் போலத் தோகை அஞ்சிறை வரிக்கும்' (ஐங்:300)

ஆடுங்கால் இத்தோகையின் அசைவிற்கு ஆலவட்டத்தின் அசைவு ஒப்பிடப்படுகின்றது.

'மிசைபடு சாந்தாற்றி போல எழிலி
இசைபடு பக்கம் இருபாலும் கோலி
விடுபொறி மஞ்ஞை பெயர்புடனாட' (பரி:21)

**உச்சிச் சூடு**

மயிலின் தலையில் உள்ள கொண்டை போன்ற அமைப்பு உச்சிச் சூடு என வழங்கப்படுகின்றது. இது வாகைப் பூவினை வடிவால் ஒத்தது.

'வாகை ஒண்பூப் புரையும் உச்சிய தோகையார்' (பரி:14)

**கண்**

கண்ணின் அமைப்பு வருணிக்கப்படவில்லை எனினும் இதன் பார்வை பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. மயிலின் கண் மடக்கண் (புறம்.373) என்றும் போழ்கண் (குறுந். 391) என்றும் குறிப்பிடப்படுகின்றது. போழ் கண் என்பதற்கு நெடிதாய்ப் பிளந்து விட்டாற் போன்ற இமைகளை உடைத்தாதலால் போழ்கண் என்று பொ.வே. சோமசுந்தரனார் கூறுகின்றார். இவ்வுரை விளக்கமானது அன்று என்பது பி.எல். சாமியின் கருத்து. மயிலின் பார்வை ஊடுருவிச் செல்லும் தன்மையுடையது என்கிறார் இவர். மேலும் காடுகளில் புலி முதலிய விலங்குகளை முதலில் காணும் தன்மையுடைய இம்மயில் மற்ற விலங்குகளையும் பொருள்களையும் முட்டாள்தனமாக முறைத்து ஊடுருவிப் பார்க்கும் இயல்புடையது. இக்குணத்தால் பிற விலங்குகளுக்கு எளிதில் இரையாகும் இயல்புடையது[17] என்கிறார். மயிலின் இத் தன்மையினைப் புலவர் அறிந்திருக்க வேண்டும். அதனால் தான் மடக்கண் மயில் என்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

**கழுத்து**

மயிலின் கழுத்து மெல்லியது. நீலமணி போலும் நிற முடையது.

'மென்மயில் எருத்து' (குறுந். 183)

'நீலத்தன்ன நிறம்கிளர் எருத்து' (அகம். 358)

**அடி**

இலக்கியங்களில் இடம் பெறும் மயிலின் உறுப்புக்களில் அதன் அடியும் ஒன்று. இது வருணிக்கப்படுவதில்லை எனினும் நொச்சியின் இலைக்கு இது சில இடங்களில் உவமை கூறப்படுவதில் இருந்து வடிவில் நொச்சியிலை போன்றது என்றறிய முடிகின்றது.

'மயிலடி இலைய மாக்குரல் நொச்சி' (நற். 115)

மேற் கூறப்பட்டவை இலக்கியச் சான்றுகள் கொண்டு அறியப் பட்டவை. இவை ஓரளவுக்கு மயில் பற்றி அறிய உதவுவனவே யன்றி மயிலை அறியாதான் ஒருவனுக்கு முழுமையாக மயிலைக் கண்முன் காட்டுவன அல்ல என்பது இங்குக் கூறப்படவேண்டிய

---

17. பி.எல். சாமி: சங்க இலககியத்தில் புள்ளின விளககம்; கழகம்; சென்னை; 1976, ப. 198.

ஒன்று. மயில் பல உவமைகளில் இடம் பெறுகின்றது; பல உவமைகளைத் தானும் பெறுகின்றது. இருப்பினும் முழுமையான வருணனை பெறவில்லை. பாடு பொருளாய் சங்கப்பாக்களில் அமையாமையே இதற்குக் காரணம்.

**செயல் நிலை**

செயல் நிலையில் மயிலின் ஆடலும் அகவலும் பாடல்களில் இடம் பெறுகின்றன.

**மயிலின் அகவல்**

கார்காலம் தொடங்கிவிட்டது என்பது பல பாடல்களில் மயிலின் அகவலால் குறிக்கப்படுவதில் இருந்து மயில் கார்காலத்து அகவும் இயல்பினது என அறியலாம். அக்காலத்தில் மயில் கூடல் குறிப்பினொடு தன் துணையினை அருகு அழைத்தற் பொருட்டுக் குரல் கொடுக்கின்றது.

'பொறிவரி மஞ்ஞை
நனைப் பசுங் குருந்தின் நாறுசினை யிருந்து
துணைப் பயிர்ந்தகவும் துனை தரு தண்கார்'
(அகம். 85:11-13)

என்பதில் கார்காலத்தில் ஆண்மயில் பெண்மயிலை அழைப்பது காட்டப்படுகின்றது. பெண்மயிலும் ஆண்மயிலின் துணைநாடி அகவலுண்டு.

'இந்திர விழவின் பூவினன்ன
புன்றலைப் பேடை வரிநிழல் அகவும்' (ஐங். 62:1-2)

சற்றே வன்மையாக ஒலிக்கும் மயிலினது குரல் பலவாறாக உவமிக்கப்படல் நோக்கற்குரியது. பாடல்களில் இதன் குரல் இடம் பெறும் சூழல் இதனை அறிய உதவுகின்றது.

அரசன் வருகையை உணர்த்தும் பொருட்டு ஒலிப்பது வயிரினது ஒலி. இங்குக் கார்கால வருகையைத் தெரிவித்துத் தலைவன் விரைவில் வரப் போவதை அறிவிப்பது மயிலின் அகவல் எனவே அகவலுக்கு வயிரின் இசை பொருத்தமான உவமையாகின்றது.

'கானமஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை
அயிரி யாற்றடைகரை வயிரின் நரலும்' (அகம். 177:10-11)

'ஒலி நெடும் பீலி ஒல்க மெல்லியல்
கலிமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை' (நெடுநல்:98-99)

அகவல் எனின் அழைத்தல் என்பது பொருள் அதற்கேற்ப ஒருதோழிக்கு மயிலின் அகவல் பிரிந்து சென்ற தலைவனை விரைவில் வருக என அழைப்பது போன்று தோன்றுகின்றது.

'வாகை ஒண்பூப் புரையும் உச்சிய
தோகையார் குரல் மணந்து தணந்தோரை
நீடன்மின் வாருமென்பவர் சொற் போன்றனவே'

(பரி. 14:7-9)

மயிலின் குரல் மலையின் ஆரவாரத்திற்கும், மகிழ்ச்சிச் சூழலுக்கும் இணைப்பின்புலமாக அமைதலும் உண்டு. திருமாலிருஞ்சோலை திருமால் வீற்றிருக்கும் மலைகளில் எல்லாம் உயர்ந்தது என்று கூறும் புலவர் இளம்பெருவழுதியார், அதற்கான காரணங்களில் ஒன்றாக அங்கு எப்பொழுதும் எதிரொலிக்கும் மயிலின் அகவலைக் குறிப்பிடுகின்றார். இவருக்கு மயிலின் அகவல் இனிய முழவொலியாகக் கேட்கின்றது.

'மணிமருள் நன்னீர்ச் சினை மடமயில் அகவக்
குருகிலை உதிரக் குயிலினங் கூவப்
பகர்குழல் பாண்டில் இயம்ப அகவுநர்
நாநவில் பாடல் முழவு எதிர்ந்தன்ன' (பரி. 15:40-43)

குயிலின் குரல் குன்றின் முழையில் மிடற்றுப் பாடல் போன்று எதிரொலிக்க மயிலின் அகவல் முழவொலி போன்று எதிரொலிக்கின்றது என்கிறார். இவ்வெதிரொலிகள் மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கையின் எதிரொலி எனலாம்.

இளம்பெருவழுதியாருக்குத் திருமாலிருஞ் சோலையின் ஆரவாரத்தில் மயிலின்குரல் முழவொலியாய்த் தோன்றியது போல் நல்லழிசியாருக்கு அதே இனிய சூழலில் திருப்பரங்குன்றத்தில் கேட்கும் மயிலின் அகவல் இனிய பாலையிசையாகக் கேட்கின்றது.

'ஒருதிறம், பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடுகிளர் இளமை நிறை குறை தோன்ற
ஒருதிறம், ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற
மாறு மாறுற்றன போல் மாறு எதிர் கோடல்
மாறட்டான் குன்றம் உடைத்து' (பரி. 17:17-21)

மயிலின் அகவல் எல்லாச் சூழலிலும் இவ்வாறு இன்பம் பயப்பதாய் அமைவதில்லை. கார் காலம் வந்தும் தலைவன் வரவில்லை என வருந்தி நிற்கும் தலைவிக்கு மயிலின் அகவல் இது

கார்காலம் என அறிவுறுத்திக் கொண்டே இருப்பதால் முரண்பின் புலமாய் அமைந்து இன்னாவோசை ஆகின்றது:

'குடுமி நெற்றி நெடுமாத் தோகை
காமர் கலவம் பரப்பி ஏமுறக்
கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த
வல்இலைக் குருந்தின் வாங்குசினை இருந்து
கிளிகடி மகளிரின் விளிபடப் பயிரும்
கார்மன் இதுவால்' (அகம். 194:11-16)

தினையினை உண்ணவிடாது விரட்டுகின்ற மகளிரின் ஒலி போல உள்ளது இம்மயில்களின் ஆரவாரம் என்கிறாள் தலைவி. கார்ப்பருவம் வந்துற்றமை கண்டு மகிழ்ந்து அகவுகின்றது மயில். தலைவன் வாராமை குறித்துத் துயருழந்து நிற்கிறாள் தலைவி. இச்சூழலில் தினையை உண்ணவிடாது தடுக்கும் மகளிர் ஒலி கிளிக்கு இன்னாதது போன்று, கார்காலத்தினை நினைவு படுத்திக் கொண்டே இருக்கும் மயிலின் அகவலும் தலைவிக்கு இன்னாததா கின்றது. இதே சூழலில் மற்றொரு தலைவியும் மயிலின் அகவலை இன்னாவொலி என்று வெளிப்பட உரைக்கின்றாள்.

என்னெனப் படுங்கொல் தோழி மின்னுபு
வானேர்பு இரங்கும் ஒன்றோ அதனெதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்
ஏதில கலந்த இரண்டற்கு என்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே (குறுந். 194)

பிரிந்த தலைவன் மீள்கின்ற காலமும் கார்காலம். மயில் தன் துணையை அழைக்கும் காலமும் கார்காலம். ஆகலின் மயிலின் அகவல் இங்ஙனம் பலபடப் பாடப்படுகின்றது.

### மயிலின் ஆடல்

மயிலை அழகு படுத்தும் தோகை முழு அழகுடன் பொலிவது, அதனை விரித்து மயில் ஆடும் போது. கார்காலத்தில் அகவுவது போன்று அக்காலத்தில் மேகம் திரளும் போதும் இடி இடிக்கும் போதும் மயில் தன் தோகை விரித்து ஆடும் இயல்புடையது.

'மழை வர வறியா மஞ்ஞை யாலும்' (ஐங். 298)

மேகம் திரள்வது அறிந்து மழைவரப் போவதை உணர்ந்து மயில் ஆடுகின்றது என்கிறார் இப்பாடலில் புலவர்.

'கழனி உழவர் தண்ணுமை இசைப்பின்
பழன மஞ்ஞை மழை செத்தாலும்' (பதிற்றுப் 9:10.41-42)

தண்ணுமை ஒலியினை மேகத்தின் முழக்கமென எண்ணிமயில் ஆடும் என்ற பொருள் கொண்ட இவ்வடிகள் இடியொலிக்கு மயில் ஆடும் இயல்பின என்பதை உணர்த்துகின்றன.

மழை பெய்யினும் மகிழ்ந்தாடும் இயல்பின என்பதை,

'மடவ வாழி மஞ்ஞை மாயினம்
காலமாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின' (குறுந். 251:1-3)

எனும் இப்பகுதி காட்டுகின்றது.

கபிலர் மயிலின் ஆடலை மிகச் சிறந்த சொல்லோவியமாக்கியிருக்கின்றார். ஆடும் திறன் பெற்ற விறலிக்கு மயிலை உவமை கூறல் மரபு. இம்மரபினை மாற்றி மயிலுக்கு விறலியை உவமை கூறியிருக்கிறார் இவர். ஓர் அழகிய இயற்கை அரங்கில் மயிலாக விறலியை ஆடவிட்டிருக்கின்றார்.

மூங்கில்கள் வளர்ந்துள்ள பக்கமலை கூத்தாட்டு அரங்கு. ஆடும் விறலி மயில். இசையின்றி ஆடல் சிறக்காதாகலின் அசைகின்ற மூங்கிலின் கண் வண்டுகளால் துளைக்கப்பட்ட துளைகளில் காற்று மோத எழும் ஒலி இனிய வேய்ங்குழல் ஓசை. அருவி மலையினின்று இழிதர எழும் இன்னோசை மத்தளத்தின் முழக்கம். கலைமான்களின் கடுங்குரல் பெருவங்கிய ஓசை. மலைச்சாரலில் முரலும் வண்டுகளின் இசை யாழிசை. இவ்விசைகளின் துணையுடன் மயில் ஆடுகின்றது. புலவருக்கு இவ்வரங்கமும் ஆடும் மயிலும் இசைக்கருவிகளின் இன்னொலியும் மட்டும் போதாது என்று தோன்றுகிறது. ஏனெனில் கலை பிறரால் அனுபவிக்கப்படும் பொழுதுதான் கலைஞன் மனம் நிறைவுறும். புலவரும் கலைஞர் ஆகலின் இதனை நன்குணர்ந்து இசையோடு இயைந்த ஆடலை வியந்து நோக்கும் மந்திகளை அவையினர் என்கிறார்.

'ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை அவ்வளி குழலிசையாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடமை முழவின் துதை குரலாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப் பூஞ் சாரல் வண்டு யாழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலி சிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும் மயில்
விழவுக்கள விறலியில் தோன்றும' (அகம் 82:1-10)

மயில் தொடர்பான வருணனைகளில் மிக நெடிய, அழகிய வருணனை இது. சங்க இலக்கியத்தில் இப்படி அமைகின்ற நெடிய வருணனைகள் மிகவும் குறைவு. மேலும் கருத்து அல்லது உணர்வு விளக்கமற்ற வருணனைகள் பொதுவாக இடம் பெறுவதுமில்லை. அவ்வாறிருக்க இந்நெடிய காட்சியமைப்பு ஏன் எனச் சிந்திக்கத் தோன்றுகிறது. தலைவன்பால் உள்ளம் பற்றுக் கொண்டுவிட்ட நிலையில் அதனால் ஏற்பட்ட இன்பமும் மனக்கலக்கமும் தலைவியை அவளது தோழியரிடமிருந்து உள்ளத்தால் சற்று விலகச் செய்கின்றன. முன்போல் அவர்களோடு அவளால் கலந்து மகிழ இயலவில்லை. இப்பற்றின்மைக்குக் காரணமான தலைவனின் நட்பு பற்றித் தோழியிடம் அறத்தொடு நிற்க முயலும் தலைவி தரும் நெடிய வருணனைதான் இது. தலைவனைப் பற்றிக் கூற நாணும் தலைவி அத்தலைவனது குன்றத்தினை இங்ஙனம் வருணிக்கின்றாள். இக்குன்றத்தில் நடைபெறும் மயிலின் ஆடல், தலைவனைச் சேர்ந்து இன்பம் அடைய விழைவதை உணர்த்தி நிற்கின்றது. தலைவன் நாட்டை இவ்வளவு ஈடுபாட்டுடன் உரைப்பதிலிருந்து தலைவனுடன் தன்மனம் ஒன்றிவிட்ட நிலையினையும் புலப்படுத்துகின்றாள். எனவே இங்கு மயிலின் ஆடல் வருணனை தலைவியின் விழைவை வெளியிட்டு நிற்கின்றது. (அகமாந்தர் உள்ளக் குறிப்பு தொடர்பானவை இவண் விலக்கப்பட்டிருப்பினும் வருணனைகளில் நெடுமையாக இருப்பதனால் இது சுட்டப்படுகின்றது.)

மயில் பற்றிய வருணனைகள் இவ்வாறாக இலக்கியங்களில் பல இடங்களில் பயின்று வந்துள்ளன. முன்பே கூறியது போல் இவை நெடிய வருணனைகளோ அல்லது மயிலின் முழுவடிவினை ஓவியம் போன்று தருகின்ற வருணனைகளோ அல்ல. இருப்பினும் அவை மயிலின் அழகிய தோற்றத்தை, ஆடல் திறத்தை, அதன் இனிய—வன்குரலை உணர்த்துவதில் வெற்றி பெற்றுள்ளன. மயிலின் தோற்றத்தாலும் குரலாலும், ஆடலாலும் புலவர் அக இலக்கியமாந்தரின் தோற்றம், பண்பு, மனநிலை, சூழல் இவற்றை விளக்குவதை முதல் நோக்கமாகக் கொண்டமை இக்குறுகிய வருணனைக்குக் காரணம் எனலாம். அவ்வாறு இருந்தும் மயில் தானும், தன் உறுப்புக்களும் எவற்றிற்கு உவமையாய் அமைந்தனவோ அவற்றைத் தனக்கும், தன் உறுப்புக்களுக்கும் உவமையாய் வருணனையில் பெறும் சிறப்பினை அடைந்துள்ளமை மயில் வருணனையில் குறிப்பிடத் தக்கது.

## மயிலும் தற்குறிப்பேற்றமும்

தான் சொல்ல விழையும் கருத்தினை, இயல்பாக நடைபெறும் ஒரு செயலில் அல்லது இயற்கைக் காட்சியில் கவிஞன் ஏற்றி யுரைப்பது தற்குறிப்பேற்றம் (தண்டி : 55) எனப்படுகின்றது. இது உவமையுடன் இணைந்து வரும் இயல்பும் உடையது. இத் தற்குறிப்பேற்றம் குறிப்பாக அன்றி வெளிப்படையாகக் கருத்தினைப் புலப்படுத்தி நிற்பது. மன உணர்வினை வெளிப் படுத்தற்கு மிகச் சிறந்த உத்தியாய்ப் பயன்படுவது.

சங்க இலக்கியங்களில் மறைத்துப் பொருளுணர்த்தும் உள்ளுறையும் குறிப்புப் பொருளும் பெருவழக்காய்க் காணப்பட தற்குறிப்பேற்றம் மிக அருகிக் காணப்படுகின்றது. வெளிப்பட உரைப்பதாய் அமையினும் உள்ளுறுத்துப் பொருள் புலப் படுத்துவது நல்கும் சுவையை இதுவும் நல்குகின்றது.

மயில் தொடர்பான தற்குறிப்பேற்றம், சங்க இலக்கியங்களில் கலித்தொகையிலும் பரிபாடலிலும் காணப்படுகின்றது. அவற்றிலும் கூட ஒன்றிரண்டே காணப்படுவது, அதன் அருமை யினை உணர்த்தும். அருகிய வழக்காய் விளங்கிய அணியிலும் பயின்று வருவது மயிலின் சிறப்பினை மிகுவிக்கும்.

மயிலின் ஆடல், அகவல் இரண்டும் தற்குறிப்பேற்றத்திற்கு இடந்தந்துள்ளன. இரண்டுமே தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் மனநிலையினை வெளிப்படுத்தி நிற்கின்றன.

கார்காலத்தில் வினை முடித்து மீள்வதாகக் கூறிச் செல் கின்றான் தலைவன். கார்கால வரவிற்காகக் காத்திருக்கின்றாள் தலைவி. கார்காலம் தொடங்குகின்றது. தலைவனும் வினைமுற்றி மீள்கின்றான். பிரிந்திருந்த இருவரும் இணைகின்றனர்.

> நின்னே போலும் மஞ்ஞைஞபால நின்
> நன்னுதல் நாறும் முல்லை மலர
> நின்னே போல மாமருண்டு நோக்க
> நின்னே உள்ளி வந்தனென்
> நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே (ஐங். 492)

கார்காலத்தில் மழை பொழிகின்றது. இம்மழையை விரும்பி வரவேற்கும் மயிலும் தன் துணையை அகவி அதனுடன் இணை கின்றது. இங்ஙனம் தலைவியும், மயிலும் கார்காலத்தை எதிர்

நோக்குவதில், இணைந்து இன்பம் காண்பதில் ஒன்றுபடுகின்றனர். இதன் காரணமாகத் தலைவியின் மன உணர்வினைப் புலப்படுத்த மயில் பொருத்தமான கருவியாகின்றது.

## மயிலின் ஆடல்

மயிலின் ஆடல் இரு பாடல்களில் தற்குறிப் பேற்றத்திற்கு இடம் தந்துள்ளது. இரு பாடல்களிலும் தலைவியின் நிலை தலைவனின் பிரிவால் வருந்தி அவன் வரவினை எதிர்நோக்கி நிற்பதாகவே அமைகின்றது. இங்குக் காட்டப்படும் மயிலின் ஆடல் முரண்பின்புலமாய் அமைந்து அவலத்தை மிகுவிக்கின்றது. மயிலின் ஆடல் குறிப்பிடப்படுகின்றதெனினும் காலம் கார்கால மன்று; இளவேனிற் காலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இளவேனிற்காலத்து இல்லம் திரும்புவதாக உறுதியுடன் கூறிச் சென்ற தலைவன் சொன்னதுபோல் செயல்படவில்லை. இளவேனில் தொடங்கியும் தலைவன் வாராமையின் உள்ளம் நலியும் தலைவி தன்னைச் சுற்றிலும் நோக்குகின்றாள். தன்னைத் தவிர உலகம் முழுவதும் இன்பமாய் இருப்பது போல் உணர் கின்றாள். தான் வருந்தியிருக்க உலகம் இன்புற்றிருப்பது தன்னை இகழும் குறிப்புடையது என்று எண்ணுகிறாள்.

'நகுவன போல் நந்தின கொம்பு; நைந்துள்ளி
உகுவது போலும் என் நெஞ்சு; எள்ளித்
தொகுபுடன் ஆடுவ போலும் மயில்' (கலி 33 : 16-18)

இணைந்திருக்கும் காலத்துத் தன் சாயலுக்குத் தோற்ற மயில்கள் இன்று கார்காலமில்லை எனினும் கூட ஏன்மகிழ்ந்தாட வேண்டும்? பிரிவினால் உடல் பொலிவினை இழந்ததனால் இவை மகிழ்ந்து இன்று தம் சாயற்கு இவள் தோற்றாள் என்று எள்ளி அம்மகிழ்ச்சி யில் ஆடுகின்றன போலும் என்றரற்றுகின்றாள் தலைவி. தம்மியல்பில் மயில்கள் ஆடுகின்றன. ஆனால் அவ்வாடல் தன்னை இகழும் குறிப்புடைத்து எனத் தன் எண்ணத்தை ஏற்றி உரைக் கிறாள் தலைவி.

தன் அழகு கெட்டமையினால் தான் இங்ஙனம் மயில் ஆரவாரித்து ஆடுகின்றது என்று பின்வரும் பாடல் தலைவியும் கூறுகின்றாள்.

'கன்மிசை மயிலாலக் கறங்கியூர் அலர்தூற்றத்
தொன்னலம் நனிசாய நம்மையோ மறந்தைக்க

ஒன்னாதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும்
விரும்பார் கொல்' (கலி 27:13-16)

தலைவன் அருகிலிருக்கும்போது தன் அழகு கண்டு பெருமை கொண்ட தலைவி, பிரிவில் அழகும் பொலிவும் தன்னை விட்டு நீங்க வருந்துகிறாள். பொலிவிழப்பு ஊராருக்கு அவள் நிலையை வெளிப்படுத்தி விடுவது இதன் காரணமாகும். சுற்றிலும் உள்ளோர் தன்னிலை உணராது உரைப்பதுடன் மயில்களும் ஆரவாரத்துடன் ஆடுவது அவளைப் புலம்ப வைக்கின்றது. தான் நலனழிந்து நிற்பது கண்டே மயில்கள் மகிழ்ச்சியுடன் ஆடுகின்றன என்கிறாள்.

## மயிலின் அகவல்

மயிலின் ஆடல் பகைமை உணர்வுடன் எள்ளி நகைப்பது போல் தலைவிக்குத் தோற்றமளிக்கின்றது. இதற்கு நேர்மாறாகத் தோழிக்கு மயிலின் அகவல், பிரிந்து சென்ற தலைவனை விரைவில் வாரும் என்று அழைப்பது போல் தோன்றுகின்றது. கார்காலத் தொடக்கத்தில் மீள்வதாகக் கூறிச் செல்கின்றான் தலைவன். வேனிற்காலம் வருகின்றது. அக்காலத்தும் மழை பொழிகின்றது. மழையின் மிகுதி கார்காலத்தை நினைவுபடுத்தக் கலங்கி நிற்கிறாள் தலைவி. அவளது ஆற்றாமை கண்ட தோழி அவளை 'ஆற்றுவிக்க மயிலைத் துணைக்கழைக்கின்றாள். 'கலங்காதே! வாகை ஒண்பூ ஒத்த உச்சியினை உடைய மயில்கள் அகவும் குரல் கேட்கின்றது. அக்குரல் நின்னை மணந்துபின் பிரிந்த தலைவரைக் காலம் தாழ்த்தாது விரைந்து வருக என அழைக்கும் சொற் போன்று இருக்கின்றது. எனவே கார்காலம் நினைவிற்கு வரத் தலைவன் விரைவில் மீள்வான்' என்றுரைக்கின்றாள்.

'வாகை ஒண்பூப் புரையும் உச்சிய
தோகையார் குரல் மணந்து தணந்தோரை
நீடன்மின் வாரும் என்பவர் சொற்போன்றனவே'
(பரி 14 : 7-9)

மயில் மழை கண்டு தன்னியல்பில் அகவுகின்றது. தலைவியின் ஆற்றாமை கண்டு வருந்தும் தோழிக்கு அம்மயிலின் அகவல் தன் விருப்பம் போன்றே தலைவனை விரைவில் வரச்சொல்லி அழைக்கும் குரலாய் ஒலிக்கின்றது. இப்பாடல் வரிகள் தலைவி இன்பமே தன்னின்பம்; அவளது துன்பம் தன் துன்பம் என

எண்ணித் தலைவியின் உணர்வுடன் இரண்டறக் கலந்து ஒன்றி வாழும் தோழியின் மனநிலையினையும் காட்டுகின்றன.

தான் இன்புற்றிருக்கும் போது உலகமே இணைந்து இன்புற வேண்டும் என எண்ணுவதும், துன்புற்றிருக்கும் போது உலகமே துக்கம் காக்க வேண்டும் என விழைவதும் மனித இயல்பு. அதனால் தான் பிரிவுத்துயரால் வருந்தும் போது மயில் ஆடுவது தலைவியின் வருத்தத்தை மிகுவிக்கின்றது. தலைவி வருந்தி ஆடலும் பாடலுமின்றி ஒருபுறம் ஒதுங்கியிருந்தாள் என்று கூறுவதனினும், அதற்கு முரணாக மயில்கள் ஆடின; ஆரவாரம் செய்தன என்றுரைத்து, தலைவியின் அவல உணர்வினை மிகுவித்துக் காட்டுவதன் மூலம் சுவையையும் மிகுவிக்கின்றது. அதே போன்று உன் துன்பத்தைத் தீர்ப்பதில் மயிலும் பங்கு கொண்டு தலைவனை விரைவில் விரும்படி அழைக்கின்றது என்று தோழி கூறும் போது தன் துன்பத்தில் பிறரும் பங்கேற்கின்றனர் என்ற எண்ணம் தலைவியின் துன்பத்தைக் குறைத்து ஆற்றுவிக்கின்றது. இங்கு உளவியல் அடிப்படையில் மயிலின் ஆடலும் அகவலும் அமைந்து துன்பத்தை மிகுவிக்கவும் குறைக்கவும் பயன்பட்டுள்ளமை அறியலாம்.

இவ்வாறு மயில், உவமை முதலான பல அணிகளிலும் இடம் பெற்றுப் பொருணயம் சிறக்க, இலக்கிய நயம் மிக உதவுகின்றது.

# மயிலும் சமயமும்

எழில் நலனும் ஏற்றம் மிகு தோற்றமும் கொண்ட மயில் ஐந்திணைகளுடன் மட்டுமின்றிச் சமயத்துடனும், தொடர்புடையது. இன்று அனைத்துச் சமயங்களுடனும், இறைச் சமயம் இறையிலிச் சமயம் என்ற வேறுபாடின்றி ஏதேனும் ஒரு வகையில் தொடர்பு கொண்டு விளங்க சங்க காலத்தில் குறிஞ்சி நிலக் குமரனின் ஊர்தியாக, கொடியாக மயில் பாடப் பெற்றுள்ளது.

மனிதனின் எண்ணங்களை, உணர்வுகளை, செயல்களை இயற்கையோடு இணைத்துப் பாடுதலையே இயல்பாகக் கொண்டிருந்த சங்கப் புலவர் இறைவனை மிக அருகிப் பாடியுள்ளனர். பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையும், பரிபாடலில் செவ்வேள் பற்றியும் (8 பாடல்கள்) திருமால் பற்றியும் (6 பாடல்கள்) அமைந்த பாடல்களே இறைவனைப் பற்றிய பாடல்கள். திருமால், முருகன் தவிர மணி மிடற்றோனாகிய சிவன் (புறம். 56), கொற்றவை (திருமுருகு), பலதேவன் (புறம் 56), பிரம்மன் (பரி. 8) ஆகியோரும் ஆங்காங்குப் பிற சங்க இலக்கியங்களில் சுட்டப் பட்டுள்ளனர். இவற்றை நோக்க முருகனே மிகுதியும் பாடல் பெற்றவன் என அறியலாம்.

> 'மண்மிசை அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
> புண்மிசைக் கொடியோனும் புங்கவ மூர்வோனும்
> மலர்மிசை முதல்வனும்......'
> 'பற்றா கின்று நின் காரணமாகப்
> பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்' (பரி 8: 1-3, 10-11)

என்று அரியும் அரனும் அயனும் தேவரும் பிறரும் புடை சூழத் திருப்பரங்குன்றத்து முருகனைக் காண வேண்டி வந்துறைந்தனர்

எனக் கூறு முகத்தான் முருகனைத் தனக்குவமை இல்லாதவனாக மூவரினும் முதல்வனாகக் கருதி வந்தமையும் புலப்படும்.

முருகன் ஆறுமுகத்தினன்; பன்னிரு கரத்தினன்; ஆறு படைவீட்டினன்; ஆலமர் செல்வன் மகன்; கொற்றவையின் குமரன்; செம்மேனியன்; சூரனை வென்றவன்; தேவரின் படைத்தலைவன்; இந்திரனையும் பிரம்மனையும் வென்றவன்; மறம், சீற்றம், போர் விழைவு இவற்றிற்கு எடுத்துக் காட்டாய் இலங்குபவன்; சரவணப் பொய்கையில் தோன்றியவன்; கார்த்திகை மகளிரால் வளர்க்கப் பெற்றவன்; மாஅல் மருகன்; தெய்வயானைக்கும் வள்ளிக்கும் மணவாளன்; வெறியாட்டினை உவந்து ஏற்றுக் கொள்பவன்; கடம்பமலர் மாலையினன் எனத் திருமுருகாற்றுப் படையும் பரிபாடலும் பகர்கின்றன.

### மயிலும் முருகனும்

மயில் இம்முருகனின் ஊர்தியாகவும், கொடியாகவும் விளங்கும் சிறப்புப் பெறுவது.

'விறல் வெய்யோன் ஊர் மயில்' (பரி 8: 67)

'பல்பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ' (திருமுருகு: 122)

முருகனின் பன்னிரு கரங்களில் ஒரு கரத்தில் மயில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

'ஆ அங்கவரும் பிறரும் அமர்ந்து படையளித்த
மறியும் மஞ்ஞையும் வாரணச் சேவலும்
பொறிவரிச் சாபமும் மரனும் வாளும்
செறியிலை ஈட்டியும் குடாரியும் கணிச்சியும்
தெறுகதிர்க் கனலியும் மாலையும் மணியும்
வேறு வேறு உருவின் இவ்வாறு இருகைக் கொண்டு
மறுவில் துறக்கத்து அமரர் செல்வன் (பரி 5: 63-69)

### மயிலூர்தி

சங்க இலக்கியங்களில் முருகனின் ஊர்தியாக மயில், ஆடு, யானை மூன்றும் குறிக்கப்படுகின்றன.

'சேயுயர் பிணிமுகம் ஊர்ந்தம ருழக்கி (பரி. 5: 2)

'தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங் கொடியன்'
(திருமுருகு: 210)

'கூற்றத்தன்ன மாற்றரு மொய்ம்பின்
கால் கிளர்ந்தன்ன வேழமேல் கொண்டு (திருமுருகு: 81-82)

இவற்றை நோக்க, மயிலுடன் யானை, ஆடு, போன்றவையும் முருகனின் ஊர்தியாகும் சிறப்புப் பெற்றிருந்தமை புலப்படும். பரிபாடல் ஆட்டை முருகனின் ஊர்தியாகக் குறிப்பிடவில்லை என்பது நோக்கத்தக்கது.

முருகன் ஊரும் மயில் பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்புக் கள் மிக அருகிக் காணப்படுகின்றன. பொதுவாக மாமரமாய் நின்ற சூரனை முருகன் வெட்டி வீழ்த்த அது இருகூறாய்ப் பிரிந்து ஒரு கூறு மயிலாகவும் ஒருகூறு சேவலாகவும் மாற முருகன் மயிலைத் தன் ஊர்தியாகவும் சேவலைத் தன் கொடியாகவும் ஏற்றான் என்ற கருத்து நிலவுகின்றது. சூர்மா தடிந்தது (பரி 5,7,9, 70) சங்க இலக்கியங்களில் கூறப்படினும் சூரனின் ஒரு கூறை மயில் ஊர்தியாக முருகன் கொண்டான் என்ற குறிப்பு இல்லை. அதற்கு மாறாக வேறொரு கருத்துக் கூறப்படுகின்றது.

அக்கருத்து, குழவிப்பருவத்துக் குமரனுடன் இந்திரன் போரிட, விளையாட்டாகச் செய்த அப்போரில் படைக்கலமின்றிக் கைகளினாலேயே அவ்விந்திரனைப் புறமிட்டோடச் செய்ய, இத்தகு ஆற்றலுடைய இம்முருகனே அமரர் படைக்குத் தலைவனாம் தகுதியுடையவன் என்று கருதி, தீக்கடவுள், தனது உடலின் தீத்தன்மையினின்றும் ஒரு கூறைப் பிரித்து வளமான கோழிச் சேவலாகக் கொடுக்க அது கண்ட இந்திரன் தானும் தனது தன்மையினின்றும் ஒரு கூறைப் பிரித்துப் புள்ளிகளை உடைய தோகையால் அழகுபெறும் மயிலாக்கிக் கொடுத்தான் என்பது. அதுகாலைத் திருந்திய செங்கோன்மை உடைய கூற்றுவன் தனது தன்மையினின்று ஒரு கூறு பிரித்து, கரிய கண்ணை உடைய அழகிய வெள்ளாட்டுக்குட்டியாகக் கொடுத் தான்.

அவ்வாறாயின் முருகனின் ஊர்தியாக இருமயில்கள் இருந்தன எனக் கொள்ளவேண்டியுள்ளது. சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை முருகன் மயிலூர்தியன் என்று குறிப்பிடப்படு கின்றதேயன்றி அம்மயில் பற்றிய குறிப்பு எதுவும் கூறப்படவில்லை. இருப்பினும் 'சுவாமிக்கு வலப்புறம் மயில்தலை இருந்தால் அது தேவமயில் என்பர். இந்திரனே மயிலாக வந்தான் என்பது புராணம். இடப்புறம் தலையிருந்தால் அது அசுரமயில் சூரபத்மன் மயிலாக வந்த நிலை' என்ற கூற்றை நோக்க தேவேந்திரன் தந்த மயிலும், சூரனின் கூறாய் அமைந்த மயிலும் ஊர்தியாகக் கொண்டவன் குமரன் என்று கொள்ளல் பொருந்தும்.

'சூரபதுமன் சிவபெருமானை நோக்கித்தவம் புரிந்து அழியா உடலைப் பெற்றான். அதனாலேதான் அவன் உடல் அழியாது, இன்றும் சேவலும் மயிலுமாய் முருகப் பெருமானோடு நமக்குக் காட்சி தருகிறான்' என்ற கருத்தும்[1] இங்கு இணைவு காணத் தக்கது. காலப்போக்கில் யானை, மயில், ஆடு என்று மூன்று விலங்குகள் ஊர்தியாய் அமைந்த நிலைமாறி மூன்று மயில்கள் முருகனின் ஊர்தியாகக் கூறப்படுகின்றன. அதாவது 'முருகப் பெருமானின் மயில்வாகனங்கள் மூன்று. ஒன்று இந்திரன் கொண்ட தேவமயில் உருவம். இது தெற்கு முகமாக இருக்கும். மற்றொன்று சிவபெருமான் அளித்த மயில். இது நேர்முகமாக இருக்கும். மயிலத்தின் தலப்பெருமை என்னவென்றால், மயில் வடக்கு முகமாக இருக்கும். இது சூரபதுமன் கொண்ட மயில் உருவம். இது அசுரமயில்' என்பர்.[2]

போரில் வெற்றிபெற்றமையின் இந்திரனின் மயிலையும் ஆணவத்தை அழித்தமையின் சூரனின் மயிலையும் ஊர்தியாகப் பெற்றமையின்,ஒருமயில் வெற்றியின் குறியீடாகவும், மற்றொன்று ஆணவம் அல்லது அகம்பாவ அழிவின் குறியீடாகவும் கொள்ளலாம்.

'நான் என்னும் அகங்காரம் சேவலாகவும், 'எனது' என்னும் மமகாரம் மயிலாகவும் வந்தது என்று குறிப்பிடும் போது, முருக நாம ஜெபம் செய்யும்போது நான் என மயக்கும் பசுஞானம் சேவலாக எனது என மயக்கும் பசுஞானம் மயிலாக முருகனைச் சுமக்கும் பணியை ஏற்றது'[3] என்ற கருத்தும்,

'சூரனிடம் இருவகை உணர்வுகள் குடிகொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று ஆணவமாகிய அறியாமை. மற்றொன்று உண்மை யாகிய ஞானம்.........சூரனது இந்த ஞானமே கோழிக் கொடியா கின்றது. ஞானம் போற்றுவதற்கு உரியது. அது மேன்மேலும் உயரும் என்பதற்கு அடையாளமாகவே குமரன் கோழிக் கொடியை உயர்த்திப் பிடிக்கின்றான். அறியாமையாகிய ஆணவத்தைக் காலால் அழுக்கி, மேலோங்க விடாமல் செய்தல் வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் அறியாமையின்

1. இ மு. சுப்பிரமணியபிள்ளை, வானநூல், A Glimpse of Tamilology (தமிழியற் காட்சிகள்); வ. சுப. மாணிக்கம் (பதி); பாரிநிலையம்; சென்னை; சன. 1968; பக் 60-64
2. டி. எல். அருண்; ஆனந்தவிகடன்; 4-11-84; ப. 46
3. திருவருள். மலர் 2, இதழ் 7; பக். 23-24

வடிவமாகிய மயில் மேலமர்ந்து ஊர்கின்றான் என அறிதல் வேண்டும்' என்ற கருத்தும்[4] இவண் இணைத்து நோக்கத்தக்கன

இனி, முருகன் ஊர்தி பிணிமுகம் என வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. இப்பிணிமுகம் யானை என்றும் மயில் என்றும் இரு கருத்துக்கள் நிலவுகின்றன. முருகனுக்கு யானையும் ஊர்தியாக விளங்கியுள்ளமையின் இக்கருத்து வேறுபாடு தோன்றியுள்ளது. முருகனின் ஊர்திமட்டும் பிணிமுகம் எனக் குறிப்பிடப் படுவதில் இருந்து இது மயில் அல்லது யானைக்கான வேறு பெயரன்று; முருகனின் ஊர்திக்கே உரிய பெயர் என அறிய முடிகின்றது. யானை அல்லது மயில்தான் பிணிமுகம் என்று அறுதியிட்டுக் கூறும்போதுதான் சிக்கல் எழுகின்றது.

திருமுருகாற்றுப்படையில் 'ஓடாப் பூட்கை பிணிமுகம் வாழ்த்தி' (247) என்ற தொடருக்குப் பொருள் கூறுங்கால், பிணிமுகம் என்பதனைப் பட்டம் எனக்கொண்டு அதனையுடைய யானை என்கிறார் நச்சினார்க்கினியர். 'இதற்கு மயில் என்று பெரும்பாலோர் பொருள் கூறுவர். பிணிமுகம் என்பது முருகன் ஏறும் யானை ஒன்றற்கே பெயர் என்பாரும் உளர்' எனக் கூறுகின்றார் பொ.வே சோமசுந்தரனார். கு. கோதண்டபாணியும் பிணிமுகம் யானை என்று கருத்துத் தெரிவிக்கின்றார். அவர், "மணிமயில் உயரிய மாறாவென்றிப் பிணிமுக ஊர்தி (புறம் 56) என்பர் புறப்பாட்டில் நக்கீரர் வணங்கிய முருகனுக்குக் கொடி மணிமயில், ஊர்தி பிணிமுகம் என்பவை இப்பாடலால் உறுதியாகின்றன. பிணிமுகம் என்பது மயிலாகாது, யானையே என்பதையும் இப்பாட்டு உறுதி செய்கின்றது" என்கிறார்.[5] மேலும் இவர், "பிணிமுகத்தையும் மஞ்ஞையையும் ஒரே பொருள் என முதன் முதற் கொண்டவர் கல்லாடர் போலும்! 'பிணிமுக மஞ்ஞை செறுமுகத்தேந்திய மூவிருமுகத்து ஒரு வேலவர்க்கு' (கல்லாடம் 7)" என்ற கருத்தையும்[6] அளிக்கின்றார்.

இனி, சித்தாந்த இதழாசிரியர், 'பிணிமுகம் என்பது சங்க நூல்களில் காணப்படும் சொல். இதற்கு இருவகையாகவும்

---

4. தமிழ் நாகனார்; செவ்வேளின் சேவற்கொடி; டாக்டர் குருசுவாமி முதலியார் தொ.து.வே. மேல் நிலைப்பள்ளி ஏழாவது ஆண்டுவிழா மலர்; 1982; ப. 37
5. கு. கோதண்டபாணிபிள்ளை; பழைய உரைத்திறன்—திருமுருகாற்றுப்படைத் திறன்; கழகம்; சென்னை; 1972; பக். 17-18
6. மேற்படி பக். 18

'சூரபதுமன் சிவபெருமானை நோக்கித்தவம் புரிந்து அழியா உடலைப் பெற்றான். அதனாலேதான் அவன் உடல் அழியாது, இன்றும் சேவலும் மயிலுமாய் முருகப் பெருமானோடு நமக்குக் காட்சி தருகிறான்' என்ற கருத்தும்[1] இங்கு இணைவு காணத் தக்கது. காலப்போக்கில் யானை, மயில், ஆடு என்று மூன்று விலங்குகள் ஊர்தியாய் அமைந்த நிலைமாறி மூன்று மயில்கள் முருகனின் ஊர்தியாகக் கூறப்படுகின்றன. அதாவது 'முருகப் பெருமானின் மயில்வாகனங்கள் மூன்று. ஒன்று இந்திரன் கொண்ட தேவமயில் உருவம். இது தெற்கு முகமாக இருக்கும். மற்றொன்று சிவபெருமான் அளித்த மயில். இது நேர்முகமாக இருக்கும். மயிலத்தின் தலப்பெருமை என்னவென்றால், மயில் வடக்கு முகமாக இருக்கும். இது சூரபதுமன் கொண்ட மயில் உருவம். இது அசுரமயில்' என்பர்.[2]

போரில் வெற்றிபெற்றமையின் இந்திரனின் மயிலையும் ஆணவத்தை அழித்தமையின் சூரனின் மயிலையும் ஊர்தியாகப் பெற்றமையின், ஒருமயில் வெற்றியின் குறியீடாகவும், மற்றொன்று ஆணவம் அல்லது அகம்பாவ அழிவின் குறியீடாகவும் கொள்ளலாம்.

'நான் என்னும் அகங்காரம் சேவலாகவும், 'எனது' என்னும் மமகாரம் மயிலாகவும் வந்தது என்று குறிப்பிடும் போது, முருக நாம ஜெபம் செய்யும்போது நான் என மயக்கும் பசுஞானம் சேவலாக எனது என மயக்கும் பசுஞானம் மயிலாக முருகனைச் சுமக்கும் பணியை ஏற்றது'[3] என்ற கருத்தும்,

'சூரனிடம் இருவகை உணர்வுகள் குடிகொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று ஆணவமாகிய அறியாமை. மற்றொன்று உண்மையாகிய ஞானம்.........சூரனது இந்த ஞானமே கோழிக் கொடியாகின்றது. ஞானம் போற்றுவதற்கு உரியது. அது மேன்மேலும் உயரும் என்பதற்கு அடையாளமாகவே குமரன் கோழிக் கொடியை உயர்த்திப் பிடிக்கின்றான். அறியாமையாகிய ஆணவத்தைக் காலால் அமுக்கி, மேலோங்க விடாமல் செய்தல் வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் அறியாமையின்

1. இ மு. சுப்பிரமணியபிள்ளை, வானநூல், A Glimpse of Tamilology (தமிழியற் காட்சிகள்); வ. சுப. மாணிக்கம் (பதி); பாரிநிலையம், சென்னை; சன. 1968; பக் 60-64
2. டி. எல். அருண்; ஆனந்தவிகடன்; 4-11-84; ப. 46
3. திருவருள். மலர் 2, இதழ் 7; பக். 23-24

வடிவமாகிய மயில் மேலமர்ந்து ஊர்கின்றான் என அறிதல் வேண்டும்' என்ற கருத்தும்[4] இவண் இணைத்து நோக்கத்தக்கன.

இனி, முருகன் ஊர்தி பிணிமுகம் என வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. இப்பிணி முகம் யானை என்றும் மயில் என்றும் இரு கருத்துக்கள் நிலவுகின்றன. முருகனுக்கு யானையும் ஊர்தி யாக விளங்கியுள்ளமையின் இக்கருத்து வேறுபாடு தோன்றி யுள்ளது. முருகனின் ஊர்திமட்டும் பிணிமுகம் எனக் குறிப்பிடப் படுவதில் இருந்து இது மயில் அல்லது யானைக்கான வேறு பெயரன்று; முருகனின் ஊர்திக்கே உரிய பெயர் என அறிய முடிகின்றது. யானை அல்லது மயில்தான் பிணிமுகம் என்று அறுதியிட்டுக் கூறும்போதுதான் சிக்கல் எழுகின்றது.

திருமுருகாற்றுப்படையில் 'ஓடாப் பூட்கை பிணிமுகம் வாழ்த்தி' (247) என்ற் தொடருக்குப் பொருள் கூறுங்கால், பிணிமுகம் என்பதனைப் பட்டம் எனக்கொண்டு அதனையுடைய யானை என்கிறார் நச்சினார்க்கினியர். 'இதற்கு மயில் என்று பெரும்பாலோர் பொருள் கூறுவர். பிணிமுகம் என்பது முருகன் ஏறும் யானை ஒன்றற்கே பெயர் என்பாரும் உளர்' எனக் கூறுகின்றார் பொ.வே சோமசுந்தரனார். கு. கோதண்டபாணியும் பிணிமுகம் யானை என்று கருத்துத் தெரிவிக்கின்றார். அவர், "மணிமயில் உயரிய மாறாவென்றிப் பிணிமுக ஊர்தி (புறம் 56) என்பர் புறப்பாட்டில் நக்கீரர் வணங்கிய முருகனுக்குக் கொடி மணிமயில், ஊர்தி பிணிமுகம் என்பவை இப்பாடலால் உறுதியா கின்றன. பிணிமுகம் என்பது மயிலாகாது, யானையே என்பதை யும் இப்பாட்டு உறுதி செய்கின்றது" என்கிறார்.[5] மேலும் இவர், "பிணிமுகத்தையும் மஞ்ஞையையும் ஒரே பொருள் என முதன் முதற் கொண்டவர் கல்லாடர் போலும்! 'பிணிமுக மஞ்ஞை செறுமுகத்தேந்திய மூவிருமுகத்து ஒரு வேலவர்க்கு' (கல்லாடம் 7)" என்ற கருத்தையும்[6] அளிக்கின்றார்.

இனி, சித்தாந்த இதழாசிரியர், 'பிணிமுகம் என்பது சங்க நூல்களில் காணப்படும் சொல். இதற்கு இருவகையாகவும்

---

4. தமிழ் நாகனார்; செவ்வேளின் சேவற்கொடி; டாக்டர் குருசுவாமி முதலியார் தொ.து.வே. மேல் நிலைப்பள்ளி ஏழாவது ஆண்டுவிழா மலர்; 1982; ப. 37
5. கு. கோதண்டபாணிபிள்ளை; பழைய உரைத்திறன்—திருமுருகாற்றுப்படைத் திறன்; கழகம்; சென்னை; 1972; பக். 17-18
6. மேற்படி பக். 18

பொருள் கொள்ளப்படுகின்றது. ஒன்று முருகன் ஊர்ந்து வரும் யானைக்குப் பெயர் பிணிமுகம்; இது பொதுப்பெயரன்று; சிறப்புப் பெயர்; மற்றொன்று மயில் என்பது; இது பொதுப்பெயர்; என்கிறார்.[7] இக்கருத்து ஏற்புடைத்தாகத் தோன்றுகின்றது.

மேற்கண்டவற்றை நோக்க, பிணிமுகம் என்ற யானை முருகனின் ஊர்தியாக விளங்கியமையும், சூரனைவென்று மயிலை ஊர்தியாகப் பெற்றபின் அம்மயிலூர்தி சிறப்புப் பெற்று மெல்ல மெல்ல முருகனின் ஊர்தி என்றாலே, யானை மறக்கப் பட்டு மயில் நினைவுக்குவர முருகனின் ஊர்தியின் பெயர் பிணி முகம் என்ற நிலையில் மயிலே பிணிமுகம் என்றழைக்கப் படும் நிலை உருவாயிற்று என்றும் கொள்ளலாம். இந்திரன் மயில் வழங்கியமையும் துணைக்காரணம் எனலாம். ஆகலின் சங்க இலக்கியங்களில் யானை, மயில், ஆட்டுக்கிடா மூன்றும் கூறப் பட்டிருப்பினும் யானையும் ஆட்டுக்கிடாவும் இன்று பலரும் அறியப்படாத நிலையில் சிறப்பிழக்க மயிலே முருகனின் ஊர்தி என்ற நிலை இருப்பது குறிப்பிடத்தக்கது.

**மயிற்கொடி**

பொதுவாக இறைவனுக்கு ஊர்தியாகக் குறிக்கப்படுவது கொடியாகவும் அமைவதுண்டு.

| கடவுள் | ஊர்தி | கொடி |
|---|---|---|
| சிவன் | எருது | எருது |
| திருமால் | கருடன் | கருடன் |
| உமை | சிங்கம் | சிங்கம் |

இதே போன்று முருகனுக்கு மயில் ஊர்தியாக விளங்கியதோடு கொடியாகவும் உள்ளது.

'மணிமயில் உயரிய மாறா வென்றி' (புறம் 56)

எனும் தொடரும்,

'பல் பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ' (திருமுருகு 122) என்ற தொடரும் மயில் கொடியுமாய் விளங்கியமையைக் காட்டும். சூரனை வென்ற பின்பு சேவலும் முருகனின் கொடியாயிற்று. தமிழ்நாகனார் சேவல் கொடி என்று குறிக்கப்படுவது மயில் கொடியே; கோழிச் சேவற் கொடியன்று; பின்னாளில் தான் சேவல் கொடி கோழிச் சேவற் கொடியைக் குறிக்கப்பயன்பட்டது

7. சித்தாந்தம்; மலர் 58; இதழ் 8; ஆக. 1985

என்கிறார். தொல்காப்பியர் ஆண்மயில் சேவல் என்று வழங்கப் படாது என்று கூறினமையின் சேவல்கொடி என்பதனைக் கோழிச் சேவலாக மக்கள் கொண்டனர். ஆனால் பேராசிரியர் முருகன் ஊரும் மயிலாயின் சேவல் என்று வழங்கப்படும் என்பதனை அன்னார் கவனியாது அன்றி ஒப்புக் கொள்ளாது போனதே காரணம் என்கிறார். மேலும் முருகனுக்கு யானையும் (வாரணம்) ஊர்தியாகலின் அதுவும் கொடியாகும். எனவே முருகனுக்கு வாரணம் கொடியாயிற்று. வாரணம் கோழியையும் குறிக்கும் ஆகலான் கோழிக் கொடியையும் குமரனுக்குரியதென்று கூறுவாராயினர் என்கிறார்.[8] இக்கருத்து சிந்திக்கத்தக்கது.

**மயிலுவமம்**

திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் கூறும் உவமம் ஒன்றும் இப்பகுதியில் குறிப்பிடத்தக்கது.

> 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு
> ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி' (1-3)

இதற்குப் பொருள் கூறும் நச்சினார்க்கினியர், 'ஞாயிறு இருளைக் கெடுக்குமாறு போலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலின் தொழில் உவமமும் தன்னைக் கட்புலனால் நோக்குவார்க்குக் கடலில் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும் போல மயிலிற் பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின் வண்ணவுவமமும் கொள்ளக் கிடந்தமை காண்க' என்கிறார். கடலை மயிலாகவும், ஞாயிற்றை முருகனாகவும் காண்கின்றார் அவர். கோதண்டபாணி பிள்ளை இக்கருத்தினை, 'ஓர் அரசனின் கவினுக்குக் கூறிய இவ்வுவமையை (பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி மாக்கடல் நிவந்து எழுதரும் செஞ் ஞாயிற்றுக் கவினை மாதோ) முருகனின் கவினுக்குக் கூறல் சிறப்பாகத் தோன்றவில்லை என்றும். முருகனின் ஊர்தியாக நக்கீரர் உரைப்பது வேழத்தையே என்றும், நக்கீரர் பிணிமுக ஊர்தியோடும் மயிற்கொடியோடும் கூடிய முருகனையே வழிபடு கடவுளாகக் கொண்டார்' என்றும் கூறி[9] மறுப்பினும் நச்சினார்க் கினியர் கடலிற் கண்ட இக்காட்சி இனிய காட்சி என்பதிலும்,

---

8. தமிழ்நாகனார்; முன் சுட்டியது; ப. 36
9. கு. கோதண்ட பாணிபிள்ளை; முன்சுட்டியது; ப.17-18

அவ்வாறு நக்கீரர் கூறியிருப்பின் அது பொருத்தமான உவமையாய் அமைந்து விளங்கும் என்பதிலும் மாறுபட்ட கருத்து இருத்தல் இயலாது.

**மயில் காணிக்கை**

திருப்பரங்குன்றிற்கு இறைவனை வணங்க வருவோர் காணிக்கைப் பொருளாக மயிலையும் கொணர்ந்ததாகப் பரிபாடல்,

சீறடியவர் சாறுகொள வெழுந்து
வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்
ஆறுசெல் வளியின் அவியா விளக்கமும்
நாறுகமழ் வீயும் கூறுமிசை முழவமும்
மணியும் கயிறும் மயிலும் குடாரியும்
பிணிமுகம் உளப்படப் பிறவும் ஏந்தி (பரி. 8 : 96-101)

எனக் காட்டுகின்றது.

**மயில் தரும் காட்சி**

பரிபாடலில் குன்றம்பூதனார் மயில் தொடர்பான ஓர் இனிய காட்சியைக் காட்டுகின்றார். 'தேவ சேனை முருகனுடன் ஊடல் கொள்ள அவனும் அவள் அடியில் வீழ்ந்து வணங்குகின்றான்; இதனை அறிந்த வள்ளி முருகவேளைச் சினந்து மாலையைக் கோலாகக் கொண்டு புடைக்கின்றாள். இதனைக் கண்ட தேவ சேனையின் மயிலும் வள்ளியின் மயிலும் தம்முள் பகைத்து ஒன்றை ஒன்று எதிர்க்கின்றன. இருவரின் தோழியரும், வண்டு களும், கிளிகளும் தம்முள் போரிடுகின்றன. இப்போரில் தோற்றோடும் தேவசேனையின் தோழியர் மயிலாகவும் குயிலாகவும் மாறி ஓடினர்' என்கிறார் புலவர்.

'ஒருவர் மயில் ஒருவர் ஒண் மயிலோடேல
இருவர் வான்கிளி ஏற்பின் மழலை
செறிகொண்டை மேல் வண்டு சென்று பாய்ந்தன்றே'
'சிகை மயிலாய்த் தோகை விரித்தாடுநரும்
கோகுலமாய்க் கூவுநரும்' (பரி 9 : 41-43; 64-65)

மிக இனிய கற்பனையாய் இது பொலிவு பெறுகின்றது.

**முருகன் அடையல் (மிதியடி)**

புறப்பாடல்களில் நடுகல்லும், படைக்கலங்களும் இசைக் கருவி களும் பீலிசூட்டப் பெற்றமை கூறப்பட, பரிபாடலில் முருகனின் மிதியடி பீலிசூட்டப் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

'புரிமென் பீலிப்போழ்புனை அடையல்' (21 : 7)

மயிலை ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்டவன் அதன் பீலியை ஒப்பனைக்கும் பயன்படுத்தியுள்ளான் என இதிலிருந்து அறியமுடிகின்றது.

சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை மயில் முருகனுடன் மட்டும் தொடர்பு கொண்டு விளங்கியிருக்க இந்நாளில் இம்மயில் பிரணவத்தின் வடிவம் என்றும், அதுவே ஓம் என்னும் மகாமந்திரம் என்றும் விந்து வடிவம் என்றும் பலபட விரிந்த பொருள் உணர்த்தியதோடு பிறதெய்வங்களோடும், பிறசமயங் களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு பெருஞ்சிறப்புடன் விளங்குகின்றது.

# மயிலும் வாழ்வியலும்

இலக்கியங்களில் பொருள் புலப்படுத்தற்கும், தெளிவுபடுத்தற்கும் பல இடங்களில் மயிலைப் பயன்படுத்தியுள்ள புலவர் பெருமக்கள் அம்மயிலின் வாழ்வுமுறை பற்றிப் பாடியுள்ளமை மிகக்குறைவு. ஆகலின் ஓரளவிற்கு மயில் பற்றி அக்குறிப்புக் களினால் நாம் அறிந்துகொள்ள முடிகின்றதேயன்றி முழுமையாக அறிதற்கு இயலவில்லை.

தோகையினால் எடுப்பான தோற்றமும், பலவண்ணங்களால் பொலிவும் பெற்று விளங்கும் இம்மயில், தன் பெரிய அழகிய உருவினாலும் ஆடல் திறனினாலும் பறவைகளில் முதன்மை யானது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.[1] இது இனமாகக் கூடிவாழும் இயல்பினது.

'இனமயில் அகவும் மரம் பயில் கானம்' (குறுந். 249 :1)
மூங்கிற் காடு (அகம் 82), மலைச்சாரல் (ஐங். 292)

பழனம் (புறம் 13) ஆகிய இடங்களில் விரும்பி உறையும் மயில் மிகுதியும் காணப்படுவது குறிஞ்சி நிலங்களில் ஆதலின் குறிஞ்சி நிலப்பறவை என்றே குறிக்கப்படுகின்றது. நெய்தல்நிலம் தவிர ஏனைய நிலங்களில் காணப்படுகின்றமையின் கானமஞ்ஞை, மலைய மஞ்ஞை, பழன மஞ்ஞை என்று இடம் நோக்கிப் பெயரும் பெற்றுள்ளது.

குறிஞ்சி நிலத்திலும் வேங்கை மரத்தில் விரும்பி அமர்ந் திருக்கும் இயல்பினது மயில் என்று எண்ண இடம் தருகின்றன சங்கப்பாக்கள்.

---

1. Ajit Kumar Mukerjee, Peacock—our national bird, Puplioation Division; New Dalhi; July 1979, P. 3.

'எரிமருள் வேங்கையிருந்த தோகை' (ஐங். 294 :1)

'நன்னாட் பூத்த நாகிள வேங்கை
நறுவீயாடிய பொறிவரி மஞ்ஞை' (அகம் 85 : 10-11)

சேவல் போன்று அதிகாலையில் அகவும் இயல்பு இதற்கும் உண்டு என்பது மதுரைக் காஞ்சியால் அறிய வருகின்றது.

'பொறிமயிர் வாரணம் வைகறை இயம்ப ..
அன்னங்கரைய அணிமயில் அகவ' (மதுரைக். 673, 675)

வைகறையில் எழும் ஓசைகளைக் குறிக்கும் மாங்குடி மருதனார் மயிலின் அகவலோசையையும் அவற்றில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். 'அதிகாலையிலும் மாலையிலும் 'ஞாவ், ஞாவ்' என்று குரல் கொடுப்பதையும் கேட்கலாம். வனப்பு மிக்க இப் பறவைக்கு இதன்குரல் ஏற்றதாயில்லை' என்று[2] பறவையியல் அறிஞர் சலீம் அலியும் குறிப்பிடுகின்றார்.

இடியோசை கேட்பினும் மயில்கள் அகவும் பண்புடையன எனத் தெரிகின்றது.

'பொய்யிடி அதிர்குரல் வாய்செத்து ஆலும்
இனமயில் மடக்கணம்' (நற்.248 : 7-8)

''மின்னுபு
வானேர் பிரங்கும் ஒன்றோ அதனெதிர்
கானமஞ்ஞை கடிய ஏங்கும்' (குறுந். 194 : 1-3)

இடியோசை கேட்டு ஆரவாரிக்கும் மயில் மழைவரின் ஆடும் இனல்பினது.

'மடவவாழி மஞ்ஞை மாயினம்
காலமாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின' (குறுந். 251 : 1-3)

மழையில் மகிழ்ந்தாடுதல் போல் இளவெவயிலையும் விரும்பும் என எண்ண இடம் தருகின்றன பின்வரும் குறிப்புக்கள்.

'தோகை,
பாசறை மீமிசைக் கணங்கொள்பு ஞாயிற்று
உறுகதிர் இளவெயில் உண்ணும் நாடன்' (நற். 396 : 5-7)

---

2. ப. சி. சுப்பையன்: இந்திய வன விலங்குகள்; தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்; சென்னை ; ப. 297

'இளவெயில் உணீஇய ஓங்குசினைப்
பீலிமஞ்ஞை பெடை யோடாடும் (நற். 288 : 2-3)

மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் வாழும் மயில் மரங்களில் அமரும் இயல்பினது எனினும் அவற்றில் கூடுகட்டுவது இல்லை எனத் தெரிகின்றது. முட்டைகளையும் நிலத்தில் இடும் பழக்க முடையதாகத் தெரிகின்றது.

'கானமஞ்ஞை அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்' (குறுந்.38 : 1-2)

மறைவிடங்களைத் தேடிச்சென்று இடும்பழக்கம் கூட இவற்றிற்கு இல்லை என மேற்கூறிய அடிகள் எண்ணவைக்கின்றன. 'கவலை யின்றி மக்கள் வாழிடங்களுக்கு அருகிலேயே வாழும் பழக்க முடைய இவை தங்களுடைய இருப்பிடத்தையும் முட்டை களையும் மறைவாக வைக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவை அல்ல. புல்வெளிகளிலும் குடிசைகளின் கூரை மீதும் கட்டடங்களின் மேல்தளங்களிலும், பிறபறவைகளின் கைவிடப் பட்ட கூடுகளிலும் கூட முட்டையிடும் இயல்பின' என்ற கூற்றும்[3] இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இரவில் மரங்களில் மட்டுமின்றிக் கானவர் அமைக்கும் பரணிலும் தங்கும் தன்மையன.

'சேணோன் இழைத்த நெடுங்கால் கழுதின்
கானமஞ்ஞை கட்சி சேக்கும்' (நற். 276 : 5-6)

முட்டைகளை விரும்பிய இடங்களில் இட்டபோதும் பகைவர் குறித்த இதன் பார்வை மிகக் கூர்மையானது. இதன் கண்களைப் 'போழ்கண்' என்பர் புலவர்.

'பூஞ்சினை இருந்த போழ்கண் மஞ்ஞை' (குறுந். 391 : 7) இதற்கு உரை தரும் சோமசுந்தரனார் 'மயிலின் கண் நெடியதாய்ப் பிளந்து விட்டாற்போன்ற இமைகளை உடைத்தாதலால், 'போழ்கண் மஞ்ஞை' என்றார்' என்கிறார். இவ்வுரை விளக்க மானதாக இல்லை என்று மறுத்துரைப்பார் பி. எல். சாமி. 'போழ் என்ற சொற்குப் பிளவுபடுத்தல், ஊடுருவிச் செல்லுதல் என்று இரண்டு பொருள் உண்டு. மயிலின் பார்வை ஊடுருவிச் செல்வது போல் இருப்பதால் போழ்கண் என்று கூறப்பட்டுள்ளது. மயிலிற்குக் காட்டு விலங்குகளை ஊடுருவிப் பார்ப்பதுபோல் உற்றுப்பார்க்கும் குணம் உண்டு என்பதைப் பறவை நூலறிஞர்

3. Ajit Kumar Mukerjee; op. Cit; P. 16

சுட்டிக்காட்டி'உள்ளனர்.[4] 'காட்டில் பதுங்கிவரும் பூனைகளையும் விரைவில் மயில் கண்டு கொள்ளும். ஆபத்தை உணர்கின்ற போது எச்சரிக்கைக் குரல் எழுப்பும். குரங்குகளும் இதனோடு சேர்ந்து கூக்குரலிடப் பிற விலங்குகளும் விழிப்படைந்து ஒளிந்து கொள்ளும்' என்ற கூற்றும்[5] இதன் பார்வையின் கூர்மையினை உறுதி செய்கின்றது.

இதே போன்று மயில் தங்கும் கட்சி என்ற சொல்லிற்கு உரையாசிரியர் காடு என்று பொருள் கொள்வதும் தவறு என்கிறார் பி. எல். சாமி. "மயில் கட்சியில் தங்குவதாகச் சங்க நூல்கள் கூறுகின்றன. (நற். 13, 276, ஐங். 250, அகம். 392, புறம் 60) 'கட்சி' என்பதற்குக் காடு என்று பொருள் கொண்டனர் உரையாசிரியர். இது பொருத்தமற்றது. சிலம்பு 'கட்சியுட் காரி கடிய குரலிசைத்துக் காட்டும் போலும்' என்று வலியன் பறவை தன்னுடைய இடத்தையும் சூழலையும் பாதுகாப்பதைப் பற்றிக் கூறியுள்ளது. கட்சி என்ற சங்ககால வழக்கு விலங்குகள் பறவைகள் ஆகியவற்றின் உரிமை இடத்தையே குறிக்கிறது என்பது பாடல் களை ஆராயும்போது தெரிகின்றது. பறவைகளில் ஆண் பறவை கள் தங்களுக்கு உரியது என்று ஒரு குறிப்பிட்ட பரப்புடைய இடத்தை உரிமையாக்கிக் கொண்டு தங்களிடத்தில் பிற ஆண் பறவைகளை நெருங்க விடுவதில்லை. ஆனால் பெண் பறவை களை அவ்விடத்தில் விரும்பி அழைக்கும். ஆண் மயிற்கு இக்குணம் உண்டு என்பதைப் பறவை நூலார் தெரிந்துள்ளனர். ஆண்மயில் பல பேடைகளோடு சேர்ந்து வாழுமாதலால் ஒவ்வோர் ஆண் மயிலும் காட்டில் தத்தமக்குரிய இடத்தைத் தேடி வகுத்துக் கொள்கின்றன' என்பர்.[6] எனவே கட்சி என்பது ஆண் மயிலானது தன் பெடைகளோடு வாழ்வதற்குத் தேர்ந்தெடுத்து உரிமை கொண்டாடும் இடம் எனப்பொருள் கொள்ளலாம்.

மயில், தினை, நெல், போன்ற தானியங்களையும், பூச்சி, புழுக்கள், கரையான், சிலந்தி, ஓணான், தவளை, பாம்பு முதலிய வற்றையும் உண்ணும் எனத் தெரிகின்றது.[7] சங்கப் பாக்களும் தானியம் உண்டமையைப் பாடுகின்றன.

'செந்நெல் உண்ட பைந்தோட்டு மஞ்ஞை'

(புறம். 344 : 1)

---

4. பி.எல். சாமி; சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்; சழகம்; சென்னை; 1976; பக் 198-199
5. Ajit Kumar Mukerjee; op. Cit; P. 17
6. பி. எல். சாமி: முற்சுட்டியது; ப. 195
7. Ajit Kumar Mnkerjee; op Cit., P. 12

'பெரும்புன வரகின்,
கவைக்கதிர் இரும்புறம் கதூஉ உண்ட
குடுமி நெற்றி நெடுமாத் தோகை' (அகம் 194 : 9-11)

பாகற்பழத்தையும், பலாப்பழத்தையும் மயில்கள் விரும்பி உண்ணும் என்பதையும்,

'மடக்கண்ண மயிலாலப்
பைம்பாகற் பழந்துணரிய
செஞ்சுளைய கனிமாந்தி' (பொருந. 190-192)

'பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇக்
கானமஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை' (அகம் 177:9-10)

எனும் பகுதிகள் இயம்புகின்றன.

மயில், பாம்பு உண்பது குறித்து இலக்கியங்களில் குறிப்பு இல்லை. எனினும் பாம்பு மயிலுக்கு அஞ்சும் என்று கூறுவதைக் கொண்டு மயிலால் உண்ணப்படுகின்றமையே அச்சத்திற்குக் காரணம் என ஊகிக்க இடமுண்டு.

'விரவுப் பொறிமஞ்ஞை வெரீஇ அரவின்
அணங்குடை யருந்தலை பைவிரிப்பவை போல்'
(அகம் 108 : 12-13

கார்காலத்து ஆண் மயிலும் பெண் மயிலும் இணையும்இயல்)பின. அக்காலை இரண்டும்ஒன்றை ஒன்று அழைக்கும்தன்மையன.

'புன்றலைப் பெடை வரிநிழல் அகவும்' (ஐங். 62:2)
'கானமஞ்ஞை கடிய ஏங்கும்' (குறுந். 194 : 3)

மயிலின் ஒருவகை ஓசை ஐந்து ஆறு தடவை திருப்பித் திருப்பிக் கேட்குமென்றும் பறவை நூலார் கூறுவர். அது 'க...ஆன்...க... ஆன்' என்று கேட்குமென்பர். இந்த ஓசையின் சொல்லுருவமே அகாவு, அகவு என்பதாகும்.[8]

கார்காலத்தில் மயில்கள் கூடிய பின்பு ஆண் மயிலின் தோகையிலுள்ள பீலி உதிரும் (புறம். 13). 'இலையுதிர் காலம் வரும்பொழுது மயில்தன் தோகைகளை இழக்கத் தொடங்கும். பூப்பூக்கத் தொடங்கும் காலத்தில் மயிலின், தோகையும் இழந்த அதே இடத்தில் முளைக்கத் தொடங்கும்' என்று[9] கூறப்படுகின்றது. இவ்வாறு உதிரும் பீலியினைத் தொகுத்து மறவர் தம்

8. பி. எல். சாமி; முன்சுட்டியது; ப. 199
9. வி. எஸ். வி. இராகவன்; பிளினி (கி.பி. 23-79): மணிவாசகர் நூலகம்; சென்னை; நவ. 1977; ப. 320

படைக்கலங்களையும் கலைஞர் தம் இசைக் கருவிகளையும் அணி செய்திருக்கின்றனர்.

மயிலை வலையிட்டு வேடர்கள் பிடித்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தை,

'வலைப்படு மஞ்ஞையின் நலம் செலச் சாஅய்'
(குறிஞ்சிப்:250)

'வலையுறு மயிலின் வருந்தினை பெரிதென'
(கலி 128 : 16)

என்பன போன்ற தொடர்கள் எழுப்புகின்றன.

மயிலின் ஊன் உண்ணப்பட்டதற்குச் சங்க இலக்கியங்களில் சான்று இல்லை எனினும், சொற்பொழிவாளர் ஹார்டென்சிடங் என்பவரே முதன்முதல் மயில் ஊனைச் சிற்றுண்டிக்குப் பயன் படுத்திக் காண்பித்த ரோமநாட்டவராவார். "அவர் தம் குருபீடத்தில் அமரும் போது, அம்மயில் ஊனைப் பக்குவப்படுத்தி விருந்திட்டார்" என்ற[10] பிளினியின் குறிப்பிலிருந்தும் 'அசோகச் சக்கரவர்த்தி மயிலைக் கொலை செய்வதை முழுவதுமாகத் தடுத்து நிறுத்தினான்' என்ற[11] குறிப்பிலிருந்தும் மயில் உண்ணப் பட்டதை அறியமுடிகிறது. பீலி, மலைதரும் ஐவளத்தில் ஒன்று என்று குறிக்கப்படுவதால் பீலி பொருட்டும், உணவு பொருட்டும் வலையிட்டுப் பிடிக்கப்பட்டிருக்கலாம். தவிர மறவனின் மனைவி ஒருத்தி, 'இல்வழங்கு மடமயில்' (புறம் 252) எனக் கூறப்பட்டிருப்ப தாலும், தலைவி தந்தையின் அகன்ற இல்லத்தில் மயில் ஆடிய தாகக் (அகம் 145) கூறப்பட்டிருப்பதாலும் வளர்ப்பதன் பொருட்டும்மயில் பிடிக்கப்பட்டிருக்கலாம்.

இவை தவிர மயிலின் இனப்பெருக்கம் பற்றியோ, குஞ்சினைப் பேணும் முறைபற்றியோ, ஆயுட்காலம் பற்றியோ குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை.

மேற்கண்டவற்றால் மயில் இனமாகக் கூடி குறிஞ்சி முல்லை மருத நிலங்களில் வாழ்வது; கூடு கட்ட அறியாதது; மரங்களில் தங்குவது; கார்காலத்தை விரும்பும் மயில் அக்காலத்தில் இணைந்து இனப்பெருக்கம் செய்வது; கூர்த்த நோக்குடையது; பீலி உதிர்க்கும் இயல்பினது என உணரலாம். அழகிய பீலி உடைய இம்மயில் பிற பொருட்களை அழகு படுத்துவதோடு செல்வத்தையும் தரும் பயனுடைய பறவையாகவும் இருப்பதை நோக்க இதன் சிறப்புப் புலப்படும்.

---

10. மேற்படி
11. Ajit Kumar Mukerjee; op. cit., P. 31

# மயிலும் பிற பறவைகளும்

அகத்திணை மாந்தர்தம் மனநிலையினை அணிநயத்துடன் உரைத்தற்கும், உள்ளுறுத்து அவர்தம் உணர்வுகளைப் புலப்படுத்தற்கும் சங்க இலக்கியங்களில் பறவைகள் பெரிதும் பயன்பட்டுள்ளன. எழில் மிகு இப்பறவைகளால் இலக்கியம் ஏற்றம் பெற்றதா? இலக்கியத்தில் இடம் பெற்றமையின் அவை ஏற்றம் பெற்றனவா? எனப் பிரித்துணர இயலா அளவு இவை இயைந்து இயலுகின்றன. அகத்திணை இலக்கியங்களில் மட்டுமன்றிப் புறத்திணை இலக்கியங்களிலும் இடம்பெறும் இப்பறவைகளில் மயில் பற்றிப் பல நோக்குகளில் இந்நூலில் காணப்பட்டுள்ளது. அம்மயிலுடன் பிற பறவைகள் பயின்று வருமாற்றையும், பயன்படுமாற்றையும் ஒப்பு நோக்கிக் காணலே இக்கட்டுரையின் நோக்கம்.

சங்க இலக்கியத் தொகை நூல்கள் பதினெட்டனுள் முல்லைப் பாட்டு ஒன்றுதவிரப் பிற இலக்கியங்கள் அனைத்திலும் பறவைகள் பயின்றுள்ளன. மயில் 171 இடங்களில் பயில, பிற 623 இடங்களில் பயின்று வருகின்றன, இவற்றில் 87 இடங்களில் இன்ன இன்ன என்று சுட்டப் பெறாமல் பொதுவாகப் பறவைகள் என்று குறிப்பிடப்படுகின்றன. எஞ்சிய இடங்களில் இன்னின்ன பறவைகள் என்று தெளிவாகக் கூறப்படுகின்றன.

கிளி, குருகு, நாரை. பருந்து, குயில், புறா, கோழி, அன்னம், எருவை, கூகை, சிறுவெண் காக்கை (கடற் காக்கை) கொக்கு, காகம், அன்றில், கருடன், குருவி, குடிஞை, குறும்பூழ், மணிச்சிரல், வாவல், கானக்கோழி, கம்புள், குரால், இதல், எழால், ஆண்டலை, மகன்றில், போகில், வானம்பாடி, கின்னரம், கணந்துள், யானையும் குருகு, கழுகு, வங்கா, தூக்கணாங் குருவி,

புதா என்ற முப்பத்தாறு பறவைகள் சங்கப்பாக்களில் இடம் பெறும் சிறப்பினைப் பெற்றவை. பாடல்களில் பயின்று வரும் எண்ணிக்கை அடிப்படையில் இவை வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இலக்கியத்திலும் பறவைகள் பயிலும் இடங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பறவையும் பயிலும் இடங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு திணையிலும் பறவைகள் பயிலும் இடங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பறவையும் பயிலும் திணைகள், ஒவ்வொரு திணையிலும் பயிலும் பறவைகள் என்ற இவை அனைத்தும் அட்டவணையிடப்பட்டுள்ளன.

பறவைகள் எட்டுத்தொகை இலக்கியங்களில் அக நானூற்றில் (128) மிகுதியான இடத்தினையும் பரிபாடலில் (21) மிகக் குறைவான இடத்தினையும் பெறுகின்றன. பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப் படை (14) மதுரைக் காஞ்சி (14) இரண்டிலும் மிகுதியாகவும் சிறுபாணாற்றுப்படையில் (3) குறைவாகவும் இடம் பெறுகின்றன.

மயில் போன்று பிற பறவைகளும் அனைத்து இலக்கியங் களிலும் இடம் கொண்டுள்ளனவா? மிகுதியாகப் பயின் றுள்ளனவா? அகனைந்திணைகளிலும் அகப்படுகின்றனவா? புறத் திணைகளில் புலப்படுகின்றனவா? அகமாந்தருடன் தொடர்பு கொண்டுள்ளனவா? அணிகளாய் அழகுபடுத்துகின்றனவா? வருணனையில் வருகின்றனவா? சமயத்துடன் தொடர் புடையனவா? எனக் காண்பதுடன் இவையன்றி வேறு எவ்வகையில் இலக்கியங்களில் இடம்பெறுகின்றன என்பதனையும் இவண் காணலாம். இவ்வொப்பீடு மூலமாகச் சங்க இலக்கியங்களில் மயில் பெறும் இடத்தினைத் தெளிவாக அறிதல் இயலும். இன்ன இனமெனக் குறிக்கப்பெறாது இடம் பெற்றுள்ள பறவைபற்றிய குறிப்புக்கள் ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது இவண் குறிப்பிடற்குரியது.

**எண்**

பாடல்களில் பயிலும் எண்ணிக்கை நோக்க மயில் பிறபறவை களினும் மிக அதிகமான இடத்தினைப் பெறுகின்றது. மயிலிற்கு அடுத்த இடத்தினைப் பெறும் கிளியும் அம்மயில் பெறும் இடத்தினும் பாதிக்கும் குறைவாகவே பெறுவதன்றிப் பல இடங் களில் ஒப்பப்படுவதாகவே பாடப்படுதலின் மயிலுடன் ஒப்ப வைத்து நோக்கும் அளவில் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் ஏப்பறவையும் சங்கப்பாக்களில் இடம்பெறவில்லை.

கிளி தவிரக் குறிப்பிடத் தகுந்த அளவில் இடம்பெறும் பறவைகள் குருகு, நாரை, பருந்து, குயில், புறா, கோழி, அன்னம் ஆகியன. இவை தவிர எஞ்சிய பறவைகள் ஆங்காங்கே இடம் பெறுகின்றன. மிகுதியும் இடம்பெறும் பறவைகளில் சில ஒரே சூழலில் அல்லது சொற்சுட்டு நிலையில் வருவதும் ஒன்றிரண்டு பாடல்களில் பயிலும் பறவைகள் கருத்துப் புலப்பாட்டிற்குப் பயன்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கன.

**திணை**

புறத்திணைப் பாடல்களுடன் அகனைந்திணைகளிலும் பாடப்பெற்ற சிறப்படைந்த பறவைகள் குருகு, கோழி, அன்னம், குருவி என்பவை. இவற்றில் கோழி உணவுப் பொருள் ஆதலின் அனைத்துத் திணைகளிலும் இடம் பெறல் இயல்பாகின்றது. குருவி குறிப்பிட்டுச் சொல்லும்படியாகப் பாடல்களில் பாடப்படவில்லை யெனினும் மனைஉறை பறவையாகலின் அதுவும் அனைத்திலும் இடம் கொண்டுள்ளது. மகளிரின் சாயலுக்கு மயில் உவமையாதற் போன்று அவரது நடைக்கு அன்னம் உவமையாகின்றமையின் அதுதானும் இச்சிறப்பினைப் பெறுகின்றது. இதுதவிரக் குறிப்பிட்டுக் கூறும்படியான வேறு சிறப்பினை அன்னம் பெறவில்லை. அதிகமான இடங்களைப் பெறவும் இல்லை. இவை மூன்றினும் குருகு மிகுதியாகப் பயின்றுள்ளது. இடம்பெறும் எண்ணும் திணையும் நோக்க மயிலுடன் பலவகையிலும் ஒப்பிட்டுக் காணும் சிறப்பினைக் குருகு பெறுகின்றது.

கருடன், கின்னரம், புதா (ஒருவகை நாரை) மூன்றும் புறத்திணைகளில் மட்டும் காணப்படுகின்றன என்பதும் இவண் குறிப்பிடற்குரியது.

**இலக்கியம்**

மயிலன்றி வேறு எப்பறவையும் எல்லாச் சங்க இலக்கியங்களிலும் இடம் பெறவில்லை. முல்லைப் பாட்டில் மயிலின்றிப் பிற பறவைகள் பாடப்பெறவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. மயிலினை அடுத்து மிகுதியாக இடம்பெறும் கிளியும் திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, முல்லைப்பாட்டு ஆகியவற்றில் காணப்படவில்லை. குருகு பத்துப் பாட்டில் மதுரைக் காஞ்சியில் மட்டும் இடம்பெறுதலோடு எட்டுத் தொகையில் புறநானூறு தவிர எஞ்சிய அனைத்தினும் இடம் பெறுகின்றது. இவ்விரண்டும் நற்றிணையில் மிகுதியாகப் பயின்

றுள்ளன. பிற பறவைகளும் பெரும்பாலும் எட்டுத்தொகை அக இலக்கியங்களில் அதிகம் பயின்றுள்ளன. பொதுவாகக் காணுமிடத்துப் பத்துப்பாட்டு இலக்கியங்களில் பறவைகள் பெறும் இடம் அவற்றின் அடியளவினை நோக்க மிகக் குறைவு. வருணனைகள் எட்டுத் தொகையினும் இவற்றில் மிகுதியாக, விரிவாக இடம்பெற்றிருந்தும் பறவைகள் குறைவாகப் பயின்று வருதற்குக் காரணம் வருணனையினும் பொருளை உவமித்தற்கும், உள்ளுறைப் பொருள் உணர்த்தற்கும் அகமாந்தர் மனநிலை புலப்படுத்தற்கும் அவை புலவரால் பெரிதும் பயன்படுத்தப் பட்டமை எனலாம்.

## பறவைகள் பற்றிய குறிப்புக்கள்

மயில் பற்றிய குறிப்புக்கள் முழுநிலை, உறுப்பு நிலை என்ற இருநிலைகளிலும் சிறக்கப் பயின்று வந்துள்ளமை குறிக்கப் பெற்றுள்ளது. மயில் தனது தோகை, உச்சிச்சூடு காரணமாக இங்ஙனம் இடம்பெறும் சிறப்புப் பெறுகின்றமையின் அத்தகு தனிச்சிறப்பற்ற பிறபறவைகள் உறுப்புநிலையில் பயின்று வந்துள்ளமை மிகக்குறைவு. உறுப்பு அடையாய் வர முழுநிலையில் அவை இடம்பெறலும் மயிலொடு நோக்கக் குறைவே. அன்னத் தூவி, சேக்கை அமைத்தற்குப் பயன்பட்டமையின் தனித்துக் காண இயலுகின்றது.

'மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்
துணைபுணர் அன்னத் தூநிறத்தூவி
இணையணை மேம்படப் பாயிணை இட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை'

(நெடுநல். 131-134)

பிற சில பறவைகளின் வாய், முட்டை, நகம், கால், கால்முள்' தூவி, சிறகு போன்றவை தம்மைப் பற்றியதாய் அமையாது உவமைகளாய் உதவியுள்ளன. உவமைப் பகுதியில் விரிவாக இவை இடம்பெறுகின்றமையின் இங்கு ஒருசில சான்றுகள் மட்டும் காட்டப்படுகின்றன.

'கிளிவா யொப்பின் ஒளிவிடு வள்ளுகிர்'

(பொருந : 34)

எனக் கிளியின் அலகு பெண்ணின் நகத்திற்கும்

'தளவின் சிரல்வாய்ச் செம்முகை' (ஐங். 447)

எனச் சிரலின் அலகு முல்லை அரும்பிற்கும் உவமை கூறப் பட்டுள்ளன.

புறவின் முட்டை வரகிற்கு உவமையாகியுள்ளது போன்று

'புறவுக் கருவன்ன புன்புல வரகு' (புறம். 34)

கொக்கின் நகம் பலிச்சோற்றிற்கு உவமையாகியுள்ளது.

'பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரல்' (புறம் 395)

அடையாக வரும் சிறப்பினை அலகு, தலை, கால், சிறகு, புறம், கண், தூவி, குடுமி, குரல், நிறம் போன்ற உறுப்புக்கள் பெற்றுள்ளன.

'கொடுவாய்க் கிள்ளை' (பெரும் 227)

'நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்' (குறுந். 160)

'பைங்காற் கொக்கு' (நெடுநல் 15)

'பசுங்கால் வெண்குருகு' (அகம் 273)

'அணிச்சிறை இனக்குருகு' (கலி. 126)

'ஈர்ம்புற நாரை' (நற். 127)

'மணிக்கண் காக்கை' (அகம் 319)

'மென் தூவிச் செங்காலன்னம்' (நற். 356)

'குடுமி நெற்றி நெடுமரச் சேவல்' (அகம். 87)

'சீறியாழ் நரம்பிசைத்தன்ன இன்குரல் குருகு' (நற். 189)

நிறம் அடையாக வரும்பொழுது பறவைக்கன்றிப் பறவையின் உறுப்பிற்கே சுட்டப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

'கடலங் காக்கை செவ்வாய்ச் சேவல்' (நற். 272)

'புறவின் செங்காற் சேவல்' (நெடுநல். 45)

இவற்றை நோக்க மயில் போன்று உச்சிச் சூடு முதல், அடிவரை தனித்தனியாகப் பாடல்களில் இடம்பெறும் சிறப்பினை இவை பெறுதல் இல்லை என்பது புலப்படும்.

### அகப்பொருள்

அகப்பொருள் திணைகள் ஐந்தினும் இடம் கொண்டிருந்தமையின் மயில் அகமாந்தருடனும் ஐந்திணையுடனும் தொடர்பு படுத்திக் கருதப்பட்டது. ஒரு சில பறவைகள் (கோழி, குருவி, அன்னம்) ஐந்திணையிலும் இடம் பெற்றிருப்பினும், ஐந்திணைத் துறைகளுடன் தொடர்பு படுத்திக் காணுகின்ற அளவிற்கு அவையும் சிறப்பிடம் பெறவில்லை. குருகு ஒன்று மட்டும் ஐந்திணைகளில் பயின்று வருதலோடு உள்ளுறைப் பொருளும் உணர்த்தி

யுள்ளது. இக்குருகும் முல்லைத்திணையில் ஓரேஒரு பாடலிலும் குறிஞ்சித்திணையில் இரண்டே பாடல்களிலும் பயின்றுள்ளது. இப்பாக்களிலும் அவை நரலலும், மீனை எதிர் நோக்கியிருத்தலும் கூதாளமலருக்கு உவமையாதலும் கூறப்பெற்றுள்ளனவே யன்றிக் குறிப்பிடும்படியான பொருட்சிறப்பினைப் பெறவில்லை. இருப்பினும் மருதத்திணைப்பாக்களும் நெய்தற்றிணைப்பாக்களும் உள்ளுறை உடையனவாய்ப் பொருளில் சிறந்து விளங்குகின்றமையின் ஐந்திணைத் தொடர்புடன் காண்பதைவிட அகமாந்தருடன் தொடர்புபடுத்திக் காணல் பொருந்தும். ஆயினும் உள்ளுறை பற்றித் தனித்துக்காண உள்ளமையின் இங்குச் சுருக்கமாக உரைக்கப்படுகின்றது.

### குருகும் அகமாந்தரும்

அகமாந்தராகிய தலைவன், தலைவி, பரத்தை, பாணன், புதல்வன் ஆகியோராக உள்ளுறையில் இடம்பெறும் சிறப்பினைக் குருகு பெற்றுள்ளது.

### தலைவன்

தலைவியுடன் இல்லறம் நடத்தி இன்பம் துய்க்கும் தலைவன் பரத்தையுடன் கூடியும் இன்பம் துய்க்கின்றான். இதனை முட்கள் பொருந்திய கொம்பினையுடைய இண்டையினது துய்த்தலை உடைய புதிய மலரும், மாமரத்தின் இளந்தளிரும் வருட உறங்கும் குருகு உணர்த்துகின்றது.

> 'முட்கொம்பு ஈங்கைத் துய்த்தலைப் புதுவீ
> ஈன்ற மாத்தின் இளந்தளிர் வருட
> ஆர்குருகு உறங்கும்' (அகம். 306)

தாழைமலரில் வீற்றிருக்கும் குருகு, தலைவன் தலைவியின் உள்ளத்தில் இனிது இடம்பெற்றிருத்தலை உணர்த்தி நிற்கின்றது.

> 'திரை முதிர் அரைய தடந்தாள் தாழை.........
> இறவார் இனக்குருகு இறைகொள இருக்கும்' (நற். 131)

நல்லான் போன்று பிறர்க்குத் தோன்றும் தலைவன் தாழை போல் தோன்றும் குருகாகவும் கூறப்படுகின்றான் (கலி. 133).

### தலைவி

காற்றினால் அசையும் புன்னைமரத்தில் அமர்ந்திருக்கும் குருகுமீது புன்னை நுண்தாது உதிர்கின்றது. இத்தாது படிந்த குருகு தலைவன் பிரிவால் பசலையுற்று வருந்தியிருக்கும் தலைவியைச் சுட்டி நிற்கின்றது.

'புதுமணல் கானல் புன்னைநுண்தாது
கொண்டல் அசைவளி தூக்குந் தொறும் குருகின்
வெண்புறம் ஒசிய' (நற். 74)

வேங்கை நுண்தாது உதிரப் பெற்ற மயில் களவு ஒழுக்கத்தினால் பொலிவு பெற்ற தலைவியாகக் கூறப்பட, புன்னை நுண்தாது உதிரப் பெற்ற குருகு பிரிந்து பசலையுற்று வருந்தும் தலைவியாகக் கூறப்படும் முரண் நோக்குதற்குரியது. திருமணத்தை எதிர்நோக்கி மகிழ்வுடன் இருக்கும் தலைவிக்கு, இயற்கைப் புணர்ச்சியினால் பொலிவு பெற்று விளங்கும் குறிஞ்சி நிலத் தலைவிக்கு அந்நிலக் கருப்பொருளாகிய வேங்கை மரத்தாது படிந்து எழிலுடன் நிற்கும் மயிலும், பரத்தைவழித் தலைவன் பிரியப் புதல்வனைப் பெற்ற நிலையில் பொலிவிழந்து பசலையுற்று நிற்கும் தலைவிக்கு, தலைவன் என்று வருவான் என இரங்கி நிற்கும் நெய்தல் நிலத் தலைவிக்கு, அத்திணைக் கருப்பொருளாகிய புன்னை நுண்தாது படிந்து நிற்கும் குருகும், ஒழுக்கம், கருப்பொருள் அனைத்தானும் பொருந்தியிருப்பது குறிப்பிடற்குரியது.

**பரத்தை**

ஆமையை உடைத்து உண்டு செல்கின்றது ஒரு குருகு; எஞ்சிய அதன் ஊனைப் பறை கொட்டுபவர் எடுத்துச் சென்று இரவு உணவிற்குச் சேர்த்து வைப்பர் என்று உரைக்கின்றாள் ஒரு பரத்தை. தலைவியைப் பழித்தற் பொருட்டு இங்ஙனம் மறைமுகமாகத்தான் நுகர்ந்த தலைவனின் மார்பைக் காவல் செய்து போற்றுபவள் தலைவி என்கிறாள். இதில் குருகு பரத்தையைச் சுட்டுகின்றது.

'குருகு உடைத்துண்ட வெள்ளகட்டு யாமை
அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டும்' (ஐங். 81)

**புதல்வன்**

பொதுவாகத் தலைவனின் புதல்வன் பாடல்களில் இடம் பெறல் அரிது. உள்ளுறையில் அதனினும் அரிது. இவ்வரிய புதல்வன் குருகின் பார்ப்பாகக் கீழ்வரும் பகுதியில் கூறப்படுகிறான்.

'வெண்டலைக் குருகின் மென்பறை விளிக்குரல்
நீள்வயல் நண்ணி இமிழும் ஊர' (ஐங். 86)

தலைவன் புதல்வனைப் பிரிந்து பரத்தையுடன் உறைகின்றான். அக்காலைப் புதல்வன் கூறிய மாற்றம் தலைமகளுக்குப் பாங்கா

யினார்க் கூறக்கேட்டனன், அத்தலைவன் என்றறிந்து அவனுடன் ஊடும் பரத்தை, 'குருகுப் பார்ப்புக்களின் அழைப்புக் குரல் நெடிய கழனிக்கண் சென்று ஒலிக்கும் ஊரன்' என்று அவனைச் சுட்டு கின்றாள். தலைவன் புதல்வனே இப்பாடலில் குருகுப்பார்பாகச் சுட்டப்படுகின்றான். மயிலாகத் தலைவனின் புதல்வன் சுட்டப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மயில் தன் பார்ப்புக் களைப் பேணுதலும் சங்கப்பாக்களில் யாண்டும் காணப்பட வில்லை. ஆனால் குருகு தன் பார்ப்பினை ஓம்புதல் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. களவுக்கால ஒழுக்கத்தைக் குறிப்பது குறிஞ்சித் திணை; அத்திணைக்குரிய கருப்பொருள் மயில் ஆகலின் அதன் பார்ப்பு சுட்டப்படலும் தேவையற்றதாகின்றது, குருகு நெய்தல் நிலப்பறவையாகலின் கற்பு வாழ்க்கையைப் பாடுங்கால் பெடையைப் பேணலும் பார்ப்பினை ஓம்பலும் உள்ளுறை உணர்த்தப் பெரிதும் பொருத்தமாய் அமைகின்றன.

**பாணன்**

'கருங்கோட்டுப் புன்னைக் குடக்கு வாங்கு பெருஞ்சினை
விருந்தின் வெண்குருகு ஆர்ப்பின் ஆஅய்
வண்மகிழ் நாளவைப் பரிசில் பெற்ற
பண்ணமை நெடுந்தேர்ப் பாணியின் ஒலிக்கும்' (நற். 167)

பரத்தையிற் பிரிந்த தலைமகன் வாயில்வேண்டிப் பாணனைத் தூதாகத் தலைவியிடம் அனுப்புகின்றான். வாயில் மறுக்கும் தோழியின் கூற்று இது. குருகின் ஆரவாரம் தேர்ப்பாணியின் ஒலிக்கும் என்றது பாணன் நயந்து கூறும் மொழிகள் எமக்கு இடிஇடிப்பது போலிருக்கும் என்ற குறிப்பினை உணர்த்தி நிற்கின்றன.

இவ்வாறாகக் குருகு அகமாந்தருடன் சிறப்பான தொடர்பு பெற்றிலங்குகின்றது. இக்குருகின் இனமான நாரையும் உள்ளுறையில் மிகுதியும் இடம் பெறுகின்றது. அனைத்துத் திணையிலும் நாரை பயின்று வாராமையின் இவண் நோக்கப் படாது உள்ளுறை பற்றிய நோக்கில் மயிலுடன் இணைத்து நோக்கப்படுகின்றது.

பலபறவைகள் அகப்பொருட் பாடல்களில் சிறந்தகருத்தினைப் புலப்படுத்தி நிற்பினும் அகமாந்தருடன் இணைந்து நோக்கும் அளவிற்குப் பலபடப் பாடப்பெறாமையின் அவையும் உள்ளுறையில் நோக்கப்படுகின்றன.

## புறப்பொருள்

வரலாறு, மன்னனின் ஈகைத்திறம், வாகைச் சிறப்பு, செங்கோன்மை போன்ற பண்புகளோடு மயில் தொடர்புபடுத்திக் காணப்பட்டது. பீலி சிறந்த ஒப்பனைப் பொருளாய் இருந்தமையின் அதுவும் தனித்துக் காணப்பட்டது. அவ்வகையில் அணுக, வரலாற்றுக் குறிப்புக்கள் பிற பறவைகள் தொடர்புடன் ஒன்றிரண்டு கிடைக்கின்றனவேயன்றிப் பாலைநில வருணனை, போர்க்கள வருணனை (கூகை, ஆண்டலை, எழால், பருந்து, எருவை, கழுகு, காகம்) போன்றவற்றின் தொடர்புடன் கிடைக்கும் குறிப்புக்களே மிகுதியாக உள்ளன. அவை வருணனையில் நோக்கப்பட உள்ளமையின் பிறபறவைகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் எவ்வாறிடம் பெறுகின்றன என்பது மட்டுமே இப்பகுதியில் காணல் இயலும்.

### வரலாற்றுக் குறிப்புக்கள்

மயிலுக்குப் பேகன் போர்வை வழங்கியது புலவர் பலரால் பாராட்டிப் பாடப் பெற்றுள்ளது போன்று புறாவிற்குச் சிபி தன் ஊனையே வழங்கியதும் பன்முறை புறநானூற்றில் (37, 39, 43, 46) பாராட்டப்பட்டுள்ளது.

> 'புறவின் அல்லல் சொல்லிய கறையடி
> யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
> கோல் நிறை துலாஅம் புக்கோன் மருக' (39)

மற்றொரு குறிப்பு அகப்பாடல்களில் காணப்படுகின்றது. தலைவனைப் பகற்குறிக்கண் சென்று சந்தித்தல் இனித்தலைவிக்கு அரிது என்பதனை அவனுக்கு உணர்த்த விரும்பும் தோழி, பகற் காலத்தே வெளிப்பட்டு இயங்க இயலாத கூகையின் மேல்வைத்து உரைக்கின்றாள். அவ்வமையம்,

> 'கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
> நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டெனக்
> காணிய செல்லாக் கூகை நாணிக்
> கடும்பகல் வழங்காது ஆஅங்கு இடும்பை
> பெரிதாலம்ம இவட்கே அதனால்
> மாலை வருதல் வேண்டும்' (அகம் 148)

என ஆய், மிஞிலி, நன்னன் ஆகியோர் தொடர்பான வரலாற்றினை உவமை கூறுகின்றாள். ஆய் எயினன் மிஞிலியொடு (நன்னனின் படைத்தலைவன், நண்பன்) போரிட்டு மாண்ட

காலை அவ்வெற்றியைப் போர்க்களத்தே சென்று கொண்டாட இயலாத நன்னன் போல இவளும் நின்னைப் பகற்குறிக்கண் காண இடையூறு பல உடையள் என்பது இதன் கருத்து.

இதே நிகழ்வு மற்றொரு பாடலிலும் குறிக்கப்படுகின்றது. அதன் கண் போர்க்களத்துப் பொருது மாண்ட ஆய் எயினனின் உடலைப் பகலவன் தன் கதிர்க்கரங்களால் வருத்தாவாறு புள்ளினங்கள் நிழல் செய்து காத்தன என்றும் அவ்வாறவை சுழல்வதை யான் கண்டு பொறுக்கலாற்றேன் என்று கூறி நன்னன் மறைந்து கொண்டனன் என்றும் பாடுகின்றார் பரணர்.

> 'வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
> அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
> இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
> நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
> ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்கு
> அங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
> ஒண்கதிர் தெறாமைச் சிறகரில் கோலி
> நிழல் செய்து உழறல் காணேன் யானெனப்
> படுகளம் காண்டல் செல்லான் சினம் சிறந்து
> உருவினை நன்னன் அருளான் கரப்ப' (அகம், 208)

'எயினன் புள்ளின் பாதுகாவலன் ஆகலின் பறவைகள் ஒருங்கு கூடி நிழல் செய்தன என்க' என இதற்கு உரையாசிரியரும் விளக்கம் தருகின்றார். இப்பாடலில் சுட்டப்படும் பறவைகளின் இனம் அறிய இயலவில்லை எனினும் அவை எயினனின் வளர்ப்புப் பறவைகளாக இருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

**அணிகள்**

பாக்களில் பொருளைப் புலப்படுத்தற்கும், தெளிவு படுத்தற்கும், சிறப்பித்தற்கும் அவற்றின்' சுவை மிகுத்தற்கும் அணிகள் ஆற்றும் பங்கு அளப்பரிது எனின் அவ்வணிகளில் பறவைகள் பெறும் பங்கும் அளப்பரிது என்பது மிகையன்று. மயில் உவமை, உள்ளுறை, குறிப்புப் பொருள், குறியீடு, வருணனை, தற்குறிப்பேற்றம் ஆகிய அணிகளுடன் தொடர்பு படுத்தி நோக்கப் படப் பிறபறவைகள் குறிப்புப் பொருள், குறியீடு, நீங்கலாகப் பிறவற்றுடன் தொடர்புபடுத்திக் காணப்படுகின்றன. உள்ளுறை யின்றித் தனித்த குறிப்புப் பொருளைக் காணல் பிற பறவைகள் பயின்று வரும் பாடல்களில் அரிதாவதும் குறியீடாக வரும் சிறப்பினை அவை பெறாததுமே இதற்குக் காரணங்கள்.

பொதுவான நோக்கில் பறவைகள் அணிகளில் மிகுதியும் இடம் பெறுவதும், அவற்றைத் தனித்தனியாக நோக்கின் ஓரளவே இடம்பெறுவதும் இவண் சுட்டுதற் குரியன,

**உவமை**

மலர்களுக்குப் பறவைகளின் உறுப்புக்கள் உவமையாவது மிகுதி கருதி முதற்கண் சுட்டப்படுகின்றது. முல்லை அரும்புக்குச் சிரலின் அலகும் அதிரல் அரும்புக்குக் குயிலின் அலகும் உவமை யாகின்றன.

'சிரல் வாயுற்ற தளவில்' (நற். 61)

'குயில் வாயன்ன கூர்முகை அதிரல்' (புறம். 269)

ஊர்க் குருவியின் முட்டையை உடைத்தாற் போன்றுள்ளதாம் புன்னை அரும்பு.

'உள்ளூர்க் குரீஇக் கருவுடைத் தன்ன
பெரும்போது அவிழ்ந்த கருந்தாள் புன்னை' (நற். 231)

வெட்சி முகைக்கு இதல்பறவையின் காலில் உள்ள முள் உவமை கூறப்படுகின்றது.

'இதல்முள் ஒப்பின் முகை முதிர் வெட்சி' (அகம். 133)

இதே போன்று அவரை மலருக்குக் கிளியினது அலகும், ஆம்பல் மலருக்குக் கொக்கினது அலகும் உவமிக்கப்பட்டுள்ளன.

'பைங் கொடியவரைக்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு பன்மலர்' (குறுந். 240)

'மாரிக் கொக்கின் கூரலகு அன்ன
குண்டு நீராம்பல்' (நற். 100)

இருவாட்சிப் பூவிற்கு உவமையாகும் சிறப்பினைக் கானக் காக்கையின் சிறகு பெற்றுள்ளது.

'கானக் காக்கை கலிச்சிற கேய்க்கும்
மயிலைக் கண்ணி' (புறம் 342)

குருகு கரும்புப்பூ, தாழைமலர், கூதாளமலர் மூன்றிற்கும் உவமையாகும் சிறப்பினைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

'கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ
மாரியம் குருகின் ஈரியம் குரங்க' (அகம் 235)

'தாழை வெண்பூக் குருகென மலரும்' (குறுந் 286)

'பைம்புதல் நளிசினைக் குருகு இருந்தன்ன
வண்பிணி அவிழ்ந்த வெண் கூதாளம்' (அகம் 178)

இவை அனைத்திலும் பறவைகளும் பறவைகளின் உறுப்புக் களும் மலர்களுக்கு உவமை கூறப்பட்டுள்ளனவேயன்றி, மலர்களும் மயிலின் உறுப்புக்களுக்கு உவமையாகக் கூறப்பட்டவை போன்று இப்பறவைகளின் உறுப்புக்களுக்கு மலர்கள் உவமையாகக் கூறப்படவில்லை என்பது கருத்தில் கொள்ளற்குரியது.

ஆம்பல் மொட்டவிழ்வது சிறுவெண்காக்கை கொட்டாவி விடுவது போன்றுள்ளது என்ற உவமை தனித்து நிற்கும் சிறப்பினது.

'ஆம்பல், சிறுவெண்காக்கை ஆவித்து என்ன
வெளிய விரியும்' (நற். 345)

மலர்களுக்குப் போன்று யாமரத்தளிருக்குச் சேவலின் தாடியும் (அகம் 187), உகாமரக் காய்க்குக் குயிலின் கண்ணும் (அகம் 293) உகாமர அடிக்குப் புறவின் புறமும் (குறுந், 274) உழுந்தின் தாளுக்குக் குறும்பூழ்ப் பறவையின் காலும், மாங்காய்க்குக் கிளியும் (அகம் 37) உவமை கூறப்பட்டுள்ளன.

மயில் மகளிர் சாயலுக்கு உவமையாதல் போன்று கிளி மகளிரின் கிளவிக்கும், அன்னம் அவர்தம் நடைக்கும் உவமை யாகும் சிறப்பினைப் பெற்றுள்ளன.

'சொல்லத்தளரும் கிளியுமன்று' (கலி 55)

'அன்னமாண் பெடையின் மென் மெல இயலி' (அகம். 279)

மகளிர் கூந்தலுக்கு மயிலினது தோகை உவமையாக, அம்மகளிர் கூந்தல் உலர்த்தலுக்கு நாரை சிறகு உலர்த்தலை உவமை கூறியிருப்பதும் பொருத்தமாக உள்ளது.

**உள்ளுறை உவமை**

புலவரின் ஆழ்ந்த அறிவிற்குச் சான்றாய் நின்றிலங்குவது உள்ளுறை உவமை. பறவைகள் பிற அணிகளில் இடம் பெறு வதனைக் காட்டிலும் உள்ளுறை உவமையில் மிகுதியாகப் பயின்றுள்ளன. ஒன்றிரண்டு பாடல்களிலே இடம் பெற்ற பறவைகளும் உள்ளுறைப் பொருளை உணர்த்தி நிற்பது குறிப்பிடற்குரியது.

உள்ளுறையில் இடம் பெறும் பறவைகள் அன்னம், கடற்காக்கை, கணந்துள், கம்புள், காகம், கிளி, குயில், குருகு, குருவி, கொக்கு, கோழி, நாரை, பருந்து, புறா, மணிச்சிரல், வாவல் ஆகியன. இவற்றில் மிகுதியாகப் பயின்றுவரும் பறவைகள் குருகு, கிளி, நாரை, கடற்காக்கை ஆகியவை, அருகிக் கையாளப் படும் பறவைகள் கோழி, குருவி, பருந்து, குறும்பூழ் ஆகியன.

பறவைகளாய் உள்ளுறையில் சுட்டப்படும் மாந்தர் தலைவன், தலைவி, தோழி, பரத்தை, தாய், பாணன், புதல்வன், தமர், சுற்றம், ஏதிலார், வாயில் ஆகியோர். சுட்டப் படும் பிற தலைவியின் நெஞ்சம், அவளின் நலன், பசலை ஆகியன.

விரிவுஅஞ்சி இவ்வுள்ளுறைகள் அனைத்தும் விளக்கப் படாது சிறப்பான சிலவும், உள்ளுறையில் சிறப்பிடம் பெறும் குருகு, கிளி, கடற்காக்கை ஆகியவற்றில் பலவும் இவண் கருதப்படுகின்றன. நாரையும் குருகும் ஓரினப் பறவைகள் என்பதோடு இவற்றின் சூழலும் இவைதரும் உள்ளுறையும் ஒன்றேபோல் அமைகின்றமை யின் நாரை தனித்து நோக்கப்படவில்லை.

இரவில் இரைதேடும் இயல்புடைய வாவல் பகலில் இரை தேடுவதாகப் பாடிப் பாலையின் கொடுமையினை உள்ளுறுத்தி உரைக்கின்றார் ஒரு புலவர். இது மாறுபட்டமையும் ஒன்று.

'சிறுபைந்தூவிச் செங்காற் பேடை
நெடுநீர் வானத்து வாவுப்பறை நீந்தி
வெயிலவிர் உருப்பொடு வந்து கனிபெறாஅது
பெறுநாள் யாணர் உள்ளிப் பையாந்து
புகலேக்கற்ற' (அகம். 57)

தினைப்புனம் காக்கவரும் தலைவியைச் சந்தித்து இன்பம் துய்க்கின்றான் தலைவன். இதனால் ஊர் அலர் தூற்ற அன்னை சினக்கின்றாள் என்று உணர்த்தி வரைதலை விரைவுபடுத்த விரும்பும் தோழி,

'கொழுஞ் சுளைப் பலவின் பயங்கெழு கவாஅன்
செழுங்கோள் வாங்கிய மாச்சினைக் கொக்கின்
மீன்குடை நாற்றம் தாங்கல் செல்லாது
துய்த்தலை மந்தி தும்மும் நாட' (நற். 326)

இப்பாடலில் பலாமரம் தினைப்புனமாகவும், கொக்கு தலைவ னாகவும், மீன் தலைவியாகவும் குடைதல் இன்பம் துய்த்தலாகவும்

நாற்றம் அலராகவும் மந்தி அன்னையாகவும் கொண்டு, பலா மரத்தின்மீது கொக்கிருந்து மீனைத் தின்னுதலானாகிய நாற்றத்தைத் தாங்க மாட்டாது மந்தி தும்முதல் போலத் தினைப் புனத்து நீ வந்து இவளைக் கண்டு செல்லுதலால் உண்டாகிய அலரைத் தாங்க மாட்டாது அன்னை சினந்து பலகாலும் நோக்கும் என்பது உணர்த்தப்படுகின்றது.

'மிளகு பெய்தனைய சுவைய புன்காய்
உலறுதலை உகாஅய்ச் சிதர்சிதர்த் துண்ட
புலம்புகொள் நெடுஞ்சினை ஏறிநினைந்து தன்
பொறிகிளர் எருத்தம் வெறிபட மறுகிப்
புன்புறா உயவும்' (நற். 66)

என்பதில் மிளகு பெய்தாற் போன்ற சுவையினை உடைய காய்ந்த கிளைகளையுடைய உகாய் மரத்தின் புல்லிய காயை உண்டு' அதனால் வருத்தமுற்ற புறா, தன் பிடரி சிலிர்த்து நெடிய கிளை மேலேறித் தான் தின்ற தவற்றை எண்ணி வருந்தி நிற்கும், என்று கூறும் முகமாகத் தன் மகள் முன்பின் தெரியாத ஏதிலாளனது மாய இன்பத்தினில் களிப்புற்றுச் சென்று பின்பு மறுக்கமுற்று வருந்தி நிற்பாளோ என்ற தாயின் ஏக்கத்தைப் புலப்படுத்து கின்றார் புலவர்.

தவிர, குயில் கூவல் ஊரார் தூற்றும் அலரையும் (ஐங். 369) சிறகு நலனழிந்த முதுமணிச்சிரல் சிறிய மீனை அவாவி நிற்றல், பரத்தை தலைவியின் முதுமையை இகழ்தலையும் (அகம். 106) பழனப்பன்மீன் அருந்திய" நாரை கழனி மருதத்தின் சென்னி சேரல், பரத்தையர் பலருடன் மகிழ்ந்த தலைவன் இல்லத்திற்கு வரலையும் (ஐங். 70) பொருத்தமாக உணர்த்துகின்றன.

**கிளி**

'வாரல் மென்தினைப் புலவுக்குரல் மாந்திச்
சாரல் வரைய கிளையுடன் குழீஇ
வளிசெறி வயிரின் கிளிவிளி பயிற்றும்,
நளியிரும் சிலம்பின் நன்மலை நாடன்' (நற். 304)

தலைவன் சான்றோர் சூழவந்து தலைவியை மணந்து நலன் துய்க்கவேண்டும் என்றறிவுறுத்தும் இப்பாடலில் கிளி தலை மகளைக் குறித்து நிற்கின்றது.

'அளியதாமே செவ்வாய்ப் பசுங்கிளி
குன்றக் குறவன் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள்புனம் கண்டும்
பிரிதல் தேற்றாப் பேரன்பினவே' (ஐங். 284)

கிளி தினையரிந்த பின்னும் தினைப்புனத்தையே எண்ணி வருந்தல் போலத் தலைவி இல்லிலும் நின்னை மறவாது நின்னொடு துய்த்த இன்பம் எண்ணி, ஏங்குவள் என்ற கருத்துணர்த்தும் இப்பாடலில் கிளியாகத் தலைவி குறிக்கப்படுகின்றாள். இவ்வாறு மயில் போன்று கிளியும் தலைவன், தலைவி இருவராகவும் குறிக்கப்படும் சிறப்பினை உடையது.

இது தவிரக் கிளிகடிதல் உள்ளுறையில் பல பொருள் உணர்த்தப் பயன்படுகின்றமை அக்கிளி உள்ளுறையில் சிறப்பிடம் பெறக் காரணமாகின்றது.

'யாஅங் கொன்ற மரஞ்சுட்டு இயவில்
கரும்பு மருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித்த தடக்கையன்ன பால்வார்பு
கரிக்குறட்டிறைஞ்சிய செறிகோட் பைங்குரல்
படுகிளி கடிகம் சேறும்' (குறுந். 198)

யாமரத்தைச் சுட்ட வழியின்கண் கரும்பினை ஒத்த அடியை உடைய பசிய தாளினை உடைய சிவந்த தினைகளின் மடப்பம் பொருந்திய பிடியானையின் கையை ஒத்தனவாய் பால் நிறைந்து உலைக்கரியை எடுக்கும் குறடு போல வளைந்த, செறிந்த குலைகளையுடைய பசிய கதிரினைக் கவரும் கிளியினைக் கடியச் செல்வோம் எனக் குறியிடம் பெயர்ந்ததைக் குறிப்பிடக் கிளி கடிதல் இப்பாடலில் பயன்பட, இரவுக்குறி மறுத்துப் பகற்குறி வரக் கூறலுக்குப் பின்வரும் பாடலில்பயன்பட்டுள்ளது.

'வளைவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடீஇயர்
செல்கென் றோளே அன்னை எனநீ
சொல்லின் எவனோ தோழி' (குறுந். 141)

தோழி அறத்தொடு நிற்பள் எனக் கிழத்திக்கு உரைப்பதற்கும் கைகொடுப்பது கிளி கடிதல்.

'குறும்படைப் பகழிக் கொடுவில் கானவன்
புனமுண்டு கடிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளிர் ஒப்பும் கிள்ளையொடு

குறும்பொறைக்கு அணவும் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியின் எவனோ தோழி நம்மறையே' (குறுந். 333)

கானவனால் கடியப்பட்ட யானை மகளிரால் கடியப்பட்ட கிள்ளையோடு குறும்பொறையில் ஏற விரும்பும் என்றது, காவலர் முதலியோரால் கடியப்பட்ட தலைவன், தாய் முதலியோரால் கடியப்பட்ட நின்னோடு கூடி இல்லறம் ஆற்றற்கு விரும்புகிறாள் ஆகலின் யான் அறத்தொடு நிற்பன் எனத் தோழி அறிவுறுத்துவ தாக அமைகின்றது.

தாய், தலைவியின் மாறுபாடு கண்டு வேலனை அணுகி வெறியாட்டு நடத்தக் கருதியிருத்தலின் நாளைச் சிறுகிளி கடியச் செல்லல் இயலுமோ என்று கூறுமுகமாக இற்செறிப்பும் அறிவுறுத்தப் பயன்பட்டுள்ளமை உணரலாம்.

'பாசினம், வணர்குரல் சிறுதினை கடியப்
புணர்வது கொல்லோ நாளையும் நமக்கே' (நற். 373)

மற்றும், தலைவன் களவின்பமே கருதியிருக்கின்றான் எனச் சாடற்கும் (ஐங். 282) வரைவு கடாதற்கும் இது துணை நிற்கின்றது.

'குன்றக் குறவன் காதன் மடமகள்
மென்றோள் கொடிச்சியைப் பெறற்கரிதுதில்ல
பைம்புறப் படுகிளி ஒப்பலர்
புன்புல மயக்கத்து விளைந்தன தினையே' (ஐங். 260)

தினை விளைந்து விட்டமையின் அறுவடை முடிந்து விடும் ஆகலின் காவல் காத்தற்குத் தேவை இல்லை. எனவே தலைவியை இனித் தினைப்புனத்துக் கண்டு மகிழல் அரிது. விரைவில் மணம் புரிக என்று அறிவுறுத்துகின்றாள் தோழி.

இவையன்றியும் இன்னும் சில பாக்களிலும் கிளி தொடர்பான உள்ளுறை உவமைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றிலும் உள்ளுறையின்றி வெளிப்படப் பொருள் தரும் பாக்களிலும் கிளி கடிதல் தொடர்பாகவே செய்திகள் கூறப்படுகின்றன.

## குருகு

உள்ளுறையில் மிக அதிகமான எண்ணிக்கையில் இடம்பெறும் பறவை குருகு. கிளி கடிதல் பல பாடல்களில் இடம் பெற்றாற் போன்று குருகு உறங்கல் பல பாடல்களில் இடம் பெற்றுள்ளது.

'வதிகுருகு உறங்கும் இன்னிழல் புன்னை' (குறுந். 5)

இனிய புன்னை நிழலில் குருகு உறங்கும் என்பது இரைதேடற் பொருட்டு வந்த குருகுகள் ஆங்குள்ள நிழல் இனிமையில் தம்மை மறந்து துயில்வது போன்று நம் தலைவர் நம்மை மறந்து ஆங்குள்ள பிற இன்பத்தால் தங்குவாராயினர் என்ற உள்ளுறைப் பொருள் உடையது.

பிறிதொரு பாடலில் கழியில் இரைதேர்ந்து இளைத்த குருகு தாழையில் தங்கித் திரையொலியில் தூங்கும் என்று, களவொழுக்கத்தின்கண் குறியிடம் பெற்று இன்புற்ற நீங்கள் இனி மணந்து இல்லறம் மேற்கொண்டு இன்புற வேண்டும் என்ற கருத்து உணர்த்தப்படுகின்றது.

'கழிதேர்ந் தசைஇய கருங்கால் வெண்குருகு
அடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
உடைதிரை ஒலியில் துஞ்சும் துறைவ' (குறுந். 303)

பொதும்பரில் உறங்கும் குருகு தலைவியை மறந்து இனிது உறையும் தலைவனைச் சுட்டுகின்றது.

'எக்கர் ஞாழல் இணர்படு பொதும்பர்
தனிக்குருகு உறங்கும்' (ஐங். 144)

குருகு புன்னையிலே உறங்கல் தலைவன் பிற இன்பத்தில் ஈடுபட்டு நின்றதைக் குறிக்கப் புன்னையிலே சேரல் தலைவியோடு இல்லில் உறைதலைக் (நற். 67) குறிக்கின்றது. குருகு தாழை போல மலரலும் (குறுந் 127) தாழை போலத் தோன்றலும் (கலி.133) தலைவன் தூயன் போன்றும், நல்லன் அல்லன் ஆயினும் நல்லன் போன்றும் பிறர்க்குத் தோன்றுவான் எனக் காட்டு கின்றன.

இவை போன்று பல உள்ளுறைப் பொருளை உணர்த்தி நிற்கும் குருகு, ஐங்குறு நூற்றின் 'குருகுப்பத்தி' லும் பல பாக்களில் உள்ளுறைப் பொருள் உடையது. 'வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தெனக் காணிய சென்ற மடநடை நாரை, என்று தொடங்கும் இப்பாடல்களில் குருகு பரத்தையையும், பிள்ளை பரத்தையோடு தலைமகனிடை உள்ளதாகிய ஒழுக்கத்தையும் மடநடை நாரை வாயில்களையும் சுட்டி நிற்கின்றன.

கடற்காக்கையும் பல பாடல்களில் உள்ளுறைப் பொருள் உரைக்கின்றது. ஐங்குறுநூற்றில் சிறுவெண் காக்கைப் பத்தில்

இடம்பெற்ற பத்துப் பாக்களும் பொருத்தமான உள்ளுறைப் பொருளுடையன. அதில் பெருங்கடற்கரையது சிறுவெண் காக்கை என்று முரணழகுடன் அறிமுகம் ஆகும் இக்காக்கை தலைவன் பெரிதும் நற்குணமும் சிறிது பேதமையும் உடையன் என உணர்த்தி நிற்கின்றது.

'கருங்கோட்டுப் புன்னைத் தங்கும்' (ஐங். 161)

எனக் கடற்காக்கை புன்னையில் தங்குவது தலைவன் மணம் முடிக்காது வாளாமனையில் தங்கலையும்,

'நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந் துண்டு
பூக்கமழ் பொதும்பர்ச் சேக்கும்' (ஐங். 162)

எனக் கடற்காக்கை தனக்குரிய இரையைத் தேர்ந்தெடுத்துண்ட பின்னர் மலர்மணம் கமழும் சோலையில் தங்கல் தலைவன் தான் விரும்பும் களவின்பம் வாய்க்கப் பெறலின் அமைதியுடையவனாய்த் தன் மனைக்கண் சென்று அங்கு நுகரும் பிற இன்பத்தில் தலைவியை எண்ணாது இருந்து விடுதலையும் புலப்படுத்துகின்றன.

இனி, கடற்காக்கை 'இருங்கழித் துவலை யொலியில் துஞ்சும்' (ஐங். 163) என்பது அலரையும் கருதாது அவன் இனிதிருப்பான் என்பதையும், அயிரை ஆரலும் (ஐங். 164) சிறுமீன்களை நிரம்ப உண்ணலும் (ஐங். 165) புல்லிய பரத்தையரை நாடலையும் நுட்பமாக உணர்த்துகின்றன.

பிற பறவைகளுடன் ஒப்பிட்டு நோக்க இவை உள்ளுறைப் பொருள்தரச் சிறப்பாகப் பயன்பட்டுள்ளமை அறியப்படும். ஐங்குறுநூற்றில் பத்துப் பத்துப் பாக்களை இவை பெற்றமையும் அவையனைத்தும் உள்ளுறை பொதிந்து நின்றமையும் இச் சிறப்பிற்கு ஒரு காரணம் எனலாம். மயிலும் இதே போன்று பத்துப்பாக்களும் அவற்றில் உள்ளுறைப் பொருளும் பெற்றிருக் கின்றமையின் உள்ளுறைப் பொருள் உணர்த்துவதில் இவை மயிலை விஞ்ச இயலவில்லை. மேலும் கிளிகடிதலை வைத்தே பல பொருள் உணர்த்தியமை கிளியின் தனிச்சிறப்பு என்று கொண்டால், பல்வேறு சூழலில் பல பொருளை உணர்த்திப் பல அகமாந்தரைச் சுட்டும் பேறு பெற்றமை மயிலின் தனிச்சிறப்பு எனக் கொள்ளலாம். குருகும் இச்சிறப்புப் பெறுகின்றமையின் மயிலோடு உள்ளுறைப் பொருள் உணர்த்துவதில் இணையாக நிற்கும் பேற்றினை அது பெறுகின்றது எனக் கொள்ளல் பொருந்தும்.

**வருணனை**

சங்கப்பாக்கள் நெடிய வருணனைக்குப் பெரிதும் இடம் தருதல் இல்லை என்பது 'மயிலும் வருணனையும்' என்ற பகுதியில் ஏற்கனவே உரைக்கப் பெற்றுள்ளது. 'அக மாந்தர் மன உணர்வு களை விளக்கத் தேவையான பின்புலங்களே இலக்கியப் பரப்பிற்குள் கவிஞர்களால் கொண்டு வரப்படுகின்றன.' என்ற கூற்றினையும்[1] இங்கு நினைவு கொள்ளல் பொருந்தும். ஆகவே குறுகிய, தேவையான வருணனைகள் மட்டும் பறவைகள் தொடர் பாகவும் இடம் பெறுகின்றன.

மயில் உச்சிச்சூடு முதல் அடிவரை உவமையுடன் வருணிக்கப் பட்டுள்ளது போன்று வேறு எந்தப் பறவையும் வருணிக்கப் படவில்லை. உறுப்புக்களை நோக்குங்காலும் கோழிச் சேவல் மட்டும் சற்றுப் பரந்த தெளிவான வருணனை பெறுகின்றது.

> 'தளிர்புரை கொடிற்றில் செறிமயிர் எருத்தில்
> கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ அன்ன
> நெற்றிச் சேவல்' (அகம். 367)

கிளியின் வளைந்த அலகும் (கொடுவாய்க் கிள்ளை—பெரும். 227) குறும்பூழின் அழகிய பொறிப்புறமும் (கதிர்த்த சென்னி நுணங்கு செந்நாவின் விரித்த போலும் அந்நுண்பல் பொறிக் காமர் சேவல் - அகம். 103) கொக்கின் குடுமியும் (அகம். 290) ஈர்ம்புறமும் (மாரிச் சுதையின் ஈர்ம் புறத்தன்னகூரல் கொக்கின் குறும்பறைச் சேவல்—நற். 189) அன்னத்தூவியின் மென்மையும் (மென் தூவிச் செங்காலன்னம் - நற். 356) சிறப்புக் கருதிக் குறிக்கப்பட்டுள்ளன. பறவைகளின் குரலுக்குப் பல இசைக் கருவிகளின் ஒலி உவமிக்கப்பட்டுள்ளன. மயிலின் குரலுக்கு ஊது கொம்பொலி உவமை கூறப்பட்டது போன்று கம்புளின் குரலுக்கும் ஊது கொம்பொலி உவமையாகியுள்ளது.

> 'கம்புள் இயவன் ஆக' (அகம் 365)

குருகின் ஒலிக்கும் குயிலின் ஒலிக்கும் கின்னரப் பறவையின் ஒலிக்கும் சீறியாழ் இசையும்,

> 'நரம்பிசைத் தன்ன இன்குரல் குருகு' (நற். 189)

> 'தீந்தொடை விளரி நரம்பின் சீறியாழ்
> மலிபூம் பொங்கர்மகிழ் குரல் குயில்' (அகம்279)

---

1. ஆ. இராமகிருட்டிணன்; அகத்திணை மாந்தர்...ஓர் ஆய்வு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை. ப.223

'ஆடுசிறை அறுத்த நரம்புசேர் இன் குரல்' (பதிற்றுப். 5) வங்காவின் குரலுக்குக் குழலிசையும் உவமையாகியுள்ளன.

'குழலிசைக் குரல' (குறுந். 151)

கணந்துட் பறவையின் குரல் யாழிசையோடு சேர்ந்து இசைக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

'நெடுங்கால் கணந்துளம் புலம்புகொள் தெள்விளி
சுரம்செல் கோடியர் கதுமென இசைக்கும்
நரம் பொடு கொள்ளும்' (நற். 212)

குடிஞையின் வல்லோசை துடியுடன் உவமிக்கப் பட்டுள்ளது. 'துடிக் குடிஞை குடிப்பாக்கத்து' (பொருந. 210)

பொதுவாகப் பறவைகளின் ஒலிக்குத் தேர்மணியின் ஒலி உவமையாகியுள்ளது. 'புள்ளொலி மணி செத்து ஓர்ப்ப' (நற். 175).

இனி, இப்பறவைகள் இடம்பெறும் வருணனைகளை நோக்க, குடிஞை, குறும்பூழ், கூகை, எழால், பருந்து, கழுகு, புறா போன்ற பல பறவைகள் வழிவருணனைகளில் மிகுதியும் இடம் பெறக் காணலாம். மயில் இடம் பெற்ற வருணனைகள் குறிஞ்சி, முல்லை மருத நிலங்களின் வளம் உணர்த்தப் பயன்பட அதற்கு நேர் மாறாகப் பாலைநில வெம்மையை, வறுமையைக் காட்ட இவை பயன்பட்டுள்ளன.

'கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல்
சிறுபுன் பெடையொடு குடையும் ஆங்கண்
அஞ்சுவரத் தகுந கானம்' (அகம் 63)

'சேணுறச் சென்று வறுஞ் சுனைக் கொல்கிப்
புறவுக்குயின் றுண்ட புன்காய் நெல்லிக்
கோடை உதிர்த்த குவிகண் பசுங்காய்
அறுநூற் பளிங்கின் துளைக்காசு கடுப்ப
வறுநிலத்து உதிரும் அத்தம்' (அகம். 315)
'கொலை வெங் கொள்கைக் கொடுந்தொழில் மறவர்
ஆறுசெல் மாக்கள் அருநிறத் தெறிந்த
எஃகுறு விழுப்புண் கூர்ந்தோர் எய்திய
வளைவாய்ப் பருந்தின் வள்ளுகிர்ச் சேவல்
கிளைதரு தெள்விளி கெழுமுடைப் பயிரும்
இன்னா வெஞ்சுரம்' (அகம் 363)

நெய்தல் நில நீர்ப் பறவை குருகும் பாலையின் வெம்மை உணர்த்துவது குறிப்பிடத்தக்கது.

'காய்ந்து செலல் கனலி கல்பகத் தெறுதலின்
நீந்து குருகு உருகும்' (அகம். 55)

இங்ஙனம் இப்பறவைகளால் பாலை, போர்க்களம் இவற்றின் வெம்மையும் கொடுமையும் பெரிதும் புலப்படுத்தப் பட பதிற்றுப் பத்தில் நாரையும், பட்டினப்பாலையில் கிளியும் நகர்வளம் காட்டுகின்றன.

'முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புறழ் அடைகரை
நந்து நாரை யொடு செவ்வரி யுகளும்
கழனி வாயில் பழனப்படப்பை' (பதிற்றுப் 3 : 3)

'பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்' (பட்டினப் ; 264)

இவ்வாறு பிறபறவைகள் வளம் காட்டல் மிகச் சிறுபான்மை. மேலும் மயிலின் இருப்பே வளம் உணர்த்தப் பயன்பட்டது போன்று இவை பயன்படல் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தற்குறிப் பேற்றம்**

இயற்கை நிகழ்ச்சிகளின் மீது புலவர் தம் கருத்தை ஏற்றிக் கூறல் சங்ககாலத்து அருகிக் காணப்படினும் பறவைகள் தொடர்பாக நற்றிணையில் ஒன்றும் கலித்தொகையில் நான்குமாக ஐந்து பாடல்களில் தற்குறிப்பேற்ற அணி காணப் படுகின்றது. ஐந்திலும் குயிலின் குரல் தற்குறிப்புக் கொண்டது கருதுதற் குரியது. கண்ணுக்கினிய மயிலின் ஆடல் தற்குறிப்புக்கு இடம் அளிப்பது போன்று பறவைகளில் மிக இனிய குரலைப் பெற்றுள்ளமையின் குயிலின் கூவலும் தற்குறிப்பு ஏற்ற இடம் தந்துள்ளது.

எல்லாப் பாக்களிலும் தலைவன் தலைவி பிரிந்து சந்திப்பை எதிர் நோக்கியிருக்கும் சூழல் பாடப்பட்டுள்ளது. மேலும் கலித் தொகைப்பாக்கள் நான்கில் குறிஞ்சித்திணையில் அமைந்த மூன்று பாக்களிலும் தலைவி தன்னைக் குயில் எள்ளுவதாகக் கூறுவதே இடம் பெற்றுள்ளது.

'நீலம் பூத்த மரமிசை நிமிர்பாலும் குயில் எள்ள' (கலி. 27)
'புரிந்து நீ எள்ளும் குயிலையும் அவரையும் புலவாதி' (கலி. 33)
'நனி எள்ளும் குயில் நோக்கி' (கலி. 35)

இளவேனிலை மகிழ்வுடன் வரவேற்றுக் குயில் கூவ அக்காலத்து வருவேன் என்று கூறிச் சென்ற தலைவன் வாராமையின் அது தன்னை எள்ளி நகையாடி மகிழ்வதாகத் தலைவிக்குத் தோன்றி அவளது பிரிவுத்துயரை மேலும் மிகுவிக்கின்றது. மயிலின் ஆடலையும் இது போன்று எள்ளலாகத் தலைவி உணர்ந்தமை நினைவு கூரத்தக்கது.

மருதக் கலியில் அமைந்த பாடலில் ஊடி நிற்கின்ற தலைவியை நோக்கித் தலைவன், 'பல சிறப்பும் உண்டாய்ப் புணர்ந்தீர், பிரியாதே கொள்ளும்; கூடுமின் 'என்று கூறுவன போலக் கரிய குயில்கள் அரும்பு அவிழ்ந்த பூக்களை உடைய சினைகளில் இருந்து. பெடையை அழைக்கும் இளவேனிற் பொழுது' என்று கூறுகின்றான் குயில் தன் பெடையை அழைப்பதாகக் கூறி ஊடல் கொண்ட தன் தலைவியைத் தன்பால் அழைப்பது அவனது நோக்கம்.

'காண்டை நறுநு தால் பன்மாணும்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மின் நீடிப்
பிரிந்தீர் புணர்தம்மின் என்பன போல
அரும்பவிழ் பூஞ்சினை தோறும் இருங்குயில்
ஆனாது அகவும்' (கலி. 92)

நற்றிணைப்பாவில் பிரிந்திருக்கும் தலைவி தனக்குக் குயில் கூவும் ஓசை வருத்தம் மிகுவித்தலின், 'பொருளீட்டும் கருத்தைக் காரணமாகக் கொண்டு அறிவுடையீர் நும்மகளிரை அகலாது ஓம்புமின்' என்று அது கூவுவதாகத் தன் விருப்பினை ஏற்றிக் கூறுகிறாள்.

'நில்லா வாழ்க்கையிட்டு
அகறல் ஓம்புமின் அறிவுடை யீரெனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல' (நற். 242)

குயிலின் குரல் எள்ளுவதாகத் தோன்றிய நிலையினின்றும் வளர்ச்சி பெற்றுக் கருத்தினை உரைப்பதாகப் பாடப்பட்ட நிலையினைப் பின்னிரு பாக்களிலும் காணமுடிகிறது.

**சமயம்**

இயற்கையோடு இயைந்து இணைந்து வாழ்ந்த காலத்து முழுமுதற் பொருளாகக் கருதி வணங்கப்பட்ட முருகனின் கொடியாக, ஊர்தியாக மயில் விளங்கியமையின் சமய நோக்கிலும் அது சிறப்பிடம் பெற்றிருந்தமை 'மயிலும் சமயமும் என்ற

தல்லப்பின் கீழ் உணர்த்தப் பட்டுள்ளது. அம்மயில் போன்று மாயோனுக்கு ஊர்தியாகும், கொடியாகும் பேற்றினைக் கருடனும் சேயோனுக்குக் கொடியாகும் சிறப்பினைச் சேவலும் பெற்றிருந்தமை சங்க இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றது.

இவையன்றிப் படைப்புக் கடவுளின் ஊர்தியாக அன்னமும், மன்மதனின் சின்னமாகக் குயிலும், ஊர்தியாகக் கிளியும், சனி பகவானின் ஊர்தியாகக் காகமும் இன்று உரைக்கப்படினும் சங்க இலக்கியங்களில் இவற்றுக்கான சான்றுகள் இல்லை.

சமயத் தொடர்புடைய இவ்விரு பறவைகளிலும் சேவல் முருகனின் கொடியாகப் பாடப்படுவதோடு அகப்பாடல்களில் பிறசூழல்களிலும் காணப்படுகின்றது. ஆயின் கருடன் திருமாலின் கொடியாகவும் ஊர்தியாகவும் பாடப்படுவதன்றிப் பிற சூழல்களில் அகப்பாடல்களிலோ புறப்பாடல்களிலோ பாடப்பாடவில்லை என்பது குறிப்பிடற்குரியது. மேலும் கருடன் என்று சுட்டப் படாமல் புள்ளென்றே பெரும்பாலும் குறிப்பிடப்படுகின்றது.

'விண்ணுயர் புட்கொடிவிறல் வெய் யோனும்' (புறம் 56 : 6)

தேவரிடத்தினின்றும் அமுதைக் கவர்ந்து வந்து தன்தாயாகிய விநதையின் துயர் துடைத்தது என்றொரு பாடலில் அதன் பெருமையும் சுட்டப் படுகின்றது.

'ஏளர் வயங்கு பூண் அமரரை வெளவிய அமிழ்தின்
பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை
பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளின்
நிவந்தோங்கு உயர் கொடிச் சேவலோய் நின்
சேவடி தொழாரும் உளரோ' (பரி 3 : 15-19)

உவணம் என்ற பெயராலும் கருடன் சுட்டப் படுகின்றது,

'செவ்வாய் உவணத்து உயர் கொடியோயே' (பரி 2 : 60)

இது பாம்பிற்குப் பகை என்றும் அதனை உண்ணும் இயல்பினது என்றும் கூறப்படுகின்றது.

'நின், ஒன்றா உயர் கொடி ஒன்றின்று
விடமுடை அரவின் உடல் உயிர் உருங்கு உவணம்'
(பரி. 4 : 41-42)

அப்பாம்பினைத் தன் அணிகலனாகவும் கருடன் அணிந்து மகிழும்.

'அவன், முடிமேல் வலந்தது பாம்பு
பாம்பு தொடி பாம்பு முடிமேலன
பாம்பு பூண் பாம்பு தலைமேலது
பாம்பு சிறைதலையன' (பரி 4 : 43-46)

புறநானூற்றில் ஒரே ஒரு இடத்தில் (56) மட்டும் சுட்டப்படும் இக்கருடன் பரிபாடலில் பலபடப் பாராட்டப் படுவதில் இருந்து கடைச்சங்க காலத்தின் இறுதிப் பகுதியிலேயே கருடன் உயர்வாகப் போற்றப்படும் சிறப்பினை அடைந்தது என்று கருத இடமுண்டு.

வாரணம் என்றும் வழங்கப்பட்டு (வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ - திருமுருகு 219) குன்றக்கடவுள் குமரனின் கொடியாய் விளங்கிய சேவல் ஆங்காங்கு இலக்கியங்களில் சுட்டப்படுகிறது. மயில் முருகனின் ஊர்தியாய் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதனாற் போலும் தனித்துக் குறிப்பிடும் படியாக இது எங்கும் புகழப்பட வில்லை. அனலனால் முருகனுக்கு வழங்கப்பட்டது என்று மட்டும் கூறப்பட்டுள்ளது.

'அல்லலில் அனலன் தன் மெய்யிற் பிரித்துச்
செல்வ வாரணங் கொடுத்தோன்' (பரி 5 : 57-58)

அன்னம் பிரம்மனின் ஊர்தியாகக் குறிக்கப்படவில்லை எனினும் திருமாலுடன் தொடர்புபடுத்தி ஒரு பாடலில் குறிக்கப் படுகின்றது.

'மாவிசும்பு ஒழுகு புனல் வறள அன்னச்
சேவலாய்ச் சிறகர்ப் புலர்த்தியோய்' (பரி 3 : 25 - 26)

ஊழி முடிவின்கண் ஏழுமேகமும் ஒன்று கூடி இடையறாது பெய்து நிலத்தை மூழ்கச் செய்யும் பொழுது அவ்வூழி மழையால் மீண்டும் நிலம் முழுகாதவாறு இறைவன் அன்னமாய் அந்நீரைச் சிறகரால் புலர்த்துவன் என்று இதற்குப்பொருள் கூறப்பட்டுள்ளது. எனவே ஊழி முடிவில் திருமால் அன்ன உருவம் கொள்வான் என அறிய முடிகின்றது.

இவ்வாறாகக் கருடனும், சேவலும், அன்னமும் ஆங்காங்குச் சமயத் தொடர்புடன் பாடப்பட்டுள்ளன.

**காலம்**

கார் காலத்துடன் மிகவும் தொடர்புடையதாக, அக் கார் காலக் குறியீடாக மயில் விளங்குதற் போன்று இளவேனிற் காலத்துக்குக் கட்டியங் கூறுவதாகக் குயிலும், அற்சிரக் காலத் துடன் தொடர்புபடுத்திக் குருகும் பாடப் பெற்றிருக்கின்றன.

'அந்தளிர் மாஅத் தலங்கல் மீமிசைச்
செங்கண் இருங்குயில் நயவரக் கூஉம்
இன்னிள வேனிலும் வாரார்' (அகம் 229)

'புலம் தொறும் குருகினம் நரலக் கல்லென
அகன்துறை மகளிர் அணிதுறந்து நடுங்க
அற்சிரம் வந்தன்று' (அகம் 217)

கார்காலத்து மயில் அகவுதல் போன்று இளவேனிற் பருவத்துக் குயில் கூவுதலும் அற்சிரக் காலத்துக் குருகு நரலுதலும் உண்டென இவை உணர்த்தி நிற்கின்றன.

**வளர்ப்புப் பறவைகள்**

மயில் தவிரக் கிளி, அன்னம், போன்றவையும் சங்கப் பாக்களால் வளர்ப்புப் பறவைகளாய் அறிய வருகின்றன.

'செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி' (அகம் 34 : 14)

'பசைகொல் மெல்விரல் பெருந் தோள் புலைத்தி
துறைவிட்டன்ன தூமயிர் எகினம்
துணையொடு திளைக்கும் காப்புடை வரைப்பு'
(அகம் 34. 11-13)

இவை இன்பம் நல்க வளர்க்கப்பட்டது போன்று கோழியும் இல்லத்தில் உண்ணப்படுதற் பொருட்டு வளர்க்கப்பட்டமை தெரிகின்றது.

'மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்'
(பெரும். 256)

புறா இருகருத்திலும் வளர்க்கப்பட்ட பறவையாதல் வேண்டும்.

'மனையுறை புறவின் செங்காற்சேவல்
இன்புறு பெடையொடு' (நெடுநல். 45-46)

**உணவுப் பறவைகள்**

வாழ்க்கையை நன்கு அனுபவித்துச் சுவைத்த சங்க கால மக்கள் பறவைகளின் ஊனையும் உண்டு சுவைத்திருக்கின்றனர். கோழி, புறா, இவற்றுடன் குறும்பூழ், இதல் (கௌதாரி) இவையும் உண்ணப்பட்டமை தெரியவருகின்றது.

'நெய்கனி குறும்பூழ் காயமாக
ஆர்பதம் பெறுக' (குறுந். 389 : 1-2)

'படலை முன்றில் சிறுதினை உணங்கல்
புறவும் இதலும் அறவும் உண்க எனப்
பெய்தற்கு எல்லின்று பொழுதே' (புறம் 319 : 5-7)

இவற்றைத் தினையினைத் தூவி உண்ண வைத்து சமைத்தலுக்குப் பிடித்தலையும் இப்பாடலடிகள் கொண்டு அறியலாம்.

**மயில் இடம்பெறாச் சூழல்களில் பிற பறவைகள்**

அகப்பொருள் மாந்தரோடும் ஐந்திணையோடும் அகலாது நின்று, புறப்பொருளிலும் பொலிவு பெற்று, அணிகளை அழகு படுத்தி, சமயத்திலும் தனிச் சிறப்புப் பெற்று விளங்கிய மயில் இடம்பெறாத ஒன்றிரண்டு சூழல்களில் வேறு சில பறவைகள் இடம் கொண்டுள்ளன. அவை இப்பகுதியில் உரைக்கப்படுகின்றன.

**கனவு**

பறவைகளின் கனவு இரு பாடல்களில் இடம்பெற்றுள்ளது. ஒன்று கடற் காக்கை கண்டது; மற்றொன்று வாவல் கண்டது.

'நள்ளிரவுப் பொழுதில் தாழையின் தாழ்ந்த கிளையொன்றில் ஒரு வெண்காக்கை தன் காதற் பெடையுடன் உறக்கத்தில் ஆழ்ந்துள்ளது. அச்சமயம் சுறாமீன் வேட்டம் முடிந்து கடற்கரை ஆள் அரவமின்றி இருப்பதாகவும் அச்சமின்றித் தான் வெள்ளிறா மீனை விரும்பிய அளவு பிடித்து உண்டு மகிழ்வதாகவும் கனவு காண்கின்றது.

'கைதை அம் படுசினை எவ்வமொடு அசாஅம்
கடற்சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்
வெள்ளிறாக் கனவும் நள்ளென் யாமத்து'
(அகம் 170 : 9-12)

இக்கனவு, இளையளாகிய தலைவி தமர் முதலியோர் காவலிடத்து இருந்தும் அவர் சோம்பியிருக்கும் பொழுது நின்னொடு கூடி இன்பம் நுகர்வதற்குப் பெரிதும் விரும்பியிருக்கின்றாள் என்னும் உள்ளுறைப் பொருளுடையது ஆகலின் இதில் தலைவியின் விருப்பம் கனவாகக் கூறப்பட்டிருப்பது உணரலாம். தலைவியின் இயலாமையும் ஏக்கமும் பிறிதொன்றில் உணர்த்தப்படுகின்றது.

'உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல்
ஓங்கல் அஞ்சினைத் தூங்குதுயில் பொழுதின்
வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு
நெல்லியம் புளிச்சுவைக் கனவியா அங்கு
அது கழிந்தன்றே தோழி' (நற் 87 : 1-5)

ஊரின் உள்ளே ஒரு மாமரம்; பகற்பொழுதில் முள்போன்ற மெல்லிய பற்களை உடைய ஒரு வாவல் உயர்ந்த கிளை

யொன்றைப் பற்றித் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஆழ்ந்த உறக்கத்திலே இருக்கும் அது முன்னாட்களில் அழிசி என்னும் சோழ மன்னனது பெரிய காட்டின் கண் இருந்த, இனிய புளிச் சுவையை உடைய நெல்லிக் கனியைப் பெற முயன்று முடியாது தோல்வியுற்ற அப்பழம் இப்போது கிடைத்து அதனைச் சுவையுடன் புசிப்பதாகக் கனவு காண்கிறதாம். அதுபோலத் தானும் தலைவனுடன் முயங்கினதாகக் கனவுகாண அவ்வின்பமெல்லாம் விழித்தவுடன் ஒழிந்து போயிற்று என்று புலம்புகின்றாள் தலைவி.

தலைவியின் எதிர்பார்ப்பினை இவ்விரு கனவுகளும் இனிமையாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

**தூது**

தலைவன் தலைவியருக்குத் தம் நிலை உணர்த்தவும் நண்பர்க்குச் செய்தி உணர்த்தவும் பாக்களில் பறவைகள் தூதுவராகப் பயன்பட்டுள்ளன. அன்னம் நண்பர்க்குத் தூது உரைக்கவும், கிளியும் குருகும் தலைவன் தலைவியரிடத்துத் தூதுரைக்கவும் வேண்டப்பட்டுள்ளன.

பிசிராந்தையார் தன்னுயிர் நண்பர் கோப்பெருஞ் சோழனிடத்துச் சென்று, 'ஆந்தை நின் அடிக்கண் உறைவான்' எனின் நின்பெடை அணிய நல்கலம் பல நல்குவன் என்று கூறுகின்றார்.

'பெருங்கோக் கிள்ளி கேட்க இரும்பிசிர்
ஆந்தை யடியுறை எனினே மாண்டநின்
இன்புறு பேடையணியத் தன்
நன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே' (புறம் 67 : 11-14)

நண்பரிடத்துச் சென்று செய்தி சொல்லின் நன்கலம் நல்குவதாகப் பிசிராந்தையார் பாட, தலைவி ஒருத்தி குருகிடம் எம்மூர் வந்து வயிறார சினைக் கெளிற்றை உண்ணும் நீ அவரிடத்து என் துன்பத்தை உரையாதிருத்தல் தகுமோ? நீயே கூறியிருக்க வேண்டாமோ; என்னிடத்து அன்பில்லையா? அன்றிப் பெருமறதி உடையையோ என வினவுகின்றாள்.

'சிறு வெள்ளாங் குருகே சிறுவெள்ளாங்குருகே
துறைபோகு அறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே
எம்மூர் வந்தெம் ஒண்டுறை துழைஇச்

சினைக் கெளிற்று ஆர்கையை அவரூர்ப் பெயர்தி
அனைய அன்பினையோ பெருமறவியையோ
ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே' (நற். 70)

தோழி ஒருத்தியோ தலைவி இற்செறிக்கப்பட்டதைத் தலைவனிடம் அறிவிக்கும்படிக் கிளியை வேண்டுகின்றாள்.

'கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம்'
'நற்றார் மார்பன் காண்குறின் சிறிய
நன்கு அவற்கு அரிய உரைமின் பிற்றை
அணங்கும் அணங்கும் போலும் அணங்கி
வறும்புனம் காவல் விடாமை' (நற். 376 : 4, 8-11)

காவலின்றி அழியும் தினைப் புனத்தைக் காவல் செய்ய விடாது அறனில்யாய் எம்மை வருத்தி இற்செறித்துள்ளமை அறிந்தீரன்றே; வெறியெடுத்தலாலே முருகவேளும் என்னை வருத்துவன் போலும்' ஆதலின் நல்ல மாலையணிந்த மார்பையுடைய அவனை நீயிர் காண்பீராயின் எல்லாவற்றையும் கூறாவிடினும் சிறிய சிலவற்றை யேனும் நன்றாக அவனிடத்து உரையுங்கள் என்கிறாள் தோழி.

இன்னபறவை என்று சுட்டப்படாது பொதுவாகப் பறவையை, 'நமக்கில்லையாயினும் நம்மொடு சேர்ந்து, இன்பம் துய்த்தற்குத் துணைநின்ற வேங்கை மரத்திற்காவது தூதாக அனுப்பியிருக்கலாமே' என்று தலைவி ஏங்கும் பாடலொன்றும் காணக் கிடக்கின்றது.

'தமக்கொன்று உரையாராயினும் தமக்கொன்று
இன்னா இரவின் இன்றுணையாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே' (குறுந். 266)

இவ்வாறாகக் கருத்துரைக்கும் சிறப்பினை, தலைவியாலும் தோழியாலும் வேண்டப்படும் பெருமையினை அன்னமும் குருகும் கிளியும் பெற்றுள்ளன.

## நிமித்தம்

சங்க காலத்திலும் பறவைகளின் குரலைக் கேட்டு நன்னிமித்தம் காணும் வழக்கம் இருந்ததென்பது தெரிகின்றது. இதன் காரணமாகப் புள் என்ற சொல்லிற்கு நன்னிமித்தம் என்ற பொருளும் சங்க காலத்திலேயே தோன்றியுள்ளது.

'புலரி விடியல் புள்ளோர்த்துக் கழிமின்' (மலைபடு. 448)

இங்குப் புள் என்று பொதுவாகக் குறிக்கப்படுகின்றதேயன்றி எப்புள் எனச் சுட்டிக் கூறப்படவில்லை. கருடன் புள்ளென்றே பலவிடங்களில் குறிக்கப்படுகின்றமையின் புள் என்பது கருடனைச் சுட்டியிருக்கலாம் என எண்ண இடம் தருகின்றது. மயில் இராமாயணத்தில் நன்னிமித்தப் பறவையாகக் (பால. 13+4) குறிக்கப்படுகின்றது. ஆகலின் மயிலும் இவ்வாறு குறிக்கப்பட்டதாகக் கொள்ள இடமுண்டு. மயில் பற்றிய குறிப்புகளில் சான்றின்மையின் உறுதி கூறுதற்கில்லை.

**முன்னிலை மொழி**

'ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுவலிய நெறியாற்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார்புலவர்'
(தொல். பொருள். செய். 198)

என்று தொல்காப்பியர் உரைத்த இலக்கணத்திற்கு ஏற்பப் பறவைகள் கேட்பன போல அமைந்த பாடல்கள் சங்க இலக்கியங்களில் உள. அவ்வாறு அவற்றை முன்னிலைப்படுத்திப் பாடியுள்ள பாடல்களில் மயில் தொடர்பானவை ஒன்றுமில்லை. விரும்பி வளர்க்கப்படும் பறவைகளில் ஒன்றான கிளி இச் சிறப்பினைப் பெறுகின்றது.

கிளிகள் தினையை நாடி வருகின்றமை தலைவி தினைப்புனக் காவலுக்கு வரக் காரணமாகித் தலைவன் அவளைச் சந்திப்பதற்கு வாய்ப்பாக அமைகின்றமையின் தலைவன் ஒருவன் அக் கிளியை மனம் நிறைந்து வாழ்த்துகின்றான்.

'வெள்ள வரம்பின் ஊழி போகியும்
கிள்ளை வாழிய பலவே' (ஐங். 281)

தன்னெஞ்சினிடத்துக் கூறுவான் போன்றுப் பிறிதொருதலைவன் கிளிக்குத் தன் நன்றியை உரைக்கின்றான்.

'நன்றே செய்த உதவி நன்று தெரிந்து
யாம் எவன் செய்குவம் நெஞ்சே காமர்
மெல்லியல் கொடிச்சி காப்பப்
பல்குரல் ஏனல் பாத்தரும் கிளியே' (ஐங். 288)

தலைவியின் தாயால் வேண்டப்படும் சிறப்பினைக் காகம் பெறுகின்றது. தானாகத் தேர்ந்துகொண்ட தலைவனுடன் தன் மகள் உடன் போக்கு மேற்கொள்ள அவள் என்று தன்னைக் காண வருவாள் என எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் தாய்,

'வெஞ்சின விறல் வேற்காளையொடு
அஞ்சில் ஓதியை வரக்கரைந்தீமே' (ஐங். 391)

என்று காகத்தை வேதனையுடன் வேண்டுகின்றாள்.

தலைவனைப் பிரிந்து துயருரும் தலைவி அன்றிலை நோக்கி, "என்போல் இன்துணையைப் புரிந்து நிற்கின்றனையே நீயும்" என வினவுவதும் காணக்கிடக்கின்றது.

'என்துயர் அறிந்தனை நரறியே எம்போல
இன்துணைப் பிரிந்தாரை உடையையோநீ' (கலி. 129)

அகமாந்தர் இவ்வாறு தம்மை வாழ்த்தலும் வேண்டலும் வினவலும் ஆகிய சிறப்பினைக் கிளியும் காகமும் அன்றிலும் பெறுகின்றன.

**பேணல்**

பறவைகளின் இயல்பு குறித்து எண்ணும்போது அவை தம் இல்லம் பேணும் பண்பு மிகச் சிறப்பாகப் பல பாடல்களில் புலப் படுத்தப் பட்டுள்ளது.

போர் வல்ல குறும்பூழ், கானக்கோழி, கோழி, காகம், புறா, நாரை, கொக்கு, நீர்க்காக்கை, குருவி, கழுகு, எருவை ஆகிய பறவைகள் அன்புணர்வோடு பெடையையும் பார்ப்பையும் பேணி நிற்றலைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

'கான வாரணம்
பெயல் நீர் போகிய வியனெடும் புறவில்
புலரா ஈர்மணல் மலிரக்கெண்டி
நாளிரை கவர மாட்டித்தன்
பேடை நோக்கிய பெருந்தகு நிலையே (நற். 21)

'அன்பு கொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென் சிறகரால் ஆற்றும் புறவு' (கலி.11)

'சேயிறா எறிந்த சிறுவெண் காக்கை
பாயிரும் பனிக்கழி துழைஇப் பைங்கால்
தான் வீழ் பேடைக்குப் பயிரிடூஉச் சுரக்கும்' (நற். 31)

'கடுஞ்சூல் வயவொடுகானல் எய்தாது
கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்' (நற். 263)

எனும் பாடலடிகள் கானக்கோழி, புறா, நீர்க்காக்கை, நாரை ஆகியன தம் பெடையைப் போற்றிப் புறந்தமையைப் புலப்படுத்து கின்றன. இவையன்றி எருவை (அகம் 215) குருவி (குறுந். 85) ஆகியவையும் தம் பெடையினைப் போற்றியமையும் அறிய முடிகின்றது.

பின் வரும் அடிகள் குறும்பூழ், நாரை, கொக்கு, குருவி, ஆகியன தம் பார்ப்பினுக்கு இரையூட்டியமையையும் அவற்றைப் பாதுகாத்தமையையும் பாடுகின்றன.

'வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்கால்
கறையணல் குறும்பூழ்க் கட்சி சேக்கும்' (பெரும். 203-5)

'தடந்தாள் நாரை......
தாய்ப் பயிர்பிள்ளை வாய்படச் சொரியும்' (நற். 91)

'பைதற் பிள்ளை தழீஇ' (கொக்கு) (அகம் 290)

'இல்லிறைப் பள்ளித் தம்பிள்ளை யொடுவதியும்' (குருவி)
(குறுந்.46)

கழுகு, எருவை போன்ற கொடிய பறவைகளும் தம் பார்ப்புக் களை நன்கு பேணியமை அறிய முடிகின்றது.

'பார்ப்பினங்கட்கு ..........
புண்ணுமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்ணுமிழ் கழுகு' (அகம். 31)

'செஞ்செவி எருவை
குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து
அருங்கவட்டுயர் சினைப் பிள்ளை யூட்ட' (அகம். 193)

இவையனைத்தினும் மேம்பட்டுக் காகம் தன் சுற்றமும் ஓம்புகின்றது.

கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்கு சிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து
கருங்கண் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய குறுங்கால்
கூழுடை நன்மனைக் குழுவின இருக்கும் (நற்.367)

மேற்கண்ட பறவைகளின் பேணற் காட்சிகள் பெரும்பாலும் பாலைத்திணைப் பாக்களிலும் நெய்தல் திணைப் பாக்களிலும் இடம் பெறுதல், பிரிவில் வருந்தி நிற்கும் தலைவி, பாலை வழியில் செல்லும் தலைவன் அங்குப் பறவைகள் தம் பெடையினைப் பார்ப்பினைப் போற்றலைக் கண்டு திரும்பி வரவில்லையே என்று எண்ணி ஏங்குவதாகக் காட்டற்கும், அதே போன்று தலைவன் வரவு நோக்கி இரங்கி நிற்கும் நெய்தல் நிலத்தலைவி என்று திரும்பி வந்து தன்னுடன் இணைந்து இல்லறம் ஆற்றுவான் என்று எதிர் நோக்கி நிற்றலைக் காட்டற்கும் மிகப் பொருத்தமாய் அமைகின்றன.

ஆண்மயிலும் பெண்மயிலும் ஒன்றினை ஒன்று பேணுதலோ, தம் பார்ப்பினை அன்புடன் அரவணைத்து நிற்றலோ எப் புலவரும் பாடாதிருக்கப் பாலை நிலத்தே பெரிதும் வாழும் வன் பறவைகளும் பேணும் பண்புடையனவாய்ப் பாடப் பட்டிருத் தலும், மயிலின் முட்டை போற்றுவாரின்றிப் பாறையின் மீது குரங்கினால் உருட்டப்பட்டதாகப் பாடப் பட்டுள்ளமையும் சிந்தித்தற்குரியன (குறுந். 38), நில வளத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையதாகப் பாடப்பட்டிருக்கின்றமையின் முயன்றுஇரை தேடிப் பெடைக்கோ, பார்ப்பினுக்கோ ஊட்டல் தேவையில்லை ஆகலின் மயில் பேணுவது பாடப்படாமலிருந்திருக்கலாம். தவிர, மயிலை மிக உயரிய பறவையாகக் கலை உணர்வுடன் மென்மை, மேன்மை, அரசமை (Royalty) அழியாமை அல்லது நிலைப்பு (im mortality) போன்ற உயர் பண்புகளுக்குக் குறியீடாகக் காட்டியமை யாலும் பேணு தலைக் கூறாது விட்டனர் என்றும் கொள்ளலாம்.

இங்ஙனம் எளிமையாகப் பிற பறவைகள் போன்று பேணல் தவிரத் தூதாகவும் அனுப்பப்படாமலும், முன்னிலைப் படுத்திப் பேசப்படாமலும் இருப்பதால் மயில் மேலும் உயர்வினைப் பெறுகின்றது என்று கொள்ளலும் பொருந்தும். எதிர்பார்ப்பும் விருப்பம் நிறைவேறாமையும் காரணமாக வரும் கனவும் மயில் காண்பதாகப் பாடப்படாததும், ஆரவாரமாகப் பெடை மயில்கள் புடைசூழ ஆண்மயில் இளவெயில் உண்டு இன்பம் துய்த்தலைப் பாடியிருப்பதும் இக்கருத்தினுக்கு அரண் சேர்க்கும். ஆகலின் புலவர்கள் அன்று கலைக்கு, கலைஞர்க்குச் சிறப்பிடம் தந்தது போன்று ஆடற்கலையில் சிறந்து அழகுடன் இருந்த மயிலுக்கும் உயர்ந்த இடத்தை, மதிப்பு நிறைந்த தலைமையிடத்தைத் தந்திருக்கின்றனர் எனலாம். இதனால் மயில் இடம் பெறாத

சூழல்கள் மயிலுக்கு மேலும் சிறப்புச் சேர்த்துள்ளனவேயன்றிக் குறையாக அமையவில்லை என்பது குறிப்பிடற்குரியது. தவிர சில சூழலுக்கு, உணர்வுக்கு, கருத்துக்குச் சில பறவைகள் பொருத்தம் ஆவது உணர்ந்து அப்பொருத்தச் செவ்வி உணர்ந்து புலவர் தேர்ந்து பாடியுள்ளனர் என்பதும் இங்குக் குறிப்பிடல் பொருந்தும். அவ்வகையில் மயில் முதலிடத்தினைப் பெறுகின்றது என்பதும் குறிப்பிடாமலே விளங்கும்.

## நிறைவுரை

மயில், இந்நூலினை நோக்க ஆழ்ந்த ஆய்விற்கு இடமளித்திருப்பது புலப்படும். தவிர, சங்க இலக்கியங்களில் ஒரு சிறு பொருட்கூறும் குறிப்பான பொருளுடன் சூழல்-உணர்வு-கருத்து இவற்றைச் சிறப்பாக விளக்கப் பயன் பட்டிருப்பதும் அறியப்படும். பிறபறவைகளினின்றும் தனித்து நிற்கும் சிறப்பு, காப்பியங்கள் சிற்றிலக்கியங்கள் முதலானவற்றிலும் மயில் ஆய்வுக்குகந்த பொருளாய் நிற்றலை வெளிப்படுத்துகிறது. குறியீட்டு நிலையில் இதன் வளர்ச்சியை அறுதியிடவும் வாய்ப்புளது. இலக்கியத்தின் பெருமையை, புலவரின் புலமைத்திறனைப் பறைசாற்றவும் இது போன்ற ஆய்வுகள் வழிவகுக்கின்றன. பல்வேறு இலக்கிய வகைக்களுக்கிடையே மயிலின் இடம் குறித்த ஆய்விற்கும் இடமுளது. சமயத்திலும் சிறப்பிடம் கொண்டுள்ளமை, அந்நோக்கிலும் தனித்து ஆய்வு நிகழ்த்த ஏற்புடைத்தாகின்றது. மயில் போன்ற பிற சிறு பொருட்கூறுகளும் ஆழ்ந்த, அகன்ற ஆய்விற்குப் பேரிடம் தருவன என்பதையும் இவ்வாய்வு உணர்த்துகின்றது. நவில் தொறும் நயம் பயக்கும் இலக்கியத்தின் பெருமையை, புலவரின் புலமைத்திறனைப் பறைசாற்றவும் இதுபோன்ற ஆய்வுகள் வழிவகுக்கின்றன என்பதில் மிகையில்லை.

# சங்க இலக்கியத்தில் மயில் பயிலும் இடங்கள்

கபிலர்

1. வேங்கை வீயுகும் ஓங்குமலைக் கட்சி
மயிலறிபு அறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே — நற். 13 :7-9

2. கருங்கால் வேங்கைச் செவ்வீ வாங்குசினை
வடுக்கொளப் பிணித்த விடுமுரி முரற்சிக்
கைபுனை சிறுநெறி வாங்கிப் பையென
விசும்பாடு ஆய்மயில் கடுப்ப யான் இன்று
பசுங்காழ் அல்குல் பற்றுவன் ஊக்கிச்
செலவுடன் விடுகோ — நற். 222 : 1-6

3. கானமஞ்ஞை அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும் — குறுந். 38 : 1-2

4. ... ... ... ... ...மென்சீர்க்
கலிமயில் கலாவத்தன்ன இவள்
ஒலிமென் கூந்தல் உரியவா நினக்கே — குறுந். 225 ;5-7

5. இனமயில் அகவும் மரம்பயில் கானம் — குறுந். 249 :1

6. கலிமழை கெழீஇய கான்யாற்று இகுகரை
ஒலிநெடும் பீலி துயல்வர இயலி
ஆடுமயில் அகவும் நாடன் — குறுந். 264:1-3

7. மணிவரைக் கட்சி மடமயில் ஆலும்நம்
மலர்ந்த வள்ளியம் கானம் கிழவோன் — ஐங். 250: 2-3

8. அணிமயிலன்ன அசைநடைக் கொடிச்சி — ஐங். 258:2

9. மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்
துறுகல் அடுக்கத் ததுவே — ஐங். 291:1-2

10. மயில்களாலப் பெருந்தேன் இமிரத்
தண்மழை தழீஇய மாமலை நாட — ஐங். 292:1-2

11. பாயல் இன்துணை ஆகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை
நீயலது உளரோ என்னெஞ்சு அமர்ந்தோரே — ஐங். 293:1-2

12. எரிமருள் வேங்கை இருந்த தோகை
இழையணி மடந்தையின் தோன்றும்நாட ஐங். 294:1-2

13. புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை
இருவி இருந்த குருவி வருந்துறப்
பந்தாடு மகளிரின் படர்தரும்
குன்றுகெழு நாடன் ஐங். 295:3-6

14. கொடிச்சி காக்கும் பெருங்குரல் ஏனல்
அடுக்கல் மஞ்ஞை கவரும் நாட ஐங். 296:1-2

15. விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாட ஐங். 297:1-2

16. மழைவரவு அறியா மஞ்ஞை ஆலும்
அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி ஐங். 298:1-2

17. ... ... ... ... .. இவள்
தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே ஐங். 299:4-5

18. கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அஞ்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன் ஐங். 300:1-2

19. மெல்ல இயலும் மயிலும் அன்று கலி. 55:13

20. ஆய்தூவி அனமென அணிமயில் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்த நின் எழில்நலம்
கலி. 56:14-15

21. வேயெனத் திரண்ட தோள் வெறிகமழ் வணரைம்பால்
மான்வென்ற மடநோக்கின் மயிலியல் கலி. 57:1-2

22. ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை அவ்வளி குழலிசையாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடமை முழவின் துதைகுரலாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப் பூஞ்சாரல் வண்டு யாழாக
இன்பல் இமிழிசைக் கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்
விழவுக்கள விறலியின் தோன்றும் நாடன் அகம். 82:1-10

23. உரும்உரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான்று அவிந்த தூங்கிருள் நடுநாள்
மின்னுநிமிர்ந்தன்ன கனங்குழை இமைப்பப்
பின்னுவிடு நெறியில் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி
மிடையூர்பு இழியக் கண்டனன் இவள்என
அலையல் அகம். 158:1-7

24. பயில்பூஞ் சோலை மயில் எழுந்து ஆலவும்
பயிலிருஞ் சிலம்பில் கலைபாய்ந்து உகளவும் புறம்.116:10-11

25. மென்மயில் புனிற்றுப் பெடை கடுப்ப நீடிக்
கருந்தாள் போகி— — — — —
தினை கொய்ய புறம். 120:6-7,10

26. விதுப்புறு மனத்தேம் விரைந்தவன் பொருந்திச்
சூருறு மஞ்ஞையின் நடுங்க குறிஞ்சி. 168-169

27. பழுமிளகு உக்கபாறை நெடுஞ்சுனை
முழுமுதல் கொக்கின் தீங்கனி உதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொடு ஈண்டிப் பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத்து அயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட்டின் இன்னியம் கறங்க ஆடுமகள்
கயிறூர் பாணியில் தளரும் சாரல் குறிஞ்சி.187-194

28. நீரெறி மலரில் சாஅயிதழ் சோரா
ஈரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண்
ஆகத்தரிப் பனிஉறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையின் நலம்செலச் சாஅய்
குறிஞ்சி.247-250

**நக்கீரர்**

29. புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல்
அறியாது உண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
குறுந். 105 : 1-4

30. தோகைத் தூவித் தொடைத்தார் மழவர் அகம். 249:12

31. — — — — — மயிலியல்

சேயிழை மகளிர் ஆயமும் அயரா அகம். 369:4-

32. மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனுமென புறம். 56:7-8

33. மயிலன்ன மென் சாயலார் புறம் 395 : 13

34. உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி திருமுருகு. 1-3

35. பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ திருமுருகு. 122

36. மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு திருமுருகு. 205

37. தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலம் கொடியன்
திருமுருகு. 210-11

38. ஓடாப்பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி திருமுருகு. 247

39. மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரிய திருமுருகு. 310-11

40. ஒலிநெடும் பீலி ஒல்க மெல்லியல்
கலிமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை நெடுநல். 98-99

**நல்லந்துவனார்**

41. மலைய மயிலகவ பரி. 6:4

42. விறல்வெய்யோன் ஊர்மயில் வேல் நிழல்நோக்கி
அறவர் அடிதொடினும் ஆங்கவை சூளேல் பரி.8 : 67-68

43. வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்
ஆறுசெல் வளியின் அவியா விளக்கமும்
நாறுகமழ் வீயும் கூறுமிசை முழவமும்
மணியும் கயிறும் மயிலும் குடாரியும்
பிணிமுகம் உளப்படப் பிறவும் ஏந்தி பரி. 8:97-101

44. மாமயிலன்னார் மறையிற் புணர்மைந்தர்
காமங் களவிட்டுக் கைகொள் கற்புற்றென
மல்லல் புனல் வையை மாமலை விட்டிருத்தல்
இல்லத்து நீதனிச் சேரல் இளிவரல் பரி. 11 : 41-44

45. மடமயில் சாயலை வந்திக்க வா பரி. 20 : 69-70

46. வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும் கலி. 128: 16-17

47. அழலவிர் வயங்கிழை ஒலிப்ப உலமந்து
எழிலெஞ்சு மயிலின் நடுங்கிச் சேக்கையின்
அழலாகின்றவர் நக்கதன் பயனே கலி. 137:5-7

48. மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை ஆவிரை எருக்கொடு பிணித்தியாத்து
மல்லலூர் மறுகின்கண் இவட்பாடும் இஃதொத்தன்
எல்லீரும் கேட்டீமின் என்று கலி. 138 : 8-11

49. பூவல்ல பூளை உழிஞை யோடியாத்த
புனவரை இட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி
அடர்பொன் அவிரேய்க்கும் ஆவிரங்கண்ணி கலி. 140:4-7

**பரணர்**

50. மாரி வண்மகிழ் ஓரி கொல்லிக்
கலிமயில் கலாவத்து அன்ன இவள்
ஒலிமென் கூந்தல் நம்வயினாளே நற். 265:7-9

51. நன்னன் ஏழின் நெடுவரைப் பாழிச் சிலம்பில்
களிமயில் கலாவத்தன்ன அகம். 152: 12-14

52. கார்விரை கமழும் கூந்தல் தூவினை
நுண்நூல் ஆகம் பொருந்தினள் வெற்பின்
இளமழை சூழ்ந்த மடமயில் போல அகம். 198 : 5-7

53. கழனி உழவர் கலிசிறந்து எடுத்த
கறங்கிசை வெரீஇப் பறந்த தோகை
அணங்குடை வரைப்பகம் பொலிய வந்திறுக்கும்
அகம். 266 : 17-19

54. உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்தஎங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன் புறம். 141: 10-12

55. மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக புறம். 145 : 1-3

**மாங்குடி மருதனார்**

56. பாடல்சான்ற நன்னாட்டு நடுவண்
கலைதாய உயர் சிமையத்து
மயிலகவும் மலிபொங்கர் மதுரை. 331-333

57. மையுக்கன்ன மொய்யிருங் கூந்தல்
மயிலியலோரும் மடமொழியோரும் மதுரை. 417-418

58. ஒண்சுடர் விளக்கம் முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல இயலிக்
கடுஞ்சூல் மகளிர் பேணிக் கைதொழுது மதுரை. 607-609

59. அன்னம் கரைய அணிமயில் அகவ மதுரை. 675

60. மயிலோரன்ன சாயல் மதுரை, 706

**இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்**

61. மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு மலை. 5

62. கணங்கொள் தோகையின் கதுப்பு இகுத்து அசைஇ
மலை. 44

63. அலகையன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவமஞ்ஞை கட்சியில் தளரினும் மலை. 234-35

64. வரைப் பொலிந்து இயலும் மடக்கண் மஞ்ஞை மலை. 509.

**குன்றம் பூதனார்**

65. ஒருவர் மயில் ஒருவர் ஒண்மயிலோடு ஏல
இருவர் வான்கிளி ஏற்பின் மழலை
செறிகொண்டை மேல்வண்டு சென்று பாய்ந்தன்றே
வெறி கொண்டான் குன்றத்து வண்டு பரி. 9 : 41-44

66. மென்சீர் மயிலியலவர் பரி. 9 :56

67. சிகைமயிலாய்த் தோகை விரித்தாடுநரும் பரி. 9 : 64

68. ஒள்ளொளி மணிப் பொறியான் மஞ்ஞை நோக்கித்தன்
உள்ளத்து நினைப்பானைக் கண்டனள் திருநுதலும்
உள்ளியது உணர்ந்தேன் அஃது நீ உரை இனி நீ எம்மை
எள்ளுதல் மறைத்தல் ஓம்பு என்பாளைப் பெயர்த்தவன்
காதலாய் நின்னியல் களவெண்ணிக் களிமகிழ்
பேதுற்ற இதனைக் கண்டியான் நோக்க நீ எம்மை
ஏதிலா நோக்குதி பரி. 18 : 7-13

**இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்**

69. மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயில் மயில் குளிக்கும் சாயல் (சிறுபாண். 15-16)

70. வானம் வாய்த்த வளமலைக் கவான்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகன் — சிறுபாண். 84 - 87

71. கருநனைக் காயாக் கணமயில் அவிழவும் — சிறுபாண். 165

72. துகிலணி அல்குல் துளங்கியல் மகளிர்
அகிலுண விரித்த அம்மென் கூந்தலின்
மணிமயில் கலாபம் மஞ்சிடைப் பரப்பி — சிறுபாண். 262-65

**பேயனார்**

73. நின்னுதல் நாறு நறுந்தண் புறவி
நின்னே போல மஞ்ஞை ஆலக்
கார் தொடங்கின்றால் — ஐங். 413 : 1-3

74. புன்புறப் பேடை சேவல் இன்புற
மன்னர் இயவரின் இரங்கும் கானம் — ஐங். 425 : 1-2

75. நன்றே காதலர் சென்ற வாறே
அணிநிற இரும்பொறை மீமிசை
மணிநிற உருவின தோகையும் உடைத்தே — ஐங். 431

76. நின்னே போலும் மஞ்ஞை ஆல — ஐங். 492 : 1

**குடவாயிற் கீரத்தனார்**

77. வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகல் பீலி சூட்டி — அகம். 35 : 7-8

78. தொடையமை பீலிப் பொலிந்த கடிகை
மடையமை திண்சுரை மாக்காழ் வேல் — அகம். 119 : 12-13

79. தன்னோரன்ன ஆயமும் மயிலியல்
என்னோரன்ன தாயரும் காண — அகம். 385 : 1-2

80. — — — — — — — — கூந்தல்
ஆடுமயில் பீலியின் பொங்க நன்றும்
தானமர் துணைவன் ஊக்க ஊங்கி — அகம். 385 : 13-15

**பாலைபாடிய பெருங்கடுங்கோ**

81. கன்மிசை மயிலாலக் கறங்கியூர் அலர்தூற்ற — கலி. 27 : 13

82. துயிலின்றி யாம்நீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகுவான் மன்னோ
கலி. 30 : 5 - 6

83. எள்ளித் தொகுபுடன் ஆடுவ போலும் மயில் கலி. 33 :17-18

84. கொடுமிடல் நாஞ்சிலான் தார்போல் மராத்து
நெடுமிசைச் சூழும் மயிலாலும் கலி. 36 : 1-2

**மதுரை மருதன் இள நாகனார்**

85. — — — — — — — ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்கு நிலைநடுகல் அகம். 131 : 9-11

86. நீலத்தன்ன நிறங்கிளர் எருத்தில்
காமர்பீலி ஆய்மயில் தோகை
இன்தீம் குரல துவன்றி அகம். 358 : 1-3

87. — — — — — — — கோடிணர் கஞலிய
குறும் பொறை அயலது நெடுந்தாள் வேங்கை
மடமயில் குடுமியின் தோன்றும் நாடன் அகம். 368 : 5-7

**மாமூலனார்**

88. மெய்ம்மலி பெரும்பூண் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாகலார் கைப்பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளு நாட்டன்ன அகம். 15 : 2-5

89. ஒல்கியல் மடமயில் ஒழித்தபீலி
வான் போழ் வல்வில் சுற்றி அகம். 281 : 4-5

90. — — — — — — தோடு கொள்
உருகெழு மஞ்ஞை ஒலிசீர் ஏய்ப்பத்
தகரம் மண்ணிய தண்ணறும் முச்சி அகம். 393 : 21-23

**உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்**

91. பழனமஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும் புறம். 13:10-11

92. களிறு இலவாகிய புல்லரை நெடு வெளில்
கானமஞ்ஞை கணனொடு சேப்ப புறம். 127 : 3-4

93, விரைவளர் கூந்தல் வரைவளி உளரக்
கலவமஞ்ஞையின் காண வரவியலி புறம். 133 : 4-5

**ஓரம் போகியார்**

94. அலங்குசினை மாஅத்து அணிமயில் இருக்கும்
பூக்கஞூரான் சூள் இவன்
வாய்ப்பதாக என வேட்டேமே ஐங். 8 : 4-6

95. இந்திர விழவின் பூவினன்ன
புன்தலைப் பேடை வரிநிழல் அகவும் ஐங். 62 1-: 2

96. விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே
பசும் பொன் அவிரிழை பைய நிழற்றக்
